வீழ்ந்திட நரகினில் வீழ்வதுதின்னமே ...(௨௩)

எண்சீர்க்கழிநெடில் விருத்தம்.

இன்னின்னவனுக்குமருந்துபலிக்காதெனக்கூறுகின்றார்.

அறுசீர்க்கழிநெடில்விருத்தம்.

கன்னெஞ்சன் வழிபறிப்போன் கண்டதன்பிறகேசெல்வோன்...*
வல்லெனுங்கோபமுள்ளோன் மாதர்மேலாசையுள்ளோன்... ...*
பொன்னேயேபுதைத்துவைத்துப் * பிடகர்க்குப்பொய்யைச்சொ
ல்வோன், இன்னவுங்கொடியபாவிக்கிமருந்தேறாதன்றே(௨௪)

* பிடகர்-வைத்தியர்,

இன்னின்னவர்க்குப்பிணிதீராதெனக்கூறுகின்றார்.

பஞ்சமாபாதகர்க்கும் பழிதனைநினைப்பவர்க்கும்... ....*
நெஞ்சியமருந்துசெய்து கேடுகள்நினைப்பவர்க்கும்... ... ...*
அஞ்சிடாவஞ்சகர்க்கும் அநியாயக்காரருக்கும்..............*
நஞ்சினுங்கொடியவர்க்கும் நாடியபிணிதீராதே...........(௨௫)

இன்னின்னவர்க்கு வைத்தியஞ்செய்யெனக் கூறுகின்றார்.

தரித்திரப்பட்டபேர்க்குந் தருமத்தையடைந்தபேர்க்கும் ......*
கருத்துடன்பிணிதீரென்றுக் கபடன்றிமெய்சொல்வோர்க்கும் *
பெருத்திடுந்தனங்கொடுத்துப் பிணிதீருமென்றபேர்க்கும்.....*
உருக்கமாயுள்ளும்பேர்க்கும் உடன்வயித்தியஞ்செய்வீரே(௨௬)

வேதியவேடத்தோர்க்கும் விளங்கியகுருக்கள்மார்க்கும்...... ...*
நீதியாயுள்ளபேர்க்கும் நெறிமுறையுடையோருக்கும்... ... ...*
சாதியாயுள்ளபேர்க்குந் தவநெறியுள்ளபேர்க்கும்....... ......*
பேதியாமல்மருந்துசெய்திடப்பிணிபோமென்றார்.........(௨௭)

ஔஷதஞ்செய்யவும் உண்ணவும் இன்னின்னகிழமையாகும்
இன்னின்னகிழமை யாகாதெனக் கூறுகின்றார்.

காரியும்புசனுந்திங்கள் கருதிடில்மருந்துநீதாம்....................*
சீரியவெள்ளிநோயாம் செவ்வாய்வியாழம்பிணிதீரும்... ......*

பாரினி லுள்ளபேர்க்குப் பரிகாரஞ்செய்யவேண்டில்..........*
ஆரியனருளினாலே அருக்கனில்மருந்துசெய்யீரே...... .....(௨௮)

நாளுங்கிழமையும் நலித்தோர்க்கில்லை.

வேறு,

ஆதித்தனுதித்த மூன்றேமுக்கால் அதிற்றுப்பிணிக்கு மருந்து செய்வீர், ஆதித்தனுதித்தமூன்றேமுக்கால் அதிற்குப்பிணிக்கு மருந்துகொள்வீர், ஆதித்தகிரண மிருபோதும் அதிற்சவுடனேமருந்துசெய்வீர், ஆதித்தன்சாக்ஷியாய் பிணிதீரும்*அயனம் "விருத்தமும்வாராதே. (௨௯)

* அயனம்-பிறப்பு,
" விருத்தம்-மூப்பு,

பிண்டோற்பத்திகூறுகின்றார்.

வேறு.

சேனப்பாமனமானவாயுகூடிசெடியானசித்தமாகாயப்போங்கி, வேளப்பா ஆங்காரசிகாரமிகுதிமேவுதற்குப் பெண்மேலே மோகமாகும், நாளப்பாஞானந்தக்குப்பலமேமிதன்றால் நலம்பெறவேசொல்லுகுறேன் நன்றாய்க்கேளு, தாளப்பாமனதோடேவியானன்கூடும்தனியானநாதத்திலபானன்தானே (௩௦)

தானென்றவிந்துவினிற்சமானன்கூடும் தனியானசித்தத்தில் வியானன்கூடும், தானென்ற ஆங்காரம் கர்ச்சிப்போடே கலந்து நிற்கும் உதானனப்பா கண்டுகொள்ளு, வேனென்றபத்துமொன்றாய்மனதுங்கூடிமேவியவண்கலந்துவந்து விழுகும்போது, மானென்றமெள்ளபாலசமேயாவன் மருவுகின்றபெண்ணுக்கும்முறைதான்கேளே. (௩௧)

கருதரிக்கும்விதம்.

முறையானபெண்ணுணும் மௌனமுற்றால் மோகமில்லை கருவங்கேதரிக்கும்பாரு, நிறையானவலத்தோடிலானேயாகும்நேராகஇடத்தோடிற்பெண்ணேயாகும், உறையானகருப்பையில்சுக்கிலம்பாய ரத்தமினைசுரோணிதந்தானுறைந்துகொள்ளும், கறையாகப்பாய்ந்தவெளிதமரும்போலக் சுழந்தொடிக்காய்ப் பேர்த்திரண்டு சிரசுமாமே. (௩௨)

ஆமப்பாசிரசோடேகையுங்காலும் அப்பனேதத்துவங்கள்ந
சம்புழலை, ஓமப்பாஅஸ்திமுதலுரோமத்தோடு உத்தமனேபதி
னொருவாசலுமேகாலும், காமப்பால்விழுந்தவழிசிரசினாலே கை
ம்முறையாய்த்தாயுண்டஅன்னஞ்செல்லும், சேமப்பாநடுமையத்
தொப்புளாலே சென்றதெல்லாமலமாகக்கழியுந்தானே. (௰எ)

தானென்றபதினொன்றாற்சடந்தான்முன்னே சாதகமாயெடு
த்துவரும்மலடெவ்வாறு, ஊனென்றபெண்ணுக்கு மனதுவேறா
ய் உருத்தமுற்றமௌனம்உன்னுப்பாவத்தாலே, காமென்றமல
டாவள்புருஷனுக்குங் கைம்முறையாயிப்படிதான்கண்டுகொள்ளு
தேனென்றமொழியாட்குப்பாலர்சொன்னார் செகமெல்லாம் இ
ப்படிதான்செனித்தவாறே, (கூச)

தசவாயுக்களின்பெயரும்-பிராணவாயு இருப்பிடமும்.

பிலத்துநிற்கும் பிராணனோடபானனெனும்வியானன் பிரியா
தஉதானன் சமானனொடுகூர்மன், நலத்துநின்றநாகனொடுகிருகா
ன்றனுக்கும் தற்றேவதத்தனொடுதனஞ்சயன்பத்தாகும், இலக்கமு
டன்பிராணனிலிங்கமூலமதிற்றோன்றி யெழுந்துசிரசளவுமுட்டி யிரு
விழியின்கீழாய், கலக்கமறநாசிவழி யோடிப்ஈராறில் கழிந்தெட்டு
உட்புகுந்து கழியும்ஓர்நான்கே. (ரு௫)

அபானன்-வியானன்-உதானன்-சமானவாயுக்கள்.

உந்தியெனுந்தலத்திற்கீழபானனின்று உறுமிமலசலங்களை
யுங்கழலச்செய்யும், விந்தையெழில்வியானன்றோ ளதனில்நின்று
மிசக்களையுந்தவனமும்உண் டாகச்செய்யும், மிந்தஉதானன்செவ
லின்டசனந்தன்னைப் பெருநாடிநரம்புவழியூட்டல்செய்யும் இந்
தவுடல்தனைவளர்க்குஞ்சமானன்தானு மியாவையுமேமிஞ்சவொ
ட்டாதிருக்குமன்றே. (கூள)

கூர்மன்-நாகன்-கிருகரன்-தேவதத்தன்-தனஞ்சயன்வாயுக்கள்.

கூர்மனிருவிழியில்நிமைத் திடுமேநாகன் கொட்டாவிவிக்க
லெனுங்கொடுமைசெய்யும், நீர்மைகிருகரனீட்டி முடக்கிவைக்கு

ந் தேவதத்தன்விழித்துமேவசலஞ்செய்யுந், பேர்மன் றுந் தனஞ்சயன்மேற்சிரசிரண்டாய்ப் பிளந்திடும்போதுங்காடிப் போவதாகும், நேர்மையதித்திடுவையினிநாடிபத்தின் நிலைமைதெரிந்திட விபரம் உரைசெய்வோமே. (கஎ)

தசநாடிகளின்பெயர்கள், சுழிமுனைநாடி-இடகலை-பிங்கலை.

சுழிமுனையாம்இடகலை பிங்கலைகாந்தாரி அத்தி சிங்குவையலம்புடை புருடன்குறுனும், தெழுகுருவன் சங்கினியோ டொத்தாக நின்றதசநாடிபத்தும் நிலைத்தநாமம், மொழியவதின்னுள் சுழிமுனையென்பதுமூலத்தில் முளைத்து நடுவெழுந்து சிரசளவும் நிற்கும், வழியுயிடைபிங்கலைபோற் சுழிமுனையிற் கலைகள்தோன்றிப் பிறந்துயிரு நாசியிடம் ஒடிநிற்கும். (கஅ)

காந்தாரி-அத்தி-சிங்குவை-அலம்புடை
புருடன்-குருநாடிகள்.

கண்டமதில்நின்றகாந்தாரிநாவில் கலைந்து நீர்பொசியவுமாபங்கள்செய்யும், அண்டசெவிதனிலத்தி சிங்குவை நின்று அசைத்தையோர்தான்கிடுக்கும்ளைஉளஎன்றும், விண்டஅலம்புடைபுருடன் இருவிழியில் நின்று மெய்மறந்தபோது அசைவாகிநிற்கும், கொண்டகுருநாடியீ ரடிப்பற்பற்றிக் குடல்புரட்டி வாயிலு நீர் கழற்றி நிற்கும். (கக)

சங்கினிநாடி-விடையம் ஐந்தின் பெயர்கள்.
வர்ணவிடையம்.

சங்கினியென்பதுநாபிகுய்யம்பற்றித் தானிருக்கும்ஒன்றையுமொழிந்துசொட்டாமல், அங்கும்அதிகாரியதே டைப்பத்தென்றும் அறிவித்தோம்வசனதியைந்துக்கேளாய், இங்குவசனைக்கமனந்தானத்தோடு இருந்தமொழிவிசர்க்கம்ஆனந்தம் ஐந்தில், பொங்குவசனதியவல் வாக்கில்நின்று பொருந்தவசனத்தையவன் பிறப்பிப்பானே. (உய)

வியாதிகளை அஷ்டவிதப் பரிக்ஷைகளாலும்
நிச்சயித்தறிதல்.

தாவியுள்ளவியாதிகளையஷ்டாங்கத்தால் தானறியவேண்டுமெனிலெதுவென்னில், நாடிதோர்நாடிகண்கள் சத்தத்தோடு தேகத்தினஅபரிசம் வர்ணம்நாக்கு இராசமலப் மூத்திரமாம்இவைகளைடைம் இதம்பட வேதால்பார்த்துக் குறிப்புணர்ந்து, பானுவார்த்

பெரியோர்கள்பாதம்போற்றிப் பண்புதல்குமற்பண் டிதருஞ்செப் பினரே. (௪௨)

தேகங்களின் பரிசங்களும் நிறங்களும் வருங்குறியறிதல்.

முனைகின்றதேகபரிசத்தைப்பார்க்கில் மூன்வாதத்தேகிக்குச் சீரஞ்சற்றே, அனைகின்றஉஷ்ணமாம் பயித்தியதேகிக் கதிசமுள்ள தாம்அப்பால்சீதளமாய்நிற்கும், சுனைகின்றசிலேட்டுமந்தான்குஞ் தேகிக்குத் தொந்தகுணம்நால்விதமாம் நிறந்தான்கூறில், பனைவூ தத்தகநிறங்கறுத்துநிற்கும்பயித்தியதேகநிறமஞ்சள்சிவப்பதாமே

சப்தலட்சணம்.

தாமேசிலேட்டுமதேக நிறம்வெளுப்பு தானதொந்ததேசம் நால்விதமாய்நிற்கும், மாமயிலேசத்தமது அறியவேண்டில் வாத ரோகிசமதொனியாய் வார்த்தைபேசும், ஈமமுள்ளபித்தந்தான் உ றக்கக்கூறும் இயம்பிடுஞ்சிலேட்டுமரோகிக்கினைச்சத்தம், நாமுனை த்தோம்தொந்தரோகிக்குத்தானித்த நால்விதமாய்மொழிந்தசத்த ம்நயந்துகாணே, (௪௩)

நயனலட்சணம்.

காணுகின்றவாதரோகிக்குக்கண்கள் கருநிறமாய்நொந்துமிக த்தண்ணீர்பாயும், பூணுகின்றபித்தரோகிக்குமஞ்சள்போலிருக்கு ஞ்சிவப்புநிறப்பொலிவுதோன்றும், பேணுகின்றசிலேட்டுமரோகி க்குக்கண்கள் பீளைகட்டிவெளுத்திருக்கும்சன்னிவாதம், வாணுகின் றசிவப்புடைத்தாய்வற்றுவீங்கி வந்திடுங்காமாலையென வகுத்துச் சொல்லே. (௪௪)

வாதமலம்-பித்தமலம்-கபமலம்-தொந்தமலம்
வாதச்சிறுநீர்நிறங்கள்.

வந்தமாவாதரோகிக்குத்தானும் மலமிறுகிக்கட்டுபட்டுக் கறு த்துத்தோன்றும், சிற்றுபித்தரோகிமலம்மஞ்சளாகில் சிவப்பாகி ச்சேர்ந்திருக்குஞ் சிலேஷ்மருக்குச், சொந்தமலம் வெளுத்திருக் கும் மலக்கட்டாகுந் தொந்தர்மலம் பலவிதமாய்த் தோற்றிக்கா ணும், விந்தமுளவாதரோகி சிறுநீர்தானும் வெளுத்திருக்கும்பயி த்தியர்நீர்சிவக்குஞ்சொல்வேனே, (௪௫)

பயித்தியர்சிறுநீர்-சுபநீர்-தொந்தநீர்-வாதரோகநா பித்தரோகநாவுநிறங்கள்.

விதமுள்ளபயித்தியர்தன்சிறுநீர்மஞ்சள் விதமுடைத்தாயிருக்குமல்லால்சிவப்புந்தோன்றும், நுரையுள்ளசிலேட்டுமத்தோர் நீர்தான்மெத்த நுரைகலக்குந்தொந்தநீர்நால்விதமாய்க்காணும், களையுள்ளநாவினிறஞ்சொல்லில்வாதந் தோன்றினர்க்கு வெடித்து முட்போற்கறுத்திருக்கும், களைபல்லசிவத்தாலும்பசித்தாலுந்தான் வளமுள்ளபயித்தியர்நாகலைக்குத்தானே. (௪௬)

கபரோகநாவு-ஜன்னிரோகநாவு-தொந்தரோகநாவு.

நாவுமோவாய்வெளுத்து நீருண்டாகிற் றுஞ்சிலேத்துமமுநாவாகும்வரம்அற்றே, ஆனமுட்போற் கறுக்கில்சன்னி ரோகநாவாம் அதுதொந்தநாவுநிறம் நால்விதமாய்த்தோன்றும், ஆனஇவ்வகையெட்டும்அறிந்தபேரை அவனிதனிற்பண்டிதரா யறியச்சொல்வார், ஈனம்இலாப்பொறிபடக்கும் பெரியோரஞ்சி மெய்தா அ கூவருக்கும் இயம்புங்காலே. (௪௭)

நாடி ஸ்தானங்கள்.

நாடிகள்நிற்கும் இடங்களும் வாதநாடிநடையும் விருகலநிக.

செப்புகின்றநாடிபெரு விரலின்மேலாய் திருந்திழைமூன்றங்குலத்தினடுவதாகத், தைகின்றகோதும்பையரிசிபோலச் சர்வம்வியாபித்திருக்கும்அதுதான்கூறில், கையடியுங்காலடியும் நாடிநிற்குங் கன்னியிருக்கிடப்புறமாங்கணவர்க்கங்கே, மைகின்றவலப்புறமாம்வாதநாடி வந்தமுன்னேநடக்கும்அப்பால்வகைசொல்வேனே(

பித்தம்-சிலேஷ்மம்-வாதம்-நாடிநடைகள்.

சொல்லுகின்றபித்தநாடி தோற்றம்அப்பால் தொடர்ந்துசிலேட்டுமநாடி தோற்றும்அப்பால், அல்லுகின்றகுழலாளே நாடி நின்றால் ஆச்சரியநாடியென்றறிந்துசொல்லு, மல்லுகின்றவாதத்தில்நாடியங்கே வக்கிரகதியாய்நடக்குந்தவளைபோல, நல்லுகின்றமாமியட்டை தொட்டிலாட்டல் நல்லாயிப்படிநாடி நடக்குந்தானே. (௪௮)

பயித்தியநாடிநடை-சிலேட்டுமநாடிநடை-வாதமும் பித்தமும் தொந்திக்கநாடிநடை.

நடக்கும் பயித்தியஞ்சலைப் பிள்ளைபோலும் நடையையில் அன்னம்பார்த்தைகம்போலும், நிடக்குஞ்சிலேட்டுமநாடி இலங்கும்பகளி செய்யபருஉனர்க்குருவி கோழிபோல், அடக்கமாய் நடக்குமதுமயிலைசொன்னேன் அவ்வளவ்வாதபயித்தியத்தின் தோந்தம், மடக்கின்றகாடைபோல் நடந்தப்பின்னை மஞ்லஞ்பென நக்குமதமாதித்துக்கூறே. (௫௰)

வாதசிலேஷ்மத் தொந்திக்கநாடி. அசீரணநாடி மத்ரிதயநாடி ஸ்திரீசங்கைநாடி மலபந்தநாடி சன்னிவாதநாடிகளின்வருகை,

கூறுகின்றவாதசிலேட்டுமமுங்கூடிக் கோழிபட்டை பெனநடக்கும் அசீர்ணநாடி, தூறுகின்றமத்திரிதயத்திமுடி தாக்குகின்ற காகநடையென்றுசொல்வார், தேறுகின்றஸ்திரீசங்கையிப்படியாய் நின்றுதீவிரமாய்நடக்குமலபந்தநாடி, உன்றும்அன்னம்போல்நடக்குஞ்சன்னிவாதம் உயர்நாடியிதிதனையும் உனைக்கக்கேளே (௫௧)

குடிலை-குட்டமைவாயு-சன்னி-வாதம்-சங்கினி-காந்தாரிமுதலிய நாடிகளின் நடைகள்திக,

உரைத்தவிறகின்கட்டுக்குள்ளுழலுஞ்சூழு உலவுதல்போலேநடக்குங்குடிலைவாயு, விரைத்தெழுந்தேமத்தமாயிருந்துபின்னும் விகமாகநடக்குமதுகுட்சமவாயு, புரைத்தருமையிவ்வகையின் சன்னிவாதம் பொருப்பாகக்குவித்தமுலைபோலுங்கொங்கை. மூனைத்தெழுந்தசங்கினிகாந்தாரியின்னே முறைமையதாப்நாடியென மூனைவர்தாமே, (௫௨)

பண்டிதாளிலக்கணம்

முற்றுப்பெற்றது.

கடவுள் துணை.

ஆத்மரட்சாமிர்தமென்னும்
வைத்தியசாரசங்கிரகம்.

பிண்டோற்பத்தி.

விருத்தம்.

சீர்நிறைந்தமானிடர்கள்பிண்டோற்பத்தி.............*
நிறைந்துவருஞ்சுக்கிலமாஞ்சுரோணிதத்தால் ... *
கார்நிறைந்தபிண்டமதுதசமாதத்தான்..................*
காட்டினார்கருவிகரணாதியெல்லாம்... ... .*
பார்நிறைந்ததத்துவங்கள்வயதுமார்க்கம்...... ......*
பாடினார்நூலின்முதலைமையாக......................*
ஏர்நிறைந்தவாத்மரட்சாமிர்தமென்று..................*
இயம்பினார்வயித்தியசங்கிரகமாமே.................*

மங்கையர்கள் பூத்ததுமுதற் சிலநாள்வரை கருக்குழிமலர்ந்திருக்கும், அக்காலத்திற் சுக்கிலந்தரித்தால் வாயுவன்னியினால் சுக்கிலசுரோணிதம் சம்பந்தப்பட்டுக் கடுகுபோலும் நீர்க்குமிழிபோலும், முட்டைபோலுமாம், திங்களொன்றில் வாழைப்பூ மொக்குபோற்றிரண்டு பிண்டமாகி தலையுடலென்ற விகற்பந்தோன்றும் இரண்டில் உடலினின்று கைகால்களரும்பி கால்களுக்கிடையில் முள்ளந்தண்டு வால்போல நெடுகியிருக்கும், முகம் இரத்தாசயம் சுவாசப்பை இரப்பைமுதலிய குடல்கள் முளைக்கும், கண்களும் பின்பு வாய் நாசி காதுத்துவாரங்களுந் தோன்றும், மூன்றும் நாலாந்திங்களில் மூக்கு உதடு கண்மடல் காது உண்டாகி கை கால் மரக்கொம்புபோல் வளர அவற்றினுனிகளிலே விரல்கள்தோன்றும், ஐந்தாமாதம் இறுதியில் சிசு சற்றே பூரணரூபமாய்விடும், ஆறுமதிமுதல் மேற்படி உறுப்புகளும், எலும்பு தலை மயிர் நாடி நரம்பும் ஏனைய அங்கங்களும் பிராணாதி பஞ்சவாயுக்களும் உண்டாகும், ஏழாவதுமாதத்தில் கருவுக்கு அங்கவுருவும் ஓடுவது பிடிப்பதும் அசைவதும் திருஷ்டார்த்தமுண்டாகும், எட்டாவதுமாத

த்தில்-தாயுண்ட அன்னசாரங்கள் சிசுவின்கெர்ப்பத்தினூறும், ஒன்பதாம்வயதில் தன்னறிவுதோன்றும், பத்தில் பரமசிவத்தைநோக்கித் தவஞ்செய்து சிரசுதையமாகி செனனம்.

வயது-௨௰-தீ-௩௰-க்குள்-உடல்வளரும், அதற்குமேல்முகத்தில்ஒளி குன்றும்-௪௰-க்குமேல் தேகஸ்கெடும், ௫௰-க்குமேல்-உடல்தளரும் ரோமம்வெளுக்கும்-௬௰-க்கு-மேற் கண்ணொளிமங்கும் நடக்கிற் றிகைப்புண்டாகும், புத்தி கோபாக்கினை அதிகசிறனுண்டாம், ௭௰-க்கு மேல் அறிவுகுறையும், ௮௰-க்கு-மேல் சுவாசம்மேல்நோக்கி வெளியிற்பாயும், ௯௰-க்குமேல் ஐம்பொறியும் புலனும் ஒடுங்கி இந்திரியமற்று நூற்றிருபதில் மரணம் இது விடையில் விதியினல் அவமிருத்து தத்துப் பிணி முதலானவைகளால் மரணமுண்டு.

தேகக்கட்டளை விபரம்.

பிருதிவி-மண், அப்பு-சலம், தேயு-அக்கினி, வாயு - காற்று ஆகாயம்-வெளியென்று சொல்லிய பஞ்சபூதங்கள் சரீரத்துக்கு ஆதாரமாயிருக்கின்றது.

வாதம் வாயுவின்தன்மையையொத்துப், பித்தம்-தேய்வின்றன்மையையொத்தும், சிலேத்மம்-அப்புவின்றன்மையையொத்துமாயிருப்பதால் சுரோணிதத்துடன் சுக்கிலஞ்சேரும்போது, வாதபித்த சிலேத்மங்களில் எது அதிகரித்திருக்கிறதோ அது சிசுவிற்குப்பற்றி வாததேகம்-பித்ததேகம்-சிலேத்மதேகமென்று மூவகைத் தேகக்கட்டளை யுண்டாயிருக்கின்றன.

வாத-பித்த-சிலேத்துமதேகக்குறிகள்.

விருத்தம்.

சொல்லும்வாததேகிகட்குந் தோற்றும்பித்ததேகிகட்கும்... ...*
வெல்லுஞ்சேத்மதேகிகட்கும் விளையுங்குணமுங்குறிப்புமுதல் *
கொல்லும்வியாதிசெய்யும்விதம் குன்றும்நாடிநடக்கும்விதம் *
புல்லுமாந்தர்தானறிய புகன்றார்முனிவர்மடமயிலே..........*

(இ-ள்) வாததேகி-பித்ததேகி - சேத்துமதேகி இம்மூவர்கள் தேகக்குறிப்பும், நாடி நிதானமும், வியாதிவளர்குறிப்பும், மானிடர்களெளிதில் அறியும்படி உரைக்கத்துணிந்தேன் பெண்ணே என்பதாம்.

வாததேகக்குறிகள்.

நாடி மெதுவாய் நடக்கும் தேகமெத்த அசதியுள்ளதாயும் புத்தி மந்தமாயுமிருக்கும், சொட்டாவி மேலிடும், மலத்தை யிறுக்கும், அக்கினிமந்தமுமுண்டாகும், சரோணிதக்குன்றும், போகங்குறையும், உற்சாகரியத்தை மெத்தவாவென்னும், சற்றுஞ்சலியாமனுஷாப்பதெல்லாம் உழல்வாயிருக்கும், வெற்றியும் புகழுமுண்டாகவேண்டிப் பொய்மெய்யாகப்பேசும் உடல்குளிர்ந்து பருத்திருக்கும்.

பித்ததேகக்குறிகள்.

நாடி விரைவாய்நடக்கும், திடமுத்திரக்கமுங் கடினமானகாரியங்களைச் சாதிக்குஞ்சத்தியுமுண்டாகும், இளமையில் நரைக்கும் கடைக்கண் சிவப்பாயிருக்கும், சொற்கள் அமிர்தமாயிருக்கும் காமக்குரோதாதிகள் அதிகரித்திருக்கும் உடல் க்ஷீணமாயிருக்கும், மெய் பொய் அறியும்படி பலநூல்களை ஆராயும்.

சிலேத்மதேகக்குறிகள்.

நாடி அதிசயிரிக்ஷியும், தற்பெலனுள்ளதாயுமிருக்குமுடல்வியர்க்கும், சன்மார்க்கத்தி லிச்சையுண்டாகும், தோகையரின்பமும் பொய்களவும் விலகியிருக்கும், ஸ்நானகாலங்களில் போகத்தால் சன்னிமேலிடும், அனித்தியகாலங்களில் சேத்துமத்துக்கு அதிகரிநிறைகாட்டும், கண்ணுலாத்துமம் பிரியும், தலைமயிர் நீண்டுகோட்டும் பகிடிகூறும் திருமாதணைந்துவாழ்வன்.

நாடி விளக்கம்.

—*—

விருத்தம்.

கூறுமோர்ந்தர் குறிக்குநரம்பினின்............. *
நேறுநாடியெழுபத்தீராயிரம்.................. *
மீறும்பத்தின் பிணங்குர்த்திரிநாடி .... *
மாறுங்கூர்வகை மாமுனியுற்றதே .... *

(இவ்) மானிடர்தேகத்தில் ௭௰௨௲-நாடிநரம்புகள் உத்திச்சயிலிருந்தெழுந்து கீழ்மேலாய்ப் பேய்ப்பீர்க்கங்கூடுபோல் ஆக்கையெல்லாம்பற்றி நிற்கும் இவைகளில் இடைகலை பிங்கலை சுழுமுனை அலம்புடை காந்தாரி அத்தி சிகுவை சங்கினி இயல்புருடன்

ருவென்றதசநாடி-௰ இடைகலை வலதுகாற் பெருவிரலி லிருந்து இடதுநாசிவரையிலும், பிங்கலை யிடதுகாற் பெருவிரலிலிருந்து வலதுநாசிவரையிலுங் கத்தரிக்கோல்மாறலாக நின்றிருக்கும் சுழிமுனை மூலாதாரத்திலிருந்து ஆக்கினைவரையோடி புச்சியில் அச்சுருவாணியாய்நிற்கும், பொறியிற்குண்டாம், அலம்புடையும் இயல்புருடனும் இருசெவிகளைப் பற்றிநிற்கும் அப்போது சத்தொலிமேலிடும், அத்தியுஞ் சிகுவையும் இருகண்களைப் பற்றிநிற்கும், அப்போது கண்ணொளிவுந்தோன்றும், காந்தாரி நாவியிற்றோன்றி, ஏரமேழிற்கும், எழுநாடியாய்க் கண்டத்துற்றிருக்கும் சங்கினி குருகுய்யத்தைப்பற்றிநிற்கும், தேகத்தில்-பிராணன்-அபானன் உதானன் சமானன் வியானன் நாகன் கூர்மன் கிருகரன் தேவதத்தன் தனஞ்சயனென்ற பத்துவாய்வும் வழங்கும் அப்போது தேகம் சூத்திரப்பாவைபோலாம்.

விருத்தம்.

சொன்னார்நாடிதசநாடி தொகுக்கும்பத்தில்மூன்றுளதாம் ... *
அன்னேவாதபித்தமென வறையுஞ்சேத்துமநாடியதாய் ...... *
பொன்னேமாதேபிணிக்குறிப்பும்புகலுமலமுஞ்சலக்குறிப்பும் *
முன்னோர்முனிவர்மூலவகைமொழிந்தாராயுள்வேதமிதே ......*

மேற்கண்டதசநாடி-௰-ல் - எழுநீக்கி இடைகலை பிங்கலைசுழிமுனையென்னும் மூன்றுநாடியும் ஓரோநாடியாயமைந்து இடைகலை வாதநாடியாகவும், பிங்கலை-பித்தநாடியாகவும், சுழிமுனை சிலேத்துமநாடியாகவும் நடக்கும், வாதம் மலத்திலும் பித்தம்நீரிலுஞ் சிலேத்மம் விந்திலும் அடங்கும்.

தசவாய்வு பத்தில் அபானன் வாதத்திலும் பிராணன் பித்தத்திலும், சமானன் சிலேத்மத்திலுமிருக்கும்.

பிராணன் மூலாதாரத்திலிருந்து இருதயகமலத்தின் வழியூடுருவிக்கொண்டு, இடைகலை பிங்கலைக்கும் நடுவாய்க் கபாலவரையோடி முட்டி நாசிகையின்வழியாய் வெளியிற்பாய்ந்துபோகும்போது சுழிந்தது-௪-அங்குலங்கள்போக மற்றவைதிரும்பியுள்ளே புகும்.

விருத்தம்.

சொல்லுவேன்மானிடற்குநாழியொன்றில் .... *
சுவாசமதுமுந்நூற்றறுபதாகும்............ *

வெல்லுமேவிருபத்தோராயிரந்தான் ……………… *
விளங்கிநிற்குஞ்சுவாசமதுஅறுநூறுகட் ……………… *
புல்லுமேவல்கலைமூன்றுநாடிமூன்றாய் ……………… *
புகழானமாத்திரையுஞ்செப்பலாகும் ……………… *
மல்லுமேவன்நாடியதுசரியாயோடில் ……………… *
மானிடர்க்குப்பிணியுமதுமேவிடாதே ……………… *

நாழிகையொன்றுக்கு-௩௱௬௰ - சுவாசமாக நாளொன்றுக்கு ௨௧௬௱-சுவாசமும்-இரேசக பூரக கும்பகமாய் நாடிமூன்றும் இடைகலை-பிங்கலை-சுழிமுனையாகிய வாத பித்த சிலேத்தும மென்பவைகளே, இடைகலை-௰௬-அங்குலப்பிரமாணமோடு மிதுவே வாத நாடிமாத்திரை-௧-பிங்கலை-௰௨-அங்குலப்பிரமாணமோடு மதுவே பித்தநாடிமாத்திரை-ஹ-சுழிமுனை இரண்டுநாசியினும் உபயமாகப் பருத்தோடும் அக்கினி அலியெனப்படும், அதுவே சிலேத்மநாடி மாத்திரை-வ-இவ்விதமாக நாடியோடிற் றேகத்திற்பிணியில்லை.

விருத்தம்.

செப்புமூத்தி சிறையும்வாதநிலை ……………… *
ஒப்புமார்புமுறையும்பித்தநிலை ……………… *
கப்புமூச்சிக் கழுநுமையநிலை ……………… *
மெய்ப்பமாமுனி மீண்டுவுரைத்ததே ……………… *

வாத பித்த சிலேத்தும நிலை.

அபானமுதல் உந்திவரை வாதநிலை, உந்தியின்மேல் மார்புமட்டும் பித்தநிலை, மார்புமுதலுச்சிவரை அய்யநிலை.

வாதபித்த சிலேத்துமத்தினியல்பு.

வாதம்-வாய்வு-புளிப்பு-குளிர்ச்சி-நிறங்-கருமை-நீலம்- பித்தம்-வன்னி-கசப்பு-வெதுப்பு-நிறம்-பசுமை-பச்சை-ஐயம்- அப்பு-தித்திப்பு-வியர்வைநிறம் வெண்மை.

வேறு - விருத்தம்.

கூறவேவாதமது எழும்பிற்றானால் ……………… *
கோப்பெனவேபுளிப்புமது நாவிலேறும் ……………… *
சீறவேபித்தமது எழும்பிற்றானால் ……………… *
சிறகிறத்துகசப்புமது நாவிலேறும் ……………… *

மீறவேசேத்மமது எழும்பிற்றானால் .... *
முனையானதித்திப்பு நாவிலேறும் .... *
நூறும்வயிம்மூன்று குறிப்புதன்னை......... *
சூட்டினார்மலயமுனி தெரியத்தானே......... *

வாதம்எழும்பிடிற் புளிப்பு நாவிலேறும் பித்தம் எழும்பிடில் கசப்பு நாவிலேறும் சிலேத்துமம்எழும்பினால் இனிப்பு நாவிலேறும்.

தேகங்குளிர்ந்தால் வாதம் தேகஞ்சுட்டால் பித்தம் தேகம் வியர்த்தால் சிலேத்துமம்.

வாதபித்தசிலேத்துமகாலம்.

வேறு - விருத்தம்.

காலையில்வாதநாடி கடிகையில்பத்ததாகும் .... *
பாலையாம்பித்தநாடி பகருச்சிபத்ததாகும் .... *
மாலையாம்சேத்மநாடி மதிப்புடன்பத்ததாகும்......... *
வாலையாமனோன்மணிக்கு வகுத்துமேதொகுத்ததாமே......... *

உதயத்தில்-௰-கடிகைவரைவாதம் உச்சியில்-௰-கடிகை பித்தம் மாலையில்-௰-கடிகைவரை சிலேத்துமநடக்கும்.

மனிதர்களுக்கு வயசு-௱௨௰-ல்-௩௰-வயசுவரை வாதகாலம்-௩௰-முதல்-௮௰-வரை பித்தகாலம்-௮௰-இ-மேல்-௱௨௰-வரை சிலேத்துமகாலம்.

நாடியுண்டாவதற்குக்காரணம்.

இருதயத்தின் இடதுசடரங்குவியும்போது இரத்தங்கள் உளையில்வழியாகச்சென்று சகலநாடிகளுக்கும் பரவும் அப்போது நாடிகள்விரியும் மறுபடியு மிடது சடரம்விரியும்போது நாடி நரம்பிலிருக்கும் இரத்தங்குறைந்து நாடி சுருங்கும் இவ்விதமாக இருதயங்குவியவுஞ் சுருங்கவுமாக இருப்பதால் அதனுடன்சேர்ந்த நாடி நரம்புகளுக்கும் விரிந்து சுருங்குந் தன்மையுண்டு இந்தச் செய்கையைத்தான் நாடிநடையென்று சொல்லப்படும்.

நாடிநடையின் குணமானது இருதயத்தின் நடைக்கு வொத்திருக்கும்.

இருதயத்தினுடைய நடையின் பேதாபேதங்களைநாடி நமக்குத் தெரிவிக்கின்றது தேகத்திலிருக்கு முறுப்புகளில் இருதயமோர் பிரதான உறுப்பு அதினுடையநடை தேகஸ்திதிக்கு ஒத்திருக்கும் தேகத்தில் நோய்கண்டால் இருதயத்தினுடைய சுபாவிகநடை இழந்துபோகும் தேகத்திலிருக்கும் நோயை இருதயந்தெரிந்து கொண்டு நாடிமூலமாக நமக்கு அறிவிக்கின்றது ஆகையால் நாடி நடையின் பேதாபேதங்கள் நன்றாகத்தெரியாவிட்டால் தேகத்திலிருக்கும் வியாதியின்கூறு செவ்வையாகத்தோன்றாது.

ஒருநிமிஷத்தில் நாடி நடக்குமிடம்.

குழந்தைபிறந்தவுடன்-௱௪௰- நாடிநடக்கும் பாலியத்தில்-௱௨௰முதல்-௱௩௰-ம்-யௌவனபருவத்தில் ௯௰-௱ம்-சம்பூரணபருவபுருஷனில்-௭௰-முதல்-௭௫-சம்பூர்ணபருவஸ்திரிகளில்-௭௫-முதல்-௮௰- க்ஷீணப்பருவத்தில்-௭௰- விருத்தாப்பியத்தில்-௭௫-முதல்-௮௰- உட்கார்ந்திருக்கும்போது-௬௰-நிற்கும்போது-௭௰ - படுத்திருக்கும்போது-௬௬-இவ்விதமாய் நாடிநடக்கும்.

நோயாளியைப் படுக்கவைத்தாவது உட்காரவைத்தாவது நாடிபரீக்ஷிக்கலாம்.

நாடி பேதாபேதம்.

வேறு-விருத்தம்.

வெய்யிலிலேயெப்போது நடக்கையாலும்......... *
வெப்பசியிலாகிரிக ளருந்தலாலும்................ *
அப்பவெய்யில்புகையிலைகள் கொள்ளலாலும்...... *
தொடர்ந்தசுரநித்திரைகள் கொள்ளலாலும்...... *
நையவேகோபமது கொள்ளலாலும்................ *
நாள்தோறுமிரத்தமது வடிதலாலும்............. *
ஐயவேநாடிநடை தீர்க்கமாக........................ *
அடிஅடித்துப்படபடத்து ஓடுந்தானே......... *

நடந்து தேகம் அருண்டிருந்தாலுஞ் சாப்பாடு குடிபதார்த்தங்கள் சாராயமுதலிய லாகிரிவஸ்துகள் புகையிலை-வெயில்-சுரம்-நித்திரைபங்கம் மனச்சஞ்சலம் அதிகபலவீனம் இரத்தம் வடிதல்

முதலானதுகளினாலும் நாடிநடை தீவிரமாயும் படபடென்றோடும்.

பசி விசனங் குளிர் அதிகநித்திரை முதலானதுகளினால் நாடிநடைகுறையும்.

விருத்தம்.

கொண்டிடவேக்ஷயரோகி காசரோகி...................*
குறிப்பாகச்சிற்றின்பஞ் செய்தபேர்கள்.........*
அண்டிடவேதரித்திரர்கள் விருத்தர்பாலர்...........*
அன்பாகத்தண்ணீரில் மூழ்கினோர்கள்...........*
கொண்டிடவேயிவர்களதுவுறுப்பின்றாது...............*
கூறவேமுடியாதுயெவர்க்குக்கிட்டும்...........*
பண்டிடவேயிப்பரீட்சை யார்தான்காண்பார்...... *
பராபரத்தின்மகிமையிதுபாருபாரே...... ......*

விருத்தர்பாலர் க்ஷயரோகி காசரோகி தரித்திரர் சிற்றின்பஞ் செய்தபேர்கள் தண்ணீரில்மூழ்கினபேர்கள் இவர்களின்நாடின் உண்மைதெரியாது.

வேறு-விருத்தம்.

செப்பவேநாடிதானும் சிறப்புடன்பார்க்கும்போது..........*
ஒப்புடன்பூமியிற்கை யூன்றிக்கொண்டிருக்கும்போதும்.........*
துப்பறக்காலைக்கட்டிச் சோர்வடைந்திருக்கும்போதும்.........*
செப்பவேகட்டிருந்தால் சிதைவுடனாடிதோன்றா......... ......*

நாடிபார்க்கும் ஸ்தானத்திற்குமேல் யாதொரு கட்டிருந்தாலும் பூமியிற் கரத்தை யூன்றிக்கொண்டிருந்தாலுங் காலைக் கட்டிக்கொண்டிருந்தாலும் நாடிநடைதோற்றாது.

நாடிபார்க்குமாதவகை.

சித்திரைவைகாசிக்குச் செழுங்கதிருதயந்தன்னில்...... ....*
அத்தமாமானியாடி யைப்பசிகார்த்திகைக்கும்......... ....*
மத்தியானத்திற்பார்க்க மார்கழிதையுமாசி......... ....*
வித்தகன்சூரியோன்மேற்கில் விழுகின்றநேரந்தானே...... ... ...*
தானதுபங்குனிக்குந் தனதுநல்லாவணிக்கும்...... ....*
மானமாம்புரட்டாசிக்கும் மற்றராத்திரியில்பார்க்கத்...... ....*

தேனென மூன்று நாடித் தெளிவாகக்காணுமென்று... *
கானமாமுனிவர் சொன்ன கருத்தை நீகண்டு பாரே... *

சித்திரை வைகாசிக்கு முதையத்தில் ஆனி-ஆடி-ஐப்பசி-கார்த்திகைக்கும் மத்தியானத்தில்-மார்கழி-தை-மாசிக்கும் அஸ்தமானத்தில்-பங்குனி-ஆவணி -புரட்டாசிக்கும் இராத்திரியிற்பார்க்க நாடி தெளிவாய்த்தோற்றும்.

நாடிஸ்தானங்கள்.

விருத்தம்.

கூர்ந்திடவே கமன்னமது கழிபிற்றானும்... *
குறிப்பான கைகளிலும் ஸ்தானந்தன்னில்... *
சார்ந்திடவே கணுக்காலி னுட்புறத்தில்... *
சார்வாக பெருவிரற்கால் மேலதாக... *
தேர்ந்திடவே நாடிதனை யுபயோகிக்கத்... *
தெளிவாக மாந்தருக்குச் செப்பலாச்சே... *
பேர்த்திடவே சகலருக்குங் காத்திருடி... *
பேசினார் பிரமமுனி பேசினாரே... *

கைகளிலும் கன்னச்சுழிகளிலும் காற்பெருவிரல்களுக்குமேலாகக் கணுக்காலினுட்புறத்திலும் நாடிபரிக்ஷிக்கலாம். ஆனால் கை நாடிப்பரிக்ஷையே சகலத்திற்கும் உத்தமம். மானிடர்களுக்குள்-௭௨௲-நரம்புகளில் நாடிகள் நடக்கிறது அதில் பிரதானமாய்க் கையைப்பிடித்து நாடி சொல்வதேனென்றால், மணிக்கட்டுபரியந்தம் கையில் நாடிப் பெருநரம்பு ரத்தக்குழாய் சிறந்திருப்பதால் வாதபித்த சேத்மமாகிய நாடிகளை எளிதிலறியலாம் மற்றவிடங்களில் ரத்தகுழா யருத்திருப்பதால் எளிதிலறியக்கூடாது.

நாடியைப்பிடித்து பரிக்ஷிக்கும்விதம்.

விருத்தம்.

பார்க்கவே கைபிடித்து நாடிதன்னைப்... *
பகர்ந்திடவே நெட்டைய துவாங்கிப்பின்னும்... *
சேர்க்கவே மணிக்கட்டு மேலதாகச்... *
சிறப்புடனே நாடிதனை விரலாற்காண... *
தீர்க்கவே யழுத்தியுந் தளர்த்தியேதான்... *
திறமுடனே விரல்களைத்தான் மாறிமாறி... *

ஆர்க்கவேநாடிதனைப் பார்ப்பாயானால் .... *
அப்பனேநாடிநடை தெரியுந்தானே............ *

கையைப்பிடித்து தெட்டைவாங்கி யனல்பிறக்கத்தேய்த்துப் பெருவிரற்பக்கமாகவிருக்கும் அணாயென்பின்பேரிலோடும் நாடியை மணிக்கட்டுக்கு ஓரங்குலமேலாக மூன்றுவிரல்களாற்சமமாக மெதுவாயழுத்தி நாடியைப் பரிக்ஷித்தபின்பு விரல்களை மாறிமாறியழுத்தியுந் தளர்த்தியும் பார்த்தால் நாடிநடையைத் தெரிந்துகொள்ளலாம்.

ஸ்திரீ புருஷர்களுக்கு நாடிபார்க்கும்வகை,

விருத்தம்.

நாமெனவுலகத்துள்ளே தயங்கியநாடிபார்க்கில்.................. *
வாமெனுமயில்லேகேளாய் வரும்புலன்சொல்லக்கேளு.......... *
நாமெனும்புருடற்கெல்லா நாடிதான்வலக்கையாகும்.......... *
தேமெனுமடவார்க்கெல்லாந் திடம்பெறவிடக்கைசித்தே...... *

வலதுகையிலும் இடதுகையிலும் நாடிபரிக்ஷிக்கலாம் ஆனால், புருஷருக்கு வலதுகையிலும் பெண்களுக்கிடதுகையிலும் நாடி பரிக்ஷிப்பதுகிரமம்.

நாடிநிதானம்,

மேற்சொல்லியகிரமத்துடன் நாடியைப்பரிக்ஷிப்பதில் முதல் விரற்கீழ்வாதநாடி நடுவிரற்கீழ்ப்பித்தநாடி கடைவிரற்கீழ்ச் சிலேத்மநாடி,

விருத்தம்.

ஆகியவாதநாடி யன்னம்போற்குயிலைப்போலும் .... *
ஏகியபித்தநாடி யெழிலாமையட்டைபோலும் .... *
போகியசிலேத்மநாடி பொல்லாதபாம்புபோலும் .... *
பாருடன்முனிவர்தாமும் பாடினார்நாடிதானே ... . *

வாதநாடி குயில்போலும் அன்னம்போலுங் கோழிபோலும் மயில்போலும் நடக்கும் பித்தநாடி ஆமைபோலும் அட்டைபோலும் சிலேத்மநாடி பாம்புபோலும் நடக்கும்.

புருஷருக்[illegible] நாடிநடக்கும்விதம்.

விருத்தம்.

வந்திடும்வாதநாடி மயில்போலும்அன்னம்போலும் .... *
தோர்ந்தமாங்கோழிபோலுந் தொகுப்புடல்பித்தநாடி......... *

முத்தியவாலமைபோலும் முனைப்புடனட்டைபோலும்........ *
பித்தியசிலேத்மநாடி பேசொணாதவளைபாம்பே............ *

வாதநாடி மயில்போலும் அன்னம்போலுங் கோழிபோலும் பித்தநாடி ஆமைபோலும் அட்டைபோலும் சிலேத்மநாடி பாம்பு தவளைபோலும் நடக்கும்.

பெண்களுக்கு நாடிநடக்கும்விதம்.

விருத்தம்.

பாம்பெனவாதநாடி பகுப்புடன்சர்ப்பம்போலாம்............ *
வேம்பெனபித்தந்தானும் விரும்புமண்கேம்போலும்....... *
சாம்பெனசிலேத்மநாடி சயிதியிலன்னம்போலும்............ *
நாம்பெனப்பெண்களுக்கு நாடிதானடக்குந்தானே............ *

வாதஞ் சர்ப்பம்போலும் பித்தந் தவளைபோலுஞ் சிலேத்மம் அன்னம்போலு நடக்கும்.

பஞ்சபூதநாடிக ளிருக்குமிடம்,

வேறு - விருத்தம்,

தாண்டிடவேபெருவிரல்தான் பூதநாடி............ *
சொர்தமாம்ஆள்தோன்றி வாதநாடி............ *
ஆண்டிடவேநடுவிரல்தான் பித்தநாடி............ *
அணிவிரல்பௌத்திரந்தான் சிலேத்மநாடி...... *
பூண்டிடவேசிறுவிரல்தான் பூதநாடி............ *
பூட்டினர்குருநாடி ஐந்துசேர்வை............ *
நீண்டிடவேயிப்பின்ன லார்தான்காண்பார்......... *
நிறைந்தபரிபூரணத்தோர் காண்பார்பாரே...... *

பெருவிரல் பூதநாடி ஆள்தாண்டிவிரல் வாதநாடி நடுவிரல் பித்தநாடி பவுத்திரவிரல் சிலேத்மநாடி சிறுவிரல் பூதநாடி குருநாடி ஐந்துஞ்சேர்ந்திருக்கும்.

குருநாடி யிருக்குமிடம்.

விருத்தம்.

குருநாடியெப்போதும் பித்தத்தின்முன்னே...... *
குதிப்பாகநிற்குமது பாருபாரு............ *
உருநாடி தசநாடி நிறமாய்நிற்கும்............ *
தாக்குவட வயிராக நிற்கும்பாரு............ *

திரிநாடிவாதபித்த நடுவிற்பற்றி........................ *
தீவிரமாய்மூன்றுவிரல் தாண்டிப்பாயும்......... *
வருநாடிவிசைநரம்பி ராட்டேசேர்ந்து.................. *
வளர்சந்த்ரமண்டலம்போய்ச் சாரும்பாரே...... *

பாரேதான்பம்பரம்போற் சிறுகிறத்து............. *
பகர்வாதபித்தமைய மென்றநாடி.................. *
சேரவேமண்டலங்கள் மூன்றுஞ்சுற்றி.................. *
செழித்தகத்ரிக்கோன்மாறலைவேசேர்ந்து ... *
வாரோதான்வாதபித்த நடுவிருந்து .... *
வாதத்தில்கோழியன்ன மயில்போலாகும்.......... *
கூரோதான்பித்தத்தி லாமையட்டை .... *
குறிப்பாகப்பாம்புபோல் தவளையாமே........... *

குருநாடி யெப்போதும் பித்தத்தின்மூலனேநிற்கும் அந்த
திசைநாடிபத்திற்குந் திறமாய்நிற்கும் உடற்குயிராய்நின்ற குரு
நாடி வாதபித்தத்திற்கு நடுவிலிருப்பதைப்பார்க்கில் அது மூவிர
லுந்தாண்டி மூலமுதலுருவிப்பாய்ந்து விசைநரம்பூடேசேர்ந்
து சந்திரமண்டலம்போய்ச்சார்ந்து பின்பு பம்பரம்போற் சிறு
கிறென்று வாதபித்தம் ஐயமென்றநாடி முதலாடியோடி மண்ட
லங்கள் மூன்றுஞ்சுற்றி கத்திரிக்கோன்மாறலைனக் கட்டிச்சேர்ந்
து வாதபித்தநடுவிலிருந்து-வாதத்தில் கோழி-யன்னம்-மயில்போ
லும் நடக்கும் பித்தத்தில் ஆமைபோலும் அட்டைபோலும் நட
க்கும் சிலேத்மத்தில் பாம்புபோலுந் தவளைபோலும் இயல்பாய்
நாடிநடக்கும்.

குருநாடிக்குணம்,

குருநாடி வாதத்தி லட்டைபோற்புரண்டுவரில் வாய்வுமிகும்
இருமல் திணவு சொரி மிகுதியுண்டாகுந் தேகம்வாடுங் குருநாடி
பித்தத்தி லாமைபோல்நடக்கிற் சுரங்காயும் வாய்நீர்சுழற்றும் விய
ர்க்கும் சிலேத்மத்திற் குருநாடி சிங்கம்போற்சீறிநிற்கில் சன்னி
தோன்றும் குருநாடி சிலேத்மத்தை யூடுருவி அமருமாகில் அசா
த்திய மரணக்குறிகளுண்டாகும் குருநாடி குன்றிப்போகில் வயி
றுகழியுங் கடுப்பெடுக்குங் கைகால்வீங்கும் குருநாடி பக்கம்பாயி
ற் சிலேத்மமெதிரோமோதும் குருநாடி நேரோதிற்கில் வாதபித்த

பிரண்டுஞ்சேருங் குருநாடி பின்வாங்கில் அசாத்தியங்களுண்டா குங் குருநாடி அய்யத்தில் விட்டுவிட்டுப்போற்றுடிக்கில் மரணம்.

நாடிகள் கிழமைதோறு மீறியோடும் விதம்.

சந்திரன் வாதநாடி சூரியன் பித்தநாடி சுழிமுனை சிலேத்தும நாடி வியாழத்திற் சேத்மநாடி சனி செவ்வாய் ஞாயிறு இந்தகிழ மைகளிற் பித்தநாடி திங்கள் புதன் வெள்ளி இந்தக்கிழமைகளில் வாதநாடி மீறியோடும்.

ஞாயிறில் வாதமோடில் சனி பிரும விளைப்புண்டாகும் செ வ்வாயில் வாதமோடில் சுரமுண்டாகும் சனியில் வாதமோடில் சி ளமுஞ் சன்னியுமுண்டாகும் வியாழத்தில் வாதமோடில் விலா முதற் றேகமெல்லாம் வலியுண்டாகும் திங்களில் பித்தமீறில் ஜல தோஷமுடனே காணும் புதனில் பித்தமோடில் நீரேற்றந்தலை கு த்துண்டாகும் வெள்ளியிற் பித்தமோடில் கண்ணோய் காதுநோ யாம் வியாழத்திற்பித்தமோடில் தாபசுரந் தலைவலியுங்காணும்.

வாதக்கூறு.

விருத்தம்.

சொல்லவேவாதமது மீறிற்றானல்........................ *
சோர்வடைந்துவாய்வினுல் தேகமெங்கும் ...... *
மெல்லவேகைகால்க ளசதியுண்டா........................ *
மெய்முடங்குநிமிரவொண்ணு திமிருண்டாகும் *
வெல்லவேவுடலிபொருமும் வயிறிரைக்கும்.......... *
விரும்பியன்னஞ்செல்லாது விந்துநஷ்டம் ...... *
சொல்லவேநாப்புளிக்கும் கழிச்சலுண்டாம்.........*
கூறினர்மலையமுனி கூறினரே .... *

வாதமீறினல் வாயுவினுல் தேகமெல்லாங்குத்துங் கால்கை ச ந்து பொருத்துக்கள் உளையும் கால்கை பொருபக்கத்தில் முடங் குங் குனிந்தால் நிமிரவொட்டாது திமிருண்டாகும் உடல்பொரு மும் குடல்புரட்டும் அன்னஞ்சுருங்கும் வயிறுமந்திக்கும் பொரு மும் மலசலங்கட்டும் அபானஞ்சுருங்கும் நாவுபுளிக்குந் தாதுந ஷ்டமாகுங் கழிச்சலுண்டாகும்.

பித்தக்கூறு-விருத்தம்.

கூறிடவேபித்தமது மீறிற்றானல்........................ *
குடற்கால்வறட்சியுமே நடுக்கமுண்டாம் .... *

பீறிடவேயரோசியந்தா ருவரட்சி.................. *
மேலானசோபமதா விக்கல்மூர்ச்சை .... *
ஊறிடவேகிறுகிறுப்பு காதடைப்பு..................... *
தோற்றமாங்கசப்புடனே மண்டைக்குத்து....... *
மாறிடவேநெஞ்செரிவு அக்கினிமந்தம் .... *
மகத்தானகுளிர்சுரமுங் காந்தலாமே .... *
ஆமேதான்அஸ்திசுரம் பாண்டுசோகை .... *
அழலானவிடாச்சுரமும் பிரமேகந்தான்.......... *
போமேதான்காமாலை பித்தவெட்டை..................... *
பொல்லாதபாண்டுடனே சிவந்தநீராம் .... *
தேமேதான்சிவப்பாயு மஞ்சளாயும் .... *
சிறுசிறுத்துயிருண்டுவருங் குழிவிழுந்து......... *
தாமேதான்சொன்னோமே பித்தகூறு .... *
நவின்றிட்டார்வாசமுனி நவின்றிட்டாரே.......... *

பித்தமீறினால் உடலிற் காந்தலும் வாட்சியும் மெலிவும் நடுக்கமுண்டாகும் மண்டைக்குத்து நாவாட்சி கசப்பு அரோசியந் தாகம் வாந்தி விக்கல் மூர்ச்சை கிறுகிறுப்பு காதடைப்பு அயர்வு சோபம் வயிற்றுக்காந்தல் நெஞ்செரிவு அக்கினிமந்தம் குளிர்சுரம் விடாச்சுரம் அஸ்திசுரம் பாண்டு காமாலை சோகை மயக்கம் பிரமேகம் பித்தவெட்டையுண்டாகும் வழிசுழன்று குழிவிழுந்து இருண்டுவரும் நீர் மஞ்சளாயுஞ் சிவப்பாயுமிறங்கும்.

சிலேத்மகூறு.

வேறு - விருத்தம்.

மன்னியசேத்மமீறி மாகாயம்வெளுக்கும்வற்றும்.................... *
பன்னியே அன்னஞ்செல்லா பருவிக்கலிருமல்சத்தி.............. *
உன்னிய மூர்ச்சையீளை ஆசிநீர்வழுவழுத்து............................ *
கன்னியேநெஞ்சுவிலாவும் கடுப்புடனேகுமாமே..................... *
பார்த்திடநாடிதானும் பகருவேன்தொந்திப்பாக.......................... *
வார்த்திட்டவாதபித்த மேற்றந்தோர்சேத்மமூன்றும் .... *
கோர்த்துமேவகுப்புசொல்லக் குறிப்புடனிந்தநாடி.................. *
சேர்த்துமேசாத்தியவசாத்தியந் தெளிவுறச்சொன்னோமாதே *

சிலேத்மமீறின் உடல்காயு மவத்தும்வெளுக்கும் குளிர்ந்தடுக்கும் அன்னஞ்செல்லாது விக்கல் சத்தியிருமல் மேல்மூச்

சுத்திகைப்பு வியர்வை க்ஷயம் ஈளையுண்டாகும் நெஞ்சம் விலாவும் நோகு பிரத்தங்கக்கும் நாவு வழுவழுத் திணிக்கும் வாய்நீரூறும் நீர்சிறுத்திறங்கும்.

வாதமொருபங்கு பித்தமரைப்பங்கு ஐயங்காற்பங்கு அல்லது வாத மொரு மாத்திரை பித்தம் அரைமாத்திரை ஐயங் கால் மாத்திரையுமாக ஓடினால் தேகத்திற்பிணியில்லை.

நாடிதொந்திப்பு.

வாதத்தில் வாதமாகில் உடல்நொந்து நெகிழ்ச்சியாய்ச் சுருக்கும் வாங்கும் உடல்பதறும் அன்னஞ்செல்லாது,

வாதத்திற் பித்தமாகில் வாய்குழறிப்பேசும் கால்குளிரும் வீக்கமுண்டாம்.

வாதத்திற்சிலேத்மமாகில் உடல்வீங்கும் வலிக்கும் தலையடிக்கும் குணங்கள் வெவ்வேறாய்த்தோற்றும், மெய்வெளுக்கும் அன்னஞ்செல்லாது நாளுக்குநாள் வீக்கமதிகப்படும்.

பித்தத்திற்பித்தமாகில் பிதற்றும் இறுகிறுக்குஞ் சத்திக்கும் இளைக்கும் மேனி அத்திபோல் உலர்ந்து வத்தி வெளுக்கும் பின்பு வீக்கமுண்டாம்.

பித்தத்தில் வாதமாகிற் பிடரிகால் கையில்குத்தும் மெய்குறுகும் பதறும் அத்திபோலுருஞ் சாங்காயும் புத்திமடியும் பொறுமைநீங்கிக் கோபமுண்டாம்.

பித்தத்திற் சிலேத்மமாகில் வாய்குழறும் பிதற்றும் சத்திக்கும் வாய்நீரொழுகுந் தலைசுற்றும் வயிறுநோவும் பித்தமெடுக்கும் பிடரிவலிக்கும்.

சிலேத்மத்தில் வாதமாகில் நரம்பெல்லாம் வலித்துநிற்கும் பிடரி குன்ற வலிக்கும் விழிமேலாடும் வாய்குழறும்.

சிலேத்மத்திற் பித்தமாகில் உண்பது கசப்புண்டாகும் நாவு கசக்கும் இனிக்கும் பேச்சுத்தமொறுங் கபங்கட்டுங் குரல்வேறுபடுங் கண்ணிற் பீளைசாடும்.

சிலேத்மத்திற் சிலேத்மமாகில் விழிவட்டங்கொள்ளும் உயிர்பிரியும்.

வாதத்தில் ஐயஞ்சேரில் சன்னிதோஷம் மெய்மயக்கஞ்சோபம் மூர்ச்சை சோகை பாண்டு உண்டாகும்.

பித்தத்தில் வாதஞ்சேரிற் பீனிச மண்டைக்குத்து வயி யவு
த்திரம் அசையாப்பு நவமூலங்களுண்டாகும்.

பித்தம் வாதத்தேறில் பாண்டு-காமாலை-நீராம்பல்-மகோதர
ங்-கவுசி-மகவை-வெப்புப்பாவையுண்டாகும்.

ஐயம் பித்தத்திற்சேரில் வாநுமம் காசம் பேதி வாந்தியுண்
டாகும்.

வாதமிரண்டுபங்கும் பித்தமொருபங்கு மோடில் வாதபித்த
தொந்தரோகம், வாய்வுமிகுந்து உதரம் விம்மும் வலிக்கும் மாத
வாயிச்சிக்குஞ்சிந்தை மிகும்.

பித்தமிரண்டுபங்கும் வாதமொருபங்குமோடில் பித்தவாத
தொந்தரோகம், ஊணமிகுந்த உடல் வெண்மையுரியும் பசிதாக
முண்டாகும் வாய்கசக்கும் தவனம்பற்றும்.

வாதமிரண்டுபங்குஞ் சிலேத்மமொருபங்குமாகில் வாத சி
லேத்ம தொந்தரோகம் வயிறுபொருமி வலிக்கும் பசியாது,

பித்தமிரண்டுபங்குஞ் சிலேத்ம மொருபங்குமோடிற் பித்த
சிலேத்ம தொந்தரோகந் தலைவரண்டு பிடரிநோகும் உடம்பெல்
லாந் தினவுண்டாகும் வயிறெரியு மந்தித்துப் பொருமும்,

சிலேத்ம மிரண்டுபங்கும் வாதமொருபங்கு மோடினற் சி
லேத்ம வாததொந்தரோகஞ் சல்லியுண்டாகுந் தலைநோகும் வா
ய்தித்திக்கும்அன்னஞ்செரிக்காது,

சிலேத்மமிரண்டுபங்கும் பித்தமொருபங்குமோடினற்சிலே
த்மபித்த தொந்தரோகம் உடல்குளிர்ந்து சுருந் தாகிக்கும்,

வாத மிரண்டுமாத்திரையும் பித்த மொருமாத்திரையுமாகிற்
கொடுஞ்சுமை சிரமேற்கொண்டு தாழ்ந்து நடப்பதுபோல நாடிந
டக்கும்வாதபித்ததொந்தரோகம் உதரம்நொந்து விம்மிவலிக்குந்
தாகிக்குந் தீபனஞ்செல்லாது,

பித்த மிரண்டுமாத்திரையுஞ் சிலேத்மமொருமாத்திரையுமா
கில் பிள்ளைத்தொட்டில் நடுவிலசைவதுபோல நாடிநடக்கும் பித்
தசிலேத்மதொந்தரோகம் பசியிராது அடிக்கடி உதரம்விம்மும்
பிதற்றும் நயனம் எரியும் மஞ்சள்போலிருக்கும்,

சிலேத்ம மிரண்டுமாத்திரையும் வாத மொருமாத்திரையுமா
கிற் புணர்ச்சிபோல நாடிநடக்குஞ் சிலேத்மவாததொந்தரோகம்
கபமேலாடும் இளைப்பைவிரும்பும் பசிதாகமதிகரிக்கும்,

வாதமிரண்டுமாத்திரையுஞ் சிலேத்துமமொருமாத்திரையுமாகில் முறிந்த அரணைவால் அடிப்பதுபோல் நாடி அடிக்கும் வாதசிலேத்துமதொந்தரோகம் உடல் வலிக்குங் கைகால் திமிராயிருக்கும் வயிறுபொருமும்,

பித்தமிரண்டுமாத்திரையும் வாதமொருமாத்திரையுமாகில்விளையடித்தாற்போல நாடியடிக்கும் பித்தவாத தொந்தரோகம் உடல்வலிக்கும் எரியும் நெஞ்சும்நாவும் வறளும் நீர்சிறுத்திறங்கும்

சிலேத்தும மிரண்டுமாத்திரையும் பித்த மொருமாத்திரையுமாகில் வண்டிச்சக்கரம்போல நாடி சுழலும் சிலேத்துமபித்ததொந்தரோகஞ் சன்னியுண்டாகும் உச்சிவலிக்குஞ் செவிகேளாது நாவு இனிக்கும் வயிறு மந்திக்கும்,

வாய்வுக்கும் மந்தத்திற்கு மூன்றுநாடியும் அமர்ந்து தளர்வாயோடும், பசித்திருக்கும்போது மூன்றுநாடியுந் தங்கியோடும் பாம்புவிஷத்திற்கு மூன்றுநாடியும் அடங்கிநிற்கும், வயிற்று வலிக்கு மூன்றுநாடியும் உள்ளுறவாய் வாங்கியோடும் இரத்திநோய்க்குக் கலையுடைந்த அருவியைப்போலோடும், புண்புரைக்கு வாதமும் பித்தமும், பீனிசத்துக்கு பித்தமுஞ் சிலேத்துமமுஞ் சூலைக்குச் சிலேத்துமமும் பித்தமுஞ் சுழன்றுகாணும், கருப்பவலிக்கு வாதமும் பித்தமுங் கலங்கிக்காணுங் கிராணி யதிசாரத்துக்கு வாதமும் பித்தமுந் தவர்ந்துகாணும், நீர்மேகத்துக்கு நாடியெல்லாம்பலங்குறைந்து எரியின்மேற் சருண்டுவிழும் புழுப்போற் புரட்டிக்காணுங் குருநாடி சிறிதிற்கும், மேகமதிகப்பட்டால் வாதமும்பித்தமும்பின்னித் தடிக்குஞ் சன்னிக்கு மூன்றுநாடியும் படபடத்தோடும், விக்கலுக்குச் சிலேத்துமமும் வாதமுஞ் சரத்துக்கு வாதமும் பித்தமுங் கணைக்காச்சலுக்குப் பித்தமும் வாதமுங்கலங்கிக்காணும், விஷநீர்-சோகை-பாண்டுக்கு - மூன்றுநாடியு மேகனைப்போல் மீட்டுத்தலையிடிக்கும், க்ஷயரோகத்திற்கு பித்தங்கலங்கிக்காணும், இளநீர்-நெய்-பால்-இறைச்சி-கனிகளுக்கு வாதங் கதிக்குங் கோழிமாமிசத்திற்குங் கோபத்திற்கும் புணர்ச்சிக்கும் பித்தங்கதிக்குஞ் சாதோஷித்திற்குப் பித்தம் வாதத்தைத்தாண்டுஞ் சிதளுட்கைக்குப் பித்தத்திற் சிலேத்துமஞ்சேரும் புணர்ச்சிக்கு நாடி புழுப்போல் நிமிர்ந்து வளைந்து நின்று வாங்கும், பித்தசன்னிக்கு வாதமுஞ் சிலேத்துமமும் அமர்ந்து பித்தம் வெடிவெடித்து மீறிநிற்கும்

மரணசன்னி உட்குத்து புறவிச்சு இசிவுக்கு வாதமுஞ் சிலேத்தும மும் அழுந்திக்காணும்.

தோஷநிறக்குறி விருத்தம்.

பேரானதோஷம்பிறக்குமுறைகேளு ... ... *
காரானவாதமும்வன்னிகருந்தோஷமாம் ... ... *
தாருணபித்தமுந்தழலுமடிலவெண்மையாம் ... ... *
சேருணவையமுஞ்சிவப்பேறும்வாய்விலே ... ... *

வாயுவடங்கினால்வளமானதோஷம்போம் ... ... *
வாயுவெழும்பினால்மண்ணுநீரொன்றாகும் ... ... *
வாயுநீரால்வழங்கியவன்னிசாம் ... ... *
வாயுவுமாகாசமண்டலவோலசயே ... ... *

ஓசையிலெழுமொளியிலிலொளைத்தும் ... ... *
நாசியின்மூன்றுநாவினிலிரண்டும் ... ... *
தேசியுந்தேசனுஞ்சேர்ந்துயிர்ந்திடம் ... ... *
மாசிலாநந்திமகிழ்ந்துரைத்தாமே ... ... *

ஓராண்டிலும் ஈராண்டிலும் சாகுங்குறி.

உரைத்தநாசியுறுதிக்குறிகேள் ... ... *
விரைத்திடப்பிங்கலைவிடாதோடில்மூன்றுநாள் ... ... *
இரைத்தசடமாண்டிலெய்திடுமாகாசம் ... ... *
பாத்திலிரண்டுநாட்பாயிலீராண்டெண்ணே ... ... *

மூவாண்டிலும்-ஆறுதிங்களிலும்-சாகுங்குறி.

எண்ணியொருநாளியங்கிடிற்பிங்கலை ... ... *
தண்ணியமூவாண்டிற்றப்பாதுமாரணம் ... ... *
ஒன்றியபயத்திலோடிடிற்பத்துநாள் ... ... *
மண்ணில்மதியாறின்மரிப்பான்குறியிதே ... ... *

நாள்மூன்றிலும் பதினைந்திலும் சாகுங்குறி.

குறிகேளுமூக்கன்றிக்குலவிவாய்வழியோடில் ... ... *
மறிகேளுமூன்றுநாள் மரித்திடுவன்றப்பாது ... ... *
தெரிகேளுமும்மலமுந் திரண்டுபிக்குலைந்துவரில் *
பரிவாகும்பட்சத்திற் பாருயிர்தான்றப்பாதே ... ... *

ஆறுதிங்களிலும் உடனேயுஞ் சாகுங்குறி.

தப்பாதுவாய்நீர்தான் றூக்கிற்றன்மேல்விழில் ... ... *
ஒப்பாசத்திலுமறைய வொழிந்திடுவன்மதியாறில் ... *

செப்பாகத்தானிருக்கச் சேர்ந்தநிமலகலந்திடினும் *
அப்பாலேன்சாவுந்சமயித்துகற்பங்கொண்டிடே ... *
கொண்டிடுந்தோஷீர்குறிசொன்றொற்றந்தி ... ... *
தண்டுழுதடுந்தவிப்பல்லுநாக்கொன்றும்............ *
மண்டிடுந்தாதுவளமாய்க்கறுப்பேறில்........... *
ஒண்டிடுமொறுநாளுறுதியாய்ச்சாவானே...... ...... *
உறுதியாம்பித்தமுடம்பிளைப்பதாகும்.............. *
பொறையாகத்துலிக்கிற்போவான்மதியொன்றில்... *
அறுதியாமையநல்லத்தியுலர்ந்தே... .... *
உறுதியோர்மதியிலொடுங்கிடுஞ்சிவனே... ... . *

சாகாக்குறியும் சாகுங்குறியும்.

சிவகளையாய்ச்சேர்ந்திடுநாடியில்.......... .... *
ஆவக்காம்லைவத்தழுத்திடின்மேலேறும்.... .... *
தாவொத்துமேலேக்கிற்சாகாதொருநாளும்......... *
பாவொத்துக்கீழ்நோக்கிற்பனையாமற்சாவானே ... *

அயிர்தமுண்டும் சாகுதல்.

பதைக்கின்றமுவரும்பக்குவந்தப்பியே... ... . *
நிதைக்கின்றவாதமும்பித்தமுநீங்கிடில்.............. *
சுதைக்கொண்டிருந்தாலுந்தோற்றியுயிர்விடும்... ... *
பிதைக்கொண்டவாதபித்தமும்பெலனுமே... ...... *

கைவிடுங்குறிமுதலியன,

பித்தமடங்கினற்றேயசாதேபோய்விடும் ... ... *
எத்தியவையமெழும்பிடிற்கிட்டாதே....... ...... *
எத்தியவாதமெழும்பின்மருந்துசெய்...... .... *
எத்தியமூன்றினியல்பையறிந்திடே........................ *

சாகாக்குறி சாகுங்குறி.

அறிந்திடும்மூன்றுமடங்கியேமுட்டினும்...... ... .. *
எறிந்துமிகவோடிலும்மெய்தாந்தசாவுதான் ... . *
பறிந்துதற்றுதுபற்றநற்றக்கீழ்நோக்கில்... ... . *
மறிந்தேயுயிர்சென்றுமறலிகைப்புக்குமே ... . *

மகாதோஷக்குறி.

புக்கியுந்தியிற்கைபொருந்தவொருவிரல்... .... *
எக்கியுபசவெழும்பின்மகாதோஷம்...................... *
அக்கியவுந்திதானுதாசம்வாய்விற்கு.................... *
வைக்குந்தலமெனவகுத்தனர்தாதிதே...... ... . *

தசநாடிகளிருப்பிடம்.

நாதாரூணறைகேடனிக்கருதிச்சந்தோ... ... .*
டோருமயகாமியமூத்திதெமொரிபு ....*
சாதுறிதெமூக்குக்கண்டங்காவ்பருவம்... . ...*
போதுறுமுச்சிபுகழ்பத்துப்பார்த்திடே... .... *

சாகாக்குறி சாகுங்குறி.

பார்க்கிற்றசநாடிபதைப்புண்டாய்நின்றிடில் ... ...*
எத்திற்சிலநாளிருப்பானிறந்திடான்....... ....*
சாக்கிடுங்காமியங்கழன்றசதித்தேநாடி... .. ..*
ஆர்க்கிலெமனுலகடைவதுண்மையே ....*

மரணக்குறிகள்.

இரண்டுதினம் பிங்கலை பாயில் மூவாண்டிலும் மூன்றுதினமிடைகலைபாயில் இரண்டுவருடத்திலும், பத்துதினம் உபயத்திற்பாயில் திங்களொன்றிலும், மூக்குவிட்டு வாய்வழி சுவாசம்பாயில் மூன்றுதினத்திலும் ஐயரோகத்தா லிளைத்தவுடல் வீங்கிடில் திங்களொன்றிலும் பித்தரோகத்தி லிளைத்தவுடல் வீங்கிடில் மதிஆறிலுஞ் சிலேத்மம் வெள்ளம்போல் மடமடெனச் சுருக்காய்போகுடில் மறுநாளிலும், பித்தஞ் சிதறியோடில் மூன்றுதினத்திலும், வாதஞ்சிதறியோடில் எட்டுதினத்திலும் வாதபித்தமிரண்டுங்கூடி நிலைதப்பிச் சிதறில் ஐந்துதினத்திலும், வாதபித்தசிலேத்மம் மூன்றுங்கூடி நிலைதப்பிச் சிதறியோடினால் மண்டலத்திலும், மூன்றுமொன்றாய்க்கூடி அரணைவால்துடிக்காணில் ஒருதினத்திலும், வாதபித்தசிலேத்மமொன்றாய்க்கூடி தேட்கொடுக்குப்போலாடி ஓடம்போல் நடந்தால் திங்களொன்றிலும் நாடி போத்துப்போற் புறந்துடித்திடில் திங்களொன்றிற் பிணிநீங்காவிட்டால் திங்கள்பத்திலுஞ், சிலேத்துமநாடி குதிரைபோல் நிமிர்ந்துநின்றால் திங்களொன்றிலும், காலையில் சிலேத்மநாடியும், உச்சியிற்பித்தநாடியும், மாலையில் வாதநாடியும் வகைதப்பியோடிடில் நாலைந்துதினத்திலுஞ் சிலேத்மநாடி மயில்போலும் அட்டைபோலும் பதறிநின்றிடில் ஏழுதினத்திலும் ரோகஸ்தன் உமிநீர் சமீபத்தில்விழுந்திடினும்மரணம்.

பாளமாகக்கிழித்ததுணியை நெய்யில்நனைத்து மணிக்கடையிற்சுற்றி மூன்றேமுக்கால்நாழிகைசென் றவிழ்த்துப்பார்க்கில்வாதநாடி குதித்துவாங்கிறு லப்பொழுதிலும், நல்லாகுபோல்தெளி

த்தோடினால் இருபத்திரண்டுநாளிலும், உதைத்துவாங்கினால் ஐம்பதுநாளிலும் அட்டைபோல் நடந்தால் மூன்றுதினத்திலுந் தந்திபோற் சுண்டினால் அன்றுபொழுதிலும், பக்கஞ்சென்றெதிர்த்துவாங்கினால் முப்பதுநாளிலு மரணம்.

நாடி புழுப்போல் நெளிந்தாலுஞ் சூடுகொண்டாலும் பஞ்சுபோல் மெதுவாயிருந்தாலும், அன்னம்போல் நடந்தாலும் பிணிநீங்கும்.

இடதுள்ளங்காற் குளிர்ந்தும், வலதுள்ளங்காற்சுட்டுங் குழச்சுகுளிர்ந்திடில் பத்து தினத்திலுங் குழச்சுகளிரண்டுங் குளிர்ந்து உச்சி வியர்த்து மூக்குவிறைத்து இளைப்பு விக்கல்தோன்றி உடம்பெல்லாங்குளிர்ந்து விழியிருண்டால் மூன்றுதினத்திலும், பிடரி நெற்றி கழுத்தினுட்புறங்குளிர்ந்து விழி நீலநிறமாகி நெஞ்சிற்கபங்கட்டில் மூன்றுதினத்திலும், ஒருநாசியும் முழங்கைப்பள்ளமுங் குளிர்ந் திடதுள்ளங்காற் சூடாய்த் தொண்டை கறகறத்தால் ஐந்துதினத்திலும் அடித்துடையும் இரண்டுள்ளங்காலுங் குளிர்ந்திருசெவியும் விறைத்துநின்று மிரண்டுதினத்திலுமரணம்.

வலதுள்ளங்காற்சுட்டு இடதுள்ளங்காற்குளிர்ந்து, உச்சிவியர்த்து உடம்பெல்லாங் கனலாயிருந்தாலும் புருவம் நெற்றி இடதுள்ளங்கைசுட்டு உச்சி குளிர்ந்தாலும், வலதுநாசியும் வலது உள்ளங்காலும் வெதும்பி இடதுநாசி தேய்க்கும்போது சிவந்தாலும் உடல் அதிந்தமுஞ் சூடேறினாலும் பிணிநீங்கும்.

விழி-மூக்கு-காது-உச்சி-உந்தி-உள்ளங்கால் கைகள் வெளுத்து பாதங்குளிர்ந்தால் ஐந்துநாழிகையிலும் வாதமும் பித்தமும் அடங்கி சிலேத்மங்கதித்து உடல் வெளுத்து மார்பு குளிர்ந்திடிற் றொண்ணூறுகடிகையிலுஞ் சிலேத்மநாடியெழுந்து விழுந்திடி லிரண்டுகடிகையிலும், பித்தமடங்கி வாதமுஞ் சிலேத்மமும் மேலிட்டுக் கண்டத்திற் கபமடைத்து இளைத்து விழிமயங்கிச்சுழன்று கண்ணில் நீர்வடிந்தால் ஐந்துநாழிகையிலும், முகம்நீண்டு உடம்பெல்லாம் நரம்புதோன்றி பாசிபோற் கண்பஞ்சடைந்து இருள்மூடினும் விசைநரம்பு குளிர்ந்து தளர்ந்து விறைத்துவாங்கிப்பொறிகளும் மிகுதியாய்த் தளர்ந்து நெறுநெறெனப்பற்கடித்து நடுக்கமுண்டாய் வாத பித்த சிலேஷ்மம் விட்டிலைப்போற் றுடித்திடினுமரணம்.

வாதபித்த சிலேத்மமூன்றும் வெட்டுப்பட்ட அரணைலாற் போற்றடிக்கும் உடல்வேறுபட்டுக் குளிர்ச்சிகாணுங் கையால்மூக்கைத் தடவும் மனிதனை ஆவலாய்நோக்கிப் பார்க்கும் ஏங்கிப் பெருமூச்செய்தும், இரண்டுவிலாவும் இளைக்குந் தொண்டையிற் கபங்கட்டியிளையுங் கண்ணில் நீர்வடியும் எடுபிடியென் றெழுந்து விழும் உடல்மயங்கும் மூக்குநீளும் வியர்வைகாணும் விழியும் பல்லுங் கறுக்குங் கபமேலாடி முடிச்சுவிழுங் கண்சுழன்றுபலயேச்சாகுஞ் சீவன்மயங்கும்.

முதலாவது அவத்தை பிணவெடிநாறும், இரண்டாவது அவத்தை நலம்பேசும், வேற்றுமைகூறும், மூன்றாவது அவத்தைசித்தசலங்கும், நான்காவது இளைத்து மேன்மூச்சுவாங்கும், ஐந்தாவது மூகடுபார்க்கும், ஆறாவது உடல்குளிரும், ஏழாவது அன்னம்விருப்பும், எட்டாவது கண்பஞ்சடையும், ஒன்பதாவது உடல்வெளுக்கும் பத்தில்மரணம்.

ரோகஸ்தர்களின் தேகமுதலானகுறிகள்.

விருத்தம்.

அறைந்தோம்வாதரோகியுடல் அலர்ந்தமுகம்விழிபல்மலமும் *
நிறைந்தவிழியில்நீர்வடியும்நீண்டநாவுகறுத்துவரும்... ....*
இறைந்தமுள்ளாய்தானிருக்கும் சிறுநீர்பொருமிக்கறுத்துவரும்*
குறைந்தநீருங்கறுகறுத்து முறையாய்ரோகமுண்டாமே ... ...*

வாதரோகியுடல் குளிர்ந்து முகம் விழி-பல்-மலம்-கறுத்திருக்கும், விழியில்நீர்வடியும், நாக்கு கறுத்து வறண்டு முள்ளுமுள்ளாயிருக்கும், சிறுநீர் பொருமிக் கருமையாய்க் கடுத்துச் சிறுத்திறங்கும்.

வேறு-விருத்தம்.

பித்தரோகிபெறுமுடல்சூடாகும்...... ... .*
நித்தமாமுகம்நேர்விழிநாவுபல்........ ....*
முத்தநீருமுயர்ந்தசிவப்பாகும்............ ....*
சுத்தமஞ்சளாய்த்தோன்றிடக்கண்டிடே... ....*

பித்தரோகியுடல் சூடாயும் முகம் விழி நாக்கு பல் மலம் மஞ்சளாயிருக்கும், நீர் மஞ்சளாயுஞ் சிவப்பாயுமிறங்கும்.

விருத்தம்.

விண்ணில்ரோகிவிளங்குஞ்சிலேத்துமம்... ... .*
திண்ணமாமுகந்திகாவிழிநாவுபல்...... ....*

கண்ணிற்பீளைகருமலந்தான்வெளுப் ... .*
பண்ணியேபிணிபகர்ந்திடக்காட்டுமே........ ......*

சிலேத்மரோகியுடல் வியர்க்கும் முகம்-விழி-பல்-நாக்கு-மலம்-நீர் வெளுப்பாயிருக்கும் கண்ணிற்பீளைகட்டும்.

விருத்தம்.

வெட்டுந்தொந்தரோகியுடல்பல்முகம்...............*
கிட்டும்நேர்விழிகளர்மலம்நாவுகள்........... ....*
தொட்டுமேபலவிதமாகக்காட்டிடும்... ... .*
மட்டும்ரோகியின்மாபிணிகண்டிட்டே... ....*

தொந்தரோகியுடல் முகம் விழி பல் நாக்கு நீர் மலம் பலவிதமாய்த்தோற்றும்.

நாடிவிளக்கம்-முற்றிற்று.

மணிக்கடை நூல்.

மணிக்கடைக்குமேல் நான்குவிரல்தள்ளிக் கைச்சுற்றளவை கயிற்றினாலளந்து கண்டநீளம் அவரவர்கையினால் பத்துவிரற்கடையிருந்தா லுடல் வெதும்பும் வாயுவினால் நெஞ்சு கால் கையிற்குத்தும் உளையும் வயிற்றில் வாயுத்திரட்சியுங் குன்மமுமுண்டாகும்.

ஒன்பதேமுக்காலுக்கு அசாயாப்புப் பிளவை வறட்சி பிருமலுண்டாகும்.

ஒன்பதரைக்கு உடல்வெதும்பி விக்கஞ்சூடுண்டாகும் விழி காந்தும் உட்சுரம் மேகமுண்டாகும் அன்னத்தைத்தள்ளும்.

ஒன்பதேகாலுக்கு விழிகாந்தும் நீர்க்கடுத்து சிறுத்திறங்கும் நித்திரைவராது பீனிசமுமுண்டாம்.

ஒன்பதுக்குச் செவிமந்தமாயுங் கண்புகைச்சலாயுமிருக்குங் குருக்கில்வாயு இறங்கிவலிக்கும் இருதுடையும் அயரும் நடக்கவொட்டாது.

எட்டேமுக்காலுக்கு உடல்காயும் சில்லிழுத்தால் குட்டம் போலுண்டாகும் மேகவாய்வினால் வயிறுபொருமுங் கண்காசமும் பீனிசமுமுண்டாம்.

எட்டரைக்கு தேகவெதுப்பு வெட்டை கிரந்தி குஷ்டஞ்சொறி குடல்வாதந் தாதுநஷ்டமுண்டாம்.

எட்டேகாலுக்கு உடல்பொருத்து வலித்தலையுந் தலைவரட்சி வலிபீனிசம் வியர்வை விஷத்தினால் இளைப்பிருமலுண்டாகும்.

எட்டுக்கு மேகசாங்கை வயிற்றில் மந்தம் பொருமல் வாயுத்திரட்சியுண்டாகும் அன்னத்தை ஒறுக்குஞ் சுகமிராது வேற்றுடற்படும்.

ஏழேமுக்காலுக்கு மூலமெழும்பிச் கைகால்காந்துந் தலையிடிக்கும் மதத்திருக்கும் இரண்டுவருடத்திற் கண்டமாலை நாட்செல்லச்செல்ல நாசியிலிரத்தமுண்டாம்.

ஏழரைக்கு எலும்புருக்கிமேகம் வயிற்றுப்பொருமல் கண்ணெரிவு ஆறுநாளில் உடம்பிற்காந்தல் கால்கை சந்துளைவு விப்புருதியுண்டாம்.

ஏழேகாலுக்கு இடுப்பில் வாய்வுக்குத்துவலி பிடிப்பு சிரசிற்பித்தங் கண்வலி பாண்டுசோகை கைகால் காந்தல் அதிக நித்திரையுண்டாம்.

ஏழுக்கு பித்தஞ் சிரசிலேறும் வாயினு லிரத்தம்விழும் கைங் கால்கை காந்தல் சிலந்திபுண்ணுண்டாம் உஷ்டணமிகும் மலந்தியும்.

ஆறேமுக்காலுக்கு அண்டவாயு கண்வலி மயக்கம் மூன்றுவருடத்தில் நீரடைப்பு கல்லடைப்பு கைகால்காந்தல் வலியுளைவு முகத்தில் வியர்வையுண்டாம்.

ஆறரைக்கு உடலில் வெதுப்புகுத்தல் தாகம் அன்னத்துவேஷிப் சூடு வாதமுண்டாம்.

ஆறேகாலுக்கு மூலக்கிராணி புளித்தேப்பம் சத்தி நடைட் வாழைபுண்டாம் அசாமேசாறுபோற்கழியும்.

ஆறுக்கு இளைப்பும் நெஞ்சிற் கபமுமுண்டாய் இருபதுநாளில் மரணம்.

ஐந்தேமுக்கால்முதல் நாலுக்கு விரற்கடைவரை தேகத்திற்கண்ட பிணிகள்தீரா ஜீவன்பிரியும்.

மணிக்கடை நூல் முற்றிற்று.

உ

பண்டிதாளிலக்கணம்.

ஔஷதஞ்செய்யவும் உண்ணவும் இன்னகிழமை

யாகு மாகாதென்பது-விருத்தம்.

ஆமப்பாதிங்கள்புதன்சனிவாரத்தில்........................*
அருந்தயிலோமருந்திறைற்றீதுண்டாகும்...........*
சொமப்பாவெள்ளியிலேமருந்ததின்றால்...........*
சுகமேதுபிணியுமது அதிகமாகும்.............*
காமப்பா அருக்கனிலேமருந்துசெய்து... ... .*
கருதுசெவ்வாய்வியாழத்திற்கொள்ளத்தீரும் ...*
தாமப்பாயிந்தமொழிபொய்யாதையா... ... .*
சாற்றினர்தன்வந்திரிசாற்றினரே...................*

சனி-புதன்-திங்கள் இந்தவாரங்களில் மருந்துகருதிடிற் றீதாம், வெள்ளியில் நோய்மிகும், அருக்கனில் மருந்துசெய்து செவ்வாய் வியாழத்தி லுட்கொள்ள பிணிதீரும்.

மரணநாளறிய-விருத்தம்.

ஆமேநீபுலத்தியனேமச்சகேந்திரா... ....*
அடவானமரணமென்றநாள்தான்சொல்வேன் ...*
வாமேநீஅருக்கனுள்பரணியாகா.......................*
வளமானதிங்கட்சித்திரையுமாகா...... ....*
தாமேநீசெவ்வாய்க்குவுத்திராடந்.......... ....*
தயுவானபுதனுக்குஅஸ்தமாகா... ... .*
நாமேநீகுருநாள்தான்கேட்டையாகா..... ....*
நலமானபுகர்நாள்பூராடந்தீதே......... ....*

தீதானசனிநாள்ரேவதியுமாகா...............................*
தீங்குவருமிந்நாளில்நோய்கள்கண்டால்... ... ...*
வாதானநமனுக்குஅறுதியாகும்......... ....*
வந்தநோய்தீராதுகொல்லுங்கொல்லும்... ... ...*
தானனவைத்தியரேநூலைப்பார்த்து.......................*
தயவாகவைத்தியங்கள்செய்யவேணும்... ....*
கோனனைபோகருடகடாட்சத்தாலே...... ... .*
கொற்றவனேபுலிப்பாணிசொன்னேன்பாரே ...*

அருக்கனிற்பரணியும், திங்களிற்சித்திரையும், செவ்வாயி னுத்திராடமும், புதனில் அவிட்டமும், வியாழத்திற்கேட்டையும், வெள்ளியிற்பூராடமும், சனியில் ரேவதியுங்கூடின இந்தத்தினங்களிற்பிணி கண்டால் தீராது.

கவனிப்பு.

ஒருநோயாளிக்கு மருந்துகொடுக்குமுன் அவன்வயதையும் வாதபித்த சிலேத்துமமென்னுஞ் சரீரகுணத்தையும் பெலத்தையும் அப்பியாசத்தையும் தொழிலையும் நோயுண்டாகியகாலத்தையுந் தீபனசக்தியையும் மலோபாதையின் கிரமத்தையுஞ் சரீரக்கூறையும் நாடிஸ்திதியையுங் கவனிக்கவேண்டியது.

வயதுக்குத் தக்கபடி மருந்தினளவை விசற்பித்துக் கொடுக்கவேண்டியது, வாலிபர்களைப்பார்க்கிலும் பிள்ளைகளில் மருந்து அதிகதுரிதத்திற் பிடிப்பதால் பிள்ளைகளுக்குக் குறைந்த அளவிற் கொடுக்கவும்.

வாதபித்த சிலேத்துமகுணங்களாற் சரீரக்கட்டளை வேறுபடுவதுபோல் மருந்துகளு மந்தந்தச்சரீரக் கட்டளைக்குத் தக்கபடி வித்தியாசகுணங்களைக்காட்டும் ஆதலா லந்தச்சரீரசுபாவத்துக்குத்தக்கபடி மருந்துகளையுபயோகிக்கவும் பெண்களுக்கு மாதவிடாய்க்கிரமமாய்க் காணுகிறதுங் காணாததுந் தெரிந்துகொள்ளவுங்கெர்ப்பவதிகளுக்கும் பிள்ளைகளுக்கும் பால்கொடுக்குந் தாய்களுக்கும் பெண்களுக்கும் மாதவிடாயாகுங் காலத்திலும் நேர்வாளமுதலிய வெப்புடையபேதிமருந்து ஔழ்தங்களைக் கொடுக்கலாகாது இரத்தத்திற்கலந்து துர்க்குணங்களை யுண்டாக்கும்.

கடினவேலைசெய்து பக்குவமில்லாதபுசிப்புடையவர்கள்வலியமருந்துகளைச் சகிப்பார்கள். அதிகசெல்வத்துடன் சரீரப்பிரயாசையில்லாமற் காலத்தைக்கழிக்குஞ் சோம்பர்களுக் கனேகநோய்கள் சம்பவிக்கும் அவர்கள் வலியமருந்துகளைத் தாங்கமாட்டார்கள். ஒருமருந்தை விடாமல் நாட்பட சாப்பிடவேண்டியவிஷயத்தில் படிப்படியா யதின்பிரமாணத்தையதிகப்படுத்தினாலொழியக் குணத்தைத் தரமாட்டாது, ஆனாலிக்கிரமம் சிலமருந்துகளில் வேறுபடும், இரதம்-அயம்-பாஷாணமுதலியவைசேர்ந்த சிலமருந்துகள் சாப்பிட்டு வரவர குணத்திலதிகமாகுமாதலா லவைகளின் பரிமாணத்தைக் குறைத்துக்கொண்டே வரவேண்டியது, இரத

ம் பாஷாண முதலிய சில ஔஷதங்கள் சீரத்திற் சிலநாள்தங்கி யொரோதடவையாகக் குணத்தைக்காட்டும், அவைகளில் குணமுழு மையுநீங்காமுன் காலக்கிரமமில்லாமல் மற்றமருந்துகளைத் தாறு மாறுப் கொடுத்தாற் பிணிநீங்காது.

பண்டிதாவிலக்கண முற்றிற்று.

கெர்ப்பக்கோ ளிலக்கணம்.

விருத்தம்.

பாரப்பாபெண்மலடாங்கெர்ப்பக்கோளின் ... *
பக்குவத்தைச்சொல்லுகிறேன்பண்பாய்க்கேளு *
ஆரப்பாஆண்மலடேயாகுமல்லால் ... *
அப்பனேபெண்மலடொருமில்லை ... *
நேரப்பாதவமிருந் தும்பொருளையீந்தும் ... *
நேராகவில்லையநுகூலபாலே ... *
வேரப்பாதேவதையோட்டோடாங்கர்ப்பம் ... *
விரித்துநன்றாய்ப்புகலுகிறேன்விரும்பிக்கேளே *

கெர்ப்பப்புழுவாலுங் குஷ்டபாலுங் கலவியிற் பூவொழுகி ப்போவதாலும் கருக்குழிபாசிப்பற்றி விலக்கமற்றிருப்பதாலும் மதத்துக் கொழுத்திருப்பதாலும் கருக்குழியிற் சதைவளர்ந் திரு ப்பதாலுஞ் சோரி(இரத்தம்) கட்டியிருப்பதாலும் பேயாலும் பித்தத்தாலும் வாயுவாலும் மேகவெட்டையாலும் மற்றைப்பிணிக ளாலும் கிரகத்தாலும் உவராலும் பெண்கள் மலடாகிறார்கள்.

கருக்குழியின் ஆறுவியாதியுங்கூறுகின்றார்-விருத்தம்.

புகலுகிறேன்முதல்தரத்தால்மலடியென்ற ... *
பூவைக்குக்கருக்குழிதான்விளக்கமற்று ... *
அகலுகிறேன் அகலாமல்பாசம்பற்றி ... *
அடைத்திருந்தால்விந்தங்கேயணுகாதப்பா ... *
நிகலுகிறேன்மதநீர்தான்கருக்குழியில்வாயு ... *
நிறைந்திருந்தால்விந்தங்கேசேராதப்பா ... *
திகலுகிறேன்பின்னுமங்குகருக்குழியில்சூழ ... *
தசைவளர்ந்தால்விந்தங்கேதான்செல்லாதே ... *

கருக்குழியிற் கிருமிநின்று லதிற்பாயும் மித்துவையுண்ணும் சதைமூடியிருந்தால் விந்துசெல்லாது, கோடைகாலத்திற் பூமியி

ந்கனலேறி உவர் பூப்பதுபோ லுடலிற்கனலேறிக் கருக்குழியில் உவருண்டாயிருந்தாலும் வாயுசேர்ந்திருந்தாலும் பாசப்பற்றியிருந்தாலும் அதிற்சேரும்விந்து பாழாகும்.

விருத்தம்.

செல்லாதுநாலாவதப்பாகேளு ....*
சிறியவள்கருக்குழியில்புழுதான்சேரில்.............*
செல்லாதுஐந்தாவதப்பாகேளு ....*
செறிந்தங்கேகருக்குழியில்சோரிக்கட்டி .. ..*
செல்லாதுஆறுவதப்பாகேளு...... ....*
செப்புகிறேன்கருக்குழிதான்மதர்த்திருந்தால் ...*
செல்லாதுஇவைஆறுவியாதியாகுஞ்... ... .*
சென்றபின்விரோதமேழாகுங்காணே... .... *

ஸ்திரீ புருஷாளிருவரும் புணரும்போது கருக்குழியிற் பாசபற்றியிருந்தால் அப்பெண்ணிற்கு தலைநோகும், வாயுநிறைந்திருந்தால் உடல்வலிக்கும், தசைவளர்ந்திருந்தால் நெஞ்சிற்குத்தும் வலிக்கும், சோரிகட்டியிருந்தாற் கெண்டைவலிக்குங், கருக்குழி மதர்த்துக்கொழுத்திருந்தா லேப்பமிடும், கிருமி நிறைந்திருந்தால் முதுகுநோகும்.

{ கருக்குழி விளக்கமற்று பாசப்பற்றிய தழுதல் வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமுங்கூறுகின்றார். }

காணப்பாஇலைவிவரம்விரித்துச்சொல்வோங்.. ...*
காரிகைக்குப்புணர்வேளைதலைதானொந்தால் ... ...*
கோணப்பாகருக்குழியிற்பாசபற்றிக்...... ....*
கொண்டதென்றுதானதற்குச்சாந்திசெய்வாய் ...*
பூணப்பாகோழியுடபித்துத்தாலும் ... .*
புகழானபருத்திவிரைப்பருப்போடொக்க ... ...*
தோணப்பாஅவள்குளித்தஅன்றுதொட்டுச்... ......*
சொல்லுகிறேன்மூன்றுநாளைத்துக்கமேலே ...*

கோழிப்பித்தம் பரித்திவிலைப்பருப்பும் ஒக்கக்கூட்டியரைத்து வீட்டுக்கு விலக்கமாயிருந்து குளித்ததுமுதல் மூன்றுநாள்வரை இம்மருந்தை யோனிக்குட்டேய்த்துப் புணரச்சொல்லில் பாச அற்றுக் கர்ப்பமுண்டாம்.

{ கருக்குழியில் வாயுவினாலாகிய இரண்டாம்வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார். }

கேளப்பாஇம்மருந்தையோனிக்குள்தேய்த்துக் ...... *
செடியானபுருஷனையும்புணரச்சொல்லி .... *
நாளப்பாஇப்படியேமூன்றுநாட்செய் ... ... *
நலமானபாசதற்றுக்கெர்ப்பமுண்டாம் ... . *
ஆளப்பாபுணர்வேளையுடம்புநொந்தால் .... *
அப்பனேவாயுநிறைந்திருக்குதென்று... .... *
வாளப்பாபெருங்காயம்நல்லெண்ணெய்வார்த்து ... *
மத்தித்துயோனிக்குட்பூசச்சொல்லே...... ...... *

பெருங்காயத்தை நல்லெண்ணெய்வார்த்தரைத்து யோனிக்குட்பூசி மூன்றுநாட்புணர்ந்தால் வாயுநீங்கும், திப்பிலி சூடன் கோழிப்பித்துச்சேர்த்து அரைத்து மூன்றுநாள் யோனியிற்பூசிப்புணர்ந்தால் தசைவளர்ந்திருப்பதுமாறும்.

{ கருக்குழியில் சதைவளர்ந்த மூன்றாம்வியாதியின் குணமும் அதற்கு ஔஷதமுங் கூறுகின்றார். }

பூசியேமூன்றுநாள்புணர்ந்தானாகிற்... .... *
புதல்வருண்டுமூன்றுவதப்பாகேளு... .... *
கூசியேபுணர்வேளையவட்குத்தானும்........ ...... *
குறையாமல்நெஞ்சுவலியிடித்ததானால்... ...... *
தாசியேயோனியெல்லாஞ்சுருக்கிக்கொள்ளுந்... ... *
தசைவளர்ந்திருக்குதென்றுதிப்பிலிபூரம்... .. ... *
மாசியேகோழியுடபித்துஞ்சேர்த்து...... .. .. *
வாட்டியேயோனிக்குள்தடவச்சொல்லே......... *

{ கருக்குழியிற் புழுச்சேர்ந்த நாலாம்வியாதியின்குணமும் அதற்கு ஔஷதமுங்கூறுகின்றார். }

தடவியேமூன்றுநாட்புணர்ந்தானாகில்................ *
தப்பாதுபிள்ளையுண்டாம்நாலாங்காட்சி... ... ... *
அடவியேபுணர்வேளைமுதுகுநொந்தால்......... ...... *
அவட்கங்கேகிருமிநிறைந்திருக்குதென்று......... *
விடவியேஇந்துப்புஅரிதாரம்காயம்.. ... ... *
வெந்நீரில்மூன்றுபணைத்தூக்கியாட்டி .... *
படவியேமூன்றுதினம்யோனிக்குள்தேய்த்துப் ... *
படுத்திடவேபிள்ளையுண்டாம்பண்புதானே ...... *

இந்துப்பு அரிதாரம் பெருங்காயம் வகைக்கு மூன்றுபண விடை வெந்நீரிலாட்டி மூன்றுநாள் யோனியிற்பூசிப்புணர்ந்தாற் கிரிமிவிலகும்.

கருக்குழியிலிரத்தமூடிய ஐந்தாம்வியாதியின்குணமும் அதற்கு ஔஷதமுங்கூறுகின்றார்.

தாமென்றஐந்தாவதப்பாகேளு *
தழுவையிலேகெண்டைக்கால்வலித்திதானால் *
வாமென்றமேசோரியவள்கருக்குழியைமூடி *
மலைத்திருக்குமென்றதிற்றுமைந்தாநீயும் *
பாமென்றகடுக்காயும்பஞ்சதாரை *
பச்சைப்பூரம்புழுகும்ஆம்டிவாங்கி *
மாமென்ற அவள்குளித்தமூன்றுநாளும் *
மாறுஉண்ணவள்ளுக்குக்கொடுத்திடாயே *

கடுக்காய் சர்க்கரை பச்சைக்கர்ப்பூரம் புழுகுஞ்சேர்த்து அட்டி மூன்றுநாளுண்ண இரத்தக்கட்டு நீங்கும்.

யோனியிற்பூசுமருந்தும் கருக்குழி மதர்த்திருக்கும் ஆறாம்வியாதியின்குணமும் அதற்கு ஔஷதமும்.

கொடுத்திடவேபிள்ளையுண்டாங்குறைதானில்லை *
கூறக்கேள்யோனிக்குமருந்துகூட்டு *
நடுத்திடவேகுங்குமப்பூஅரிதாரந்தானும் *
நற்சீரகத்துடனேமூன்றுங்கூட்டி *
படுத்திடவேயோனிக்குட்பூசிக்கொண்டு *
பாயலிற்புணர்ந்திடவேகெர்ப்பமுண்டாம் *
எடுத்திடவேஆறுவதப்பாகேளு *
எப்பயிட்டால்புணர்வேளைமதர்த்துதென்னே *

வேறு-விருத்தம்.

மதர்த்துமேகொழுத்திருக்குமென்றுதானும் *
வாகானசவர்க்காரங்கடுக்காய்சாரம் *
சதைத்திவைகள்சமனாக அரைத்துவாங்கித் *
தடவியேபுணர்ந்திடவுமூன்றுநாளும் *
பிதர்த்துமெத்தகெர்ப்பமுண்டாம்வழாங்காட்சி *
பேயாலும்பிராலும்பிழைதானுண்டு *
சதத்துமிவிசாந்தியொன்றுஞ்சமாகச் *
சொல்லுகிறேனன்றுகக்கேளுகேளே *

குங்குமப்பூ-அதிமதுரம்-நற்சீரகம்-வெந்நீர்விட்டரைத்துமூன்றுநாள் யோனிக்குட் பூசச்சொல்லிப் புணர்ந்தாற் கருக்குழிமதர்த்திருத்தல் தீரும். மேற்சொல்லிய மருந்துவகை யொன்றுக்குப் பணவிடை யொன்றவீதம் அரைத்து ஆண்பிள்ளைகட்குலிங்கத்திற்பூசியும் ஐந்துபணவிடை யரைத்துப் பெண்களுக்கு யோனியிற்பூசியும் புணர்ந்திடில் கெர்ப்பக்கோள்விலகிக் கருத்தரித்துப் பிள்ளையுண்டாகும்.

பித்தமலட்டுக்குணம்.

சிறுநீர் மஞ்சளைக்கரைத்தாற்போலிறங்கும்.

நிவர்த்தி.

வேப்பலகு சிந்தில்தண்டு முத்தக்காசு ஓர்நிறையிடித்துப்பிழிந்தசாறு படி(௧)ஆவின்நெய் படி (வ) ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிக்குளித்ததுமுதல் மூன்றுநாட்கொண்டு பத்தியம் நீர்க்கஞ்சியுண்ணத்தீரும்.

மந்திஷ்டிவேர் ஆடாதோடை அமுதவல்லி தூதுவேளை பிரமி வேப்பலகு சிவதை சிறுகுறிஞ்சான் சுக்கு இவை எட்டும் பணவிடையில் வேகவைத்துக் குளித்ததுமுதல் மூன்றுநாள்சாப்பிடத்தீரும்.

வாதமலட்டுக்குணம். நீர் இரத்தம்போலிறங்கும்.

அதற்குநிவர்த்தி.

இந்துப்பு பெருங்காயம் புளியம்பாளைகூட்டிக் கற்றாழைவேரின்சாற்றாலரைத்துப் புன்னைக்காய்போலுருட்டிக் குளித்ததுமுதல் மூன்றுநாளருந்தவும்.

புளியம்வேர் கியாழஞ்செய்து இந்துப்பு பெருங்காயங்கூட்டி பழங்காடிவிட்டுக் கலக்கிக்கொடுக்கத்தீரும்

விஷிப்பாலை வெட்பாலை வாலுழுவை நெல்லிதான்றி கொன்றைப்பட்டை கொடிவேலி இந்துப்பு சுக்கு வகைக்கு மூன்றுகழஞ்சு அரைத்து பிரமிச்சாறு இருநாழி நெய் நாழி இவையெல்லாமொன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி வடித்துக் குளித்ததுமுதல் மூன்றுநாளருந்த வாயு கிருமிதீரும் பத்தியம் பாலும் அன்னமுமுண்ண.

அலகைமலட்டுக்குணம்.

அரிவையர்கள்பூத்தநாளில் இட துபக்கத்தில் வயிறுநோகும்

நீர்கடுத்து வெளுப்பாயுங் கறுப்பாயுஞ் சிவப்பாயுமிறங்கும்.

நிவர்த்தி.

நாறுங்கள்ளிவேர் அரைத்துப் புன்னைக்காயளவு ஆவின்வெண்ணெய் பாக்களவுகலந்துக்கொண்டு குளித்ததுமுதல் மூன்றுநாளருந்தத்தீரும் பத்தியம் ஆவின்பாற்சோறுண்ணை.

பெற்றமலட்டுக்குணம்.

உடல்பருத்து ஊக்ஷீணமாய் வலிக்குங் காலெரியும் நீர் கழுநைச்சத்தகம்போலுங் கழுநீர்போலுமிறங்கும்.

நிவர்த்தி.

சருகெள்ளெண்ணெய் படி முக்கால் நற்சீரகம் ஒருகாசெடை சிந்தில்தண்டு ஒருகழஞ்சு வரப்பூலாக்கொழுந்து பாக்களவு அரைத்து எண்ணெயிற்போட்டுக்காய்ச்சிச் சூதகமானதுமுதற் பதினைந்துநாள்வரைக்கும் காண்டிவீதஞ்சாப்பிட்டுக் கடும்பத்தியமாயிருக்கவும்.

வாட்சிமலட்டுக்குணம்.

எவ்வளவு அசனஞ்செய்தாலுஞ் சரீரமுலர்ந்துபோம், அடிக்கடி கொட்டாவியுண்டாகுஞ் சொப்பனம்பலகாற்காண்பிக்கும்

நிவர்த்தி.

பெரும்பூசணிப்பழத்தைத் தலையிற்றேய்த்து(௩)நாஸ்ஸ்நானஞ்செய்வித்துக் காற்படியாவின்பாலிற் சிறு எலுமிச்சம்பழம் பிழிந்து அம்மான்பச்சரிசி சமூலமுமரைத்துக் கொட்டைப்பாக்களவுபோட்டுக் கலக்கிக் காலமே (௩) நாளுங்கொடுத்து அப்பால் மேற்படி எண்ணெய்செய்து-௪-ஞ்-நாள்வரை சாப்பிட்டுவரவும் இச்சாபத்தியமாயிருக்கவும்.

வாயுமலட்டுக்குணம்.

கெர்ப்பக்குழியைச்சுற்றி வாயுதிற்கும்; உண்ட அசனம் நன்றாய்ச்சமியாது பொருமு மேப்பமிடும்.

நிவர்த்தி.

மந்திஷ்டிக்கிழங்கு திரிபலை கீழ்க்காய்நெல்லி அசமதாகம் பெருங்காயம் மஞ்சள் மரமஞ்சள் கடுகுரோகணி கரிப்பாலைவேர் திருநாமப்பாலைவேர் தேள்கொடுக்குவேர் அமுக்கரக்கிழங்கு நீர்வள்ளிக்கிழங்கு வகைக்கு விராகனெடை (௨வ) ஆவின்பாலிலரைத்

து ஒருபடி நெய்யிற்போட்டு நாலுபடி பால்விட்டு தீபம்போல்
மூன்றுநாளெரித்து நாலாநாள் பதமாய்க்காய்ச்சி கரண்டிவீதம்
ருதகமான நான்முதல் (௰௫) நாள்வரை இருபோதுகொள்ளவும் ப
த்தியமாயிருக்கவும் வாயுமலடுதிரும்.

பேய்க்குமட்டிக்காய்ச்சாறு பால் வகைக்குப்படி (௪) தேங்
காய்ப்பால் படி(௧)சிற்றாமணக்கெண்ணெ சுருள்ளிச்சாறு வகைக்
குப்படி (௫) கடுகு வெள்ளுள்ளி மஞ்சள் இந்துப்பு கடுக்காய்கடு
குரோகணி மதுரம் திரிகடுகு ஓமம் வாய்விளங்கம் சீரகம் அரத்
தை கோஷ்டம் சிறுநாகப்பூ சன்னலவங்கப்பட்டை வகைக்குக்க
ழஞ்சு(௫)அரைத்து எண்ணெயில் கரைத்துக்காய்ச்சி அந்திசந்தி கர
ண்டிவீதங்கொண்டுவர கெர்ப்பவாயு கிருமி நீர்க்கட்டு உதரரோக
ம் பெருவயிறு கென்லடைதிரும்.

சிற்றாமணக்கெண்ணெ ஆவினெய் வீழிச்சாறு வகைக்குப்ப
டி(௧)சுருள்ளி திரிகடுகு வசம்பு கோஷ்டம் இலவங்கம் ஏலம் வெ
ள்ளுள்ளி வகைக்கு பலங்கால் ஆவின்பாலலாட்டிக் கலந்து பத
மாய்க்காய்ச்சிவடித்து காலமே காற்சேர்வீதம் மூன்றுநாள் சாப்
பிட்டு ஆறுநாள்பத்தியமாயிருக்க கொப்பு... கிருமிமுதலான
வைதிருந் தேகங்குளிரும்,

மாதமுழுக்கில்லாதபேர்களுக்கு.

வேலிப்பருத்திச்சாறருந்தினலுந் துதுளை குப்பைமேனிஉ
ருண்டையாய்க்கிடக்கிற குளத்துப்பாசி வகைக்குக் கொட்டைப்
பாக்குப்பிரமாண மரைத்து சர்க்கரைகலந்து மூன்றுநாளருந்தி
னலும் காய்டுக்கரணைக்கிழங்கை யரைத்துப் பாலில்கலக்கி(௫)நாள
ருந்தினலும். பேய்க்குமட்டிவேர் புகையூறல் கார்கோலரிசி சம
னிறையாயரைத்துக் கண்டங்கத்திரிப்பழச்சாற்றி லருந்தினலும்
நிலப்பனைக்கிழங்கு பறங்கிப்பட்டை வகைக்குப்பலம்(௧)சூரணித்
து ஒருபடி கொள்ளில் (௪) படிதண்ணீர்விட்டு எட்டொன்றாய் வ
ற்றவைத்திறுத்ததிற் சூரணத்தைப்போட்டுக் கிண்டியெடுத்து அந்
தி சந்திசாப்பிட்டுவந்தாலும் மாவிலிங்கைப்பட்டை சூரணஞ்செ
ய்து தினைத்தவிடுகலந்து கொட்டைப்பாக்குப்பிரமாணம் மூன்று
நாளருந்தினலும், எள்ளிக்கழுவினதண்ணீர் படி(௨)யில் ஒருபல
வோமத்தைப்போட்டுக்கொடுத்தாலுங் கொடிவேலிவேர் எலுமி

ச்சங்காய்ப்பிரமாணமரைத்து கொள்ளவித்ததண்ணீரில்மூன்றுநாளருந்தினாலுங்குருஞ்சாச்சாறு ஆவின்பால்வகைக்கு படிமாகாணியொன்றாய்க்கலந்துமூன்றுபோது கொண்டாலுஞ்சிவந்தநாயுருவியுஞ்சிறுவிளாவுமரைத்துநீரில்கலக்கிக்கொடுத்தாலும் புளியமடல்க்கிழங்கரைத்து பாலில் மூன்றுநாட்கொடுத்தாலுஞ் ரூதகக்கட்டுநீங்கிமாதமுழுக்குண்டாகும்.

புழுமேல்மலட்டுக்குணம்

அடிவயிற்றில் சுருக்சுருக்கென்றுவலிக்கும்,

நிவர்த்தி.

எள்ளெண்ணெய்படிமுக்கால் முத்தக்காசு கழஞ்சு(௨) வரப்புலாக்கொழுந்து சாரணைக்கொழுந்து வகைக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணமரைத்து எண்ணெயிற்போட்டுகாய்ச்சிவடித்துக்கொண்டு ரூதகமானநாள்முதல் பதினைந்துநாள்வரை ஒருகரண்டிவீதம் உண்டுவரத் தீரும், பத்தியமாயிருக்கவும் வரட்சி மலடு தீரும்.

சேர்ப்பப்புழுக்குணம்.

வாத்தியபல்லும் வயிறுநோகும் இரண்டுமாதம் மூன்றுமாதம் முழுக்கு நின்றுநின்றுண்டாகும், உடல்வெளுக்கும் திணவுண்டாகும்.

நிவர்த்தி.

ஆதீண்டையிலைச்சாறு கரும்பின்னாக்கிலைச்சாறு சிற்றாமணக்கெண்ணெய் கருப்புக்கட்டி இவையெல்லாம் ஒன்றாய்க்கலந்து காச்சி வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்றுநாளுங்கொள்ள புழுவிலகுங் கருத்தரிக்கும்.

பாகலிலைச்சாறு குமட்டிக்காய்ச்சாறு எருக்கிலைச்சாறு வீழியிலைச்சாறு வகைக்குப்படி(௧)வேப்பெண்ணெய் ஆமணக்கெண்ணெய் ஒன்றாய்விட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சி காசிடைகொள்ள மலஜலக்கட்டு சேர்ப்பப்புழு கிருமி வாயுதீரும்,

சேர்ப்பப்புழுக்குணம்.

மாதவிடாய்காலத்தில் அடிவயிற்றில் சுருக்கென்று வலித்து ரூதகம் இறைச்சி கழுவினதண்ணீர்போலக்காணும் புருஷிருடன்

கூடுங்காலத்தில் அதுபோலவே யோனிவழிநீர்பொசிந்து சிலயிற்கறைப்படும்.

நிவர்த்தி.

சிந்தில்வேர் நாணுங்கள்ளி (இலைக்கள்ளி) வேர்க்கியாழம்வடித்து ஆவினெய்விட்டுக் குளித்ததுமுதல் மூன்றுநாள் உண்ணத்தீரும் பத்தியம் பாலும் அன்னமுங்கொள்ள.

மேற்படி கிரிமிகட்குப் பொதுப்பிரயோகம்.

சித்திரமூலம் சாரணைவேர் பொன்னாங்காணிவேர் சமனாயரைத்துத் தேங்காய்ப்பாலிற் குளித்ததுமுதல் மூன்றுநாள் அருந்த கெர்ப்பப்புழுவிழும் விப்புருதிதிரும் மூன்போற் பத்தியம்—நந்தியாவட்டைவேர் சூரணம்பண்ணி சூதகமாயிருக்கும்போது வெருகடிப்பிரமாணம் ஆவின்பாலிற்கொள்ள—குறட்டைக்கிழங்கு பலம்(௨) ஆடுதின்னாப்பாளைவேர் பலம்(௫)வெள்ளுள்ளிபலம் (௫) வசம்புபலம் (௮) சிற்றாமணக்கெண்ணெயிற்பதமாய்க்காச்சிவடித்து சூதகமாக(௪)நாளைக்குமுன் கொடுக்கவயிறுகழியும்மோருஞ்சாதமுமுண்ண—தகரைவிரையை அரைத்து அறுபதுநாழிகைசென்றமோரில் சூதகமாயிருக்கிற மூன்றுநாளுங்கொள்ள—குருஞ்சாவேர் பாலில் அரைத்து இளவெந்நீரில்கொள்ள—ஆண்வசம்பு வெள்ளுள்ளி வகைக்குப்பலம்(௧) பூநீர்ச்சுண்ணங் கழஞ்சு அரைத்து அரைப்படி தேசிநீரிற்கலக்கிக் குழம்பாய்க்காய்ச்சி எலுமிச்சங்காய்ப்பிரமாணம் மாதவிடாய் காலத்தில் மூன்றுநாட் கொடுத்து வாழையிலையைவிரித்து அதிற்குந்தியிருக்கச்செய்தால் கிருமிகள் கொழுந்துபோல்விழும் இந்தப்படி மூன்றுமாதம் மூன்றுவிசைசெய்யக் கெர்ப்பமுண்டாகும்.

பச்சைக்கர்ப்பூரம் மிருதார்சிங்கி செண்பகப்பூ மாசிக்காய் வெள்ளெருக்கின்வேர் சிறுகுறிஞ்சாவேர் சாரணைவேர் வண்டோதரிவேர் கருப்புக்கட்டி வகைக்குப்பலம்(௨) தண்ணீர்விட்டரைத்து (௰௪) உண்டைசெய்து எழுநாளுண்டு எட்டாநாள் அகத்திச்சாறிலும் தும்பைச்சாற்றிலும் கார்ப்படிசாறுகுடிக்கக் கூட்டோடே புழுவிழும்—சூதகமாயிருக்கும்போது சிவிபலம்(௧) அரைப்படி ஆவின்பாலிற்போட்டுக் கரைத்துக்கொடுத்து மறுதினத்திலும் அப்படியேசெய்து மூன்றுநாள் புரசம்விரையை எருமைச்சாணியி

ர்புகைத்து மறுநாளெடுத்துத் தோல்நீக்கிப் பெலமிஞ்சு இரண்டு மூன்றாவிலாயை அரைத்துக் காற்படி ஆவின்பாலிற்கொடுக்கக் கெர்ப்பப்புழுவும், வயிற்றிலுள்ள மற்றப்புழுக்களும் செத்து விழுந்துபோம்.

சாந்தி கூறுகின்றார்.

கேளப்பாருதவிலைமாதனையிணிலையுங் .. ..*
கெடியானகஸ்தூரிமஞ்சள்தானும்... ... .*
நாளப்பாஅரைத்துநன்றாய்ப்பாதமுதல்சிரசு ... ...*
நலமாகமேல்நோக்கித்தடவச்சொல்லி............*
வேளப்பாபுருஷனைத்தானிற்கவைத்து...... ....*
விவரமுடன்கீழ்நோக்கிப்பார்க்கச்சொல்லி... ...*
வாளப்பாமருந்தெல்லாந்தூற்றிவாரி......... ... ...*
மாவிலையிலெல்லாந்தான்வாங்கிக்கொள்ளே ......*
வாங்கியதோர்மருந்ததனையவள்முன்காட்டி... ......*
மைத்தனேவாசலிலேபுகைத்துவைத்து ... .*
பாங்கிதனைக்குளிப்பித்துப்புடவைநல்கிப் .. ..*
பண்பானஅகிலுடனேசாம்பிராணிசந்தம் ... ...*
தேங்கியதோர்தேகமெல்லாம்புகைத்துநன்றாய் ...*
தினமொன்றுமூன்றுதரம்புகைத்தப்போது ... ...*
ஏங்கியதோர்தேவதையும்பூதப்பிரேதம்... ... .*
எவலொபிசாசவகையெல்லாம்போமே.........*
முன்சொன்ன ஔஷதங்களுக்கு எடைபாகங்கூறுகின்று
பேருமப்பாமருந்துவகையோனிக்குப்பூசப்......*
பூட்டுகிறேனெடைபாகம்பிரித்துக்கேளு.........*
ஆருமப்பாவகையொன்று பணவெடைதானென்று *
ஆண்பிள்ளைக்கவ்வண்ணமலாத்துப்பூசு.............*
ஏருமப்பாபெண்ணுக்குப்பணவெடைதானேர்ந்து ...*
எடுபடுங்கால்வியாதிமுதல்விரோதமெல்லாம் ...*
பாருமப்பாமலடில்லைபிள்ளையுண்டாம்...... ......*
பாடினேன்கெர்ப்பத்தின்கோளைத்தானே.........*

பத்தியங்கூறுகின்றார்.

தானென்றபத்தியஞ்சூட்சத்தில்சொல்வேன்..........*
சாதகமாய்க்கேட்டியதோர்உப்புமாகும்... ... ...*
வேனென்றபுளியாரைசியக்கொழுந்து.... ....*
மேலானநெல்லிக்காய்அரிநெல்லிக்காய்... ... ...*

தேனென்றவெள்ளாடுமுயல்ஆமையாகும் .... *
திறமான உணர்க்குருவிகாடைமானும் .... *
பானென்றமறையாகுஞ்சுறாமீனும் ... . *
பண்பானசெவித்றுமீன்மிளகுமாமே ... . *

ஆமப்பாசர்க்கரைதேன்சிறுகீரையாகும் .... *
ஆவின்பால்நெய்யாகும்சிறுபயறுமாகும் ... ... *
ஆமப்பா துவரையொடுபொன்னாங்காணி .... *
அவரைக்காய்த்தூதுவளைசுழலமாகும் .... *
ஆமப்பாதித்தித்ததெல்லாமாகும் .... *
ஆகாதிலைகப்பாகாபுளிதுவர்ப்பாகா ... . *
ஆமப்பாபழவகைகளெல்லாமாகும் .... *
ஆத்தாட்குப்பூசித்தமருதுவுமாமே ... . *

மதுவாகுங்குளிர்ந்தசலங்கிட்டஆகா ... ... *
மைந்தனேகொதித்தண்ணீர்மிகவுநன்று ... *
சதுவாகும்வேதமுறைகண்டுசொன்னேன் ... *
சத்தியந்தான்இந்தநூல்சார்ந்துநீபார் ... *
அதுவாகுமிதுவாகுமென்றேயெண்ணி ... *
அலைந்தலைந்துதிரியாமல்குருவைநோக்கிப் ... *
பொதுவாகும்நினைவுகொண்டுஇருப்பாயாகில் ... *
புத்திசித்திமுத்திமுதல்புனிதமாமே ... ... *

பெரும்பாட்டின்குணம்.

விருத்தம்.

கைபோகஞ்செய்யத்தனித்தகுழியோரம் ... ... *
மெய்யாகவித்துவிழவிழப்புண்ணாகும் ... ... *
மையூருங்கண்ணாட்குமகத்தாம்பெரும்பாடாம் ... *
* கொய்பூறுந்தண்டினிற்கொம்பளிக்கும்ரத்தம் ... *

புணர்ச்சியினு லக்கினிமீறி வெட்டையுண்டாகி அது அதிகரித்துக் கருக்குழியும் உத்தியும் புண்ணாய்ப் பெரும்பாடுதோன்றுஞ் செவ்விளநீர்போ லிரத்தம்வடிந்துகொண்டிருக்கும் வயிற்றுவலி சோபதாபமுமுண்டாம்.

நிவர்த்தி.

நாவற்பட்டையை புளித்த எருமைமோரிற் றுவைத்திடித்துப் பிழிந்து அதிலே த்துவிராகனெடை சத்தனங்கலக்கி மூன்றுநாட் கொள்ளத்தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு எலுமிச்சம்பழச்சாறு கரும்பஞ்சாறு ஆவினெய் வகைக்குப்படி(௩)தாளிசப்பத்திரி பலம்(௩)சாதிக்காய் ஏலம் கிராம்பு அரத்தை அதிமதுரம் நிலப்பனைக்கிழங்கு வகைக்குப்பலம்(௧)தேங்காய்ப்பாலி லரைத்துப்போட்டு பதமாய்க்காய்ச்சிக் கரண்டிவீதங்கொள்ள பெரும்பாடு வெள்ளை நீர்ச்சுருக்கு நீர்க்கட்டு சதையடைப்புநீங்கும்.

நீர்வள்ளிக்கிழங்குச்சாறு அத்திவேர்ப்பட்டை மூசுமூசுக்கை நன்னாரிவேர் பூமிசர்க்கரைக்கிழங்குநிலப்பனைக்கிழங்கு பாலிலரைத்து நெய்விட்டு லேகியமாய்க் கிண்டியருந்தத்தீரும்—கஞ்சாயிலை ஏலம் ஆவினெய்யிலரைத்து வாளைமீனிற்பூசி ஆவாரைவேர்க்கியாழஞ்செய்து ஒருசட்டியிலிட்டு வாயிற் சீலைவேடுகட்டி யதின்மேல் மீனைவைத்து இரண்டுநாழிகை புட்டவியலாய்வெந்ததின்பி னெடுத்து கவசமும் விலாம்புமுள்ளும்நீக்கிப் பத்துநாள்சாப்பிட்டு அந்திசந்தி ஆவாரைவேர்க்கியாழங் குடித்துவரத் தீராப்பெரும்பாடுந்தீரும்.

ஏலம் சன்னலவங்கப்பட்டை ஆவாரம்பூ நெல்லிமுள்ளி கற்கண்டு வகைக்குவராகனிடை (௫) பொடித்து வடிகட்டி மூன்றுபங்குசெய்து மூன்று இளநீரை மேற்றோல்சீவிக் கண்திறந்து ஒவ்வொன்றிலு மொவ்வொருபங்கிட்டடைத்து ஜலத்திலறுபதுநாழிகைவைத்திருந் தெடுத் திளநீரையூற்றி யதிற்கொஞ்சந்தேன்விட்டருந்தவும், இப்படி மூன்றுநாட்செய்யத்தீரும்—தேங்காய்ப்பால் ஒதியம்பட்டைச்சாறு பசுவின்பால் வகைக்குப்படி(௨) முருங்கைப்பிஞ்சு ஒதியம்பிசின் நெல்லிக்காய்ப்பிரமாணமரைத்து அதிற்கலக்கிக்குடிக்கத்தீரும்—முருங்கைப்பூவையரைத்து தேங்காய்ப்பாலிலாவது வெள்ளாட்டின்பாலிலாவது வெல்லங்கூட்டிச் சாப்பிடத்தீரும்.—கருங்குருவையரிசிமாவில் கவிழ்தும்பைச்சாறிட்டுகளிகிண்டிச்சாப்பிடவும்.—வாலுளுவையரிசிமாவில் பிரண்டைச்சாறிட்டுப் பிசிறிப்பிட்டுச்சுட்டு எருமைநெய் கருப்புக்கட்டி கூட்டியுண்ணத்தீரும்.

அதிமதுரம் கெந்தி வகைக்கு விராகனிடை (௪) ஆடாதோடைச்சாற்றிலாட்டி நெய்யில்லேகவைத்து மூன்றுநாளுண்ணத்தீரும்;—கடலையில்வெந்த அஸ்தியையிடித்துச் சூரணித்து விராக

னிடை(௯௰)அபின்விராகனிடை(௫)சாதிக்காய்விராகனிடை(௰) சாதிப்பத்திரி விராகனிடை(௯)இவைகளைக் கல்லுரலிலிட்டு சட்டப்பாறையாலிடித்து வெள்ளாட்டுநெய்யில் வெருகடிசூரணம் அந்திசந்திகொள்ளத்தீரும்,—சிறுசெருப்படிச்சாறு ஆவின்பாற்சமங்கலந்து காலையில் நாலுநாள்கொள்ளத்தீரும்,—சிவந்தபுதுச்செங்கல்லைப்பொடித்து வடிகட்டி அதற்குநிகர் சீனிகூட்டி வெருகடித்தூள் ஐந்துநாளந்திசந்திகொள்ளத்தீரும் புளிபுகைதள்ளவும்,

தேங்காய்ப்பால் ஆவின்பால் வகைக்குப்படி(௨)முருங்கைப்பூ அரைத்தது தேங்காயளவு, பனைவெல்லம் பலம் மூன்றுகூட்டி லேகியஞ்செய்து வேளையொன்றிற்கு எலுமிச்சங்காயளவு காலமண்டலங்கொள்ள பெரும்பாடுதீரும்,—ஆயிலியப்பட்டையை நீர்விட்டரைத்து எலுமிச்சங்காயளவெடுத்து பச்சரிசிமாவிற்பிசைந்துருட்டி கருகாமலடைசுட்டு மூன்றுநாள் ஆறுபொழுதுண்ணத்தீரும்.

இலந்தைப்பட்டை ஒதியம்பட்டை நாவற்பட்டை அத்திப்பட்டை அரசம்பட்டை மாம்பட்டை வேலம்பட்டை வகைக்குப்பலம்(௧)உலர்த்திச் சூரணித்து இதற்குச்சரியெடை பச்சரிசிமாவு கலந்து பனைவெல்லஞ்சேர்த்து பிட்டுசெய்து வெண்ணெய்சேர்த்து ஆறுநாள் உண்ண நாட்பட்ட பெரும்பாடுதீரும் இச்சாபத்தியம்.

ஒருபடிநல்லசலத்தில் பூங்காவி பலம்(௫) பொடித்துப்போட்டு மூன்றுநாளுறினபின் தெளிவிறுத்து அந்திசந்தி விராகனெடை படிகாரம் பொரித்து அதிற்கலந்து மூன்றுநாளுண்ண நாட்பட்டபெரும்பாடுதீரும்.

கெர்ப்பசூலைக்குணம்-விருத்தம்.

கேளாய்பெண்ணேசூலைகர்ப்பம்கெடுதிசெய்யும்வழிமார்க்கம்... *
மீளாக்கனலும்கருக்குழியில்மிகுந்தவாயுவனுசரிக்கும் ... ...*
நீளச்சூதந்தான்பிரண்டுநிறைந்தசோரிசிசுபோலாம் ... ... *
நாளவயிறுதான்வலிக்குந்தனித்துசேரப்பெலன்கெடுமே ... *

உடம்பிற்கனமேலிக் கருக்குழியில் வாயுஅனுசரித்துச் சூதகங்கட்டித்திரண்டு உதரமெங்கும் சிசுப்போற்புரண்டுதிரும் வயிறு வலிக்கும் தேகம்வற்றும் பெலங்கெடும் சோபதாபமுமுண்டாகும்

திவர்த்தி.

பேய்க்குமட்டி ஆடாதோடை அவுரி திருகுகள்ளி வீழி கரிசாலை கழற்சி முடக்கொத்தான் வேப்பம்பட்டை இந்தச்சாறுகள் சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி(௧)வெள்ளாட்டுநீர் எருக்கிலைப்பழுப்புச்சாறு சதுரக்கள்ளிச்சாறு வகைக்குப்படி(௨) திரிகடுகு திரிபலை வெண்காரம் பஞ்சலவணம் நவச்சாரம் சத்திச்சாரம் எவச்சாரம் வாய்விளங்கம் சமிகு கடுகுரோணி ஆனைத்திப்பிலி திப்பிலிமூலம் மரமஞ்சள் கருஞ்சீரகம் வகைக்குப்பலம்(௧) அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் கலசத்தில்வடித்துமூடி ஒருமண்டலந் தானியபுடம்வைத்தெடுத்து ஒருகாண்டிவீதம் மூன்றுநாள்சாப்பிட்டு ஐந்தாநாள் தலைமுழுகவும் கெர்ப்பசூலை வாயுவிப்புருதி கற்சூலைமுதலான கெர்ப்பரோகங்கள்தீரும்.

கொல்லங்கோவைக்கிழங்கு சூரட்டைக்கிழங்கு மருட்கிழங்கு வெருகங்கிழங்கு புளியமடற்கிழங்கு வகைக்குப்பலம்(௰)இடித்து பதக்குநீரிற்போட்டு எட்டொன்றாய்க்காய்ச்சியதில் சிற்றாமணக்கெண்ணெய் படி(௨)ஆவின்பால் படி(௧)கடுக்காய் சிவதை பஞ்சலவணம் ஓமம் திரிகடுகு வெள்ளுள்ளி சீரகம் வகைக்குப்பலம் (வ) கண்டங்கத்திரிப்பழச்சாறுவிட்டரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து வீட்டுக்கு விலக்கமாயிருக்கிற மூன்றுநாளும் புளிதள்ளிச்சாப்பிட்டு திணைக்கஞ்சிகொள்ளவும் கெர்ப்பசூலை முதலான சகலகெர்ப்பரோகங்களும் வாயுதிரட்சியுந்தீரும்.

பொரிகாரம் காயம் காந்தம் பஞ்சலவணம் தேங்காய்ப்பருப்பு வகைக்குவிராகனெடை(௫)தோல் முனை நீக்கி வறுத்தவாளம் விராகனெடை(௰௨)எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுசாம மரைத்துப் பணவெடை வெல்லத்திற்கொடுக்க பேதிக்கும் போசனங்கொள்ள மேற்படிரோகங்கள் தீரும்.

கற்சூலைக்குணம்-விருத்தம்.

சொன்னமாதேபடிவயிற்றில்தோற்றமுதிரந்தானிரண்டு .. ❋
மன்னேவளையம்போற்கிடக்கும் மதித்துவலித்துத்தான்பரவும் ❋
பின்னேபொருமும்பிறவலியும் பேசாமுதுகைப்பற்றுலைக்கும் ❋
சொன்னோமிந்தக்குணமதனைச்சொகுசாயறிந்துமருந்துண்பீர் ❋

௯

அடிவயிற்றிலுதிரந்திரண்டு வளையம்போற்கிடக்கும் வலித்துப்பார்த்து பொருமும் முதுகைப்பற்றிநோகும்.

நிவர்த்தி.

கண்டங்கத்திரிப்பழச்சாறு படி (௨) சுக்கு-டீ ௩-திப்பிலி தேசாவரம் வகைக்கு விராகனிடை (௫) ஓமம்பலம் (௪) பூமிபலம் (௨) பெருங்காயம் கடுரோகணி இந்துப்பு வெடியுப்பு வளையலுப்பு கல்லுப்பு வகைக்கு விராகனெடை (௬) மேற்படி சாற்றிலரைத்துக் கலக்கிக் கொதிக்கவைத்து குழம்பிவருஞ்சமயத்தில் அன்பது விராகனெடை கருப்புக்கட்டியும் காற்படி நல்லெண்ணெயும்விட்டு லேகியஞ்செய்துக்கொண்டு எலுமிச்சங்காயளவு ஏழுதினம் பத்தியமாய்ச்சாப்பிட்டுத் தலைக்குத் தண்ணீர்வார்த்ததின்பின் மீந்தமருந்தை இச்சாபத்தியமாய்ச் சாப்பிட்டுவரச் சூதசூலை கெர்ப்பச்சூலை இரத்தக்கட்டி சூதகவாயு முதலான கெர்ப்பரோகங்கள்தீரும்.

வேம்பு விழுதி நிலவாகை கள்ளி பொற்கொன்றை வேளை உன்ளி பூவரசு வாகை சங்கு வெள்ளறுகு ஆவின்சாணி இவைகளின்சாறு வகைக்குப்படி (௨) ஆவின்பால் ஆமணக்கெண்ணெய் வகைக்குப் படி (௪) கிரிகபிகு திரிபலை கல்லாரை தண்ணீர்விட்டான்கிழங்குகொடிவேலி வால்மிளகு கோரோசனை இந்துப்பு கிராம்பு கருஞ்சீரகம் மஞ்சள் நேர்வாளம் வெண்காரம் அரத்தை கார்கோலரிசி கோழி பெச்சம் கெந்தகம் லிங்கம் பிரப்பங்கிழங்கு பறங்கிப்பட்டை வகைக்கு கழஞ்சு (௧) ஜெசாறுகளிலரைத்துப் போட்டு பதமாய்க் காய்ச்சிக்குளித்தது முதல் ஒருகரண்டிவீதஞ்சாப்பிட்டுவரத்தீரும் உப்புப்புளிநீக்கி நீர்க்கஞ்சிகொள்ள கெர்ப்பசூலை சூதசூலைமுதலான கெர்ப்பரோகங்கள் தீரும்.

இரத்தசூலைக்குணம்-விருத்தம்.

பார்த்திடவேமங்கையர்க்குரத்தசூலை........ ... . *
பகருகிறேனடிவயிற்றைப்பற்றிநிற்கும்........ .... *
கோர்த்திடவேயுதிரமதுதிரண்டுமேதான்........ .... *
கொதிப்பெடுத்துமாதவிடாய்காலந்தன்னில்........ *
சேர்த்திடவேருக்கங்கள்மிகுத்துக்காணும்.. .... *
சிறுவலியாய்க்கருவழியும்புண்ணாக்கும் ... ... *
ஏத்திடவேதுடையிடுப்புவலிச்சலாகும்........... ... *
இரத்தசூலைக்குணமிதுதான்பாருபாரே........ ... *

அடிவயிற்றில் நாவாவட்டத்தில் உதிரந்திரண்டு மாதவிடாய் காலத்திற் புரண்டுவலிக்கும் ருதசு யிகுந்துகாணும் கருவழியும் இடுப்புந்துடை [illegible] உளையும்.

நிவர்த்தி.

வெள்ளை[illegible]ப்நீர்-நாணி-பேய்க்குமட்டிக்காய்ச்சாறு படி(௧)கறியுப்பு சவர்க்காரம் இந்துப்பு வளையலுப்பு பாறையுப்பு வெடியுப்பு சீனிக்காரம் நாவுருவியுப்பு அ[illegible] நவச்சாரம் சவச்சாரம் வெண்காரம் அன்னபேதி வகைக்கு பலம்(௧)கடுக்காய்ப்பொடி மிளகுப்பொடிவகைக்குப்படி (௧) இவையெல்லாமொருபாண்டத்திலிட்டுக்கிண்டி மூடி எழு சீலமண்செய்து நாலுசாமஞ் சிறுதீயாயெரித்துக்கருகிலவாசங்கண்டவுடன் பாண்டத்தையிறக்கி கல்வத்திலமெழுகுபோலரைத்து சுண்டைக்காய்ப்பிரமாணங் கொள்ள இரத்தகுன்மம் கற்குன்மம் கெர்ப்பகுன்மம் சென்னடை வாயுத்திரட்சி பெருவயிறு விஷநீர் வீக்கம் மகோதரம் குன்மந்தீரும்—முருங்கைவேர்ச்சாறு விளக்கெண்ணெ வகைக்குபடி (௧) ஆவின்பால்படி (௨) அதிமதுரம் கொல்லங்கோவைக்கிழங்கு வகைக்குபலம் (௧) கடுக்காய்பலம் (௧) பால்விட்டரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்துக்காசெடை சாப்பிட்டுவர ஆறுவகைகெர்ப்பகுன்மங்களுந் தீரும். பத்தியமில்லை.

கெர்ப்பவிற்புருதிக்குணம்-விருத்தம்.

கூடிடவேகெர்ப்பவிற்புருதிதானும்................*
குருதிபோல்வயிற்றினிலேருதகங்கட்டும்..........*
மாறவேதலைவலிக்கும்விட்டுப்பக்கம்..............*
வயிற்றுவலியிருதுடை புழுவளைக்குமேதான்.......*
சிறவேபுழுத்திரண்டுமேலயிறக்கும்................*
திசகெர்ப்பந்தரியாதுவுடலுளைக்கும்..............*
ஆறவேயிக்குணங்கள்தானறிந்து....................*
அப்பனேமருந்துசெய்யச்சித்தியாமே..............*

வயிற்றில் ருதகங்கட்டி வலியுண்டாகும் தலைவலிக்கும் விட்டுக்குலிலக்கமாறுக்வயிற்றுவலிதீங்கும், இருதுடை புழுவளையும் மலையிறுகித்திரண்டுபுழுக்கைபோலவிழும்கர்ப்பந்தரியாதுடலுமெலியும்

நிவர்த்தி.

சிற்றாமணக் கெண்ணெபடி - ௧ - கைவேளையிலை சிற்றாமணக்கிலை கீழ்நெல்லி நிலவாகையிலை பஞ்சன் கடுக்காய் இந்துப்பு வெ

ண்காரம் வெள்ளைப்பூண்டு கிரு வகைக்கு பலம்-௩- மைபோல் ஆட்டி எண்ணெயிற்கலக்கிப் பதமாய்க்காய்ச்சி யதிலொருகழஞ்சு கள்ளிப்பால்விட்டு வடித்துச் சூதகமான நாலாநாள்முதற்கொண்டு மூன்றுநாள்வரை யோர்கரண்டிவீதஞ் சாப்பிடவும், இப்படிமூன்றுமுறைகொள்ள கெர்ப்பவிற்புருதி வாயுதீரும், பத்தியம் நீர்க்கஞ்சிகொள்ளவும்.

நீர்வற்றின தேங்காயைக்கண்திறந்து அதற்குள் ஒருபிடி தூதுவளம்பழத்தைப்போட்டு எருக்கம்பாலுங் கள்ளிப்பாலும் சமங்கலந்து நிறையவிட்டுமூடிக் கருகாமற்சுட்டு ஓடுநீக்கி மைபோலரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் குளித்ததுமுதல்மூன்றுதினங்கொள்ள கெர்ப்பவிற்புருதி தீரும். பேதியதிகப்பட்டால் குளிர்ந்ததண்ணீர் குடிக்கவும் பத்தியம் மோர்சாதங்கொள்ளவும்.

சூதகவாயு(சூசிகாவாயு)குணம்-விருத்தம்.

கேளுமேசூதகத்திலக்கினிவாய்வு........................*
கெடுத்துவிடுமாதவிடாய்க்கட்டிப்போகும் ... ...*
ஆளுமேசருக்குழிதாத்துதேகம்........................*
அப்பனேயுதிரமது அடிமூலத்தில்...... ... .*
நீளுமேசூதகத்தில்வாய்வுதோன்றி...... ... .*
தோசான அடிவயிறுவலிப்புகாணும்... ... ...*
பாளுமேதலைவலிக்கும்வயிறுளைக்கும்...... ....*
பக்குவமாய்மருந்துண்ணத்தீருந்தானே... ..... *

சூதகத்தில் வாயுவும் அக்கினியுஞ்சேர்ந்து மாதவிடாய்க்கட்டிக் கருக்குழி தாத்து தேகத்தில் உதிரந்தீரும் அடிமூலத்தில் வாயுவுஞ் சேர்ந்து சூதகவாயுதோன்றிச் சூதகமாகும்போது அடிவயிறுவலிக்கும், சூதகந்தங்கிக்காணும் தலைவலிக்கும் வயிறும் உடலும் பெருத்திருக்கும்.

நிவர்த்தி.

க ரு தோல்நீக்கி பலம் (உல) வில்லைவில்லையாய்வெட்டி அதைக் கண்டங்கத்திரி துளசி ஆடுதொடை நுணா நொச்சி எருக்கு வையாந்தகரை மூக்கரைச்சாரணை நிலவாகை இவைகளின் இலைச்சாற்றிலும் முருங்கைப்பட்டைச் சாற்றிலும் புங்கின்வேர்ப்பாலிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் வகையொன்றுக் கொவ்வொருநாள்ஊறப்போட்டுக் காயவைத்திடித்துச் சூரணித்துக் கொண்டு

வாய்விளங்கம் திப்பிலி திப்பிலிமூலம் திரிகடுகு ஏலம் ஓமம் இலவங்கப்பத்திரி அதிவிடயம் தாளிசபத்திரி திரிபலை இருசீரகம் வகைக்குப்பலம் (க) வெதுப்பிச் சூரணித்துக்கொண்டு இருவகைச் சூரணத்தையு மொன்றாய்க்கலந்து அதனெடை யிடைக்குப்பாதிச் சீக்கரைகூட்டித் திரிகடிப்பிரமாணம் பத்தியமாய்ப் பத்துநாட்சாப்பிடச் சூதகவாயுதீரும்.

குப்பைமேனி எரிப்பான் சிறுசெருப்படி நீலாவகை சமூலமூந் தனித்தனியிடித்துச் சூரணஞ்செய்து ஓர்நிறையாய் ஒன்றாய்க்கலந்து திரிகடிப்பிரமாணந் தேனில்(உ௰)நாட்கொள்ளத்தீரும்

கடுக்காய்ப்பொடி யிளகு கடுகுரோகணி இந்துப்பு கரியுப்பு வெடியுப்பு கல்லுப்பு வளையலுப்பு வகைக்கு பலம்(உ) சீனிக்காரம் நவச்சாரம் சத்திசாரம் வகைக்குப்பலம்(க) பெருங்காயம் வால்மிளகு வாய்விளங்கம் கோஷ்டம் கருஞ்சீரகம் வகைக்குபலம்(க) இவைகளைப்பொடித்து நீர்வற்றின கொப்பரைத் தேங்காய்க்குள் அடைத்துப் பூமியிற் புதைத்து ஏழாநாளெடுத்து ஓடுநீக்கி மெழுகுபோலாட்டிச் சிமிழிலடைத்துக்கொண்டு இச்சாபத்தியமாய் கழற்காய்ப்பிரமாணம் இருபோது சாப்பிட்டுவந்தால் சூதகவாயு வாயுக்கட்டி குன்மந்தீரும்.

வெள்ளைப்பூண்டு தோல்நீக்கிப்பலம்(அ)செவியம் மல்லி வாய்விளங்கம் ஓமம் திப்பிலி திப்பிலிமூலம் வெட்பாலையரிசி வசம்பு நற்சீரகம் கருஞ்சீரகம் சித்திரமூலம் அதிமதுரம் திரிகடுகோஷ்டம் திரிபலை அட்டுப்பு இந்துப்பு சிறுதேக்கு செவ்வை பெருங்காயம் கடுகுரோகணி கழற்பருப்பு வகைக்குவிராகனெடை(க) ரவியுலர்த்திச் சூரணஞ்செய்து சிற்றாமணக்கெண்ணெ யுப்புக்கட்டி சேர்த்து லேகியஞ்செய்து அந்திசந்தி புன்னைக்காய்ப் பிரமாணம் இருபதுநாட் சப்பன் பதார்த்தந்தள்ளிச் சாப்பிட்டுவர சூதகவாயு சேர்ப்பவாயு சூலைதீரும்.

நிதம்பசூலைக்குணம்.

யோககாலத்தில் யோனிமலரும்போது அதில் வாயுவடங்கி அதனுடன் இரத்தமுஞ் சலமுந்தடைபட் டுடலில் அடைபட்டுமூடிச் சவ்வுமூத்தி முளைத்தேங்காய்போல் யோனியிற்சேரும் நீர்பொசிந்துகொண் டிருக்கும் இடுப்புந் தடையும் உளையும்.

தீவர்த்தி.

வெள்ளைப்பூண்டு பலம்(உ) பதக்குத்தண்ணீர்விட்டு இரண்டுபடியாய்க் கியாழஞ்செய்து வடித்து தேவதாரம் இந்துப்பு கடுகு தெல்லி தாளிசி கொடிவேலி பெருங்காயம் திப்பிலி சிவதைவேர் வகைக்கு ஒருகழஞ்சு மேற்படிகியாழம்விட்டரைத்து சிற்றாமணக்கெண்ணெய்படி(உ)வெள்ளாட்டுப்பால்படி(க)கள்ளிப்பால் படி(வ)ஒன்றாய்க்கலந்துகாய்ச்சித் தினமூன்றுகழஞ்சுகொண்டுவரத் தீரும் இச்சாபத்தியம்.

மூடக்கொத்தான்சாறு படி(உ)நல்லெண்ணெய்படி(உ)வசம்பு பூண்டு பெருங்காயம் திரிகடுகு இந்துப்பு சீரகம் சதகுப்பை பறங்கிப்பட்டை தேவதாரம் வகைக்கு கழஞ்சு(க)அரைத்து விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சி தினமொரு காசளவுகொள்ளத்தீரும். இச்சாபத்தியம்.

மூடக்கொத்தான் குருஞ்சா வகைக்குச்சாறு படி(க) சீரகம் கார்போகரிசி ஏலம் மஞ்சள் பறங்கிப்பட்டை இந்துப்பு பெருங்காயம் பூண்டு திரிகடுகு வசம்பு வகைக்குவிராகனெடை(ஙு)பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு ஐந்துநாள் கரண்டிதினங்கொள்ளத்தீரும் இச்சாபத்தியம்.

ஓமம் வெள்ளுள்ளி பாம்புக்கண்டம் சுக்கு மிளகு சோமனுப்பு வசம்பு குங்கிலியம் ஓர்நிறையாய்ப் பொடித்துத் துணியில் வைத்துருட்டியதை வேப்பெண்ணெயிற்றுவைத்துத் தீயிற்கொளுத்தி யோனியிற் புகையூட்டி புளியமடற்கிழங்கை கருங்குருவைமாவுடன்சேர்த்திடித்து யோனிவிட்டுக் கூழ்காய்ச்சி மூன்றுநாளுண்ணத்தீரும். கடும்பத்தியம்.

சூதகவலிக்கு.

அகஸ்தியர் குழம்பிற் பணவெடை எலுமிச்சம்பழச்சாற்றிற்கொடுக்க பேதிக்கும் அதிகப்பட்டால் வசம்பைக்கருக்கி அதிலொருபடிதண்ணீர்விட்டு எட்டொன்றாய் வற்றவைத்துக்கொடுக்க தீரும் உப்பு புளிதள்ளி பத்தியங்கொள்ளவும்,மற்றுநாள் கரியுப்பை கொட்டைக்கரந்தைச் சாற்றாலாட்டிக் காயவைத்துஐந்துபுடமும் இதுசெருப்படைச்சாற்றில் ஐந்துபுடமும்போட்டால் செந்தூரமாகும் அதில் நாளொன்றுக்கு ஒருவிராகனெடைவீதம் வெள்ளுள்ளித்தயிலத்தில் மூன்றுநாட்கொள்ளத்தீரும்.

கல்லுப்பு பலம்(௪)சூதம்பலம்(௪)வில்வ இலைச்சாற்றால் இரண்டுசாமமரைத்துக் குகையில்வைத்தூத உருகி மணிபோலாகும் அதை அந்தாத்தாமரைச்சாற்றில் நாலுசாமமரைத்து வில்லைதட்டிக் காயவைத்து முழப்புடம்போட்டு ஒருபணவெடைவிதம் மூன்றுதினம் தேனிற்கொள்ளச் சூதகவலி நெஞ்செரிவு சூலைரோகஞ்சூதகவாயுதீரும் இச்சாபத்தியம்.

அத்திப்பிலி மிளகு வெள்ளுள்ளி வகைக்குபலம்(௧)வசம்பு விராகனெடை(௧)அரைத்துச் சூதகமாயிருக்கிற மூன்றுநாளுங்கொள்ள சூதகவலிதீரும் இச்சாபத்தியம்.

இந்துப்பு திப்பிலி பெருங்காயம் இளவறுப்பாய்ச் சூரணித்து வெந்நீரில் மூன்றுநாள்கொள்ளத்தீரும்—திரிகடுகு கழற்பருப்பு ஓமம் இந்துப்பு ஓர் நிறையாய் வறுத்துப்பொடித்து நல்லெண்ணெயில் மத்தித்துக்கொள்ளத்தீரும்—நிலவாகை சமூலமுஞ் சுக்குந் தனித்தனியேயிடித்துச் சூரணித்துச் சமனாய்க்கலந்து திரிகடிவிதம்(௬)நாள்சாப்பிட்டு(௬)நாள் பத்தியமாயிருக்கநீங்கும்.

கெர்ப்பரோகங்களுக்குப் பொதுப்பிணையோகம்.

ஆடாதோடை பிரமி சிவனார்வேம்பு சித்தில் வகைக்குச்சாறு படி(௧)பசுவின்னெய் படி(௧)மாமஞ்சள்பொடி பலம்(௧)ஒன்றாய்க் கலக்கிக்காய்ச்சி வீட்டுக்குவிலக்காயிருக்கிற மூன்றுநாளும் ஒருகரண்டிவிதஞ்சாப்பிட்டுத் தலைமுழுகினதின்பேரில் இதனடியில்வருகிற லேகியஞ் சுண்டைக்காய்ப்பிரமாணங்கொள்ளகெர்ப்பரோகங்கள்நீங்கும் உப்புப்புளிதள்ளி பத்தியங்கொள்ளவும்.

நாயுருவிச் சாம்பலுப்பு எள்ளுச்செடிச்சாம்பலுப்பு வகைக்கு பலங்கால் திருகுகள்ளி இலைக்கள்ளி சித்திரமூலம் சாரணை வேளை நொச்சி குருஞ்சா குப்பைமேனி மூடக்கொத்தான் இஞ்சி விழி தேவதாரி வெள்ளறுகு தும்பை சங்கங்குப்பி வெண்ணொச்சி வகைக்குச்சாறு படி(௧)மஞ்சள் மரமஞ்சள் ஓமம் சாயம் இந்துப்பு விளையினுப்பு நவச்சாரம் சத்திசாரம் எவச்சாரம் சீனிச்சாரம் சவர்க்காரம்சருஞ்சீரகம் சுக்கு மிளகு வசம்பு வெந்தயம் ஏலம் வால்மிளகு கிரு கிராம்பு வகைக்குப்பலங்கால் இளவறுப்பாய் வறுத்து சூரணித்து மேற்படி சாறுகளிற்கரைத்து அதில் குமட்டிக்காய்ச்சாறு வெள்ளுள்ளித்தயிலம் வகைக்குப்படி(௧)கூடவிட்டு சி

வகை பலம்(௧)அரைத்துப்போட்டு லேகியஞ்செய்துகொள்ள அநுவகைக்கெர்ப்பசூலைகளும் மற்ற கெர்ப்பப்பிணிகளுந்தீரும்.

சிற்றாமணக்கெண்ணெ டெய்க்குமட்டி வேப்பம்பட்டை கழற்சி ஐவிரலி மூடக்கொத்தான் காட்டுள்ளி உழலாத்தி பிரமிவகைக்குச்சாறு படி(௨)கொடிவேலி பங்கம்பாளை கிலுவை நிலாவரை குருந்து சங்கு தலைச்சுருளி காக்கணத்தி குமரி வெள்ளைச்சாரணை இவைகளின்வேர் வகைக்குப்பலம்(௧)மூங்கிலிலை கஸ்தூரிப்பட்டை வெள்ளறுகு வகைக்குப்பலம்(௧)இவைகளை கொடிக்கள்ளியைவாட்டிப்பிழிந்தசாற்றாலும்,கடுகு திப்பிலி கடுக்காய் வால்மிளகுகோரோசாணி கடுகுரோகணி கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் அரத்தை சுக்கு சிறுநாகப்பூ இந்துப்பு ஆனைத்திப்பிலி பெருங்காயம் சாதிக்காய் தாளிசபத்திரி செங்கொட்டை ரசகர்ப்பூரம் இஞ்சி நவச்சாரம் வசுக்குக் கழஞ்சு(௪)இவைகளைக் காட்டாமணக்கின் சாற்றாலும் வெள்ளாட்டுநீராலும் மைரத்துக்கலக்கிப் பதமாய்க்காய்ச்சி புகையூறல் வெங்காரம் வகைக்குக்கழஞ்சு(௨)பொடித்துக்கலசத்திற்பெய்ட்டு அதில் வடித்துக்கொண்டு வீட்டுக்கு விலக்கமான நாள்முதல் மூன்றுநாளும் உதயத்தில் ஒருகாஸ்டிவிடையிற்கொடுக்க அநுவகை கெர்ப்பசூலையுங் கெர்ப்பரோகங்களும் வாயுதிரட்சியுங்குன்மமும் கெர்ப்பக்கிராணியுந்தீரும், பத்தியம் வெள்ளாட்டுப்பாலன்னமுங் கொடுக்கவும் நாலாநாள் தலைக்குவெந்நீர்விட்டு அதுமுதல் மூன்று நாள் ஆவாரையிலை கிலுவையிலை ஐவிரலியிலை சமனாய்ப் பகலின்பச சிலவாத்துக் கலக்கிக்கொள்ளவும், ஏழாநாள் எண்ணெய்முழுகவும்பின்னையுண்டாகும்.

சிவதை நிலவாகைவேர் தனித்தனி பாலிலவித்துலர்த்தி இடித்து வடிகொண்டபொடி வகைக்குவிராகனெடை(௩௰) கோவைக்கிழங்கு மேற்றோலிநீக்கி நிழலுலர்த்திப் பொடித்ததூள் விராகனெடை(௩௰)திரிகடுகு திரிபலை சண்டதிப்பிலி இந்துப்பு ஓமம் குரோசாணி வாய்விளங்கம் அதிவிடையம் மாசிக்காய் வகைக்குக்கழஞ்சு(௧)ஆணித்து ராயப்பூர்சர்க்கரை பலம்(௫)ஒருபடி தண்ணீரிற் கரைத்து வடிகட்டிப் பாகுசெய்து அதிற் சூரணங்களைப்போட்டு நன்றாய்க்கிண்டி சிற்றாமணக்கெண்ணெய் படி(௧)விட்டுக்கிளறி மெழுகுபதத்திலெடுத்துக் கொட்டைப்பாக்களவுகொள்ள சூதக

வாயுத்திரகஷி கெர்ப்பவாயு வயிற்றுவலி சூலைமுதலானவைகள் தீரும் கரப்பன்பதார்த்தந்தள்ளவும்.

இருபது பெய்க்குமட்டிக்காயை விதைநீக்கி யொவ்வொன்றிற்கும் ஒருபலஇந்துப்பைப்பொடித்துக்கொஞ்சங்கொஞ்சமாய்வைத்து ஒருபாண்டத்திலிட்டு மூடி எழுசீலைமண்செய்து பூமியிற்புதைத்து ஆறுதினஞ்சென் றெடுத்துப் பிழிந்தசாறுடன் சித்திரமூலம் மாவிலிங்கு உகாய் திருகுகள்ளி வதவேளை அழிஞ்சி இவைகளின்வேரும் காட்டுத்திப்பிலியும் வகைக்குப்பலம்(௩) இடித்து ௨ மரக்கால்தண்ணீரிற்போட்டு குறுணியாய்க்காய்ச்சிச் சேர்த்து அதில் அரைப்படி கள்ளிப்பால்விட்டு சுக்கு பலம்(௧) திப்பிலி வெள்ளுள்ளிஇந்துப்பைக்கட்டி சவர்க்காரம் கடுகு வறுத்த இந்துப்பு நவச்சாரம் வகைக்குப்பலம் (௨) மிளகாய் பலம் (௪) பெருங்காயம் பொரித்தவெங்காரம்வகைக்குப்பலம் (௫) சீரகம் வாலுளுவையரிசிவகைக்குப்படி(௰) ஓமம் கடுகுரோகணி வெண்மையாய்வறுத்த அருகவகைக்குப்பலம்(௧)அரைப்பொடிப்படி அலைக்காய் கருப்புக்கட்டிபலம்(௰௧) இவையெல்லாமிடித்து வடிகட்டிப்போட்டு லேகியஞ்செய்து கலசத்தில்வைத்து வேடுகட்டி நெல்லுக்குட்புதைத்துப் பத்துத்தினஞ்சென்றெடுத்துத் தேற்றாவிரைப் பிரமாணங் கொடுக்க வயிறுபேதிக்கும் அதிகரித்தால் மோரசனஞ்செய்து கோழிச்சாற்றில் மஞ்சள்பொடித்துப்போட்டுக்கொடுக்க நிற்கும் இம்மருந்தை தேகவலுவறிந்து ஒன்றைவிட்டொருநாளாக பதினைந்துதினம் புளி புகையிலை கரப்பன்பதார்த்தந்தள்ளிக் கொடுக்க குன்மமெட்டும் கெர்ப்பவிப்புருதி கெண்டை சொறி மலட்டுப்புழு உஷ்ணகாமாலை பித்தப்பாண்டு விஷபாண்டு கெர்ப்பசூலைகளுந்தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் கருநொச்சி வைகாந்தகரை வகைக்குச்சாறுபடி(௧) எலுமிச்சம்பழச்சாறு நல்லெண்ணெய் பசுவின்நெய் வகைக்குப்படி (௨) மிளகுபடி(௰)சாயம்குழியிட்டான் செப்புநெரிஞ்சில்வகைக்குப் பலம் (௧) அரைத்துக்கலக்கிக்காய்ச்சிவடித்துக்கொண்டு குளித்ததுமுதல் மூன்றுதினம் ஒருகரண்டிவீதம் நாலுதடவை கொள்ள கெர்ப்பவாயு புழு சாந்திதீரும். இச்சாபத்தியம்,

விளக்கெண்ணெ படி (அ) அம்மைப் பொடுதலை கற்றாழை வ
கைக்குப்பலம் (௧) திரிகடுகு திரிபலை கோஷ்டம் ஏலம் கிராம்பு
வகைக்குப்பலம் (௧) அரைத்துக்கலக்கிக் காய்ச்சிவடித்துக் காலை
யி ஒன்றைவிட்டொருநாள் ஒருகரண்டிவீதம் (௪௰) நாட்கொள்ள
கெர்ப்பவிப்புருதி வயிற்றுக்கட்டி சீரணமை கெர்ப்பகுலை ஆகக்
கட்டி கிருமிதீரும்.

பெய்க்குமட்டிவேர் நேர்வாளம் சயலீகூந்தல் குழித்தயில
மிறக்கி ஒருகாசெடைத்தயிலத்தில் ஒருகாசெடை மஞ்சட்பொடி
யை மத்தித்துக் குளித்துமுதல் மூன்றுநாட்கொள்ளப் பேதிக்
கும் பத்தியம் நீர்க்கஞ்சி கொள்ளசகலகெர்ப்பரோகங்கள்தீரும்.

பூண்டுபலம் (௧) கல்லுப்பு இந்துப்பு விளையலுப்பு வெடியுப்
பு நவச்சாரம் சவர்க்காரம் வெண்காரம் பெருங்காயம் வகைக்குவி
ராகனெடை (௨) சுத்திசெய்தவாளம் விராகனெடை (௰) இவைகளெ
ல்லாம்பொடித்து மூன்றுமுத்தின தேங்காய்ப்பூவின்மத்தியில்வை
த்துப் பிட்டவியலாயவித்துப் பால்பிழிந்து அதில்வெத்தமருந்து
களும் அரைத்துப்போட்டுக் காய்ச்சி ஒருகாசெடை நெய்கொள்
ளப் பேதிக்கும் பத்தியமோரசனம் சகல கெர்ப்பப்பிணிகளுந்
தீரும்.

பெய்க்குமட்டிப்பழம் முப்பதைத் தண்ணீர் விடாமலிடித்
துப்பிழிந்து வடிகொண்டு இந்துப்பு வெடியுப்பு விளையலுப்பு க
ல்லுப்பு நேர்வாளம் வகைக்குவிராகனெடை (௨) பெருங்காயம்ப
லம் (௰) ஆவின்வெண்ணெய் பழம்புளி வகைக்கு கச்சநாத்தங்கா
ய்ப்பிரமாணம் இவையெல்லாமரைத்துப்போட்டுமெழுகுபதமா
ய்க்காய்ச்சிச் சிமிழிலடைத்துக்கொண்டு ஒருபாக்களவு மூன்றுநா
ட்வைகொடுக்க வயிறுபோகும் அதிகப்பட்டால் குளிர்ந்ததண்ணீ
ர்க்குளித்துப் பாலுமன்னமுமுண்ண கெர்ப்பவிப்புருதி கிருமி
ஆகக்கட்டியும் மேற்சொல்லிய கெர்ப்பரோகங்களுந் தீரும்.

தேங்காய்ப்பால் மஞ்சட்பால் சிற்றாமணக்கெண்ணெ தை
வேளைச்சாறு விழிச்சாறு நிலவாகைச்சாறு வகைக்குப்படி (௧) திரி
கடுகு திரிபலை காயம் வகைக்குப்பலம் (௧) இந்துப்புபலம் (௰) இவை
யெல்லாமரைத்துக் கலக்கிப் பதமாய்க்காய்ச்சி அதிற் பூநீர்ச்சுண்
ணங்கரைந்து சேர்த்து வடித்து அரைக்கரண்டிபடிவீதம் விலக்கமாயி

குக்கிறமுன் முதாருக்கொள்ள சேய் மலக்கட்டு சூதகவலி வாயு மு
தலான கெர்ப்பக்கோள்நீக்கிக் கெர்ப்பமுண்டாகும்.

அவுரியிலைச்சாறு படி(க)வெள்ளைக்கடுகுரோகணி வசம்பு உள்ளி அக்
கிரகாரம் இந்துப்பு காயம் வகைக்குப்பலம்(வ) எரண்டத்தெண்
ணெ படி(உ) பதமாய்க்காய்ச்சிவடித்துக் குளித்ததுமுதல் ஒருகட்
டிடை(௰)தான் சாப்பிடக் கெர்ப்பரோகங்கள்தீரும்.கர்ப்பபத்தியம்

கெர்ப்பஸ்திரீகட்கு (௰) மாதத்திற்கும்வரு நோயும்

அதற்கு ஔஷதமுங்கூறுகின்றார்.

கலிவெண்பா.

அத்தியுரித்தோனிடத்தில் அமர்ந்தவுமையாளீன்ற... ... ...*
சத்திக்கணபதியின் தாள்போற்றி-எத்திசையும்... ... ...(௧)
கெர்ப்பமின்னாருக்குக் கிளைத்தபிணிதான்தீர... ... ...*
கற்பமதாங்கிரியை பண்ணேப்பேன்-உற்பத்தி... ... ...(௨)
திங்கள்முதல்கர்ப்பஞ் சிறுவலியாய் தான்வலிக்கில்... ... ...*
தெங்கின்மனைப்பூசந் தினாபிச்ச-மங்கைநல்லீர்... ... ...(௩)
வார்த்தரைத்து ஆப்பாலில் வாகாகவேகொடுக்க... ... ...*
சேர்த்திரண்டாமாதஞ் சிறுகினால்-மாற்றிக்கொள்... ... ...(௪)
தக்கோலந்தாமரையின்தன்பூவும்நீரரைத்து... ... ...*
அக்காலமேகொடுநீ ஆன்பாலில்-எக்காலம்... ... ...(௫)
மூன்றாந்திங்கள்தன்னில் முறுக்கிவயிறுளைக்கில்... ... ...*
வாணிமலர்செங்கழுநீர்வள்ளிழங்கு-பேணி... ... ...(௬)
பாலிலரைத்தேகொடுக்கப்பாவையர்க்குக்கெர்ப்பம்... ... ...*
நாலில்வலித்தாதந்நாடினால்-சூலியர்க்கு... ... ...(௭)
நெய்தல்கிழங்குநொச்சில் நீர்வார்த்தரைத்ததனை... ... ...*
உய்தபசும்பாலில் உண்ணவே-ஐந்தாம்... ... ...(௮)
மாதம்வலிக்கில்வரும்ஆம்பலின்பூவும்... ... ...*
வேதமணாவிலாமிச்சம்வேரும்-போத... ... ...(௯)
நீர்வார்த்தரைத்து நிச்சயம்பாலிற்கொடுக்க... ... ...*
கூர் ஆறில்கெர்ப்பக்குடலுழன்று-நேரே... ... ...(௰)
சுற்றிக்குடல்வலித்துக்கழன்றுமேதீர்க்கருக்கில்... ... ...*
பற்றியிதற்குமருந்தியகாக்கேள்-உற்ற... ... ...(௧௧)
திப்பிலியுமுந்திரிகைசேர்ந்தநெய்தற்கிழங்கு... ... ...*
அப்பிலரைத்துப்பாலிலேயருந்த-ஒப்பில்லா... ... ...(௧௨)

எழில்வலிக்கில் இலாமிச்சும்சந்தமும் .... *
வாழுந்தக்கோலம் வகைமூன்றும்-சூழும்...................(௬௬)
கோவின துபாலிற்கொடுக்கஎட்டாமாதம்........................*
பாவையைகொல்அபரும்பசிக்கன்னந்-தேவை...............(௬௪)
இல்லைதான்இன்னம் இதற்குமரைப்பூவும்.............................*
தொல்லைநெய்தற்கிழங்குந்தொந்தித்து-நல்லாவின்... ... ...(௬௫)
பாலிலரைத்தொடுக்கப்பாவைநவமாதம்........... ....*
சூலில்வலிகாணில்அரசந்தோலும்-கோலி... ....(௬௬)
மருதந்தோல்நீரில்வாசகவேபமாத்து..................................*
கருத்தாய் ஆவின்பாலிற் கன்னடுகொடு-பருகப்...... ... .(௬௭)
பத்தாகுமாதமதில் பாவைவயிறுளைக்கில்.......... .... *
எத்தாகும்சர்க்கரையிலுப்பைப்பூ-சித்தாக......... ... .(௬௮)
நீரில்அரைத்துப்பாலில் நீவைவாகத்தாலகுந்த... ....*
மேருமதிநித்தோர்க்குப்பேசுவேன்-கூறும்.....................(௬௯)

வயிற்றில் பிள்ளைமத்தித்துப்போனால் விழுமருந்து.

அறித்து திலக்குமிழ்வேர் அரைத்துக்கரைத்து... ....*
விரைந்துகுடிக்கப்பிள்ளைவீழுமே-வரையில்.. ... .(௨௦)
அரணுர்உரைத்ததறிந்துமுனிதானுரைத்த........................*
திறமாகும்என்றிதனைச்செப்பு... .... ,. ... .(௨௧)

கெர்ப்பஸ்திரிகட்கு முதற்றிங்களில் கெர்ப்பஞ்சிறுவலியாய் வலிக்கில் தாமரைப்பூ சந்தனம் விலாமிச்சவேர் நீர்வார்த்தரைத்துப் பாலிற்கொடுக்கத்திரும்.

இரண்டாமாதம் வலித்தால் தக்கோலமும்தாமரைப்பூவுமரைத்து ஆவின்பாலிற்கொடுக்கத்திரும்.

மூன்றாந்திங்களில்வயிறுளைத்தால் வெண்டாமரைமலரும்செங்கழுநீர்க்கிழங்குமரைத்துப் பாலிற்கொடுக்கத்திரும்.

நாலிற் கெர்ப்பம்வலித்து இரத்தங்கண்டால் நெய்தற்கிழங்கு நொச்சிவேர் அரைத்துப் பாலிற்கொடுக்கத்திரும்.

ஐந்தில் வயிறுவலித்தால் ஆம்பற்பூவும் விலாமிச்சம்வேரு மரைத்துப் பாலிற்கொடுக்கத்திரும்.

ஆறுமாதத்திற் கெர்ப்பக்குடல் அழன்றுசுற்றி வலித்துச்சுழன்று நீர்சுருக்கில் திப்பிலி முந்திரிப்பழம் நெய்தற்கிழங்குமரைத்துப் பாலிற்கொடுக்கத்திரும்.

ஏழில் வயிறுவலிக்கில் விலாமிச்சம்வேர் சந்தனம் தக்கோல முமரைத்துப் பாலிற்கொடுக்கத்தீரும்.

எட்டில் கைகால்வயர்ந்து பசியில்லாதிருந்தால் தாமரைப்பூவும் நெய்தற்கிழங்குமரைத்துப் பாலிற்கொடுக்கத்தீரும்.

ஒன்பதில் சூல்வலிக்கில் அரசந்தோலும்மருதந்தோலுமரைத்துப் பாலிற்கொடுக்கத்தீரும்.

பத்தாமாதத்தில் வயிறுவலிக்கில் சர்க்கரையும் இலுப்பைப்பூவுமரைத்துப் பாலிற்கொடுக்கத்தீரும்-பத்தியமில்லை.

கருவளர்க்குமெண்ணெய்.

சிற்றாமணக்கெண்ணெய்படி (௧) ஆவின்பால்படி(௨)தோல்நீக்கி அரிந்த சருவள்ளி படி(௧௨) கருஞ்சீரகம் விராகனெடை(௨) கழுதைப்பால் படி(௨)ஒன்றாய்க்கலந்து சிறுதீயாயெரித்து மெழுகு பதமாகும்போது அதிற்கையிட்டால் இளவெந்நீர்போலிருக்கும் அந்தப்பதத்தில் இறக்கிவடித்துக் கெர்ப்பவதிகள் ஐந்தாமாதத்தில் ஐந்துநாள் அந்திசந்தி இருகழஞ்சுவீதஞ்சாப்பிட்டு மறுபத்தியம் ஐந்துநாளிருக்கவும், இப்படியே எழாந்திங்களிலும் ஒன்பதாந்திங்களிலுஞ் சாப்பிட்டு உப்புபுளிதள்ளிப் பத்தியமாயிருந்தால் கருவையழிக்குங் கிரந்திசூலை முதலானபிணிகள்நீங்கி குழந்தை ஆயிசுடன்பிறக்கும் இச்சாபத்தியம்.

மணத்தக்காளி கர்ப்பூரவல்லி பொடுதலை கிரந்திநாயகம் கோழியவரை சிறுசெருப்படை துளசி சங்கு சங்கங்குப்பி வல்லாரை இலைகளினிலைச்சாறு வகைக்குப்படி(௩) ஆகாசகெருடன்கிழங்கு வெருகங்கிழங்கு வகைக்குப்பலம்(௫) பூசரைப்பட்டை செங்கத்தாரிப்பட்டை வகைக்குப்பலம்(௨)செம்புளியம்பிரண்டைவேர் பலம்(௪)பால்விட்டரைத்துக் கற்றாழஞ்சோறு பலம்(௮)கடுக்காய் (௪௰)சிற்றாமணக்கெண்ணெ படி(௫)வெங்காயச்சாறுபடி(௪) இவையெல்லா மொன்றாய்க்கலந்து பதமாய்க் காய்ச்சிவடித்து மேற்சொல்லியகிரமத்துடன் பத்தியமாய் கெர்ப்பவதிகள்சாப்பிட்டால்-௫-௭-மாதத்தில் கெர்ப்பத்தையழிக்குங் கிரந்திசூலையும் மேககாங்கையுந்நீங்கி குழந்தை ஆயிசுடன்பிறக்கும், சேகத்துளிரும் கெர்ப்பத்தைபொட்டிய மற்றைப்பிணிகளும் குழந்தைக்குநேரிடாது, பிள்ளைபிறந்தவுடனே நேரிடுஞ் செங்கரப்பான் கொள்ளிக்கரப்பனுந்தீரும் இச்சாபத்தியம்.

விஷ்ணுகிரந்தி செப்புநெரிஞ்சி குளிகிட்டான் முருக்கிலை சங்கிலை சிறுசெருப்படி வில்வப்பத்திரி கருநொச்சி இலைகளின் சாறு வகைக்குப்படி(வ) சுருள்ளிச்சாறு படி (உ) வாலடத்தெண்ணெய் படி(௧) கருஞ்சீரக பொருக்கிராங்கை அதிமதுரம் திப்பிலி வகைக்குப்பலம்(வ) செங்கத்தாரிப்பட்டை வசம்பு காயம் வெள்ளுள்ளி வகைக்குப்பலம்(வ) அரைத்துக் கலக்கிக் காய்ச்சிவடித்து ஐந்தாந் திங்கள் முதற்கொண்டு சாப்பன் யதார்த்தம் நீக்கிக் காண்டிவீதமுண்டுவர மேற்சொல்லியபிணிகள்நீங்கிக் குழந்தை ஆயிசுடன் பிறக்கும்குழந்தைகட்கு நேரிடும் செங்கரப்பன் கொள்ளிக்கரப்பன் முதலான கரப்பனுந்தீரும் இச்சாபத்தியம்.

பர்ப்படாகம் கரிப்பால் வகைக்கு ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம்வைத்து ஒருபடி பசுவின்னெய்யிற்கலக்கிச் சிவக்கவெந்த பதத்திலிறக்கி கெர்ப்பந்தங்கின ஐந்தாமாதமுதற்கொண்டு சிறுகரண்டியளவாய் நெய்முழுமையுஞ்சாப்பிட்டால் மேற்சொல்லிய பிணிகள்நீங்கிக் குழந்தைஆயிசுடன்பிறக்கும் பத்தியமில்லை.

ஆடுதீண்டாப்பாளை அவுரி தூதுளை கருஞ்சூரை சங்கு கண்டை இலைகளின்வேர் மூவிலை பின்னிபிலை அப்பைக்கிழங்கு கண்டியிலை வெளிச்சிப்பிசின் சென்னகரப்பழம் சாதிக்காய் செஞ்சந்தனம் திப்பிலி மோதிப்பட்டை கடுக்காய் வெள்ளுள்ளி தேற்றுவிரை கருஞ்சீரகம் களிப்பாக்கு வேம்பாடம்பட்டை அசமதாகம் இவையெல்லாமோர்நிறையாயரைத்து நல்லெண்ணெயிற் காய்ச்சிக் காண்டிவீதமுண்டுவர கெர்ப்பக்கிரந்திதீரும்பத்தியமில்லை.

கழற்கொடி பிரமி கரிசாலை கிரந்திநாயகம் தூதுவேளைகோழியவரை செம்முள்ளி வெள்ளெருக்கு கருநொச்சி வெதுப்படக்கி சிறுசெருப்படை சிறுபுள்ளடி செப்புநெருஞ்சில் சித்தில் வல்லை மிளகுதக்காளி குறிஞ்சா பேய்மிரட்டி சங்கு தழுதாழை முடக்கொத்தான் பொடுதலை பெரியசெருப்படை வகைக்குச்சாறுபடி(ஐ) பசுவின்பால் படி(உ) விளக்கெண்ணெய்படி(ச) ஒன்றுய்க்கலந்து கடுக்காய்பலம்(௩) கோரோசனை பலம்(உ) செங்கத்தாரிப்பட்டை நற்சீரகம் கருஞ்சீரகம் பூகரப்பன்பட்டை திரிகடுகு வெட்பாலையரிசி மாசிக்காய் தேற்றா ஆத்தை அமுக்கிறாக்கிழங்கு புவாசம்பட்டை தக்கோலீசர் கோஷ்டம் சிறுதேக்கு வகைக்குப்பலம்(வ) ஆவின்பாலிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்

கிழங்குசவீதம்(அ)தவிசாப்பிட்டுப் பத்தியம் உப்பு புளிநீக்கி நீ
க்கந்தீர்கொள்ளவும் கெர்ப்பவதிகளுக்குக்காணுங்கிரந்திபுண்தீரு
ம். மேற்படி ரோகத்தாற் பிள்ளை யிலையிலிறவாதாயுளுடன் பிற
க்கும் குழந்தைக்குக்காணுஞ் செவ்வாப்புமுதலான வியாதிகளு மி
வ்வெண்ணையாற்றீரும் பத்தியமில்லை.

சிற்றாமணக்கெண்ணை படி(க)சிறுசின்னி சங்கங்குப்பி சங்கு
பிராயி கருநொச்சி சிறுசெருப்படை ஆடாதோடை வெதுப்பட
க்கி கழற்கொடி நிலவாகை வெள்ளறுகு வகைக்குச்சாறு படி அ
ஸாக்கால் மிளகு திப்பிலி கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் ஓமம்
கோஷ்டம் அதிமதுரம் வால்மிளகு மல்லி ஏலம் லவங்கப்பட்டை
குராசாணி ஓமம் வகைக்கு விராகனெடை (௩) சாதிக்காய் விராக
னெடை(க)கிராம்பு விராகனெடை(உ) பூண்டு கடுக்காய் வகைக்கு
ப்பலம்(க)பறங்கிப்பட்டை பலம்(உ)இவையெல்லாம் இடித்துப்
போட்டு பதமாய் காய்ச்சிவடித்து சிறாகரண்டிவீதம்(எ)நாள்கா
ய்ச்ச ஒருபோதுகொள்ள முந்தின பிரயோகத்திற்சொல்லிய வி
யாதிகள்நீங்கிக் குழந்தை ஆயிசுடன்பிறக்கும் பத்தியமில்லை.

பாதாளமூலி நொச்சி சங்கங்குப்பி ஆடுதீண்டாப்பாளை தே
ம்பால் இலைவகைச்சாறு சிற்றாமணக்கெண்ணை வகைக்குப் படி
(௧) கருஞ்சீரகம் கிருமிநாசனி கடுக்காய் பறங்கிப்பட்டை கார்
போகரிசி செங்கத்தாரிப்பட்டைவகைக்குக்கழஞ்சு(உ) கெந்தகம்
லிங்கம் தாரம் வகைக்குக்கழஞ்சு(க) பொடித்துப்போட்டுக் காய்
ச்சி வடித்துக்கொள்ள கெர்ப்பக்கிரந்திதீரும் இச்சாபத்தியம்.

கெர்ப்பகாலத்தில் துவாலைகண்டால்.

அதிமதுரம் மந்திஷ்டிக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு கா
டாத்திப்பூ வகைக்கொருகாசெடை யரைத்துப் பாலிற்கலக்கி ச
ருக்கரைகலந்துமூன்றுநாட்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

நெய்தற்கிழங்கு அதிமதுரம் வெள்ளிலோத்திரம் சந்தனம்
நன்னாரிவேர் சமவெடுத்தரைத்து பச்சரிசிக் கழுநீரிற்கொடுக்கத்தீ
ரும்இச்சாபத்தியம்.

பர்ப்பாடகமும் நெல்லிச்சாம்பலும் அரைத்துப் பாலிற்கு
டிக்கத்தீரும் புளிதள்ளவும்.

மேற்படிநோயால் தாகமூர்ச்சையுண்டாகில்.

அத்தி ஆல் மா அரசு இவைகளின்கொழுந்து சமனெடுத்து க் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும் பத்தியமில்லை.

குதிரையெலும்பை குளிர்பாலிலிட்டரைத்துக் கொட்டைப் பாக்களவெடுத்துக் காற்படிபாலிற் கரைத்து (௩) நாள்கொடுத்து (௩)நாள்வரை உப்பு புளிதள்ளிப் பத்தியமாயிருக்கத்தீரும்.

நாரத்தையிலை ஓர்தேங்காய்ப்பிரமாணம் தோல்நீக்கியரிந்த சருள்ளிபடி(௨)ஒன்றாய்ச்சேர்த்திடித்துப் பிழிந்தசாற்றிலொருகுப்பிடை நல்லெண்ணெய்விட்டு மூன்றுநாள்கொள்ளத்தீரும்.

கெர்ப்பகாலத்திற்காணுங்காசத்திற்கு.

பாருங்கிற்குமுட்டுவிலொரிபகருஞ்சீரகத்தொடுபடனே.........*
செருஞ்சுக்குதிப்பிலியுஞ்சிறந்தபேராமுட்டுடன்... ....*
நீருப்வெப்புதிலவேம்பு நேர்ப்பாய்க்கியாழந்தானருந்த ... ...*
திருக்கெர்ப்பகாற்காசந்தொடர்ந்தேபோய்விடுமே... ... ...*

சிற்றாமுட்டிவேர் பேராமுட்டிவேர் சித்திரக்கொடி திலவேம்பு சுக்கு திப்பிலி இவைகளையிடித்துக் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்பத்தியமில்லை.

கெர்ப்பவதிகளுக்குக்காணும் நீர்ச்சுருக்கு நீர்க்கடுப்பிற்கு.

நீர்முள்ளியிலை பசலியிலை குப்பைமுள்ளியிலை இவைகளிலொன்றையவித்துத்தின்றாலும், நன்னாரிவேரையாவது உலர்ந்த ரோசாப்பூவையாவது கியாழஞ்செய்து சாப்பிட்டாலும் நீர்க்கடுப்புநீர்ச்சுருக்குந்தீரும் பத்தியமில்லை.

கெர்ப்பவதிக்கு நீரடைத்தால்.

மயிலாதமுரைத்தடவிர்சொல்லக்கேளீர்.........*
மாகெர்ப்பவதியாட்குநீரடைத்தால்...... ... ...*
தங்கிநின்றஇருவாயுங்கட்டிக்கொள்ளும் .. ..*
தாரணியில்மங்கையர்கள்சகிக்கமாட்டார்.........*
வெங்காரஞ்சவர்க்காரஞ்சிலைக்காரம்......... ....*
வெண்மதியாம்இந்துப்புவெதுப்பிக்கொண்டு ...*
செக்காரயில்நீரிற்கொள்ளும்போது...... ... .*
சிக்காதுமலசலங்கள்நீர்வந்தானே...... ... ..*

(இ-ள்) பூரணச்சந்திரனைப்போன்ற முகத்தையுடையவளே கெர்ப்பவதிக்கு நீரடைத்தால் வெங்காரம் சவர்க்காரம் படிகாரம் இந்

ளப்பு வெடியுப்பு இவைகளைப்பொரித்து இளநீரிலருந்த மலசல ப்பிரியுமென்பதாம் பத்தியமில்லை.

பொரித்தவெங்காரம் விராகனெடை(௨) சங்கவேர்ப்பட்டை வெங்கைப்பத்திரி யினரு முள்ளிக்கிழங்குவேர் பொன்னாங்காணி சந்த னம் இவைகளுக்குவிராகனெடை(௧)காடியிலரைத்துக் கலக்கிக்கொடுக் கத்தீரும்

செர்ப்புவதிக்குக்கல்லடைத்தால்.

அன்னேமாதளம்பழத்தரிசியாவின்பாலிற்றனரைத்து... ......*
பின்னேயருந்தத்தான்றீரும்மேலேதடவச்செந்தொட்டி... ...*
பன்னேவேரைத்தொப்புளின்மேல்பாங்காய்த்தடவத்தான்றீரும்*
சொன்னேனும்செப்புநெருஞ்சில்மூலப்பாலிலரைத்துக்கொடுப்பீ
[மீர

மாதுளம்பழத்தரிசியை ஆவின்பாலிலரைத்துக் கொள்ளத்தீரும் செந்தொட்டிவே ரைரைத்துத் தொப்புளைச்சுற்றித்தடவத்தீரும். செ ப்புநெருஞ்சியை மூலப்பாலிலரைத்துக் கொடுக்கத்தீரும்.

வயிற்றில்ரத்தபிள்ளைவிழ.

உகாயிலையைக்கருகவறுத்து அதில்நாழிதண்ணீர்விட்டு (வ)படி யாய்வற்றினபிற்பேரில் யினரு பூண்டு பெருங்காயம் ஓமம் பொ ரித்துப்போட்டுக்காய்ச்சி-ஹ- படிதண்ணீர்கொடுக்கவிழும். சண ம்புவிரையையரைத்துஉள்ளுக்குக்கொடுக்கவிழும். அதைக்கெடுவயி ற்றிற்பூசப்பிள்ளைபிறவிநேரக்கும்-நிலக்கும்பிழம்வேரைத்துக்கொ டுக்கவிழும். இந்துப்பும் சங்கம்வேரு மரைத்துக் காடிந்தெளி வில்கொடுக்கவிழும். உத்தமதாளிவேரைத்துப் பசுவின்பாலிற் கொடுக்கவிழும். கள்ளி வேலா மதுக்காரை இவைகளின் வேரைக் காடித் தண்ணீரிலரைத்துக் கொடுக்கவிழும். பிரண்டைவேருங் குருஞ்சாவேருமரைத்துவயிற்றிற்பூசவிழும். பெருங்காயமும்உப் பும்பழங்காடியிலரைத்துக்கொடுக்கவிழும். வெந்தோன்றிக்கிழங்கு ம் காட்டுமுல்லைவேரும் காடியிலரைத்து அடிவயிற்றிற்றடவவிழும் தானிச்சாறுபடி-அரைக்கால் - நல்லெண்ணெய்படி-மாகாணி-ஒன்று ய்க்கலந்து கொடுத்தாலும் நல்லெண்ணெய் படி அரைக்காலில்புனை பூரல் பலம்-அரை கூட்டிப்போட்டுக்கொடுத்தாலும் வயிற்றில்மரித் தபிள்ளைவிழும் பத்தியமில்லை.

பிள்ளைபெற வருத்தப்பட்டால்.

நாய்மலன்னடையோடுகொஞ்சமெடுத்துப் பொடிசெய்து விளக்கெண்ணெயிற்குழப்பி உள்ளுக்குக்கொடுத்துவயிற்றிலுப்பூச பிள்ளைபிறக்கும். பசலையிலைச்சாறுபடிஅரைக்கால் நல்லெண்ணெய்படிஅரைக்கால்ஒன்றாய்க்கலந்து கொடுக்க பிள்ளைபிறக்கும் நஞ்சுக்கொடிவிழும். வெள்ளைவேம்பை முலைப்பாலிலரைத்துத் தொப்புளில்கீழ்த்தடவப் பிறக்கும், கௌதும்பை வடவேரைப்பிடுங்கிக் குளிசமாடி நெற்றிக்குநேரேமயிரிற்கட்டியதைப்பார்க்கப்பிறக்கும்

பிள்ளைபெற வருத்தப்பட்டு தாகமெடுத்தால் வயிற்றில் ஆமணக்கெண்ணெயைப்பூசி அது உருகினால் பிள்ளைபிறக்குமென்றும் உருகாவிட்டால் வயிற்றிற்பிள்ளை செத்ததென்றும் அறியலாம் பச்சைப்புனுகுங் கோரோசனையுமத்தித்து வருத்தப்பட்டுப்பிறந்த குழந்தைநாக்கிற்றடவமயக்கம்நீக்கும்.

நஞ்சுக்கொடிவிழ.

சுடசப்பாலைவேர் எலுமிச்சங்காய்ப்பிரமாணம்வெந்நீர்விட்டரைத்து எருமைவெண்ணெயிற்குழப்பிக்கொடுக்கவிழும். வட்டத்துத்திவேர் சீரகம் பழம்புளி சமமாய்க் கியாழஞ்செய்துக்கொடுக்கவிழும். கருவேப்பிலைக்கொழுந்து வேப்பங்கொழுந்துமுருங்கைக்கொழுந்துவகைக்கு ஒருபிடி கடுக்காயொன்று இவையெல்லாநொறுக்கி யொருபடிதண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக்கொடுக்கவிழும் பத்தியமில்லை.

பிள்ளைபெற்றதில்வயிறுபழுத்தால்.

வேலிப்பருத்தியிலை சுக்கு மிளகு வெள்ளைப்பூண்டு வகைக்குவிராகனெடை (உய) கட்டிப்போட்டுக்கியாழஞ்செய்து மூன்றுநாட்கொடுக்கத்தீரும். மாவிலிங்கம்பட்டை சிற்றரத்தை அரிசித்திப்பிலி மஞ்சள்வகைக்குப்பலம் (வ) கருப்புக்கட்டிபலம் (க) கியாழஞ்செய்து மூன்றுநாட்கொடுக்கத் தீரும். கோவைத்தண்டிடித்துக்காடியி லூறப்போட்டிறுத்து அதில் சுக்கு மிளகு வெள்ளுள்ளி அடேப்புக்கரி வகைக்குப் பலம்-க-அரைத்துக் கலக்கிக்காய்ச்சி அதில் நல்லெண்ணெய்படி -ஙு- கூடவிட்டு வெள்ளுள்ளி தட்டிப்போட்டுவெதுப்பித்தாளித்துக்கொடுக்கவும். எள்ளுப்பொரியும் கருப்புக்கட்டியும் சமன் இடித்துக்கொடுக்கத்தீரும்பத்தியமில்லை.

பச்சைபுடம்பில்வயிறுபொருமிவலித்தால்.

பெருங்காயம்விராகனிடை (௧) வசம்புவிராகனிடை -௨- கொடிவேலிவேர்ப்பட்டை விராகனிடை - ௩ - சுக்குவிராகனிடை -௪- ஓமம் விராகனிடை ௫-கடுக்காய்ப்பொடி விராகனிடை-௬-திப்பிலிவிராகனிடை - ௭ - கோஷ்டம்விராகனிடை-௮- சிவதைவிராகனிடை -௯- இவைகளைவறுத்துச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் பசுவினெய்யிற்கொள்ளத்தீரும்இச்சாபத்தியம்.

பச்சைபுடம்பிலெடுத்த சுவாசகாசத்தின்குணம்.

விருத்தம்.

அறைந்திடவேசுவாசகாசத்தினேர்மை...............*
அப்பனேசுரங்காயும்தலைவலிக்கும்..............*
நிறைந்திடவேவயிறுதான்பொருமிக்காணும்.........*
நெடுமூச்சுஇளைப்புடனேமயக்கங்காணும்.......*
குறைந்திடவேதாகிக்கும்மேனிவேர்க்கும்.............*
குடலிளைந்துதான்கழியும்ஐந்துநாழில்..............*
மறைந்திடவேயொன்பதினில்தலநாள்ரண்டில்......*
மரணமாம்தப்பினால்வியாதிபோமே...............*

சுரங்காயும் தலைவலிக்கும் வியர்க்கும் தாகிக்கும் வயிறுபொருமி இளைந்துகழியும் இளைப்பு பெருமூச்சு மயக்கங்காணும் -௫- ௭ ௯-அல்லது-௰௮ நாளில்மரணம்,இந்தக்கெடு தப்பினால் வியாதி நீங்கும்.

நிவர்த்தி.

கழற்பருப்பும் பனைவெல்லமும் அரைத்துக்கொடுக்கவும். வேங்கை உப்புக்கண்டத்தையாவது அதன்வேரையாவது சாராயத்தில் அல்லது இளவெந்நீரிலரைத்துக்கொடுக்கவும். முருங்கைப்பட்டை கழற்பருப்பு பனைவெல்லம் வகைக்கொருகழஞ்சு அரைத்துக்கொடுக்கவும் பத்தியமில்லை.

சந்தனம் கோஷ்டம் அதிமதுரம் சாத்திரபேதி தக்கோலம் முல்லைவேர் கோரைக்கிழங்கு விலாமிச்சம்வேர் வெட்டிவேர் நெல்லிப்பருப்பு சமமாய் இளநீரிலரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் உண்டைசெய்து உலர்த்திக்கொண்டு-௩-நாள் இளவெந்நீரிற்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

முத்தக்காசு திப்பிலி மிளகு சுக்கு கடுகுரோகணி சீரகம் ஏலம் வெட்டிவேர் விலாமிச்சவேர் தக்கோலம் இலவங்கம் மல்லி ம

யிரோசனை கோஷ்டம் சமனாய் இளநீரிலரைத்து மிளகும்போலுரு
ட்டிக்கொண்டு இளவெந்நீரில்-ம்-நாட்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

மஞ்சி மறாம் ஏலம் இலவங்கம் கோஷ்டம் சண்பகப்பூ
கோரோசனை முத்தக்காசு மிளகு இருவேலி முந்திரிப்பழம் பே
ரிச்சம்பழம் சமனாய் இளநீரிலும் எலுமிச்சம்பழச்சாற்றிலுமரை
த்து இலந்தைக்கொட்டைப்பிரமாணம் உண்டைசெய்து உலர்த்
திக்கொண்டு இளவெந்நீரிற்கொடுக்கவும் இச்சாபத்தியம்.

பத்தியபத்திற்கானபதார்த்தங்கள்.

கட்டிளைஉப்பு புளியாரை சிறுகொழுந்து நெல்லிக்காய் அ
ரிநெல்லிக்காய் வெள்ளாடு முயல் ஆமை ஊர்க்குருவி காடை மா
ன் மரை எருமீன் மயமா குரவை வரால் தேளி கெளிறு மிளகு க
ருக்கலா தேன் சிறுகீரை ஆவின்பால் நெய் சிறுபயறு துவரை
பொன்னாங்காணி அவரைப்பிஞ்சு புடலம்பிஞ்சு கதலி வாழைப்ப
ழம் கொதித்தண்ணீர் அத்திப்பிஞ்சு முருங்கைப்பிஞ்சு பாட்டைக்
கீரை முள்ளிப்பிஞ்சு தூதுளை சுழலம் வழுதுணம்பிஞ்சு கண்டங்
கத்தரிப்பிஞ்சு முதலானவைகள் வியாதிகளைவிலக்கும்.

மருந்திற்குமுறிவானபதார்த்தங்கள்.

கொள்ளு காடி கொமட்டி கோழி பன்றி கொக்கு செவ்வா
டு செம்பு சினியவரை கலாக்காய் பாகற்காய் பயற்றங்காய் பூசனி
க்காய் கடலை அவரை பெரும்பயறு காட்டுப்பாகற்காய் பழுபாக
ற்காய் மாங்காய் புளி கடுகு தேங்காய் மேதிப்பால் நெய் சாராய
ம் தென்னங்கள்ளு பனங்கள்ளு உளுவை விலாங்கு கூனி கெண்
டைகள் கயல்மீன் முதலான கரப்பன்பதார்த்தங்களை என்னுப்பி
ரமாணத்தில்முறு மருந்துமுறித்து உடலிற்பிணி பெருக்கும்.

கெர்ப்பக்கோளிலக்கணம்-முற்றிற்று.

——o•o——

பாலவாகடம்.

குழந்தைகட்குவருநோயின் விபரம்-விருத்தம்.

பாரோகுழந்தைப்பிணிக்குறிப்பும் பகரும்பட்சிதோஷமுடன்... ❋
நேரோமாந்தம்பதினெட்டும் நெருங்கிசந்திதன்னுடனும் ... ... ❋
சீரேபுணர்ச்சிக்காந்தலதுஞ் சிறந்தகர்ப்பச்சூலிமுதல்... ... ... ❋
தேரோமாந்தாதியவெண்ணு நிகாயாபுளாத்தியவாமே... ... ... ❋

கிரந்தி செங்கிரந்தி கருங்கிரந்தி பசிகிரந்தி மாந்தம் கணைம் பிரளி கரப்பன் செவ்வாப்பு தொண்டைக்கட்டு அக்கரம் வருசி முதலான அனேகரோகங்கள் சம்பவிக்கிறது. மாந்தம் தாய்முலைப்பாலாலும் கணம் சீப்பசருப்பினாலும் மற்றைப்பிணிகள் தாய்தந்தையின் புணர்ச்சியிலுமெழுந்த குற்றத்தாலுமுண்டாகிறது.

செங்கிரந்திக்குணம்-விருத்தம்.

பிறந்தபிள்ளை பெருவயிறாகியும் ......*
சிறந்தமுனைக் குரல்போலழுதிடும்......*
நிறந்தநீரும் மலசலங்கட்டியும்......*
மறந்ததொண்டைகட்டிப்பால்கிலைப்பதே ......*

பிள்ளைபிறந்தவுடன் தொண்டைகட்டிப் பூனைக்குரற்போலழும் நீரும் மலமுங்கட்டி வயிறூதும் கால்கைசிவப்பேறும்.

நிவர்த்தி.

கோரோசனையை முலைப்பாலி லுரைத்துக்கொடுக்கத் தீரும் கர்ப்பூரவல்லியிலை குப்பைமேனியிலை கருவிளை ஓர்நிறையாய்த்தட்டிச் சாறுபிழிந்து முரித்துக்கொடுக்கத்தீரும்இச்சாபத்தியம்.

முருக்கையிலைச்சாற்றை முரித்துக்கொடுக்கத்தீரும், செம்முள்ளியிலையைத் தண்ணீர்விட்டுக் காய்ச்சிக் குளிப்பாட்டிவரத் தீரும்.

கருங்கிரந்திக்குணம்-வெண்பா.

பாலனலறியழும்பாலுண்ணுக்குரல்கம்மும் ......*
மேலுடல்வெதும்புந்திறமூர்ச்சை-ஞாலமதில் ......*
நாவரட்சிகாணும்நலிவும்வயிர்வலிகறுப்பாம் ...*
காலவிழிதிறவாதுகாண் ......*

குழந்தை அலறியழும் குரல்கம்மும் முலையுண்ணாது மூர்ச்சையாகும் உடல்வெதும்பும் கண்திறவாது நாவரட்சிகாணும் கீழுதடு கைகால்கறுப்பேறும் வயிறூதிவலிகாணும்.

நிவர்த்தி.

கழுதைப்பாலில் ஒருகாசெடை ஓணனிரத்தம்விட்டுக்கொடுக்கத்தீரும் கடும்பத்தியம்,

கருஞ்சூழை லத்திச்சாறு அவுரியிலைச்சாறு சிற்றாமணக்கெண்ணெ சமமாய்க்கலந்ததில் வசம்பு உள்ளி தட்டிப்போட்டுக் காய்ச்சி சங்களவுகொடுக்கத்தீரும் பத்தியமில்லை.

ஆவினெய் சிற்றாமணக்கெண்ணெய் நல்லெண்ணெய் சங்கிலிச்சா று சமனாய்க்கூட்டி சுக்கு மிளகு திப்பிலி அரைத்துப்போட்டு சூ ரியபுடம்வைத்து ஒருபணவெடை உள்ளுக்குக்கொடுத்து மேலெ ங்குந்தடவிவைத்து செம்முள்ளி கோத்திரபாகம் நீரிற்போட்டுக்கா ய்ச்சிக் குளிப்பாட்டிவரத் தீரும் பத்தியமில்லை,

சூர்க்கனாச்சக்கரனை மூடக்கொத்தான் செப்புநெருஞ்சி மூத் தெருக்கஞ்செவி ஓரிதழ்த்தாமரை கருள்ளி மயிலிறகு இவையெல் லாமோர்நிறையாயெடுத்துத் தட்டி சிற்றாமணக் கெண்ணெயிற் போட்டுக்காய்ச்சிக் குழந்தைக்கு உள்ளுக்குக்கொடுத்துத் தாய்க் குமேலே பூசி அவள் பத்தியமாயிருக்கத்தீரும்.

சொத்தி-௰௨-க்கும்-குலை-௰௮-க்கும்.

ஆமணக்கெண்ணெய் தேங்காய்ப்பால் செம்பருத்திச்சாறு வ கைக்குப்படி (௧) ஒன்றாய்விட்டுக் காய்ச்சிவடித்து அதில் சுக்கு கி ராம்பு ஏலம் திப்பிலி பூரம் மிளகுவகைக்குவிராகனெடை (௧) பொ டித்துப்போட்டு குழந்தைகட்குக் கொடுக்கத்தீரும் பத்தியமில்லை.

அரைவிட்டிற் குழந்தைக்கு கழுத்துவீங்கி முழங்கால்
முழங்கை குளிர்ந்து வயிற்றில் வலிகண்டால்.

மேற்படிபிணிகண்டவுடன் கஸ்தூரி திப்பிலி வகைக்குக்காற் பணவெடைபொடியை வெற்றிலைச்சாற்றிற் கலந்துகொடுக்கத்தீரு ம், காற்பணவெடை கஸ்தூரியை மேற்படிசாற்றிற் கொடுத்தாலு ந்தீரும்இச்சாபத்தியம்.

பிள்ளை வயிறுநொந்தழுதல் மலங்கட்டினால்.

புன்னை சிறுதேக்கு கோஷ்டம்சமனாயரைத்துக்குழம்புபோ ற்காய்ச்சி பிள்ளைவயிற்றிற்பூச வயிறுநொந்தழுதல்தீரும், அதிமது ரம் வேப்பங்கொழுந்து சர்க்கரை இம்மூன்றுமரைத்து நெய்யில் வேகவைத்துக்கொடுக்க வயிறுநொந்தழுதல் மலக்கட்டுநீங்கும்,

குழந்தைக்குச் சிறுநீர்கட்டினால்.

எலிப்புழுக்கையும் வெள்ளரிவிரையுஞ் சமனாயரைத்து அடி வயிற்றிற்பூசி வெங்காரத்தைப்பொரித்து முலைப்பாலிற்கரைத்துப் புகட்டநீரிறக்கும் பத்தியமில்லை,

பிள்ளைக்கு உரம்விழுந்தால்.

வெள்ளைப்பூண்டு பலம்-௰-கிருபலம்-௰ ஒன்றாய்க்கலந்து கு ழித்தயிலமிறக்கி உடம்பிற்பூசுருடல்வாதப்பூசத்தீரும்பத்தியமில்லை

பிள்ளை சிறிபழுதால் விக்கலெடுத்தால் வயிறுபொருமினால்.

இருதேக்கும் திப்பிலியும் பொடித்துக்கொண்டாவது அல்லது திப்பிலியும் கடுரோகணியும் பொடித்தாவது தேன் அல்லது ஆவின்னெய்யில் மத்தித்துக் கொங்கையிற்பூசிப் பிள்ளைக்குப் பால் கொடுக்க மேற்படி பிணிகள்நீங்கும் பத்தியமில்லை.

பிள்ளைவயிறுவீங்கினால் குடித்தபா லெதிரெடுத்தால்
அடிக்கடி கொட்டாவிவிட்டால்.

அதிமதுரத்தைக் காடியிலரைத்து வயிற்றிற்பூசவயிற்றுவீக்கந்தீரும்; வெள்ளுள்ளியும் ஓமமும் வெதுப்பிக் கியாழஞ்செய்து கொடுக்கப் பாலெதிரெடுப்பதும் கொட்டாவியுந்தீரும்; அதிமதுரத்தை முலைப்பாலிலரைத்து முலைக்காம்பிற்பூசிக் குழந்தைக்குப் பால்கொடுக்கப் பாலுண்ணும் பத்தியமில்லை.

பால்சுரக்க.

பூநாகத்தைப் பாலிற்போட்டு மல்களைந்து எலுமிச்சங்காய்ப்பிரமாணமரைத்துப் பசுவின்பாலில் மூன்றுநாள்கொடுக்கவும்; தத்துளியிலையை இளவெந்நீர்ற்போட்டுப் பிசைந்து மூன்றுநாட் கொடுக்கவும், பாதிரிவேராயாவது பீர்க்காய்வேரையாவது அரைத்துப் பாலிற்கொடுக்கவும் பால்சுரக்கும்.

தோஷவகுப்பு.

பணித்திட்டபிள்ளை பதுபாலுண்ணாது ……… *
பகர்சலமாய்வயிறுளைபும்வாந்திபண்ணும் … … *
வணித்திட்டகண்ணுமிழுந்தலையெடாது ……… *
வார்பீளைசாருமுடல்பெதுகாதும் ……… *
அணித்திட்டச்சிறியமுமுடல்வெதும்பும் ……… *
அலறிப்பசளுத்தமுகஞ்சிறுசிறுக்கும் ……… *
தணித்திட்டபட்சிதோஷகுணத்தினோர்மை ……… *
தூவிருக்கும்பமுனிகூறினாரே ……… *

பட்சிதோஷகுணம்.

குழந்தை முலைபுண்ணாது சலமாய்வயிறழியும் வாந்திபண்ணும் தலையெடாது கண்ணுமிழும் பீளைசாரும் உடல்பெதப்பிடும் வெதும்பும் அலறும் சிறியமும் கழுத்தும்முகமும் சிறுக்கும்.

நிவர்த்தி.

பசுவீத்துக்கைவிவேர் பிசினிவேர் கருவீளி இவைகளை நறுக்கி

திற்றுபாணக்கெண்ணெயிற்போட்டு ரவியில்வைத்து குழந்தைக்குக்கொடுத்து உச்சியிலுந்தேய்க்கத்தீரும்

பறவைதோஷிகுணம்.

சிரசிற்கனமேலிட்டு உடல்நொந்துவெதும்பும் நாவுலரும் சத்திக்கும் நெஞ்சுலைச்சுழியவாங்கும் வலிப்புக்காணும் இளைக்கும் உச்சியுங்கண்ணுங்குழியும் குழந்தைஅழிக்கடி திடுக்கிட்டெழுந்து சீறியழும் வயிறுபொருமும் விழிவெளுக்கும் முகம் மஞ்சட்பாயிருக்கும்.

நிவர்த்தி.

சீரகம் கருஞ்சீரகம் வசம்பூலாக்வேர் இவைகளைச்சமமாய்க் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

எட்சிதோஷிகுணம்.

உதிரத்திற்கனமேலிட்டு உடம்புதேயும் நாறும் கண்ணிற்பீளைக்கட்டும் சத்தேவயிறுசுழியும் குழந்தைதூங்கயுங்கொள்ளு பதறியழும் கண்ணைப்பிசையும் மயங்கிப்புரளும்,

வில்வயிலையுஞ் சீரகமுங் கியாழஞ்செய்துகொடுத்து வெந்நிலையபாலது நிலவினாவில்லயபாலத்தைத்தாக் குளுப்பாட்டத்தீரும்,

விங்குபுள்ளிதோஷிகுணம்,

குழந்தைவாந்திபண்ணும் பசுமையாயும்பசல்போலுங்கழியும் பிள்ளையால் முகத்தைத்துடைக்கும் உச்சிகுழியும் நாவுலரும்

நிவர்த்தி,

மதுரம் முத்தக்காசு அதிவிடையம் சுக்காய் வசம்பு தேவதாரம் மஞ்சள் வகைக்குஒர்நிறையாய் பொடிகேலர்சாற்றலரைத்து உண்டைசெய்துமுலைப்பாலில்டத்தீரும் இச்சாபத்தியம்,

அக்குடல்ளிதோஷிகுணம்

மங்கையேவயிற்சுழியும்வாந்திபண்ணும்... ... .*
மயக்கமாய்நித்திரையுமதிகமாகும்..... ....*
ஆசமாய்விரிட்டுமேமூக்கிருக்கும்..............*
அன்னையின்முகம்பார்த்துதண்ணீர்கேட்கும் ...*
அங்கமுட்வெறுப்ட்டுக்கண்கள்சோரும்... ... .*
அடிஅடித்துநெறுநெறெனப்பற்கடிக்கும்.... ...*
புங்கவாயுச்சிபள்ளப்விழுகும்பாரு...... ....*
புத்திரர்க்குத்அங்குபுள்ளின்தோஷிமாமே...... ..*

விழிகசியும் வாந்திபண்ணும் மயக்கமாய்த்தூங்கிக் குழந்
தைவிதிட்டலறியெழுந்திருக்கும் முகத்தைப்பார்க்கும் அடிக்க
டிதாகித்துத் தண்ணீர்விரும்பும் முகம் வேறுபடும் கண்கள்இரு
ண்டுசோரும் நெறுநெறெனப்பற்கடிக்கும் உச்சிபள்ளம்விழும்

நிவர்த்தி,

மஞ்சள் வசம்பு ஏலம் வேப்பீர்க்கு ஓமம் குட்டிவிளா இ
வையெல்லாம் நறுக்கிவெதுப்பிக்கியாழஞ்செய்து அதிற்கோரோ
சனையையுரைத்து உள்ளுக்குக்கொடுத்து மேற்படி மருந்துகளை
அரைத்து மேனிலும் பூசிக்குளிப்பாட்டத்தீரும் பத்தியமில்லை.

விளக்கொளிக்கண்புள்ளின்தோஷகுணம்.

பாலெதிரெடுக்கும் உடலடிக்கடி காயும் குழந்தை முலையுண்ண
ாது பெருவிடாய்கொண்டுசோரும்பத்தியமில்லை.

நிவர்த்தி.

சின்னி வசம்பு குட்டிவிளா இவையெல்லாமரைத்துக் குழந்
தைக்குமேனிற்றேய்த்து முழுக்காட்டி அதுகளைத் துணியில்முடி
ந்து கழுத்திலுங் கையிலுங்கட்டத்தீரும்.

வெருகண்புள்ளின்தோஷகுணம்.

பால்போற்கழியும் மேனிகாயும் வெளுக்கும் வயிற்றிலிரைச்ச
ல் வலிகாணும்.

நிவர்த்தி.

கற்றாழஞ்சோற்றில் கடுக்காய்ப்பொடிதூவி பிசைந்துவைக்
க நீருறும் அதில்திப்பிலியை வறுத்துப்பொடித்துத்தூவிக்கொடு
க்கத்தீரும் பத்தியமில்லை.

கருடக்கண்புள்ளின்தோஷகுணம்.

வாய்நீர்வடியும் வாந்திபண்ணும் இருவிழியுந்தாழும் பிளை
கட்டும்.

நிவர்த்தி.

கோரோசனை அதிமதுரம் திப்பிலி முலைப்பாலிலரைத்து
ஒருசங்குகொடுக்கத்தீரும்.

செங்கண்புள்ளின்தோஷகுணம்.

கண்சிவந்துநீர்வடியும்சிரங்களிரும் குழந்தைதவழ்ந்துபோ
ய் நிலத்தில்விழும் கையால்முகத்தைத்துடைக்கும் சிறியமுழவெ
ப்புநீராய்க்கழியும்.

நிவர்த்தி.

அதிமதுரம் சீரகம் முத்தக்காசு ஏலம் பத்திரி சாதிக்காய் இ ராம்பு செண்பகப்பூ லவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை-௧, மொசுமொசுக்கையிலை பொன்னாங்காணி சிறுபீளை சீந்தில்வேர் வகைக்குப்பலம்-௧-சுருள்ளிச்சாறு படி-௨-ஆவிரைவேர்பலம் - ௪-இவைகளையரைத்து இரண்டுபடி சிற்றாமணக்கெண்ணெய்யிற் பெய்து காய்ச்சிக்கொடுக்க சகலதோஷமுந்தீரும்பத்தியமில்லை.

அந்திப்புள்ளின்தோஷகுணம்.

மேனிவெளுக்கும் காயும் அதில் நரம்புதோன்றும் கால்கை குளிரும் பாலெதிரெடுக்கும்.

நிவர்த்தி.

சின்னி குட்டிவிரா நொச்சி சீந்தி வேப்பு வசம்பு உள்ளி இவைகளை அரைத்து மேலெங்கும்பூசி மேற்படிமருந்துகளைத் தட்டிச் சிறுபொட்டணமாய்க்கட்டிக் கண்டத்திலுங் காலிலுங்கட்டத் தீரும்.

நீர்ப்புள்ளின்தோஷகுணம்

நெஞ்சுவாளுங்கண்குளிர்ந்துநெடுமூச்செய்தும்பாலுண்ணா ...*
துஞ்சுமிரவும்பகலுமழுந்தய்யபாலன்முகம்வெளுக்கும்... ...*
மிஞ்சவுடலுந்தான்வெயர்க்கும் மீறியழுகும்தோஷமதால்......*
கஞ்சமலரான்குழலாளேகமழ்நீர்ப்புள்ளின்தோஷமிதே... ......*

நெஞ்சுவரண்டிடும் கண்குழிந்து வெளுக்கும் குழந்தை பெருமூச்சிடும் பாலுண்ணாது இரவும்பகலுமலறியழும் உடல்வியர்க்கும்.

நிவர்த்தி

விஷ்ணுகாந்தையும் சீரகமும் கூட்டிக்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும் பத்தியமில்லை.

புள்ளின்தோஷகுணம்.

உச்சியுங்கண்ணுங்குழியும் குடித்தபால் தங்காது பச்சையாய்வயிறுகழியும் பறவைக்குரல்போற் குழந்தைசீறியழும் இளைக்கும் தண்ணீரைவிரும்பும் மெய்மறக்கும்.

நிவர்த்தி

ஓரிதழ்த்தாமரை வெந்தையம் விடத்தலைவேர் வால்மிளகு ஏலவரிசி கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும் பத்தியமில்லை.

மூட்டுத்தோஷக்குணம்,

மாதவிடாயானவர்கள் குழந்தையையெடுத்தால் மேனிவா

டும் வேறுபடும் வாந்தியன்னும் உச்சியுங்கண்ணுங்குழியும் நா
க்கு வாய் சுருக்கும்.

திவர்த்தி.

மயிர்ராசனை திரிகடுகு சீரகம் இயாழஞ்செய்துகொடுக்கத் தீரும்.

குளித்தோஷிகுணம்.

உச்சியுங்கண்ணுங்குழியும்வாந்திவியர்வைபிரும்பலவல்லணமாய்
க்கழியும் தேகந் தணல்போற்காய்ந்துலற்றும் நெஞ்சலரும் நா
க்கும் கண்ணில்நீர்சொரியும் கால்வீக்கும் குய்யம்புண்ணாகும்.

திவர்த்தி

குட்டிவிளா வேம்பு சோம்பு மஞ்சள் வசம்பு சுக்கு அ
ரைத்து தாய்க்கும்பிள்ளைக்கும் உடம்பிற்றேய்த்துநீரில் வாலைபி
லையைப்போட்டுக் காய்ச்சி நீராட்டி அப்பால் ஆவின்னெய்படி (௧)
நல்லெண்ணெய் படி (௨) நன்னாரி தண்ணீர்விட்டான் கார்த்தை
பொன்னாங்கண்ணி வகைக்குப்பலம்(௪)ஏலரிசி சீரகம் வகைக்கிக்க
ழஞ்சு(௩)இவையெல்லாம் பால்விட்டரைத்துப்போட்டுப் பதமா
ய்க்காய்ச்சிச் சிறுகரண்டிவீதங்கொடுக்கச் சகலதோஷமுந் தீரும்
இச்சாபத்தியம்.

வேப்பங்கொழுந்து ஒருபிடி மிளகு வசம்பு சுக்கு மலைதாங்
கிவேர் வகைக்குவிராகனெடை(௧)விளக்கெண்ணெயிற்போட்டுக் கா
ய்ச்சிக்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

கெர்ப்பமழிந்ததோஷிக்குணம்.

உடம்புநொந்துதான்சிவக்கும்உலறையுமேனிதானுறும்...... ...*
திடமாமசதிநெஞ்சலருந்தேகமினைக்குங்கால்மின்னும் ... .*
படமாய்க்கழியும்விழிசொருகும்பாங்காய்க்கைகாலழுக்கேறும் *
சடமாய்புத்திதான்மயங்கும் சாற்றுங்கெர்ப்பரோகமித்த .....*

உடம்புநொந்து சிவக்கும் இளைக்கும் நாறும்சத்திக்கும்நெ
ஞ்சலரும் கைகாலிலழுக்கேறும் கால்மின்னும் கழியும் விழிசொ
ருகிமயங்கும்.

திவர்த்தி—கழுதைலத்திச்சாற்றில் பரித்திவேலையரைத்துக்க
லக்கிக்கொடுக்கத்தீரும், பலைவெல்லத்தை மேற்படிசாற்றிற் கலக்
கிக்கொடுக்கத்தீரும்.

தேரைதோஷிகுணம்.

பாரப்பாவுடம்புலர்ந்துதேகம்வற்றும......... .....*
பதிவாகநெஞ்சுலர்ந்துகண்ணிருக்கும்... ... .*
நேரப்பாரகைகால்கள்வற்றிப்போகும் ....*
நேர்மையாய்நரம்பொடுங்கியிர்பொருமும் ...*

நீரப்பாமலத்தியுந்நாவுலரும்………………*
நெடுந்தாகமுகம்வாடும்மேனிவெண்மை………*
ஆரப்பாசெவிதாழுமூர்ச்சைவாங்கும்……… ………*
அருங்குரற்படும்பிள்ளைத்தேருந்தல்னே… … …*

உடம்புவர்த்துவற்றும் வெளுக்கும் நெஞ்சுலர்ந்து கூடும் கண்பொடித்திருக்கும், கைகாலவற்றிச் சுருங்கிமுடங்கும் வயிறு பொருமும் மலத்தியும் நாவுலரும் தாகிக்கும் முகம்வாடும் செவி தாழும் மூச்சைவாங்கும் தெரிகுரற்படும் பிள்ளைசற்றுந்தேருது.

நிவர்த்தி.

சிறுபுள்ளடி சிறுகீரை நீராரை காணி நீர்முள்ளி இவைகளின் சமூலம், ளை காட்டுமல்லி அவுரி கரிசலாங்கண்ணி நிலக்குமிழ் முடக்கொத்தான் இவைகளின்வேர் ஓர்நிறையா யிடித்து மூன்றுபடி நீர்த்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்ததில் அதிமதுரம் திப்பிலி ஏலம் மிளகு வகைக்குப்பலம்(வ) பசுவின்பால்விட்டரைத்துப் போட்டு ஆவினெய் இருநாழிவிட்டுப்பதமாகக்காய்ச்சி சிறுகரண்டி யளவுக்கொடுக்கத் தலைதோஷக் குளிதோஷந்தீரும் இச்சாபத்தியம்.

சகலதோஷங்களுக்கும் பொதுப்பிரயோகம்,

அதிமதுரம் மஞ்சள் முத்தக்காசு அதிவிடையம் வசம்பு கடுக்காய் தேவதாரம் ஓர்நிறையாய்ச்சேர்த்துப் பொடிதலைச்சாற்றிவிட்டரைத்துக் குளிகைபோ லுண்டைசெய்து முலைப்பாலிலாவது தேனிலாவதுகொடுக்கச் சகலதோஷமுந்தீரும்,இச்சாபத்தியம்,

சின்னி விளா நொச்சி சீந்தில் வேப்பு வசம்பு உள்ளிஇலைகளைபனைத்து மெலிந்நெய்த்து அவைகளைத்தட்டித் துணியில் முடித்து கால்வையிற்கட்டிவைக்கச் சகலதோஷமுந்தீரும்,

கிழங்கர்ப்நெல்லி முடக்கொத்தான் நாயுருவி கஞ்சாங்கோரை விடத்தலை நிலக்கடம்பு சிறுபுள்ளடி பேய்ச்சுரை இவைகளின் வேர்களைக்குளிசமாடித் தாய்க்கும்பிள்ளைக்குங்கட்ட சகலதோஷமுந்தீரும்,

சகலதோஷநிவாரணமூலமந்திரம்,

வ-ந-சி-ம-ய-வங்-சிங்-சி-வ-ய-ந-ம-என்று இவ்வக்கரத்தைத் தியானித்து விபூதி தண்ணீர் ஔஷதம் குளிசமுதலான பிரயோகஞ்செய்யச் சகலதோஷமுந்தீரும்,

மாந்தவகுப்பு.

மேதிப்பால் நெய் வாழைப்பழம் தேங்காய் இளநீர் கடலை வெல்லம் புளித்ததமோர் மாங்கிஷம் கனிகள் மலைத்துவரை உளுந்

ளு மொச்சை புளியங்கொட்டை உளுவை வாளைமீன் கெண்டை பாகல் சுரைமுதலான வாயுப்பண்டங்களைக் குழந்தைகட்குப்பால் கொடுக்குமாதர்கள் மிகுதியாய் புசித்தாலும் அவைகளைக் குழந்தைகள்தின்றாலும் வாதமாந்தம் பித்தமாந்தம் சிலேஷ்மமாந்தம் விஷமாந்தம் போர்மாந்தம் வாலைமாந்தம் சுரமாந்தம் நீர்மாந்தம் செரியாமாந்தம் கட்டுமாந்தம் எரிமாந்தம் தலைமாந்தம் கணைமாந்தம் வலிப்புமாந்தம் சுழிமாந்தம் மூக்குமாந்தம் சன்னிமாந்தம் ஊதுமாந்தம் வீக்கமாந்தம் என்று-உ௰-வகை மாந்தரோகங்கள்குழந்தைகட்குநேரிடும்.

மாந்தகுணம்,

சார்ந்திடவேபாலனுடல்வெதும்பிவேர்க்கும்...... *
சத்ருமூலவுண்ணுதுவாந்திபண்ணும்...... *
கூர்ந்திடவேமதிமயங்குஞ்சேதம்விழும்...... *
குணங்கெட்டுமலமாயுங்கெட்டபால்போல்...... *
தேர்ந்திடவேதெளிந்ததண்ணீர்போல்கழியும்...... *
தேகம்வெப்புநாற்றமுங்கால்கைகுளிர்ப்பாம்...... *
ஆர்ந்திடவேநாவுலருங்குரலுங்கம்மும்...... *
அப்பனேகண்குழிந்துசுழலுமாமே...... *

வேறு - விருத்தம்.

ஆமேசுழன்றுகண்சிவக்கும் அடவாய்காலும்பின்னலுண்டாம் *
நாமேமுகமும்பளிங்காகும்தங்கம்போலமேனிமின்னும்... *
போமேமாந்ததோஷகுணம்பொருதம்பாலர்பிணிநீக்கி... *
நாமேசொன்னேமித்தமுறைநவின்றார்முனிவர்நவின்றோ... *

குழந்தையுடல்வெதும்பி வியர்க்கும்,மூலியுண்ணுது வாந்திபண்ணிமயங்கும், சேதமும்மலமுமாயுங் கெட்டபால்போலுந்தெளிந்ததண்ணீர்போலுங்கழியும் வெப்புநாறும் கைகால்குளிருநாவுலருங் குரல்கம்மும் கண்குழிந்து சுழன்று சிவக்கும் கால்பின்னும் முகம் பளிங்குபோல்மின்னும்,

வாதமாந்தகுணம்,

பால்வயிறுபொருமியழும்பாக்காமுடலந்தான்வியர்க்கும்... *
கோலமுடனேபலவிதமாய்க்குழியும்வலிக்குந்தான்றுடிக்குங் *
சீலமுடனேநாசிபுண்ணுஞ்சிறங்கொட்டாவிதானுறும்...... *
ஆலம்விஷமுண்டோன்றன்னுரையதைந்தோமாந்தமிதாஷியிதே *

குழந்தை வயிறுபொருமியழும் உடல்வியர்க்கும் பலவிதமாய்க்குழியவலிக்கும் துடிக்கும் கொட்டாவிவிடும் நாசி புண்ணாகும்,

பித்தமாந்தகுணம்,

துடியாய்வாந்திபேதிவலிதானமூர்ச்சைதான்காணும் … ……*
அடியல்குராலுங்கம்மிவிழும் அழகாய்மேனிமஞ்சணிக்கும் ……*
படியவியர்த்துத்தான்குளிரும் பகரும்பித்தமாந்தகுணம்… …*
நெடியமாத்தர்தானறியநேராயுரைத்தோம்செந்திருவே………*

வாந்தி பேதி வலிப்பு மூர்ச்சைகாணும் குரல்கம்மும் மேனி மஞ்சணித்து வியர்த்துக்குளிரும்,

சிலேட்டுமமாந்தகுணம்.

உடம்புசிலிர்த்துத்தான்குளிரும் உவந்தநாவுதான்வெளுக்கும்…*
அடர்ந்தநெஞ்சிற்கபங்கட்டும் அலகுவயிறுதான்பொங்கும் …*
சடமாங்குழந்தைதான்மயங்கும்சலமாய்க்கழியுமெத்நோம் (நோ
திடமாஞ்சிலேத்துமமாந்தகுணம் தெளிந்தார்முனிவர்தெளிந்தா

உடம்புசிலிர்த்து தளிரும் நாவெளுக்கும் நெஞ்சிற் கபக்க ட்டும் வயிறுபொருமிக்கழியும் குழந்தைமயங்கும்,

இவைகட்குநிவர்த்தி,

தொச்சி பொடுதலை நுணா வெலிப்பருத்தி இவைகளினிலை வகைக்கு ஒருபிடி நறுக்கி வெதுப்பிச்சாறுபிழிந்து கொடுக்கத்தீரும்

வெலிப்பருத்தி பெருந்தும்பை சாறணைக்கியிலை வெதுப்பட க்கி வேளை தொச்சி வகைக்கு ஒருபிடியிலையை வதக்கிச் சாறுபிழி ந்து அதிற் சுட்டவசம்பு சிறுதேக்கு ஆமையோடுசுட்டகரி ஓர்நி றையாயுரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்

பொடுதலை கரியுப்பு வகைக்குஒருபிடி ஒன்றாயிடித்துப் பிழி ந்துகொடுக்கத்தீரும்,—வெற்றிலைக்காம்பு வசம்பு உள்ளி திப்பிலி ஓர்நிறையாய்வெதுப்பி வெந்நீரிலரைத்துக்கொடுக்கத்தீரும், ஓம ம்-வெள்ளுள்ளி மிளகு திப்பிலி சுக்கு இவைகளைச் சீலையில்முடிந் து ஒருபடி தண்ணீரிற்போட் டெட்டொன்றாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும், விளாவிலையை வதக்கிச் சாறுபிழிந்ததில் ஆமை யோடு வசம்பு வட்டத்திருப்பி இவைகளைவெதுப்பி அரைத்துக்க லக்கிக்கொடுக்கத்தீரும்,

வெலிப்பருத்தி மேனி வேளை இண்டு பொடுதலை அகத்தி இ வைகளினிலையை வதக்கிச் சாறுபிழிந்து அதில் வசம்பு ஆமையோ டு ஓமம் வெதுப்பியரைத்துக்கலக்கி உள்ளுக்குக்கொடுத்து மேனி யிற் றவாலையிடத்தீரும், வேளைவேர் சுக்கு வெந்தையம் பூண்டு வசம்பு ஓமம் இவைகளை ஓர்நிறையாய் வறுத்துக்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும், நுணா தொச்சி கழற்கொடி இவைகளினிலை வகை க்கு ஒருபிடியைச் சட்டியிலிட்டுக்கருக்கி ஒருபடி தண்ணீர்விட்டு

அதில் ஓமம் வசம்பு சுக்கு மிளகு பொடுதலைக்காய் திப்பிலி இவைகளை நல்லெண்ணெய்விட்டுச் சிவக்கவறுத்து சீலையில்முடிந்துபோட்டு வற்றவைத்து ஒருசங்குகொடுக்கத்தீரும்,

வேலிப்பருத்தியிலை வேளைவேர் நொச்சி பொடுதலை நுணா முருங்கை இவைகளினீர்க்கு வகைக்கு ஒருபிடியைவறுத்துத்தண்ணீர்விட்டு ஓமம் திரிகடுகு வசம்பு வெதுப்பிச் சீலையில் முடிந்துபோட்டு வற்றக்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்,

மாசிப்பத்திரி பற்படாகம் நாயுருவி மூக்காவேளை கருஞ்சீரகம் கோழியெச்சம் இவையெல்லாமோர்நிறையாய்ச் சட்டியிற்போட்டு பஸ்பித்து வெட்டிவேர் சுக்கம்வேர் ஏலம் கடுகுரோகணி பறங்கிப்பட்டை கடுக்காய் மாசிக்காய் வசம்பு தான்றி முத்தக்காசு வகைக்கொருவிராகனெடை தட்டிப்போட்டு இரண்டுபடி தண்ணீர்விட்டு வற்றக்காய்ச்சிக்கொடுக்க மாந்தம் சுழிமாந்தம் கழிச்சல்மாந்தந்தீரும்,

ஓமம் திப்பிலி சுக்கு நற்சீரகம் கருஞ்சீரகம் கொத்தமல்லி ஆமையோடு குராசானியோமம் வகைக்கு விராகனெடை(௧) தண்ணீர்விட்டரைத்து அவரைப்பிரமாணமாத்திரைசெய்து வெந்நீரில் மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

வாய்விளங்கம் ஆமையோடு மிளகு பொடுதலைக்காய் வசம்பு திப்பிலி கழற்பருப்பு சரிநிறையாய்க்கூட்டி பொடுதலைச்சாற்றாலரைத்துச் சுண்டைக்காய்ப்போலுண்டைசெய்து நிழலில் உலர்த்திக்கொண்டு வழுதலைக்கியாழத்திற்கொடுக்க மாந்தசுரம் கழிச்சல் இருமல்தீரும், வேலிப்பருத்திக்கியாழத்திற்கொடுக்க வாந்திபொருமல்தீரும், ஓமக்கியாழத்திற்கொடுக்க வெளுவாய்ப்போகிற மாந்தக்கழிச்சல்தீரும்.

திரிகடுகு உள்ளி ஓமம் பெருங்காயம் கருஞ்சீரகம் வகைக்கு விராகனெடை(௪) வசம்புவிராகன்(௫) கடுக்காய்விராகன்(௰) சாரணைவேர்விராகன்(௫) பொடுதலைக்கொழுந்து பெருந்தும்பைக்கொழுந்து உத்தாமணியிலை வகைக்குஒருபிடி இவையெல்லாம் வெதுப்பிக்கொண்டு பெருந்தும்பைச்சாற்றாலும், பொடுதலைச் சாற்றாலும் அரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து உலர்த்திப் பிள்ளைகளின்வயதுக்குத்தக்கது கால் அரை முக்கால் ஒரு குளிகையைவெந்நீரிற்கொடுக்க மாந்தம் கட்டுமாந்தம் மாந்தக்கழிச்சல் வலிப்புந்தீரும்.

சண்பகப்பூ விலாமிச்சம்வேர் கோஷ்டம் ஏலம் கோரோசனை சாஸ்திரபேதி அதிமதுரம் வெட்டிவேர் வகைக்குக் கழஞ்சு(௧),

வெட்டிவேர்த்தண்டுச்சாற்றில்(எ)நாழிகையாட்டிக் குன்றிபோ துண்டைசெய்துலர்த்தி முலைப்பாலிலாவது வெந்நீரிலாவதுகொடுக்க மாந்தங்கள்தீரும்.

சுத்திசெய்த பூரம் பலம்(௧) இலவங்கம் ஏலம் வசம்பு சீரகம் அதிவிடையம் வகைக்குப்பலம்(௨)மாசிப்பத்திரிச்சாற்றால் ஒன்றனைச்சாமம் விஷ்ணுகாந்தைச்சாற்றால் ஒருசாமமரைத்து மொத்தமல்லிபோலுண்டைசெய்துலர்த்தி மேற்சொல்லியவியாதிகளின் மேலாவது ஏதாவது ஒருஉண்டை புனைத்துக்கொடுக்கச் சகலமாந்தங்களுந்தீரும் இவைகளுக்கெல்லாம் இச்சாபத்தியம்,

ஊதுமாந்தகுணம்,

குழந்தையுடலூதிக்காணும் வயிறிலாயும் கழிச்சல் கடுப்பு வாந்தி தொண்டைவலி சுரந்தோன்றும்.

தீர்த்தி,

வெண்காரம் விராகனெடை(௧)கடுகுரோகணி சருஞ்சீரகம் வகைக்குவிராகனெடை(௨)முலைப்பாலாலரைத்து மாத்திரைசெய்துகொண்டு வெந்நீரில்விடத்தீரும்—பொடுதலை வேம்பு மா புளி நொச்சி வேலிப்பருத்தி இலைகளினீர்க்கையும் ஓமம் உள்ளி திப்பிலியுஞ் சமமாயிடித் தொருபடிதண்ணீரிற்போட்டுஎட்டொன்றாய்க்கியாழஞ்செய்து சங்களவுகொடுக்க ஊதுமாந்தம் பொருமாந்தம் சத்திமாந்தம் செரியாமாந்தம் கட்டுமாந்தமுந்தீரும் இச்சாபத்தியம்,

கோரோசனை உள்ளி திப்பிலி அதிமதுரம் வகைக்கொருகழஞ்சு கோழிமுட்டையின் வெண்கருவாலரைத்து முலைப்பாலில்மூன்றுதினங்கொடுக்க எழுவகை ஊதுமாந்தமுந்தீரும்,—வேலிப்பருத்தியிலையைவதக்கிச் சாறுபிழிந்து அதில் சீரகமுங் கடுகுரோகணியுஞ்சமமாய் முலைப்பாலிலரைத்துக்கலக்கி சங்களவு கொடுக்க ஊதுமாந்தம் மயக்கம் வெப்புந்தீரும்,

நீர்மாந்தகுணம்,

பாரப்பாஉடல்மெலித்துகுளிர்த்துவாய்நீர்... .. .. *
பக்குவமாய்ச்சுழற்றிசிசுவாந்திபண்ணும்... ...... *
நேரப்பாசிவிர்த்துவருமுலையுண்ணாது.................. *
நேர்ப்பாசத்தூங்கிவிழித்துச்சிரிக்கும்............. *
சாரப்பாஉடம்பூதைகால்தினவெடுக்கும்... ... . *
சார்பாகவயிர்கழியும்வாந்திபண்ணும்... .. .. *
நீரப்பாமுகமினுக்குந்தலைவலிக்கும்... .... *
நீர்க்கடுத்துமலஞ்சிறுத்துயிறங்கும்பாரே ... ... *

உடல்மெலிந்து குளிர்ந்து சிலிர்க்கும் வாய்நீர்சுழற்றிக்குமந்தை வாந்திபண்ணும் மூலியுண்டாகு தூங்கிவிழித்துச் சிரிக்கும் வயிறுபொருமிக்கழியும் உடம்பு கைகாலில் திணவெடுக்கும் வீங்கும் தலைவலிக்கும் முகமினுக்கும் மலஞ்சிறுத்து நீர்கடுத் திறங்கும்,

நிவர்த்தி,

சுருள்ளி மூக்குரட்டை வகைக்குச்சாறுபடி (௨) விளக்கெண்ணெய் படி(௨)ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக்கொடுக்கத்திரும்,

நொச்சி வேலை மேனி நுணா பெருந்தும்பை இலைகளினிலையை வெதுப்பிச் சாறுபிழிந்ததில் மிளகு உள்ளி வசம்பு ஓமம் இவைகளைவறுத்தரைத்துக் கலக்கிக்கொடுக்கத்திரும்,

நீலிவேருஞ் செவியமு மோர்நிறையாய்த்தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்,—வெதுப்படக்கி அம்மான்பச்சரிசி சங்கங்குப்பி நுணா சாணக்கி வகைக்குச்சாறுபடி(௨) விளக்கெண்ணெய்படி(௧)வசம்பு உள்ளி மஞ்சள் வகைக்குப்பலம்(௨)பொடித்தொன்றாய்க்கலந்து காய்ச்சி மூன்றுநாள்கொடுக்கத்திரும்,

சிற்றாமணக்கெண்ணெய்பலம்(௰)அதிற்பூரம் விராகனெடை(௧) வாளம் மிளகு லவங்கம் வகைக்கு விராகனெடை (௨) இவ்வகைளைமைபோலரைத்துப்போட்டுக் காய்ச்சி ஒருதட்டெடை மூன்றுநாள்கொடுத்துப் பத்தியம் பொரிமிளகுநீருஞ் சாதமுங்கொடுக்கத்திரும்,

விஷமாந்தகுணம்,

மலமுஞ்சிக்கிவயிறுவலிவாகாய்த்திரைந்துதான்கழியும்... ... ...❋
பலமாய்நின்றசுரங்காயும் பாங்காயவாயின்கீழ்குளிரும் ... ...❋
சலமாயுடலந்தான்வியர்க்குந் தங்காப்பிள்ளைவாந்திபண்ணும்...❋
நலமாமேனிவாடிவரும்நவின்றார்விஷமாமாந்தமிதே... ... ...❋

மலஞ்சிக்கி வயிறுவலித்திரைந்து கழியும் நின்றுநின்று காய்காயும் மேனிவாடும் அலாயின்கீழ்குளிர்ந்திருக்கும்உடல்வியர்க்கும் கையிற்பிள்ளைதங்காது அடிக்கடிவாந்திபண்ணும்,

நிவர்த்தி.

நுணா நொச்சி வேலை இலைகளின்வேர் ஓமம் பொடுதலை உள்ளி வசம்பு இவைகளைச் சமமாய்த்தட்டி வெதுப்பிக் கியாழஞ்செய்து சங்களவுகொடுக்கத்திரும்,

போர்மாந்தகுணம்,

பாலன்பாலுமுண்ணாதபண்பாய்மயங்கும்வாந்திபண்ணும் ...❋
சிலநரம்புதான்புடைக்கும்சிரசையசைக்குமார்துடிக்கும்... ...❋
கோலமேனிவாடிவிடும்குறிப்பாய்த்தாகமிகவெடுக்கும்... ......❋
மேலவாயுநெஞ்சலரும்மேவும்விழியுக்குளிர்ந்திடுமே... ... .❋

குழந்தை பாலுண்ணாது வாந்திபண்ணும் மயக்கும் தலையை யசைக்கும் மார்பு அடிக்கும் மேனிவாடும் நெற்றிநரம்புபுடைக்கும் கண்குழியும் தாகமிகும் வாயும் நெஞ்சுமுலரும்,

திவர்த்தி,

ஓமத்தைவறுத்துப்பொடித்து வெந்நீரிலாவது முலைப்பாலிலாவது கொடுக்கத்தீரும்.—கோழியின் கல்லீரலிலிருக்குங்கல் நற்சீரகம் வலம்புரியிலைகளை யோர்நிறையா யரைத்து முலைப்பாலிற் கொடுக்கத்தீரும்,—உப்பைச்சட்டியில்வறுத்துக்கொட்டிப்போட்டு அதில் வேலிப்பரித்தி தும்பை வெற்றிலை இலைகளைச் சமமாய் வெதுப்பிச் சாறுபிழிந்து அதில் ஆமையோடும் வசம்புமுரைத்துக் கொடுக்கத்தீரும்,

சந்நிச்சாரணைவேரொன்று ஆமையோடு பூண்டு வசம்புவகைக்குவிராகனெடை (௧) அரைத்து அரைக்காற்படி விளக்கெண்ணெயிற் காய்ச்சிக் கொடுக்கத்தீரும்,—நறுவேலிப்பரித்திப்பொடுதலை வெற்றிலை இலைகளின்வாரடை ஆமையோடு வசம்பு பூண்டு ஓமம் கிராம்பு இலைகளைச் சமமாய் வெதுப்பிக் கொழுஞ்செய்து கொடுக்கத்தீரும்,—வசம்பும் மயிலிறகுஞ் சுட்டசாம்பல் கிராம்பு சீரகம் திப்பிலி பேய்ப்பீர்க்கம்வேர் இலைகளைச் சமமாய் முலைப்பாலவிட்டரைத்ததிற்கலக்கிக் கொடுக்கத் தீரும்.

பால்மாந்தகுணம்,

அறைகிறேன்பால்மாந்தம்வயிறூதும்... ... .*
அப்பனேபுண்போலநொந்துநாற்றம். ....*
நிறைபுளிப்பாய்வயிற்போகும் செவியுந்தாழும் ...*
நேர்விழியுங்குழிந்துலர்ந்துதொண்டைகோழை *
நிறைகைமூக்கால்வெதும்புங்குளிருங்காணும்... ......*
நிலைத்துமேகுழந்தையதுபாதலிக்கும் ... .*
முறைமையாம் பால்மாந்ததோஷத்தன்னை...... ...*
மொழிந்திட்டார்கமலமுனிமொழிந்திட்டாரே ...*

வயிறூதிப் புண்போல்நொந்து புளித்தநாற்றமாய் வயிறுகழியும் கண்குழியுஞ் செவிதாழுந் தொண்டையிற் கோழைகட்டும் கைகால்வெதும்புங் குளிரும் குழந்தைவாந்திபண்ணிப் பாதலிக்கும்.

திவர்த்தி,

பொடுதலைக்காய் இந்துப்பு வசம்பு பூண்டு மிளகு இலைகளை ஓர்நிறையாய் வெதுப்பிக் கொழுஞ்செய்து கொடுக்கத்தீரும்,

செரியாமாந்தகுணம்,

ஓதும்பொடுதலைக்காய்வசம்புஞ்சுக்கும்பூண்டுமிளகுடனே ... ...*
மேதகும்இந்துப்பொடுசமனுய்மேவவெதுப்பிபோர்நிறையாய் *

சோறுங்கியாழஞ்செய்துமேதான்கொடுக்கப்பிணிகள்தாம்தீரும்*
நீதும்வயித்தியசாரமிதுநிலையாயுரைத்தோமடமயிலே... ......*

சாங்காயும் தலைவலிக்கும் வயிறுநொந்திருக்குந்தலைசிறியழும்
மார்க்கலாத்தருப்போற் கழியும் அனாக்கன் நித்திரையாய்த் தூங்கி
க்கிளைத்தண்டுபோற் சோரும்.

நிவர்த்தி.

வசம்பு சடாமாஞ்சில் உள்ளி திரிகடுகு ஓமம் கருஞ்சீரகம்
ஆமையோடு இவைகளைப்பொடித்துக் கியாழஞ்செய்துகொடுக்
கத்தீரும்; வெளிப்பரித்திப்பிஞ்சை வதக்கிப்பிழிந்ததில் மிளகு வ
சம்பு உள்ளி வெதுப்பியரைத்துக்கலக்கியதில் நெய் ஒருதுளிவிட்டு
க்கொடுக்கத்தீரும், இஞ்சியும் பெருந்தும்பையுந்தட்டி யெருமை
வெண்ணெயில்வேகவைத்துக்கொடுக்கத்தீரும், ஓமம் கோஷ்டம் வ
சம்புவகைக்குவிராகனெடை-க-கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்

கட்டுமாந்தகுணம்.

மந்திரிந்திரைந்து வலித்துக் குழந்தை யடிக்கடியழும் மலஞ்
சிக்கி வயிறுகழியுஞ் சற்றேயாவுண்ணுந் நினைத்திருக்கும் தூக்கம்
போற்சோர்ந்துவிழும் சற்றுமல் சுரம் கொட்டாவிதலைவலி விய
ர்வையுண்டாகும்.

நிவர்த்தி.

சீந்தில்தண்டு களிப்பாக்கு சிவதைவேர் கடுக்காய் சுக்கு கடு
குரோகணி இவையெல்லா மொத்தனாயாய்த் தட்டிப்போட்டுக்கி
யாழஞ்செய்து மூன்றுதினங்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

சிற்றாமணக்கெண்ணெய்படி(வ) சிற்றகத்தி துளசி தகரை க
முற்கொடி நொச்சி செம்முள்ளி மணித்தக்காளி சமனு பிடித்துப்
பிழிந்தசாறு படி(வ)சதுரக்கள்ளிப்பால் ஒருகாலடி கடுகுரோக
ணி கடுக்காய் இருசீரகம் உள்ளி பூண்டு வசம்பு பூதசரப்பாலைபட்
டை வேலி வகைக்கு விராகனெடை (ரு) இடித்து ஒன்றாய்க்கலந்
து பதமாய்க்காய்ச்சிவடித்துக் காலையில் ஒருதுட்டெடைகொடுத்
து மாலையில் மிளகுச்சாம்பலுஞ் சுக்குங் கியாழஞ்செய்து ஒரு
ங்குகொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

சதுரக்கள்ளிப்பால் வெள்ளாட்டுப்பால்வகைக்குப்படி(வ)வி
ளக்கெண்ணெய்படி(க)திரிபலை வெள்ளுள்ளி வகைக்குவிராகனெ
டை(உ)பொடித்துப்போட்டுக்காய்ச்சி ஒருகாசெடை கொடுத்து
விலாவிலும்பூசத்தீரும் இச்சாபத்தியம்,

தலைமாந்தகுணம்.

உடல்சளதிப் புண்போல்நோகும் வயிறுபொருமிவலித்துக் குழந்தைதுள்ளிவிழும் எப்பங்கொட்டாவிவிடுங் கைகால்குளிரும் முகம் வியர்க்கும் தலைகனத்துவலிக்கும் நாசியில் நீர்வடியும் குளிர்சுரங்காணும்.

நிவர்த்தி:

வெதுப்படக்கி பெருந்தும்பை வேலிப்பருத்தி வெள்ளறுகு இலைகளினிலையவதக்கிச் சாறுபிழிந்ததில் பூண்டு தேசாவரம் சதகுப்பை திப்பிலி வசம்பு இவைகளை ஓர்நிறையாய்வறுத்தரைத்துக்கலக்கி உள்ளுக்குக்கொடுத்துமேலிலும்பூசத்தீரும்பத்தியமில்லை

தூலமாந்தகுணம்.

அதிசமாய்க் குழந்தை வாந்திபண்ணும் அடிக்கடிமுறுக்கிக் கொட்டாவிவிடும் உடம்புவியர்க்கும் முகங்கடுப்பாயிருக்கும் வலிப்புக்கண்டு கால்கை விறைக்கும்.

நிவர்த்தி.

வெள்ளைக்காக்கணன்வேர் ஓர்பாக்களவரைத்து முலைப்பாலிற்கலந்துகொடுக்கத்தீரும். வசம்பு தைவேளை மூடக்கொத்தான் சிறுபீளை திரிபலை அமுக்கிவேர் இவையெல்லாமோர்நிறையாய்த் தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி பொருதட்டுடைஉள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும். இச்சாபத்தியம்.

சுழிமாந்தகுணம்.

சுரங்காயும் இளைப்பு சுவாசம் விக்கல் சுக்கல்காணும் குழந்தைமுலையுண்ணாது நித்திரைசெய்யாது.

நிவர்த்தி.

கோடகசாலை துழாய் ஆடாதோடை தும்பை முதியார்கூந்தல் சங்கிலை சீந்தில் சிறுபீளைச்செடி நறுதாளி இலைகளினிலைச்சாறும் விளக்கெண்ணெயும் சமன்கலந்து அதிற் சாதிக்காய் திப்பிலி காயம் கடுகுரோகணி கோரோசனை உள்ளி வகைக்கு ஒருகழஞ்சு பொடித்துப்போட்டுக்காய்ச்சி ஒருகாசெடைகொடுக்கத்தீரும்,

சிறுள்ளிச்சாறு இஞ்சிச்சாறு ஆமணக்கெண்ணெய் ஓர்நிறையாய்க்கலந்து பதமாய்க்காய்ச்சிக்கொடுக்கத் தீரும் இச்சாபத்தியம்,

வீக்கமாந்தகுணம்

சுரங்காயும் காதுங்கண்ணும்வீங்கி வற்றும் நாவு புண்ணாகும் கைகால்நோகும் அன்னஞ்செல்லாது;

நிவர்த்தி,

பூவரசம்பழுப்பு சங்கம்பட்டை-சீந்திற்கொடி துழாய்க்கரு ஓமம் குப்பைமுன்னி-முருங்கைப்பீர்க்கு - நீர்முள்ளிச்சாறு வேளை

வேர் பிரமியிலை-மருட்கிழங்கு-அதளை-சிறுதுரிஞ்சை- சத்திச்சார டைவேர்-கருஞ்சீரகம் - இவையெல்லாம் ஓர்நிறையாய்த் தட்டிப் போட்டுக்கியாழஞ்செய்து சங்களவு கொடுக்கத்தீரும் இச்சாபத் தியம்,

மூக்குமாந்தகுணம்.

குழந்தை மூக்கிமுக்கிச் சேருமலமுமசைக்கழியும் உடலிரு கிமெலியும் சாங்காயும் தாகங்காணும் பின்கால்வீங்கும்.

நிவர்த்தி.

ஓமம் திப்பிலி மிளகு உள்ளி-ஆமையோடு இவைகளை ஓர்நி றையாய்ச்சிலையில்முடித்து ஒருபடிநீரிற்போட்டுவற்றக்காய்ச்சிஅ திலந்தமருந்தை பனாத்துக்கலக்கி சங்களவு மூன்றுவேளைகொடுக்க த்தீரும் இச்சாபத்தியம், இந்தவியாதிக்குக் கஸ்தூரியெண்ணைகொ டுக்க நன்மையுண்டாகும்.

வரள்மாந்தகுணம்.

உடல் திரைத்து வெளுத்து வற்றிக்குழந்தையுருக்கெடும் கடு ப்பு வலிப்பு முதலானபலகுணங்கள்காணும்.

நிவர்த்தி,

ஆடுதீண்டாப்பாளைச்சாறும்-வேளை-மணித்தக்காளி- கழற்சி கரிசாலை துளசி-நீலி-இவைகளிலிலைகளை ஓர்நிறையாய் ஒன்றாய்ச் சேர்த்திடித்துப்பிழிந்தசாறும் ஆவினெய்யும் வகைக்குப்படி-ஒரு ஒன்றாய்க்கூட்டி அதிற்கஸ்தூரிமஞ்சள் கோஷ்டம் கருஞ்சீரகம்-க டுகுரோகணி வகைக்குவிராகனெடை(௧)யொடித்துப்போட்டுக்க லத்து பதமாய்க்காய்ச்சி அந்திசந்தி துட்டெடை கொடுத்தாற் பி ணிநீங்கிப் பிள்ளையுடல்பருக்கும்.

உளைமாந்தகுணம்.

மலசலங்கட்டி வயிறுவலித்துக் குழந்தை அலறியழுதுபா லுண்ணாது மிரண்டுபார்க்கும்.

நிவர்த்தி.

நாக்கிலாம்பூச்சி வசம்பு நிம்பவேர் உள்ளி காயம் சுத்திசெ ய்தவாளம் வகைக்குக்கழஞ்சு(௧)அரைத்து ஒருபடி எண்ணெயிற் போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒருகாசெடை கொடுக்கத் தீ ரும் இச்சாபத்தியம்.

நாக்கிலாம்பூச்சி சுகரஜம்பி வசம்பு இருவேரகம் ராசத்தம்வே ர் பூண்டு-காயம்-வகைக்குப்பலம்(௧) மணித்தக்காளிச்சாறுவிட்டரா ட்டி ஒருபடி விளக்கெண்ணெயிற்கலக்கிக் காய்ச்சி ஒருசிறுகரண்டி யளவு மூன்றுநாள் கொடுக்கத்தீரும் உப்பு புளிதள்ளவும்.

சங்கு கொடிவேலி ஆடாதோடை தொன்றை இலை
வேர் இந்துப்பு-காயம்-புங்கின்பட்டை ஓர்நிறையாயிடித்து
டிபடி தண்ணீரிற்போட்டு உழக்காய்க் காய்ச்சிக்கொடுக்கத்தீ
புல்லூரி சருப்புக்கட்டி ஓர்நிறையாயரைத்து நல்லெண்
யிற்குழப்பிக்கொடுக்க ஊளைமாந்தை உட்சுரம் எலும்புருக்கிதீரு
இச்சாபத்தியம்.

அட்சமாந்தகுணம்.

அஸ்தியிற் கனலேறிக் குளிர்சுரம் பேதிகாணும் உதடும்வாயு
ம்வெடித்துப் புண்ணாகும் குழந்தையுடல்மெலியும்.

நிவர்த்தி.

மணித்தக்காளி அகத்தி-கற்றாழை ஈருள்ளி இவைகளின்சாறு
விளக்கெண்ணெ வகைக்குப்படி(க)காரை-பூலா-துத்தி- இவைகளின்
வேர்த்தோல் வறுத்தவெந்தையம் வகைக்குப்பலம்(க)அரைத்துப்
போட்டுப் பதமாய்க்காய்ச்சி உள்ளுக்குக்கொடுத்து வாய்ப்புண்
ணிலும்பூசத்தீரும் இச்சாபத்தியம்.

துத்தியிலை வெற்றையும் ஆடாதோடை நறுவிர்க்கு கியாழ
ஞ்செய்துகொள்ளவும், ஆறுவிலை வில்வஇலை ஊதம்வளை - பொடுத
லை-செம்முள்ளி-ஆடாதோடை வகைக்குச்சாறுபடி(க) அவிரிச்சா
றுபடி அரைக்கால்-அரத்தை-கடுகுரோகணி - வகைக்கு விராகனெ
டை(க)கடுக்காய்விராகனெடை(ரு)அக்கிராகாரம்வெளிச்சிப்பிசின்
சருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்குவிராகனெடை(உ) ஈருள்ளி
ச்சாறு விளக்கெண்ணை வகைக்குப்படி(க)பேய்க்குமட்டிச்சாறு ப
டி அரைக்கால் இவைகளை ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்கா
ய்ச்சி ஒருசிறுரண்டிவீதம் மூன்றுநாள் உப்புபுளிதள்ளிப் பத்தி
யமாய்க்கொடுக்கத்தீரும்.

தோஷமாந்தத்திற்கு.

முருங்கைப்பட்டை கோழிமுட்டை வெள்ளைக்கரு வெள்ளு
ள்ளி வேப்பெண்ணெய் ஓர்நிறையா யொன்றாய்க்கலந்து காய்ச்சி
உடம்பிலும் நாவிலுந்தடவத்தீரும் இச்சாபத்தியம்,

ஈருள்ளியும் முடக்கொத்தானும் வெதுப்பிப்பிழிந்தசாறுமூ
ன்றுநாசெடை கொடுக்கத்தீரும்.

மாந்ததோஷம் வலிப்பு மலக்கட்டுக்கு.

முடக்கொத்தானிலை மூக்கறைச்சாரணைவேர் இலை கொழுந்
து குப்பைமேனியிலை இவைகளைச் சமமாயரைத்து விளக்கெண்
ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிப் பிள்ளையின்வயதுக்குத் தக்
கபடி கொடுக்கத்தீரும்.

மாந்தம் பாலகிரிகைக்கு.

வெலிப்பருத்தி யொருபிடி சுக்கு சடாமாஞ்சில் விளா வசம்பு பூண்டு மிளகு ஆமையோடு ஓமம் சீரகம் ஓர்நிறையா யொரு படிதண்ணீரிற்போட் டெட்டொன்றாய்க் காய்ச்சி யொருசங்கு கொடுக்கத்திரும்.

மாந்தம் வயிற்றுப்பொருமலுக்கு.

வேலிப்பரித்தியிலையை வதக்கிச்சாறுபிழிந்ததில் ஓமம் வசம்பு ஓர்நிறையாய் வெதுப்பிப் பொடித்துப்போட் டொருசங்கு கொடுக்கத்திரும், வறுத்தஓமம் விராகனெடை (க) குப்பைமேனி வேர்ப்பட்டை பலம் (உ) அரைப்படி தண்ணீரிற்போட்டு வற்றக் காய்ச்சி யொருசங்குகொடுக்கத்திரும்.

மாந்தம் பொருமல் வலி செரியாமாந்தத்திற்கு,

வேலிப்பருத்தியிலைச்சாறு படிஅரைக்கால் வசம்பு திரிகடுகு கோரோசனை வகைக்கு விராகனெடை (உ) வேலிப்பருத்திக்கொழுந்து விராகனெடை (ச) இவைகளை யரைத்துச் சாற்றிற்கலக்கி முறித்தூக்கொடுக்கத்திரும்,

பெருந்தும்பை வெதுப்படக்கி பொடுதலை பிரமி வேலிப்பருத்தி துளசி துத்தி அகத்தி இலைகளினிலைகளை ஓர்நிறையாயிடித்துப்பிழிந்தசாறு (வ) பச்சைமஞ்சட்சாறு படி மாகாணி விளக்கெண்ணெ படி உ) ஒன்றாய்விட்டு அதில் ஓமம் ஆமையோடுசுட்டசாம்பல்-உள்ளி-வசம்பு-வகைக்குப்பலம் (வ) இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி யொருதுட்டெடை யெண்ணெயிற் பொரித்தவெங்காயம் பெருங்காயம் வகைக்கொருபணவெடை மத்தித்து மூன்றுநாள்கொடுக்கத்திரும் இச்சாபத்தியம்,

மாந்தங்களுக்குப் பொதுப்பிரயோகம்,.

சிறுதேக்கு வாய்விளங்கம் வால்மிளகு கடுகுரோகணி சுக்கு மூலம் திப்பிலி இலவங்கம் தான்றி தக்கோலம் மாசிக்காய் வகைக்குப்பலம் (வ) இடித்திரண்டுபடி தண்ணீர்விட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி மூன்றுநாட்கொடுக்க கிராணி மாந்தம் சரக்கட்டி விஷதோஷங்கள் இசிவு மாந்தம் சோகை காமாலை சுரம் கோழைகொட்டாவி பொருமல் தும்மல் பித்தகணம் பாண்டுதீரும் இச்சாபத்தியம்,

அவித்தூற்றின விளக்கெண்ணெய் தகளாச்சாறு வகைக்குப் படி (க) நாயுருவி ஊதவேளை நாய்வேளை கொழுஞ்சி மூக்கரைச்சாரணை இவைகளின்வேர் வகைக்கொரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம், வசம்பு ஓமம் கஸ்தூரிமஞ்சள் வாய்விளங்கம் வகைக்குப்ப

கடுக்(ஙு) வெள்ளுள்ளி பலம் (உ) கருஞ்சீரகம் வெந்தியம் கறி
குரோகணி வகைக்குப்பலம் - க-இவையெல்லா மரைத்துக்கலந்து
பதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு பிள்ளையின்வயதுக்குத்தக்க
தாய்க்கொடுக்கத் துட்டுமாந்தம் கிரிமி சுழி கணம் வாயு காய்ச்சல்
தவிர் மாந்தம் பிரவிதிரும். தாய் உப்புப்புளிதள்ளிப் பத்தியமா
யிருக்கவும்.

கோரோசனை கோஷ்டம் அதிமதுரம் சிரகம் திப்பிலி தே
வதாரம் சந்தனம் ஏலம் மாசிக்காய் வெந்தயம் சுக்கு வெ
ள்ளுள்ளி கஸ்தூரி வசம்பு ரோகணி பச்சைமுங்கிற்றோல் வகை
க்கு விராகனெடை(க) வெதுப்பிப்பொடித்துச் சங்கங்குப்பிச்சா
ற்றிலரைத்தொருபடி விளக்கெண்ணெயிற் கலக்கி மெழுகுபதமா
ய்க்காய்ச்சிக்கொடுக்க மாந்தவயிற்றுப்பிசம் சுழிமாந்தம்நாவரட்
சி கணம் குளிர்காய்ச்சல் இரத்ததொந்தசுரம் முக்குகணம் கிரிச்
சினப்பட்சிதோஷம் பழங்காய்ச்சல் முதலானவைகள் தீரும் இச்
சாபத்தியம்.

நன்னாரி பழம்பாசி சிறுபீளைபடி சிற்றுமுட்டி சிற்றுமணைக்
கு அத்தி வட்டக்கிலுகிலுப்பை கண்டங்கத்திரி கண்ணுப்பூளை இ
வைகளின் வேரும் கொவ்வைத்தண்டு மரைத்து வகைக்கொருபெ
ருவிரலங்காய்ப்பிரமாணம் விளக்கெண்ணெய்படி(ஙு) கழுவியெ
டுத்த கற்றாழஞ்சோறு இரண்டுதேங்காய்ப் பிரமாணம் சாதிக்கா
ய் சாதிப்பத்திரி ஏலம் மதுரம் வெந்தயம் வகைக்குக்கழஞ்சு-ஙு-
கோரோசனை வெள்ளுள்ளி வகைக்குக்கழஞ்சு -உ- இவைகளையி
டித்துப்போட் டொன்றாய்க்கலந்து காய்ச்சிக் கற்றாழஞ்சோறு
மொருமொரென்றிருக்கிற பதத்தி லிறக்கிக்கொடுக்க கணமாந்தம்
கணைக்கழிச்சல் ஊதுமாந்தம் ஊதுகணம் காமாலை சோகைதிரும்
இச்சாபத்தியம்.

பொடுதலை-மா-புளி வேப்பு-நுணா-வேலிப்பருத்தி - நொச்சி
இவைகளின்சிக்கு வகைக்குப்பிடி(க) வெள்ளுள்ளி திப்பிலி ஓமம்வ
கைக்குக்கழஞ்சு(க) இடித்தொருபடி தண்ணீரிற்போட்டுக் கியாழ
ஞ்செய்து(ஙு)நாள்கொடுக்க ஊதுமாந்தம் போர்மாந்தம் வெரி
யாமாந்தம் கட்டுமாந்தம் சத்திமாந்தம்நீங்கும் இச்சாபத்தியம்.

இஞ்சி சங்கு இலிவி பொன்னாங்காணி காந்தை வகைக்குச்
சாறுபடி(வ) சிற்றாமணக்கெண்ணெ படி(வ) ஒன்றாய்க்கலந்து காய்
ச்சி அதிற் கடுகுரோகணி விராகன்(வ)வறுத்துப்பொடித்துப்போ
ட்டு ஒருகரண்டிவீதங்கொடுக்க மாந்தம் உட்காய்ச்சல் சனக்காய்
ச்சல் வாய்ப்புண் மூலச்சூடு பலவகைக்கழிச்சல்திரும் இச்சாபத்
தியம்.

கஞ்சாங்கோரை பிரமி தளசி பழம்பாசி குட்டிவிளா வல்லாரை சீந்தில்தண்டு வசம்பு சங்குகோவை வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனெடை(க)இவையெல்லாந் தட்டி அரைக்காற்படி யிளநீர்கொண்டுவிட்டுப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்கச் சகல மாந்தங்களுந்தீரும் இச்சாபத்தியம்.

மனித்தக்காளி ஓரிலைத்தாமரை அவிரி புங்கு இலைகளினிலைச்சாறு சிற்றாமணக்கெண்ணெ வகைக்குப்படி(க)ஒன்றாய்க்கலந்ததிற் சங்கு சிற்றாமணக்கு நாவல் நன்னாரி கருத்தவள் இவ்விபரப்படாகம் பேனி கவுதும்பை இலைகளின்வேர் வகைக்கொருபிடி கடுக்காய்ப்பூ அதிமதுரம் சடாமாஞ்சில் செண்பகப்பூ லவங்கம் செவியம் கடுக்காய் வால்மிளகு கண்டுபாரங்கி விக்கம் மஞ்ஞளிம் வசம்பு பூரம் கெந்தி வகைக்கு விராகனெடை(க)இவையெல்லாம் பொடித்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சி வடிக்கும்போது அதிற் புனுகு கஸ்தூரி வகைக்கு விராகனெடை(க) பொடித்துப்போட்டுவைத்துக்கொண்டு இருகழஞ்சளவுங் குழந்தைக்கு ஏழுநாள் கொடுத்து மாதா உப்புப் புளிதள்ளிப் பத்தியமாயிருந்து பின்பு ஏழுநாள்தள்ளி பிள்ளைக்குந் தாய்க்கும் ஒடத்தேய்த்தால் விலக்கு தீர்வார்க்கச் சகலமாந்தங்களுந்தீரும் அதிகபேதிகண்டுமூர்ச்சையானால் சுக்கைத்தட்டிப்போட்டுக் கொதிக்கவைத்துக்கொடுக்க தீரும்.

மணித்தக்காளி தளசி அத்தி பிரமி வில்வம் வல்லாரை கையாந்தகரை பொடுதலை அறுகு புங்கு சங்கு இலைகளினிலைச்சாறு விளக்கெண்ணெ வகைக்குப்படி(க)ஒன்றாய்க்கலந்து அதிற் கடுக்காய் தான்றிக்காய் சுக்கு திப்பிலி ஆமையோடு ஆத்தைஓடம் வசம்பு கஸ்தூரிமஞ்சள் வகைக்குப்பலம்(உ)சாதிக்காய் விராகனெடை(க)இவைகளைப் பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து வயதுக்குத்தக்கபடி கொடுக்க மாந்தம் அட்சரம் சுரம் மேகம் வெட்டை தீரும்.

கணவகுப்பு.

பாரப்பாகணவகுப்புபதினெட்டாகும்... ....✱
பாடிஞர்வாதகணம்பித்தகணமும்... ....✱
நேரப்பாசேத்மகணம்மாந்தகணமும் ....✱
தீர்க்கணமாம்பிரளிகணம்குலைகணந்தான் ....✱
சாரப்பாஊதுகணம்கழிகணந்தான் ... .✱
சார்வாவமகாகணம்வாட்கணந்தான் ....✱
கூரப்பாகொதிப்புகணம்பிறக்கணந்தான் ....✱
குலிப்பாஊதுகணம்விக்ககணந்தானே ... .✱

தாலுளதோஷகணம்மூக்குகணந்தான்..........*
தவியானமூலகணம்போர்க்கணந்தான்... ... ...*
உடனுளரத்தகணம்விஷமாந்தகணமும்... .. ..*
ஊதுமாந்தகணமாம்மந்தகணந்தானும்... ... ...*
சோனுளமந்தாரகணமுந்தானும்...... ... .*
கூராவளரிகணமாமிருபத்துமூன்றும் ....*
பாலுளகணங்கள்பல்லிரண்டுமட்டும்... .. ..*
பாலகர்க்குநேருமென்றுபகர்ந்ததாமே ... .*

மாந்த முதிர்ந்து வாதகணம் பித்தகணம் சேத்துமகணம் மாந்தாரணம் நீர்க்கணம் பிரளிக்கணம் சூலைக்கணம் சுழிகணம் மகாகணம் ஊதுகணம் வரட்கணம் கொதிப்புக்கணம் வீக்ககணம் பிறக்கணம் ஆமகணம் தோஷக்கணம் மூக்குக்கணம் மூலகணம் போர்க்கணம் இரத்தக்கணம் விஷமாந்தகணம் ஊதுமாந்தக்கணம் அந்தக்கணம் மந்தாரகணம் எரிகணம் என விருபத்துமூன்று கணங்கள் பல்லிரண்டாண்டுமட்டுங் குழந்தைகட்குவரும்.

வாதகணத்தின்குணம்,

உடல்களைத்துக்குழந்தை புகைத்திருக்கும் இளைப்பு நாவரட்சி தாகஞ் சுரம் பசி மந்தம் நீர்ச்சுருக்குக்காணும் மலங்கருகும்.

பித்தகணத்தின்குணம்,

குழந்தைமஞ்சள்போற்கழியும் நாக்கும் கடைவாயும்புண்ணாகும் உடல்வெரிச்சல் சுரம் தலை கிறுகிறுப்பு மயக்கங்காணும்.

சேத்துமகணத்தின்குணம்.

உடம்பிற்பினைவு சொரிவைககாலில்வீக்கம் வாய்நாற்றம் வெப்பு இருமல் கோழை அருத்தலைங்காணும் கீழ்வாயுமேல்வாயும் வெடித்துப்புண்ணாகும்.

இவைகட்கு நிவர்த்தி.

கருநெல்லி எலுமிச்சம்பழம் கோவை வல்லாரை மாசிப்பத்திரி வில்வம் குட்டிவிளா இவைகளின்சாறு அத்திப்பால் ஆலம்பால் முலைப்பால் ஆவின்பால் வெள்ளாட்டுச்சர்பால் ஆவிநெய் கொம்புத்தேன் வகைக்குப்படி(உ) தேங்காய்ப்பால் படி(௧) சந்தனம் அருகங்கட்டை வெட்டிவேர் விலாமிச்சம்வேர் வகைக்குப்பலம்(௧) இடித்துக் காற்படி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து வடித்து ஒன்றாய்க்கலந்து நெய்ப்பதமாய்க் காய்ச்சியதில் சாதிக்காய் சாதிப்பத்திரி ஏலம் கிராம்பு திரிகடுகு திரிபலாதி சடாமாஞ்சில் அதிவிடையம் மாசிக்காய் வகைக்குப்பலம் (௧) இடித்து வடிகட்டின தூளைப்போட்டுக் கிண்டிப் பதமாய்க்காய்ச்சி ஒருகா

ண்டிவிதம் புளிகைப்புத்தவ்ளி ஒருமண்டலங்கொள்ள (௨௪) வகை கணக்களுந்தீரும் தேகங்குளிர்ந்து பொலிவாகும்.

சீரகம் வில்வப்பத்திரி வெங்காயம் வெந்தயம் இவைகளை ஓர்நிறையாய் வெதுப்பிச் சியாழஞ்செய்துகொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

சிறுபுள்ளடி கழற்கொழுந்து அவிரி சாறுக்கி பொடுதலை வகைக்கு ஒருபிடியை நையநறுக்கி நல்லெண்ணெயிற்போட்டு வெயிலில்வைத்து உள்ளுக்குங்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

வில்வம் அவிரி சருள்ளி கடுக்காய் இவைகளைத் தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்இச்சாபத்தியம்.

பொன்னாங்காணிவேர் புளியீர்க்கு வேப்பீர்க்கு வகைக்கு ஒருபிடி கொழியவரைவேர் பலம் (௧) நறுக்கி விளக்கெண்ணெயிற்போட்டு சூரியபுடம்வைத்துக்கொடுக்கத்தீரும்மேற்படிபத்தியம்.

கடுக்காய் கருஞ்சீரகம் கடுகுரோகணி காட்டுமல்லிகை இண்டிலை சருள்ளி உசிலிலை இவைகளைத்தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி முலைப்பாலிற்கலந்துகொடுக்கத்தீரும்.

கோஷ்டம் சண்பகப்பூ வெங்காயம் அவிரி நிலக்குமிழ் கடுகுரோகணி விலாமிச்சு கிராம்பு இவைகளை யோர்நிறையாய்த் தட்டி நல்லெண்ணெயும் நெய்யும் ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிக்கொடுக்கத்தீரும்,

சயமார்த்தகுணம்.

பாலன்தேகமிளைக்கும் பொருமல் வாந்தி வாய்நீர் சலசுரத்தல் சோபதாப மசதிகளும் வயிறிரைந்து பாசிபோற்கழியும் விழிசுழலும் நாவுலரும்.

நிவர்த்தி.

நொச்சி துளசி முசுமுசுக்கை வகைக்கொருபிடியிலையைப் பிட்டவித்துச் சாறுபிழிந்து ஒருசங்குகொடுக்கத்தீரும் பத்தியமில்லை, புங்கு புளி நொச்சி மா வேம்பு வேலிப்பருத்தி பொடுதலை கருவேப்பிலை நாரத்தை எருக்கு அவிரி பொன்னாவரை இலைகளின் இலை சேர்க்கு வகைக்கு ஒருபிடி சட்டியிற்போட்டு கடுகுரோகணி இந்துப்பு ஓமம் இவைகளைச்சீலையில்முடிந்துபோட்டு ஒருபடி தண்ணீர்விட்டு வற்றக்காய்ச்சி வடித்து அதில்மேற்படி மருந்தை அரைத்துக்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

புள்ளடி பொடுதலை தகரை மிளகுதக்காளி கருநொச்சி படும் பாசி சருள்ளி இலைகளின்சாறு விளக்கெண்ணெய் பூண்டு கைம்பு வகைக்கு ஓர்நிறையாய்க்கலந்துகாய்ச்சி காலையிற்கொடுத்து மாலையி

த்சுக்கு ஓமம் பொன்முசுட்டை வேளை ஏலம் திப்பிலி திப்பிலி மூலம் சமனெடையாய்த்தட்டிப்போட்டுக்கியாழஞ்செய்துகொடுக்கத்திரும்.

வல்லாரை-பிரமி-செருப்படை-நீர்முள்ளி-மணித்தக்காளி மூசுமுசுக்கை மைத்தக்காளி துளசி கோழியவரை நெய்ச்சிட்டி இவைகளினிலை வகைக்கொருபிடி இடித்துப் பிழிந்தசாறுபடி(வ) விளக்கெண்ணைபடி(௨)குமட்டிக்காய்ச்சாறு சுருள்ளிச்சாறு வகைக்கொருசேரங்கை ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிக் கடுகுபதத்தில் கார்கோளரிசி பூண்டு வசம்பு கருஞ்சீரகம் வகைக்கு விராகனெடை (௧) பொடித்துப்போட்டு மெழுகுபதமாய்க் காய்ச்சிக்கொடுக்கத்திரும் இந்நான்கும் இச்சாபத்தியம்.

வேலிப்பருத்தி வெள்ளைச்சாரணை குட்டிவிளா வேளைவேர் வசம்பு பூண்டு இவைகளைத்தட்டி எருமைவெண்ணெயிற் போட்டுக்காய்ச்சி வடித்து முலைப்பாலிற்சேர்த்துக்கொடுக்கத்திரும் பத்தியமில்லை

விளக்கெண்ணை நுணாவிலைச்சாறு சுருள்ளிச்சாறு வகைக்குப்படி(௧)வில்வக்கொழுந்து இரண்டுபிடி கருஞ்சீரகம் பொரித்தவெங்காரம் வகைக்கு விராகனெடை(௨)கடுக்காய் விராகனெடை(௮; பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துக் கடும்பத்தியமாய்க் கொடுக்கத்திரும்.

வெள்ளாட்டுப்பால் படி(௨)விளக்கெண்ணெய்ப்படி(௧)திருகுகள்ளிப்பால் பலம்(௧)இண்டங்கொழுந்து பிடி (௧) செண்பகப்பூ அதிமதுரம் சாதிக்காய் லவங்கம் ஏலம் வெள்ளுள்ளி சாதிப்பத்திரி சுருள்ளி சீரகம் கருஞ்சீரகம் வசம்பு விலாமிச்சு வெட்டிவேர் நாங்குரி சிறுநாகப்பூ பூலாக்கிழங்கு கோரோசனை கடுக்காய் கடுகுரோகணி கோஷ்டம் பச்சை நாகேசுரம் வகைக்கு விராகனெடை (௪)இவைகளைப் பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு எண்ணையும் முலைப்பாலுங்கலந்து ஒருசங்குகொடுக்கத்திரும் இச்சாபத்தியம்.

வால்மிளகு பூண்டு ஓமம் வசம்பு கிராம்பு செண்பகப்பூ சரிநிலையாய்த்தூக்கி பொடுதலைச்சாற்றால் நாலுசாமமரைத்துச்சுண்டைக்காய்ப்பிரமாணம் மாத்திரைசெய்துகொண்டு மேற்படிசாற்றில் மூன்றுநாள்கொடுக்கத்திரும் இச்சாபத்தியம்.

௨௭ துமாந்தகணத்தில்குணம்.

குழந்தையுடல் கண் கால்வீங்கும் நாவு புண்ணாகும் வாங்காயும் அன்னந் தண்ணீர்செல்லாது வாய்கை சோரும் சுவாசம்மிகுதியாகும்.

திவர்த்தி.

குப்பைமுள்ளி நீர்முள்ளி கரிப்பான் கார்த்தை மாதுளம்பூம் வல்லாரை வட்டத்திருப்பி பர்ப்படாகம் ஓரிலைத்தாமரை நாமரைக்கிழங்கு செந்தாமரை கண்டங்கத்திரி செங்கழுநீர்க்கிழங்கு குரத்தாவரை முருக்கு இவைகளின்சாறு தேங்காய்ப்பால் வகைக்குப்படி(௨)விளக்கெண்ணெய்படி (௧) ஒன்றாய்க்கலந்ததில் இண்டம்வேர்-சாயம்-வசம்பு-ஏலம்-வெட்பாலையரிசி-முத்தக்காசு விளாம்பிசின்-வாகைப்பிசின்-மருக்காரைப்பிசின்-இலவம்பிசின்- செங்கத்தாரிப்பட்டை-மாசிக்காய்-கடுக்காய்-அதிவிடையம்-வால்மிளகு-சாதிப்பத்திரி-வகைக்குப்பலம்(௨)இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக்கொண்டு ஒருகட்டெடையாய் மூன்றுவேளை உப்புப்புளிதள்ளிக்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

நாய்வேளைவேர் கரிப்பான்சாற்றிலரைத்து முலைப்பாலிற்கலக்கிக்கொடுத்து நீர்முள்ளிசுட்டசாம்பலை கரிப்பான்சாற்றிற் குழைத்து மேலிற்பூசிவைத்திருந்து மாலையில் வெந்நீரில் ஸ்நானஞ்செய்விக்கத்தீரும் இச்சாபத்தியம்.

நீர்க்கணமாந்தகுணம்.

குழந்தை இருமும் மூக்கில் நீர்வடியும் இடையில் சுரங்காயும் வயிறுபொருமி யிளைத்து பலவீனமாய்க்கழிச்சலும் தலைப்புரட்டல் மயக்கங்காணும் உடம்பு முகம் கண்சோரும்.

திவர்த்தி.

அதிமதூரம் செண்பகப்பூ ஏலம் கோரோசனை சாஸ்திரபேதி-வெட்டிவேர்-கோஷ்டம்-மாசிப்பச்சை-விலாமிச்சம்வேர் - சமன்கூட்டி ஆதண்டைச்சாற்றால் ஒருசாமமரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்துகொண்டு ஏருண்டையை முலைப்பாலிற்கொடுக்க மாந்தமெட்டும் குடற்படுவன் நீர்ப்பாடு சேர்ப்பப்பாடு தாவரட்சி சுரம் குலையெரிவு வெப்பு தோஷந்தீரும்.

சிங்கிமாந்தகணத்தின்குணம் அதேவிஷமாந்தகணம்.

உத்தியிற்களைலேதி சுரல்வெந்து புண்ணாய் உடலாதியந்தமும் தீப்போற்காயும் சுவாசமேல்நோக்கி இளைக்கும் குழந்தை திக்குமுக்காடிமயங்கும்.

திவர்த்தி.

அதிமதூரம் கோஷ்டம் ஏலம்-கோரோசனை- சாஸ்திரபேதி-சண்பகப்பூ-மாசிக்காய்-இலவங்கப்பூ-வகைக்குப்பலம்(௨) கஸ்தூரிகிட்டு-வெட்டிவேர்-மாசிப்பத்திரி-கருந்துளசி - விலாமிச்சு இந்த நால்வகை மூலிகைச்சாற்றால் இரண்டுசாமமரைத்துக் குன்றிப்பிர

ஞ்சடைசெய்து திமதுலர்த்திக்கொண்டு மாசிப்பத்திரிக்கியாழத்தில் ஒருவெண்டை கொடுக்கத்தீரும்.

இலவங்கப்பூக்கியாழத்திலிட மார்தகரம் வாந்திமாந்தந்தீரும், மூலப்பாலிலிடக் குடற்பபேவல் தீர்ப்பாடு மாந்தம் காய்ப்பன் றாவாட்சி வயிற்றெரிவு அவ்லைவிடாய் சுரம் மாந்தம் உப்பிசம் இருமல்தீரும்.

நீர்க்கணைத்தின்குணம்.

சுரம்விட்டுவிட்டுக்காயும் மிகுந்ததாகம் வியர்வைகாணும் கண்குழியும் நாக்கு-வாய் - வெடித்துப்புண்ணாகி வரளும் தண்ணீர்போற்கழியும் தலைசுழலும் வயிறுநோகும்-கை-கால் சோர்ந்து குளிரும் முகங் கால் புறங்கை மினுமினுப்பாயிருக்கும்.

நிவர்த்தி.

சாரணைக்காய்-மூக்குரட்டைக்காய்-பொடுதலைக்காய்- திரிகடுகு-துளசி-சீரகமோர்நிறையாய்த் தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

சுழிகணைத்தின்குணம்.

தவிர்சுரம்-சுவாசங்காணும் கண்பஞ்சடையும் உச்சி குழியும் நெஞ்செரியும் உடல்நொந்து குழந்தை அயரும்.

வேறு.

சுவாசம் இருமல்காணும் மூக்கம் மார்பு புடைத்துக்காணும் வயிறு-ஈரல்-நெஞ்சு-தொண்டை-நாவுவெந்து புண்ணாகும் குழந்தை மூலைபுண்ணாகி அலறியழும் கால் கை குளிரும் வயிறுபொருமும் சுரங்காயும் கண்சொருகும் தாவுவாளும்.

வேறு.

நெஞ்சிற்கபங்கட்டி இருமல் இளைப்பு மயக்கங்காணும் மார்பு சுறுபாய்வாங்கும் வாயில் நுரைதள்ளும் வாந்தியண்ணும் சுரங்காயும் சழியும் முகம் மஞ்சள்போலிருக்கும் தலைநோகும்.

நிவர்த்தி.

செண்பகப்பூ-விராகனெடை(ய)சாதிப்பத்திரி- கோரோசனை வகைக்கு விராகனெடை(உ)பொடித்து ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டுச் சற்றுகொதிக்கவைத்து ஒருதுட்டெடை கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்.

உள்ளி வசம்பு உசிலம்பட்டை ஓர் நிறையாய்த்தட்டித் தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்,

இண்டு கண்டங்கத்திரி இம்பூரல் இலைகளின்வேர் கடுக்காய் ஓர்நிறையாய்த்தட்டி காற்படி விளக்கெண்ணெயிற்போட்டு சூரியபுடம்வைத்துக்கொடுக்கத்தீரும்,

குன்றிமணி கிலுகிலுப்பை முசுமுசுக்கை துளசி கூவிளை இவைகளின்வேரைத்தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுச் சூரியபுடம் வைத்துக்கொடுக்கத்தீரும், ஈருள்ளியும் சிவக்கவறுத்தது ருசுமோரிடையாய்த்தட்டிக் கியாழஞ்செய்து வடித்ததில் இலுப்பைப்பிண்ணாக்கைப் பொடித்துப்போட்டு வடிகட்டிக்கொடுக்கக் கபம்போகும்,

தூதுவேளை துளசி நுணா சங்கு இண்டு பொடுதலை- செம்முள்ளி சீரகம்-ஓர்நிறையாய் பசுவினெய்யில் வேகவைத்துக்கொடுக்கத்தீரும், குப்பைமேனிச்சாறும் உப்புங்கலந்து வேப்பெண்ணெயில மத்தித்து மூன்றுநாள்கொடுக்கத்தீரும்,

கடுக்காய் காட்டுமல்லிகை கற்றாழை வெந்தையம்-சீரகம்-சாரணை ஈருள்ளி ஓர்நிறையாய்த்தட்டி விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிக்கொடுக்கத்தீரும்,

நுணா-சங்கு-இண்டு-பூண்டு-பொடுதலை-செம்முள்ளி- இவைகளின்சாறும்-நெய்யும் ஒன்றாய்க்கலந்து-பதமாய்க்காய்ச்சிவடித்துக்கொடுக்கத்தீரும், நந்தியாவட்டம்-நாய்த்துளசி-சிவதை-காட்டுமல்லிகை-துளசி-தூதுவேளை இவைகளின்வேரைத்து வகைக்குப் புன்னைக்காயளவு-கண்டங்கத்திரி-தூதுவேளை-சின்னி-மணித்தக்காளி-கொட்டைக்கரந்தை-குப்பைமேனி-கோழியவரை-சமனாயிடித்துப்பிழிந்தசாறு படி(உ)ஒருபடி விளக்கெண்ணெயிற்கலந்து மெழுகுபதமாய்வடித்து ஒருகட்டெடைகொடுக்கத்தீரும்கடும்பத்தியம்

கற்கடகச்சிங்கி-சித்தில்-சீரகம்-வில்வவேர்- அதிவிடையம்-கடுரோகணி-கண்டங்கத்திரி-முசுமுசுக்கை-முள்ளி- தூதுவேளை-திப்பிலி-ஓர்நிறையாய்த்தட்டித் தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்,

குளிகைத்தின்குணம்

நெஞ்சு-வாய்-தொண்டை-நாவுவெந்து புண்ணாகி இருமல் சுவாசம்-வயிற்றுப்பொருமல்கண்டு-குழந்தை முலையுண்ணாதுமுகம் நாறும்,

நிவர்த்தி,

துளசி-நிலத்துளசி-சஞ்சாங்கோரை- மாசிப்பத்திரி-வில்வம்-உள்ளி-இவைகளின்சாறு-வகைக்குப்படி அரைக்கால் விளக்கெண்ணெய்-படி(வ)திரிகடுகு-விராகனெடை(உ)வறுத்துப்பொடித்து ஒன்றாய்க்கலந்து-அதில் தேன்விராகனெடை(உ)விட்டுப்பதமாய் காய்ச்சிவடித்து இரண்டுவிராகனெடையாய்க்கொடுக்கத்தீரும்,

மகாகணத்தின் குணம்,

முகம் புறங்கால் புறங்கை மினுக்கும் விழிவெளுக்கும் உடல்வெதும்பும் நாவுஉதடு புண்ணாகும் குழந்தைமயங்கும்.

நிவர்த்தி.

சிறுகீரைவேர் விஷ்ணுகாந்தி பிஞ்சுக்காய்நெல்லி சிறுபீளை வெதுப்படக்கி சிந்தில் ஆடாதோடை இவைகளையோர்நிறையாய் நறுக்கிச்சட்டியிற்போட்டு இளவறுப்பாய்வறுத்துத்தண்ணீர்விட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

பிரளிக்கணத்தின் குணம்,

வயிறுபொருமிபேப்பமுண்டாகும் உடல் புண்போல்நொந்து குழந்தைதுடித்தேங்கியழுதலறும் மாப்போல்மலங்கழியும், வேறு-மலங்கட்டி வயிறுபொருமி யநுத்தடி முக்கும் குடலைப்புரட்டிவலிக்கும் முலையுண்ணாது வாய்வலரும் மேல்மூச்சு இளைப்புக்காணும் முத்துப்போல் மூக்கில் நீர்வடியும் முகத்தில் மஞ்சள்மணக்கும்,

நிவர்த்தி,

அவித்தூற்றின சிற்றாமணக்கெண்ணெய்ப்படியொன்றில்-௮- பேய்க்குமட்டிக்காயும் -௨- பிடி வெங்காயமும் அரிந்துபோட்டுக் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் வகைக்குப் பணம் மாகாணி கடுகுரோகணி பணம்அரைக்கால் இவைகளைப் பொடித்துச்சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி ஒருதுட்டெடைகொடுத்துப் பத்தியம் நீர்க்கஞ்சிகொள்ளத்தீரும்.

பிறக்கணத்தின் குணம்,

வயிறுபொருமிபசுமையாயும்தோய்ந்ததயிர்போலும் கழியும் தூக்கிவிழும் பாலருந்தி வாந்திபண்ணும் சுரங்காயும் விழிசொருகும் குழந்தை கைகால் சில்லென்றிருக்கும் தலையைப்புரட்டும்,

நிவர்த்தி,

வல்லாரை கோழியவரை கஞ்சாங்கோரை ஜலகிப்பூவி வேளை ஒற்றைப்பேய்ப்பிரட்டி இரட்டைப்பேய்ப்பிரட்டி துடரி சிறுபுள்ளடி இலைகளை ஓரளவாயிடித்துப் பிழிந்தசாறு படி-௧- விளக்கெண்ணெய்படி -௧ ஒன்றாய்க்கலந்ததிற் காயம் வெள்ளுள்ளி கருஞ்சீரகம் வசம்பு வகைக்கொருகழஞ்சு பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துமூன்றுநாள்கொள்ளத்தீரும்.

வாட்கணத்தின் குணம்,

சரீரமெல்லாம்வெதும்பும் நெஞ்சுதுடிக்கும் குழந்தைபகைத்திரும்பும் நாவுகருகும் வயிறெரியும் - வேறு - நாக்கில்மஞ்சளா.

யும் வெண்மையாயு மூட்களு மதினயேவில் மூன்றுவெடிப்புந்தோ ன்றும் இருமல் சளியும் மிகுந்த தூக்கமயக்கங்காணும் முகமஞ் சட்பூத்திருக்கும் உடல்வற்றும்

நிவர்த்தி

ஆமணக்கெண்ணெய் ஆவின்பால்-வகைக்குப்படி-க-நேர்க்காய் நெல்லிச்சாறுபடி அரைக்கால் அதிமதுரம் கடுக்காய் தான்றிக்கு விதையுகாந்ததேவர் துளசி தூதுவேளை வகைக்குப்பலங்கால் இ ளநீர்விட்டரைத்துச் சேர்த்துப் பதமாய்க்காய்ச்சி இராவிற்சோறு ண்டதின்பின் ஒருகரண்டி யெண்ணெயையுண்டுறங்கக் காலையில் வயிறுசுழியுமப்பால்ஷை யெண்ணெயைக்காசெடையாய்ச் சாப்பிட் டுவரத்தீரும், முள்ளிவேர் செவ்வள்ளிக்கிழங்கு தண்ணீர்விட் டான் முசுமுசுக்கை தூதுவேளை கண்டங்கத்திரி கம்பிப்பிசின் கரு ஞ்சீரகம் நற்சீரகம் திருநூகள்ளிவேர் மணித்தக்காளி பூவிவச ம்பு வகைக்கு விராகனெடை -க- நல்லெண்ணெயிற்போட்டுப்ப தமாய்க்காய்ச்சி உள்ளுக்குக்கொடுத்து மேலினும்பூசத்தீரும்,

கொதிப்புக்கணத்தின் குணம்,

நெஞ்சம் விலாவுங்கொதிக்கும் நெற்றிவியர்க்கும் பஞ்சுபோ ல்கண் வெளுக்கும் இருமல்தலைவலிகாணும் குழந்தைகுரல்கம்மும்

நிவர்த்தி.

ஆமணக்கெண்ணெ எலுமிச்சம்பழம் இலந்தை கருள்ளி வகைக் குச்சாறுபடி-ல-கருஞ்சீரகம்பலம்-ல-கற்றாழஞ்சோறுபலம்-க-ஒ ன்றாய்க் கலந்துகாய்ச்சி கற்றாழஞ் சோறு சிவந்தபதத்தில்வடித்து அந்திசந்தி காற்கரண்டிவீதங்கொள்ள சனை-டு-அ-அதிசீரம் அதி திவெட்டை மேகசுரம் பித்தவெட்டைதீரும், சிறியோருக்கும் பெரியோருக்கு முபயோகப்படுத்தலாம்,

அந்தககணத்தின் குணம்,

மூளையிற் கணமேலிடு யுடல்வெதும்பும் நாவுலரும் விழிவெளுக் கும் முகம் மஞ்சணிறமாயிருக்கும்.

நிவர்த்தி.

சிறுகீரை காணி பூலா அவுரி இலைகளில்வேர் தேற்றுவிரை-க டுக்காய் வகைக்குப் பலம்-க-அரைத்து ஆவின்வெண்ணெயில்வே களைத் தவடித்து மூன்றுநாட்கொடுத்து ஷைமருந்துகளை முலைப் பாலில் அரைத்துத்தலையிற்பூசிவரத்தீரும்.

மந்தாரகணத்தின் குணம்

வயிறுளைதி சுரம் மயக்கம் சுவாசங்காணும்.

நிவர்த்தி.

நாயுருவி-கரிசலாங்கண்ணி-வல்லாரை-தும்பை-கண்டங்கத்திரி-நொச்சி-இவைகளின்சாறு வகைக்குப்படி(௨)விளக்கெண்ணெ படி(௧)வெள்ளுள்ளி-திரிகடுகு-திரிபலை-வகைக்குப்பலம்(௧)இலவங்கப்பூ-வசம்பு-வகைக்கு-விராகனெடை(௨) பொடித்துப்போட்டுச் சிவந்தபதமாய்க்காய்ச்சிவடித்துக்கொடுக்கத்தீரும்.

எரிகணத்தின்குணம்,

உடலாதியந்தமும் எரியும் வாய்வழி சுவாசம்போகும் வாய்நீர்வடியும் குழந்தையலறியழும் நித்திரைகொள்ளாது,

நிவர்த்தி.

தென்னங்குரும்பை தகரை வகைக்குச்சாறுபடி(௨)பழம்பாசி-குமரி-மஞ்சணத்தி-ஈருள்ளி-இவைகளின்சாறு விளக்கெண்ணெ வகைக்குப்படி(௧)ஏலம் - இலவங்கப்பட்டை கோஷ்டம் நற்சீரகம் சந்தனம்-அதிமதுரம்-வகைக்குக்கழஞ்சு(௨)பொடித்து ஒன்றாய்க்கலந்து பதமாய்க்காய்ச்சி ஒருகாசெடைகொள்ளத்தீரும் மற்ற கணங்களுந்தீரும் இச்சாபத்தியம்.

ஆமகணத்தின்குணம்-இதுவேசீதகணம்.

சாமந்தோறுமுடல்வெதும்பி நாளுக்குநாள் தேகம்வற்றும் தாகமிகும் பசி மந்திக்கும் வயிறுபொருமி இளைத்துக்கழியும் சுவாசம்மிகும் கால்குளிரும் குழந்தை கண்விழியாது அயரும் திடுக்கிட்டெழுந்து சீறியழும் மூக்குயரும் புருவஞ்சுழிக்கும்,

நிவர்த்தி,

இண்டம்வேர்த்தண்டுச்சாறு படி-௧- குமிழ் மாசிப்பத்திரி புங்கு நிலத்துளசி உள்ளி மூடக்கொத்தான் ஆதளை நுணா வல்லாரை கஞ்சாங்கோரை இவைகளின்சாறு வகைக்குப்படி-௧-விளக்கெண்ணெய் படி-௧-ஒன்றாய்க்கலந்ததிற் சாதிக்காய் ஏலம்கிராம்பு கடுகுரோகணி கடுக்காய் வால்மிளகு ஓமம் வசம்பு சுக்கு வகைக்குப்பலம்-௧- வறுத்துப்பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்தொருகரண்டியிதம் அஞ்சுநாள்கொடுக்கத்தீரும்.வேலிப்பருத்திகோழியவரையிலை பொடுதலை கள்ளி சிவதை இவைகளின் வேர் வெளிச்சிப்பிசின் வசம்பு உள்ளி கடுகுரோகணி சீரகம் கருஞ்சீரகம் வகைக்கொருகழஞ்சுதட்டி ஆமணக்கெண்ணெயும் வெள்ளாட்டுப்பாலும் ஒன்றாய்க்கலந்து அதிற்போட்டுக்காய்ச்சி வடித்து மூலைக்காம்பிற்றடவி குழந்தைக்கு மூலைகொடுக்கத்திரும் இச்சாபத்தியம்.

நீராமகணத்தின்குணம்.

கண்ணீருஞ் சீழுமாயும் பச்சை மஞ்சள்போலும் குழந்தைக்கழியும், கண்ணில் நீரும் பீளையும்வடியும் மயக்கமுங் கடுப்புங் காணும்.

நிவர்த்தி.

எலுமிச்சங்காய்ப்பிரமாணம் ஆவின் வெண்ணெயைச் சட்டியிலுருக்கி மலைத்தக்காளி கொட்டைப்பாக்களவு அரைத்துப்போட்டெரித்து பதத்திலிறக்கி ஒருகாசளவு ஐந்துநாள்கொடுக்கத்தீரும் பெரியபிள்ளைகட் கொருதுட்டெடை கொடுக்கவும்.

பேராமகணத்தின்குணம்.

கைகால்குளிரும் கண்வளையமாகும் சரக்காயுங் குழந்தைவாந்திபண்ணும் திமிக்கிட்டேங்கும் வயிறுபொருமிக்கழியும் சோறும் முலையுங்குது சீறிவெருவிப்பார்க்கும்.

நிவர்த்தி.

தும்பை-பொடுதலை-சொழுக்குசி - இலைகளின்வேர் திப்பிலி சீரகம்-ஓமம்-இந்துப்பு-ஓர்நிறையாய் தாழி ஆவின்மோரிலரைத்து கலக்கிக் காய்ச்சிக்கொடுக்க வாயு பேராமகணந்தீரும்.

முக்குகணத்தின்குணம்.

குழந்தை படுக்கை வார்த்திபண்ணும் முலையுண்ணாது சோறும் மலத்திலிரத்தம்விழும் நாக்குவெளுக்கும்-சுரம்-தலைவலி-நடுக்கம்-வாந்தி-நாவரட்சி-தாகக்காணும் சந்துப்பொருத்துகள் உளையும் மூக்கிச் சீழுமலமுமாய்க்கழியும் ஆசனவாய்கடுத்துத் திப்பொலெரியும் அடித்தள்ளும் மேனிகறுத்து வற்றும்,

நிவர்த்தி.

குமரிச்சாறு முலைப்பால்-வகைக்குப்படி(௧)எலுமிச்சம்பழச்சாறு படி அரைக்கால்-விளக்கெண்ணெய்-படி(௧) வில்வம்-விளாமிச்சு-வித்துக்காந்தி-முத்தக்காசு-நிலத்தாமரை முருங்கைவித்து அரிசிவித்து-கோங்கிலவம்பிசின்-ஆவாரைப்பிசின்-கோஷ்டம்-அதிமதுரம்-அக்கிராகாரம்-தாளிசபத்திரி வகைக்கொருபலம் வறுத்திடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒருதுட்டெடை வீதம் மூன்றுநாள்காலையிற்கொடுத்து மாலையில் இளநீருட்டுக் குளைக்க கண்டங்கண்டமாய் நறுக்கி ஊறிக் காய்ந்தபடி கன்னார்வாங்கி அதிற்சீரகத்தைப்பொரித்துப்போட்டு வற்றவைத்து மூன்றுநாள்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்,

எருமைவைகழுவின கற்றாழஞ்சோறு வெந்தயம் எலுமிச்சம்பழச்சாறு ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

மூலகணத்தின் குணம்.

வாதபித்தமதிகரித்து குழந்தை மிக இரத்தமாய்க்கழியும், ஆசனங்கடுத்துவலியும் காய்ச்சல் வயிற்றிரைச்சல் விடாத்தாகம்வலிகாணும் முகங்கருகுஞ் சிவக்கும் அடிக்கன்னும்.

நிவர்த்தி.

சீரகம்-அதிவிடையம்-கடுக்காய்-சுக்கு-பறங்கிப்பட்டை-கசகசா-சந்தனத்தூள்-சாதிப்பத்திரி-நெல்லிவற்றல்-சிற்றாமுட்டி-செம்பரித்தி-வில்வம்-விளாமிச்சு-இவைகளின்வேர் வகைக்குப்பலம்(க) கற்கண்டு பலம்(உ) பொடித்து ஐந்துபல ஆவினெய்யிற்போட்டு லேகியஞ்செய்து பாக்களவு ஏழுநாள்கொடுக்கத்தீரும்,

பழம்பாசிசமூலம் வெள்ளாட்டுப்பாலிற்போட்டுக் காய்ச்சி வெந்தபின்வடித்து அதிலொரு எலுமிச்சம்பழம் பிழிந்துகொடுக்கத்தீரும்.

அதிமதுரம்-சீரகம்-ஏலம்-பெருமரத்துப்பட்டை இவைகளை யோர்நிறையாய்க் கருவேலம்பட்டை யொழுத்தி லரைத்து வெள்ளாட்டுப்பாலிற்கொடுக்கத்தீரும் இம்மூன்றும் இச்சாபத்தியம்.

கணங்களுக்குப் பொதுப்பிரயோகம்.

வேப்பெண்ணெய்படி(௩)சங்கிலைச்சாறு பாவட்டைச்சாறு முசுமுட்டை-வகைக்குப்படி(௩)ஒன்றாய்க்கலந்து அதில் சுக்கு-திப்பிலி-வசம்பு-மிளகு-நற்சீரகம் - கருஞ்சீரகம் - கஸ்தூரிமஞ்சள் வெள்ளைப்பூண்டு வகைக்குவிராகனெடை(௪)பொடித்துக் கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித் தொருதுட்டெடைகொடுத்துவரத்தீரும்-பத்தியம் வெந்நீர்ச்சோறுசாப்பிடவும்.

வேப்பெண்ணெய் படி(௧)குட்டிவிளா துளவேளை நாய்வேளை இலைவள்ளிவேர் சீரகம் கஸ்தூரிமஞ்சள் வெண்காயம் சிற்றரத்தை மாமஞ்சள் வகைக்கு விராகனெடை(௨)தட்டிப்போட்டுக்காய்ச்சி யொருகரண்டிவீதங்கொள்ளத்தீரும்.

விஷசன்னி-குளிர்சன்னி-சுரம்-விக்கலுக்கு.

மஞ்சள்-சாதிக்காய்-திரிகடுகு-கிராம்பு-கடுகுரோகணி- ஏலம் நாபிக்கிழங்கு வகைக்கு விராகனெடை(௧)எலுமிச்சம்பழச்சாற்றாலொருநாளரைத்துப் பயறுபோலுண்டைசெய்து அரையாழாக்கு மாசிப்பத்திரிக்கியாழத்தில் ஒருமாத்திரையிடத் தீரும்.

விஷதோஷ சன்னியாந்தம் பித்தசுரம் வாந்திக்கு.

கஸ்தூரி கழஞ்சு(௧)குங்குமப்பூகழஞ்சு(௨)கோரோசனை கழஞ்சு(௩)முலைப்பாலால்ஒருசாமம் அரைத்துக்குன்றிபோலுண்டைசெய்து நிழலுலர்த்தி ஒருஉண்டை முலைப்பாலில்இடத்தீரும்.

வலிப்பின்வகுப்பு

விருத்தம்.

அருந்துப் பண்டத்தன்னுலேயரியமாந்தம்பற்றியேதான் ... ...*
திருந்தும்வலிப்புமயக்கமுண்டாத்திராயிசிவுபற்கடிவ ... .*

குருந்துமன்னத்தண்ணீருங் குடறச்சத்திசெல்லாது... ....*
பருந்திஞ்சன்னிபற்கிட்டும் பகர்ந்தார்முனிவர்பகர்ந்தாரே ...*

இப்பண்டங்களினால் மந்தம்பற்றிப் பலவிதவலிப்புமயக்கம் இசிவு பற்கடி பற்கிட்டல்காணும் அன்னந்தண்ணீர்செல்லாது.

நிவர்த்தி.

குதிரைநகம் மயிலிறகு மிளகு வசம்பு சுக்கு கடுகு பெயத்தி அழிஞ்சில் செம்மறியாட்டுக்கொம்பு சமனாய்ப்பொடித்துக் கம்பிளியாற்சுற்றி வேப்பநெய்யிற்றுவைத்துப் புகைக்கத்தீரும்.

குதிரைவாலி சமூலஞ் சிறுபுள்ளடி சமூலம் தைவேளைசமூலம் வெள்வேல்-விடத்திலை-முருக்கை இவைகளின்பட்டை வகைக்குப் பலம்(௨)ஆமைமோடு-பூண்டு-வசம்பு வகைக்குப்பலம்(௧)இவைகளை நறுக்கி ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி ஒருதுட்டெடை உள்ளுக்குக்கொடுத்து மேலிலும்பூசத்தீரும்.

மாந்தவலிப்பு-காக்கைவலிப்புக்கு.

கொடிவேலி-சங்கு-எருக்கு-இவைகளின்வேர்ப்பட்டை குங்குமப்பூ வகைக்குவிராகனெடை(௧) மைபோலரைத்து வெந்நீரிற் கலக்கி வடிகட்டிக்கொடுக்கத்தீரும்.

காக்கைவலிப்புக்கு.

கொழுஞ்சி-தழுதாழை-நிலவேம்பு - மிளகரணை இவைகளின் வேர்-வசம்பு-திப்பிலிமூலம்-காக்கையின்பித்து-கொழுப்பு - முட்டை இவைகளைப்பொடித்து விளக்கெண்ணெயிற்போட்டுக் காய்ச்சி வறுத்துப்பொடித்த ஓமம் வெண்காரம் உள்ளி வகைக்குப்பலம்(௪)நறுக்கிச்சேர்த்திறக்கி யொருகரண்டிவீதம்ஆறுவேளைகொடுக்கத்தீரும்-இச்சாபத்தியம்.

சளி இருமல்-சக்கல்-காய்ச்சல்-விஷசுரம்-விச்சுளி வலிப்பு-சன்னி-தோஷம்-வயிற்றுப்பொருமலுக்கு.

சாதிக்காய்-கிராம்பு-ஓமம்-கரியசீரகம்-சுக்கு-திப்பிலி-கஸ்தூரிமஞ்சள்-வசம்பு-காயம்-வெள்ளைக்காக்கணம்வேர்ப்பட்டை-சமனாக்கூட்டி வெந்நீராலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணமுண்டை செய்துலர்த்தி மேற்படிநீரிற் குழந்தைகட்கு மூன்றுநாள்கொடுக்கத்தீரும், பேதியதிகப்பட்டால் வசம்பைச்சுட்டுநீரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

பிறஇசிவுக்கு.

தும்பை-துளசி-இஞ்சி இவைகளினிலைகளைச் சரியெடையாய்ப்பிழிந்து அரைத்துக் சமர்சிக்காயளவு சிற்றாமணக்கிலையில்வைத்

துச்சுருட்டி இளகவெதுப்பிச் சாறுபிழிந்து காசளவாய் மூன்று வேளை கொடுக்கத்தீரும்.

கழிச்சல்வகுப்பு.

விருத்தம்.

சொல்லுகிறேன்கழிச்சல்வகைதோஷித்தன்னைச்......*
சுழிமாந்தக்கழிச்சலெனச்செப்பலாகும்... ......*
வெல்லுகிறேல்பாற்கழிச்சல்வரட்கழிச்சல்... ... ...*
விருணவாந்தியின்றன்கழிச்சலாகும்............... *
புல்லுகிறேன்கணக்கழிச்சல்மாந்தக்கழிச்சல். ....*
புகழான ஆமத்தின்கழிச்சலாகும்... ....*
கொல்லுகில்றசலக்கழிச்சல்வெப்புக்கழிச்சல் ... ..*
கூருணாத்தத்தின்கழிச்சலாமே... ....*

ஆமேதான்அதிசாரக்கழிச்சலாகும்...... ... .*
அப்பனேபொருமலின்கழிச்சலாகும்...... ......*
பேரமேதான்சிதரத்தக்கழிப்புமாகும்...... ....*
பொல்லாதகழிச்சலென்றநாமமெய்துப் ....*
தாமேதால்பச்சிலைக்கழிச்சலாகும்... ....*
சார்வானவிடாக்கழிச்சல்சாற்றலாகும்...... ......*
தாமேதான்சொன்னேமேகழிச்சல்மார்க்கம்........*
தவின்றிட்டார்பாலருக்குதவின்றிட்டாரே..........*

கழிச்சல்தோஷித்திற்கு.

உப்பிலியின்பூண்டை நறுக்கி ஆவினெய்யிற்போட்டு நாலு சாமம் வெயிலில்வைத்துக்கொடுக்கத்தீரும்.

மாந்தக்கழிச்சல் மாந்தகன்னிக்கு.

களலிற் சட்டியைக்காயவைத்து ஒருசிரங்கைஉப்பைப்போட்டுச் சாம்பலாக்கிக் கொட்டித் துடைத்துப்போட்டு ஒருசேர் வசம்பைப்போட்டுக் கருக்கித்தீப்பற்றிவெகும்போது ஒருபிடிவேலிலை மூன்றுஅறுப்பாய்ச்செய்துபோட்டுப் பொன்னிறமாய்வறுத்துப் பின்னும் அகாச்சொரங்கை நீர்தெளித்துச் சுண்டுமட்டும் வறுத்துப் பின்னும் இந்தப்படி இரண்டுவிசை நீர்தெளித்துச்சுண்டவறுத்ததின்பேரில் ஒருபடிநீர்விட்டு எட்டொன்றாய் வற்றக்காய்ச்சி இறக்கி ஒருசங்குகொடுக்கத்தீரும்.

கழிச்சலுக்கு,

கோரோசனை-களிப்பாக்கு-சீரகம்-காசுக்கட்டி இவைகளைச்சமமா யெலுமிச்சம்பழச்சாறுவிட்டரைத்துப்பாக்குப்பிரமாணம் மூன்றுப்பாலிற்கலாத்துக்கொடுக்கக் கழிச்சல் உடனே தீரும்.

நாய்வேளையில்-வசம்பு-பூண்டு-இலைகளைத் தட்டிவெதுப்பிச் சாறுபிழிந்துகொடுக்கத்தீரும்.

சருள்ளி-வேலிப்பருத்தியிலை-முடக்கொத்தானிலை இலைகளைச் சமமாய்வெதுப்பிச் சாறுபிழிந்து ஒருதுட்டெடை கொடுக்கத்தீரும்-இச்சாபத்தியம்.

மாவிலிங்கு-சங்கு-செம்முள்ளி-வேலிப்பருத்தி - பொடுதலைவேளை இவைகளை யோர்நிறையாய் எலுமிச்சங்காய்ப் பிரமாணம் எருமைவெண்ணெயில் வேகவைத்துக்கொடுக்க நிற்கும்.

நீர்க்காய்நெல்லிவேரை ஒருகொட்டைப்பாக்குப் பிரமாணம் அரைத்து முலைப்பாலிற்கொடுக்கத்தீரும்,

பால்போற்கழிவதற்கு,

பிரண்டையிலை(௫)பெருந்தும்பையிலை (௫) இலைகளைக் காண்டியில்வெதுப்பி முலைப்பால்விட்டுத்தட்டிச் சாறுபிழிந்து அதில் கோரோசனை-கருஞ்சீரகம்-கஸ்தூரிமஞ்சள் வகைக்கிரண்டுநெல்லிடைபொடித்துப்போட்டு மூன்றுபோதுகொடுக்கத்தீரும்,

கழிச்சல் சாத்திற்கு,

அதிவிடயம்-சாதிக்காய்-சாதிப்பத்திரி-அபினி-கடுக்காய் - தான்றிக்காய்-மிளகு-நற்சீரகம்-கருஞ்சீரகம்-வகைக்கு விராகனெடை(௨)ஏலம்-விராகனெடை(௪) மாதுளந்தளிரும் அத்திப்பட்டையும் கியாழஞ்செய்து அதனால் ஷெமருந்துகளை அரைத்து அடைபோற்றட்டி அரசிலையிற்கட்டி சட்டியில்வைத்துஷெகியாழத்தைக்கொஞ்சங்கொஞ்சமாய்வார்த்து வேகவைத்து அப்பால்இந்தப்படியே பத்துவிசை மேற்படிமருந்தை மைபோலரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து வடிகட்டின எருமைத்தயிரிற் கொடுக்கக்கழிச்சல்தீரும் வெந்நீரிற்கொடுக்கச் சுரந்தீரும்,

கழிச்சல்-சுரம்-வரட்சிக்கு.

இலந்தை நாரத்தை புளிசணைப்பூண்டு-நெல்லி- இவைகளின் ர்க்குகளைச் சமனாய்க் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

கழிச்சல் இருமலுக்கு.

ஆடுதின்னாப்பாளை சமூலம்-சிறுதேக்கு-அதிமதுரம்-வசம்பு சுக்கு-மிளகு-கடுக்காய்-நெல்லிக்காய்- தான்றிக்காய் - அதிவிடயம் கோஷ்டம்-முத்தக்காசு-வகைக்குக்கழஞ்சு (௧) நறுக்கி இப்பூராச்சாறு ஆவினெய் வகைக்குப்படி (௧) ஒன்றாய்க்கலந்து காய்ச்சிக்கொடுக்கத்தீரும்,

கழிச்சல்வாந்திக்கு,

நெல்லி-மா-அத்தி-அரசு-இவைகளின்பட்டை-பருத்திப்பருப்

படி மேற்படியிருக்க அத்திக்கனிர் வகைக்குவிராகனெடை(௧) தந்
இக் கியாழஞ்செய்துகொடுக்கத்திரும்,

கழிச்சல்-இருமல்-வாந்திக்கு,

வெளிப்பரித்திச்சாறு-சருமை வெண்ணெய் வகைக்குப் (௰)சருஞ்சீரகம் சமஞ்ச(௧)அரைத்துப்போட்டுக் கலந்து காய க்கொடுக்கத்திரும்,

மாந்தக்கழிச்சலின்குணம்,

வாந்தி-சோர்ந்தி-மூர்ச்சை-மேனியில்வெளுப்பு-கால்கை குளிர்ச்சி-கனிசாறும்-பலவிதமான மலக்கழிவும் வாயுவரும் கு கம்முமாம்,

நிவர்த்தி,

வேலை-சயவேலை-வெளிப்பரித்தி-குப்பைமேனி இவைக ளிலை அசத்திப்பழுப்பு-வசம்பு-வெள்ளுள்ளி-இவைகளைத் தட்டி சாறுவாங்கி துட்டெடை உள்ளுக்குக்கொடுத்து மேலிற்றுவாகிய டத்திரும்,

சனக்கழிச்சலின்குணம்,

சீதமாயும்-மலமாயும்-கெட்டபாலும்-சித்தன்னீர் போது ம் பிரவிர்த்தியாகும், கைகால் குளிரும் காதடைக்கும் உடல் வெ [illegible]

நிவர்த்தி,

சருள்ளி(௰)சருவேலீர்க்கு ஒருபிடி சீரகம்விராகனெடை(வெந்தயம் விராகனிடை(௨)இவைகளை வறுத்துக் கியாழம்வைத் க்கொடுக்கத்திரும்,

மூக்குரட்டை-சாரணை-முடக்கொத்தான்-மூத்தெருக்கஞ் வி-முசுமுசுக்கை-இவைகளின்சாறு படி (௧) செப்புநெருஞ்சி சாறு-விளக்கெண்ணெய் வகைக்குப்படி(௧)மயிலிறகு பலம்(௧) இவை களையெல்லாம் கலந்து காய்ச்சிவடித்துக்கொடுக்கத்திரும்,

ஆமக்கழிச்சலின்குணம்,

பாலேத்தெறிக்கும் வயிறிரையும் இரத்தம்விழும் சலங்க ம் குரல்கம்மும் கால்கை குளிர்ந்திருக்கும்.

நிவர்த்தி

சோற்றுக்கற்றாழை அதிகெடுத்த சாதிக்காய்-௧-பூரம்விராகன் - இவைகளை ஒருபால் சிற்றாமணக்கெண்ணெயில் அரைத்துக்கலக்கி கொண்டு வேளைக்கொருசமயம் கொடுக்கத்திரும்

சலக்கழிச்சலுக்கு,

செங்குன்றிப்பருப்பு புளியவிரைத்தோல் அத்திப்பால்

ருமை வெண்ணெய் வகைக்குக்கழஞ்சு (௧) மைப்போலரைத்து
க்கொடுக்கத்தீரும்.

வெப்புக்கழிச்சலுக்கு.

அரிமதுரம் அதிவிடையம் சாதிக்காய் மாதுளம்பூசீரகஞ்சு
ண்டிப் புளியாரைச்சாற்றி லரைத்துத் தாதுளங்காய்ப்போல்
டைசெய்துமாதுளம்பழச்சாற்றிற்கரைத்துக்கொடுக்கத்தீரும்.

இரத்தக்கழிச்சலுக்கு

நாவற்பிசின் சாறும் இளநீரும் வெள்ளைச்சர்க்கரையும் சம
லத்து அரிசிக்கஞ்சு சீரகம் [illegible] ப்பொரித்ததூள்கலந்து
குடிக்கத்தீரும். சீரகம் கொ[illegible]னையிலிஞ்சியிருக்கா
ய்த்தலியவர் சமனும் வெந்நீர்விட்ட[illegible]த் தாலியித் தழுநி
லவுகொடுத்துப்பத்தியந்தயிருஞ்சோறுமுண்ணத்தீரும்.

பொருமல்கழிச்சலுக்கு.

இலைமோடி அதிவிடையம் அசமதாகம் வட்டத்திரிப்பி
ராவட்டை யின்றுகக்கு சமனும் வெந்நீர்விட்டரைத்துக் குன்றி
போதுளைசெய்து கொதிதண்ணீரிலாவது மூலப்பாலிலாவ
து கொடுக்கத்தீரும்.

அதிசாரக்கழிச்சலுக்கு.

கோரைக்கிழங்கு கொத்தமல்லி வில்வவேர் திப்பிலி வில்வப்
பட்டை சிறுநாகப்பூ சமனுந்தூக்கிப் பொடிம்வைத்துத் தேன்வி
ட்டுக்கொடுக்கத்தீரும்.

காட்டாத்திப்பூ கருங்காலிவேர்த்தோல் திப்பிலி வில்வம் ச
மனுப்பொடிம்வைத்துத் தேன்விட்டு சங்களவுகொடுக்கத்தீரும்.

அத்திக்காயின்சாற்றால் மூத்தையரைத்துத் தயிரிற்கலந்து
கழற்சியளவுகொடுக்கத்தீரும்.

வயிற்றிரைச்சல் விஷசூலைக்கடுப்பு கழிச்சல் அதிசாரத்திற்கு.

அதிவிடையம் கோஷ்டம் இராம்பு மதுரம் இலவங்கப்பிசின்
ராம்பிசின் சாதிக்காய் சாதிபத்திரி சடாமாஞ்சி சதிரைக்கடப்
பட்டை ஓரிலைதாமரை மாதுளம்பழத்தோல் [illegible] நெருஞ்சி
ல் மேற்சாணம்பூசிக் காயவைத்துக் கருமமற்றுப் பிட்டெடுத்து
அதைக்கஞ்சாச்சாற்றாலரைத்துக் குன்றிபோ லுண்டைசெய்து தல
க்கிக்கஞ்சா தெல்லுக்கு தரும்பை தென்னம்பூ வாழைப்பூ இவை
களின் சாற்றிலாவது தேன் தயிரிலாவது கொடுக்கத்தீரும்.

சீதரத்தக்கடுப்புக்கழிச்சலுக்கு.

புளியிலைவேர் சீரகம் ஆலம்பஞ்சாக்கம் வகைக்கு ஒருபிடியி
டித்து ௪-படி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து குன்றுமட்டு

வுங்கோரோசனையுமரைத்துக்கலக்கி ஒருசங்குவீதம் மூன்றுநாள் கொடுக்கத்தீரும்,

பச்சிலைபோற்கழிவதற்கு,

ஏலம் சாத்திரம்பேதி மதுரம் வசுவாசக்குவிசாகலிடை - உ-நீர்ச காரத்தண்ணீர்விட்டரைத்து மூன்றுநாள்கொடுக்கத்தீரும்,

முட்டையுடைத்தாற்போலும் கெட்டபால
போலுங்கழிதலுக்கு

உத்தாமணிபிஞ்சு-ஐந்து சிற்றவணாயிலை ஐந்து உள்ளிப்பூடு ஈ- எருமைவெண்ணெய் இவைகளை இலேகியக்காய்ச்சி இரத்த முலைப்பாலோடேகுளுக்கிமூன்றுநாள்கொடுக்கத்தீரும்,

விடாக்கழிச்சலுக்கு

சாதிக்காய் அபின்விடையம் சாதிப்பத்திரி ஆபினி சமனுபேத யெண்ணெய்விட்டரைத்துத் தினம்ஒருபணவிடை முலைப்பாலி ற்கொடுக்கத்தீரும்,

சகலகழிச்சலுக்கும்,

சாதிக்காய் சாதிப்பத்திரி இலவங்கம் ஏலம் அதிமதுரம் அதி விடையம் அபின் கஞ்சா குரோசானி முத்தக்காசு வெந்தயஞ் சீரகம் சிறுநாகப்பூ புளியாரை காட்டாத்திப்பூ மாதுளம்பிஞ்சு வாழைப்பூ சமனுக்கூட்டிப்பிடித்து ஆவின்பாலிற்பிட்டவியலா யவித்தெடுத்து வாழைப்பூச்சாற்றிலாவது மாதுளம்பழத்தின்சா ற்றிலாவது அரைத்து மிளகுபோல் ஆண்டைசெய்து சர்க்கரையிற் கொடுக்கத்தீரும்,

புளியாரை-வாழைப்பூ-சமனுபிடித்துப் பிட்டவியலாக அவி த்துச்சாறுபிழிந்து தேன் ஒருஅவுன்ஸ்விட்டுக்கொடுக்கத்தீரும்,

அட்சரக்குப்பு,

சொல்லுமட்சரவகுப்புதன்னைச்சுருட்டிப் நீதிகுளியென ... .*
மன்னேசோதிவீபியெனவருத்தகுண்டிகபாலியெனப்... ......*
பொன்னேகுமரியுள்ளவட்சரம்போற்றுந்தெள்ளுகையதெட்டாமே *
அன்னேவகுப்புநாழுகைத்தோர் அன்றத்தோமாந்தர்க்கிதுவாமே.

நீதி-குளி-சோதி-வீபி-குண்டி-கபாலி-குமரி- உன்அட்சரங்கள் (அ)

ஆலிஅட்சரத்தின்குணம்,

சாக்காயும்-இடைவிக்கும் நாவுலருத்துவெர்துபல்லுமி வெள்ளாவிபோல் நாறும் வாய்நீர் பிசவொழுகும் வார்த்தவெள் ளோக்காளங்காணும் உடல் எறுக்கும்.

நீதிஅட்சரத்தின்குணம்,

உடல் குளிரும் தலைவலிக்கும் சாக்காடும் வாய்சசக்கும் கா ரும் நாவுவெத்து மாய்போலிருக்கும் நெஞ்சுகரிக்கும்,

சோரி அட்சரத்தின்குணம்,

மூத்ருகும் வயிறுமெரியும் தலைவிடிக்கும் கண்ணெரிச்சல்தோருகும் சரங்காயும் நாக்கும் பல்லும் அழுக்குநிறமாயிருக்கும் வயிறழி யும் வாந்திபண்ணும்.

ஸ்ரீயட்சரத்தின்குணம்,

நரல்தொந்து-சுரம் மயக்கம்-குளிர்-தலைவலி- தாகங்காணும்- உடல்கறுக்கும்,

குண்டியட்சரத்தின்குணம்,

உடல்தொத்துகம்பிக்கும் வாய்கூசம் நாவெவறுத்துபிசுக்கும் வ யிறழியும் நெஞ்செரிக்கு வாந்திபண்ணும் இருமல் தாகம் மிகு ம் சரலவில்லாதோருகும்,

பரலிஅட்சரத்தின்குணம்.

உடல்கனக்கும்-வலிப்பெடுக்கும்-சரங்காயும்-நெஞ்சம்- தலை யுங்வலிக்கும்-நாவு-தொண்டை-குடல்-சரல்-புண்ணுரும்- பேதிகா ணும்,

குமரிஅட்சரத்தின்குணம்,

நாவுசக்கும்-கூசம்-தடிக்கும்-அழுன்று வெடித்து விதனமு ண்டாம்-சரங்காயும்-இரத்தமாய் வயிறுபோகும் இருகண்ணும் சொந் நலித்து வாத்திக்கும் உண்ணாக்குவளரும் பல்பசுமையாயிருக்கும் மூக்கில் இரத்தம்வடியும்,

அட்சரத்தின்பொதுக்குணம்,

உடல்குளிரும் தலைவலிக்கும் நாணுபிசுக்குமடிக்குந்தித்கும் கு லையும் நாவுந் தொண்டையும் உத்துமபுண்ணுரும் நாவு வெளுக்கு ம் நாசியில் நீர்வடியும்,

இவைகட்கு நிவர்த்தி,

கருஞ்சீரகம் கோரோசனை கடுக்காய் காட்டுமேல்கிரைவேர் வசைக்குலிசகன்(உ)இலைப்பட்டிசொருந்தொருப்பிடி உள்ளிபலம்(உ) குங்கிலியப்பால்படி மசகாணி திராக்ஷைக்கண்ணாடி அரைக்கால் இவை களைதுக்கி எண்ணெயிற்சேர்த்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித் து அதில் கோரோசனை விராகனெடை(உ)பொடித்துப்போட்டுக் கம்பத்தியமாய் காண்டிதினாகொடுக்கத்தீரும்,

குண்டியட்சரத்தின்குணம்,

அரைக்குமேல் சரங்காயும் மீன்போந்தேகம் வெளுக்கும் ம ஞ்சள்நிறமாய் நீரிறங்கும் ஆசனவாயிற்சுருக்கென் றவலிக்கும் உட ம்பிளைத்துக் கப்பாகும் தொண்டைவலிக்கும்,

நிவர்த்தி,

வெண்டைவேர்-திப்பிலிக்காய்சமனுயரைத்து ஆவின்வெண்ணெ யிற்கலந்துகொடுத்தாலும், கரிப்பானும் சீரகமும் அரைத்துப்பா க்களவுகொடுத்தாலுந்தீரும்,

உள்வாட்சாத்தின்குணம்,

மூக்கில்நீர்வடியும் முகமும்நாக்கும் வெளுக்கும் நாக்கில்நு விதோன்றும்-தாகம்-சுரம்-தண்ணீர்த்தாகமிகுந்திருக்காலும்,

நிவர்த்தி,

அதிமதுரம் பூலாத்திப்பழம் வகைக்குவிராகனெடை(க)மூங்கி ப்பால்வார்த்தரைத்துநிற்கரைத்து(ல)படி பசுவின்னெய்யிற் கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சி பொருவிராகனெடை நெய்கொடுக்கத் தீரும். இவைகள் இச்சாபத்தியம்.

சோகைவகுப்பு.

வாதசோகைக்குணம்.

சோகையனுருக்கும்போது சரீரமும் தாகமதிகப்படும் சிலசி ல் நீர்க்கொண்டு தலைவலி களைப்பு சோபம் கைகால் அசதிகாணு ம் தேகம்தழர்க்கும் உதடுவெளுத்துவெடிக்கும் முகம் மேலுறுப்பும் பசிமந்திக்கும் மூலத்திற்கடுப்புக்காணும்.

நிவர்த்தி.

விளக்கெண்ணெய்படி(க) கருஞ்சீரகச்சாறு வெள்ளருகிச்சா று கழுநீலத்திச்சாறு கள்ளிவாட்டிப் பிழிந்தசாறு வகைக்குப்ப டி(உ)ஒன்றாய்க்கலந்ததில் வசம்பு கருஞ்சீரகம் ஓமம் கஸ்தூரிமஞ் சள் கடுக்காய் கடுகுரோகணி,அரத்தை சோமநாதப் பெருங்காய ம் மிளகு-திப்பிலி-வகைக்குவிராகனெடை (ங) இவைகளைப்பொடித்து ப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித் தொருகரண்டி வீதங்கொடுக் கத்தீரும்.

அசப்பொடி-காந்தம்-வகைக்குவிராகனெடை (ம) சாதிலிங்க ம்விராகனெடை(கஉ)எலுமிச்சம்பழச்சாற்றிலும்நாவற்பட்டைச் சாற்றிலும் தனித்தனியே மூன்றுநாளாட்டிக் கட்டுசெய்துகொ ண்டு இரண்டுபணவிடை நல்லெண்ணெயிலரைத்துண்ணத்தீரும்.

பித்தசோகைக்காமாலைக்குணம்.

பித்தநீர் அதிகரித்துச் சரீரமுழுதும் கண்வெளுக்கும் களைப்பு அசதிகாணும்.

நிவர்த்தி,

கையாந்தகரை நீர்முள்ளி, நாயுருவி இலைகளிசசில் வேர் கத் ரு மிளகு சீரகம் பலம்விதம்பெய மஞ்செய்து அந்திசந்தி அளாயா மாக்குகொடுக்கத்தீரும்.

ஓமம் அரப்பொடி யோர்நிறையாய்க் கரிப்பான்சாற்றில் மூ ன்றுநாளரைத்துத் தேற்றுவிதைப் பிரமாணம் உண்டைசெய்து மேற்படி யெழுத்திலாவது எலுமிச்சம்பழச்சாற்றிலாவது ஒருச ன்றுகொடுக்கத்தீரும்.

உஷ்ணகாமாலைக்குணம்.

முகங்கால் அதைக்கும் பசித்தவுடன்மயக்கிக்கும் எரம் காத டைப்பு இளைப்புக்காணும் நாவுடன்றெருகும் கைகால்சோரும்.

நிவர்த்தி.

கொட்டம் அரப்பொடி வெள்ளைப்பூண்டு முருங்கையிலை கரிப் பான் முத்திலை தேங்காய்ப்பருப்பு இவைகளைச் சமமாயிளநீரிலரை த்து அரைக்கழஞ்சுவீதம் இரண்டுநேரம் அரையாழாக்கு நீர்முள் ளிக்கியாழத்திலிடத்தீரும்.

மஞ்சட்காமாலைக்குணம்.

உடல்விரத்தம்வற்றி வெதும்பிக் குருப்பையாய்த்து முகங் கால்வீங்கும் மலஞ்சிக்கும் மஞ்சள்போல நீரிறங்கும் கண்வெளு த்திருக்கும்.

அதிமதுரம்-சங்கவேர்ப்பட்டை யோர்நிறையாய் எலுமிச்ச ம்பழச்சாற்றில் மூன்றுநாளாட்டித் தேற்றுவிதைப் பிரமாணம் உ ண்டைசெய்து முலைப்பாலிலாவது ஆவின்பாலிலாவது மூன்று நாள்கொடுக்கத்தீரும்.

வாதகாமாலைக்குணம்.

கண்பசந்திருக்கும் காலோயும் உடம்பலரும் தாகமிருக்கும்.

நிவர்த்தி.

மணித்தக்காளி நேர்க்காய்நெல்லி சமூலம் சமனும் எலுமிச் சங்காய்ப்பிரமாணமரைத்து அரையாழாக்கு எருமைத்தயிரிற்கல ந்துக்கொடுக்கத்தீரும்.

பாண்டு-காமாலை-சோகை-வீக்கபாகவீக்கத்திற்கு.

சுத்திசெய்த மண்டூரம் பலம் (அ) மாவிலிங்கிலை நீர்முள்ளி நீர்க்காய்நெல்லி-கரிப்பான் வகைக்குப்பலம் (உ) சிரசம்பலம் (க) எட்டேட்படி தண்ணீர்விட்டுச்சுண்டக்காய்ச்சி அடைவியுடம்பலத்துக்கொ ண்டு காலழாக்கு அந்திசந்திகொடுக்கத்தீரும்.

வில்வ இலையை ஆவின்நீர்விட்டிடித்துச் சாறுபிழிந்து காலா ழாக்கு மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

குப்பைமுள்ளி நீர்முள்ளி நுதுவளை நாகத்தைநேரச்சிறுகட் டிவிளா பிரமி கொறிசிண்ணி சமூர்சி இலைகளிவ்விலை நன்னாரிவேர் கா

வாழைக்கிழங்கு கடுக்காய் சுக்கு இவையெல்லாம் பலந்நிறையெடுத்துப் பொடியாக்குச்செய்து காலாழாக்குவீதம் மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

கடுக்காய்-சவ-யின் ருபலம் (ஆ) பரவிவிக்கப்பட்டை கழிஞ்சுக்குரு அமுக்கரு ஙகைக்குப்பலம்(த) இவைகளைச் சூரணித்து திரிகடிப்பிரமாணம் அரையாழாக்குவீதம் ஆணுக்குப் பெண்ணிலும் பெண்ணுக்கு ஆணிரிலும் கொடுக்கத்தீரும்.

நீர்முள்ளிவேர்ச்சுட்டுச் சாம்பலை நீரிற்குழைத்து வீக்கத்திற்பூசத்தீரும்.

வீக்கத்திற்கு.

நாவி-சங்கு-கரை-சிறுநெருஞ்சி குருஞ்சா நீர்முள்ளி உவ்வெண்காரம் சமனாய்ப்பொடித்துக் கியாழம்வைத்து ஒயிலிகிஷபிரமாணங்கொடுக்கத்தீரும்.

சங்கு-நெரிஞ்சி-சாரணை-கோவை-நீர்முள்ளி-நால்தி-புளியுநெல்லிபிரக்கு-வேப்பந்தோல்-கிட்டம்-கடுக்காய் அரப்பொடிஞ்சன் நன்னாரி வழுதலை கொன்றை விழுதி குமரி மணலி ஏகொடி பக்கம்பாளை செங்கத்தாரி பாதிரி குருஞ்சாபலம்வீதம் த்துமருந்துக்குத்தக்க கோசலமும் காடியும்விட்டுக் கியாழஞ்ப்துகாலாழாக்கு பெரியோர் சிறியோருக்குங்கொடுக்கத்தீரும்.

வயிற்றுநோய் சீதக்கடுப்பு-தாகம்-அசீரணம் சன்னி
சயித்தியம்-வாந்தி-பொருமலுக்கு.

வெற்றிலையில் நாட்டெடுத்து சன்னம்புபூசி மடித்துச்சட்டியிற்போட்டு நன்றாய்வறுத்து ஒருபடிநீர்வார்த்து கட்டோண்டி வடித்து சங்களவு கொடுக்கத்தீரும்.

நடுக்கல்-வாந்தி-அசீரணத்திற்கு.

அசமதாகம்-காடிச்சோறு-லசம்பு-நாருவிலை-மிளகு-பனம்கற்பொடித்துத் தண்ணீரிற்போட்டுக்காய்ச்சி சங்களவு கொடுக்கத்தீரும்.

விக்கலுக்கு.

தேற்றாவிரை-சந்தனம்-கலியாண்கொம்பு - இம்மூன்றும் ஆப்பாலிலரைத்துக் கொட்டைப்பாக்களவெடுத்து இளநீரிற்கலந்தும் பொரித்தவெண்காரமும் வெல்லமும் அரைவிராகனெடை கொடுக்கத்தீரும்.

திப்பிலிவிராகனெடை(அ) சீரகம் விராகனெடை(ம) வெருகிப்பொடித்து அத்துடன் மயிலிறகுசுட்டசாம்பலும் சமன்கூட்டித்து தேன்விட்டுமத்தித்து சுழற்சியளவுகொடுக்கத்தீரும்.

திப்பிலி கடுகுரோகணி சமனாய்வறுத்து மயிலிறகுங்கூட்டவா ம்பஞ்சவைத்து தேனிலிட்டுமத்தித்து கழற்சியளவுகொடுக்கத்தீரும்.

வேறு.

மாதுளை-நெற்பொரி-சர்க்கரை- திப்பிலியிவைபொடித்து கழஞ்சை ப்பிரமாணம் தேனிற்குழைத்துக்கொடுக்கத்தீரும்.

வாந்திக்கு.

ஏலக்கொம்பு-திப்பிலி-அதிவிடயம்-சமனாய்ப் பொடித்து க ழஞ்சைப்பிரமாணம் தேனிற்குழைத்துக்கொடுக்கத்தீரும்.

வாந்தி-ஓக்காளத்திற்கு.

வசம்பும்-மிளகும்-பஸ்பஞ்செய்து - காடிச்சோறு கூட்டிக் கஷாயஞ்செய்து சங்களவுகொடுக்கத்தீரும். மீறினால் நல்லுரிவே பட்டையை கொட்டைப்பாக்குப்பிரமாணம் மேற்படியிலா ரைத்துக்கொடுக்கத்தீரும்.

வாந்திவிக்கலுக்கு.

சோம்பு-ஏலம்-சீரகம்-வெதுப்பி-மயிலிறகுச்சாம்பல் சமன் கூட்டிப்பொடித்து கழஞ்சைப்பிரமாணம் தேனிற்கொடுக்கத்தீரும்.

வெள்ளோக்காளம்-பித்தம்-விக்கல்-சத்திக்கு.

ஏலம்-திப்பிலி-நெற்பொரி-பசித்திவிலைப்பருப்பு சமனாய்ப் பொடித்து கழஞ்சைப்பிரமாணம் சர்க்கரையிற்கலந்துகொடுக்கத் தீரும்.

மார்புச்சளி-சோலைமூக்கட்டுக்கு,

பிரண்டையைநெல்லுப்பின் சாறுபிழிந்து ஐந்துநாள் சங்கள வு இருபோதுகொடுக்கத்தீரும்,

அமரத்திற்கு,

கடுக்காயைத்தட்டித்துணியில்முடிந்து ஆமணக்கெண்ணெயி ற்போட்டுச் சூரியபுடம்வைத்து கண்ணிற்பிழியத்தீரும்,

கண்ணோய்க்கு,

கற்கண்டைப்பொடித்துத் துணியில்முடிந்து புளிப்புமாத ளஞ்சாற்றில் ஊறவைத்துக் கண்ணிற்பிழியத்தீரும்,

செவிநோயின்குணம்,

குழந்தைகள்வலிற் பீனிசாரும் கையிலுந் நல்லகைத்தேய்க் குங் குளிர்காழும் நீர்சொரந்துவாரிப் புண்டாகும்,

கீர்த்தி,

ஸ்ரீதேவியார் செங்கழுநீர்க்கிழங்கு உள்ளி வசம்பு சமனாய்த் தட்டி வேப்பெண்ணெயிற்போட்டுக் கொதிக்கவைத்துக்காதிலடை க்கச் காதுநோயெல்லாந்தீரும்,

சுறாக்கன்னியை அனலில்வெதுப்பிச் சாறுபிழிந்து காதிலடைக்கச் செவிநோய்தீரும்,

செவியிற் சீழொழுகலுக்கு,

சுக்கு-திப்பிலி-கோஷ்டம்-சயிந்தலவணம்-முத்தக்காசு - உள்ளி-பேரீச்சங்காய்-வசம்பு வகைக்கு ஒரு உளுந்தெடை எருக்கிலைச்சாற்றுலரைத்து வேப்பெண்ணெயிற்கலந்து காய்ச்சி காதில்விட்டுத் திரியடைக்கத்தீரும்,

முருங்கைவேர்-முத்தெருக்கஞ்செவியிலை-பூண்டு-வசம்பு இவைகளை யொத்தெடையாய்க் கள்ளிப்பழம்புச்சாற்றுலரைத்து நல்லெண்ணெயிலெரித்துக் காதில்விட்டடைக்கமாறும்,

காதிலீப்புகுந்தால்,

குப்பைமேனியிலையிற் சிறுநீர்விட்டுத்தட்டிக் காதிற்பிழிய ஈ செத்துவிழும், குப்பைமேனிச்சாறும் கோழியவரைச்சாறுஞ்சமனுய்க்கலந்து காதில்விட்டிடில் ஈசாகும்,

பல்லீறில்ரத்தம்வடிந்தால்,

பச்சைநன்னாரிவேரை வெந்நீரிலிட்டுக் கொட்டைப்பாக்களவரைத்து வெந்நீரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்,

முடைசாய்ந்துபோனதற்குக் குளிசமு மருந்தும்,

செவ்வலரிவேர்பிடுங்கிக் குளிசமாடி ஆண்பிள்ளைக்கு வலதுகையிலும் பெண்குழந்தைக்கு இடதுகையிலுங்கட்டிப் பொன்னாங்கண்ணிச்சாறும் நல்லெண்ணெயுங்கலந்தொருசங்கிடத்தீரும்,

பற்பல்வியாதிகளின்வகுப்பு.

நாமுன்றோஷகுணம்,

குழந்தை முலையுண்ணுது சீதமும் அனல்போற்காங்காயும் இருமல் சுபம் தலைவலி பொருமலக்கம் தலைநடுக்கம் வாந்தி வாயில் நாமுன்தோன்றும் இருவிலாவும் இழுக்கும் கண்மிரளவிழித்து நீர்வடியும் வெப்பக்ஷூப்போத்தசுழியும்.

நிவர்த்தி.

கடுக்காய் சிரகம்-வீராகனெடை (க)' பொடித்துக் கற்றுழைச்சாற்றிற்கலக்கி ஒருசங்குவீதம் மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

சங்கக்கொழுந்து நெருஞ்சிக்காய் மிளகுதக்காளியிலை மிளகு மஞ்சள் சதுள்ளி சமனுய்த்தட்டிச் சாறுவாங்கி ஒருசங்குகொடுக்கத்தீரும். மணித்தக்காளிச்சாறு அத்திப்பால் ஆலம்பால் சமன்கலந்து அட்டெடைகொடுக்கத்தீரும்.

வெத்ததாளிக்குணம்.

வாயுந்தொண்டையும் புண்ணாகி நாறும் உடல்வெதும்பும் நீர்வெந்நீர்போலிருக்கும் மலந்தியும் தித்திமையிருக்கும்.

நிவர்த்தி.

பழம்பாசி-கல்லுப்பு-நருள்ளி-சமனாயிடித்துச் சாறுவாங்கிக்கச்செய்து வெள்ளாட்டுப்பாலிற்கலந்து சீரகத்தைவறுத்திப்பொடித்துத்தூவி சங்களவுகொடுக்கத்தீரும்,

பாலுண்ணுதகுழந்தைகளுக்கு,

குக்குராட்டை-அவுரி-சத்திச்சாரணை-அருக்கநு நிலப்பனை இவைகளின்வேர் கருங்காலியில் கஞ்சாங்கோரை மிளகரணைப்பட்டை சுக்கு மிளகு திப்பிலி பறங்கிப்பட்டை அப்பாசிஷ்டகம் கடுகு சீரகம் வகைக்குவிராகனெடை (க) பசுவின்பால்விட்டரைத்து வடிகட்டி ஒருசங்குபுகட்டக் குழந்தைபாலுண்ணும் மேற்படியருந்தைச் சிறுமணைக்கெண்ணெயிற்போட்டு எரித்துப் பதத்திலிறக்கிக் குழந்தைவயதுக்குத்தக்கபடி கொடுக்கப் பாலுண்ணும்.

இளைப்பு இருமலுக்கு,

இண்டு துதுவளை கண்டங்கத்திரி வகைக்கொருபிடியிலை திப்பிலி வெள்ளைப்பூண்டு வகைக்கொருகட்டெடை ஒருபடிநீரில் தட்டிப்போட்டுக்காய்ச்சி சங்களவு அந்திசந்தி பத்துநாள்கொடுக்கத்தீரும்,

துதுவளை-கண்டங்கத்திரி-செம்முள்ளி-ஆடாதோடை - சங்கு இவைகளினிலை வகைக்கொருபிடிவீதம் இடித்துப் பிட்டவித்துச் சாறுபிழிந்ததிற் சுக்கு மிளகு இந்துப்பு சிறுதிப்பிலி வகைக்குப்பணந்(க)வெதுப்பிப்பொடித்துத்தூவி கொஞ்சந்தேன்விட்டு சங்களவுகொடுக்கத்தீரும்,

பெருந்தும்பைக்கொழுந்து சுக்கு வெண்காரம் ஓமம் மிளகு சம்புகட்டசாம்பல் இவைகளை ஓர்நிறையாய் கருமைமோரிலரைத்து சங்களவுகொடுக்கத்தீரும்.

அதிமதுரம் கோஷ்டம் திரிகடுகு இந்துப்பு திரிசாதம் ஏலு ரோகணி அரத்தை அக்கராகாரம் தேற்றுவிரை வெள்ளிலைப்பிசின் வகைக்குக்கழஞ்சு(க)ஆடாதோடைச்சாற்றில் - சமமமாத்துத் தூதுவளங்காய்ப்பிரமாணம் உருட்டி புலர்த்திக்கொண்டு தேனிற்கொடுக்கத்தீரும்,

திப்பிலி விராகனெடை(க)வெள்ளிலைப்பிசின் - கத்தரிமஞ்சள் கனிப்பாக்கு வகைக்குவிராகனெடை அரைக்கால் தூதுவளம்பழம்

(ம)இண்டங்கொழுந்து எலுமிச்சங்காய்ப்பிரமாணம் இவைகளை யரைத்து வுழக்குநெய்யில்வைத்து காய்ச்சி தினம் இரண்டுநேரங்கொடுக்கத்திரும்-இருமலாலுண்டாகும் வாந்தியுந்தீரும்,

காற்படி ஆடாதோடையிலைச்சாற்றில் சுக்கு திப்பிலி வகைக் கொருவிராகனெடை அரைத்துக்கலக்கி முறித்துத் தட்டெடை தேனிற்கொடுக்கத்திரும்,

கற்கடகச்சிங்கி சிறுதேக்கு திரிபலை திரிகடுகு செங்கழுநீர் கோஷ்டம் மரமஞ்சள் சிறுகாஞ்சொறிவேர்வகைக்குப்பலம்(க)பொடித்துத் திரிகடிப்பிரமாணந் தேனிலாவது வெந்நீரிலாவதுகொள்ளத்திரும்,

வெளிச்சிப்பிசெவ்விளநீர்-மிளகு-முத்தக்காசு-திப்பிலி கருஞ்சீரகம்வகைக்குக்கழஞ்சு-க-இவைகளை இளவறுப்பாய்ச்சூரணித்துத் திரிகடிச்சூரணத்திற் கடுகளவுபிரமாணந் தட்டெடைத்தேனும்வெள்ளுள்ளித்தயிலமும்சமனாய்விட்டுமத்தித் தமூன்றுநாள்கொடுக்கத்திரும்.

இலந்தை-வேல்-நாயுருவி-இவைகளின்வேர் வகைக்குப்பலம்-உ-சுக்கு-திப்பிலி-வெந்தயம் விராகனிடை-உ-நாழி ஒருபடிநீரிற்போட்டுக் கியாழஞ்செய்து ஒயின்லை-சப்பிரமாணங்கொடுக்கத்திரும்

தேன் இஞ்சி மாதுளம்பழம் இவைகளின்சாறுகளைச் சமன்கலந்து தட்டெடைகொடுக்கத்திரும்,

இளைப்பு இருமல் சுழி சளை வலிப்புக்கு,

அக்கராகாரம் சிற்றரத்தை கற்கடகச்சிங்கி சடாமாஞ்சி சிவதை கஸ்தூரிமஞ்சள் சாதிக்காய் திப்பிலி இராம்பு எலம் மாசக்காய் வகைக்குவிராகனிடை க) நாயுருவி செம்முள்ளி விழுதி இவைகளின் வேர் வகைக்குப்பலம்-உ-நாவியிலை தேன்கொடுக்கிலை சிறுகீரை வேர் வில்வவேர் வகைக்குப்பலம் (க) செந்தொட்டி ஆடாதோடை இவைகளின்வேர் வகைக்குப்பலம்(வ)இவைகளை ஆவின்பாலிலரைத்து ஒருபடிபசுவின்னெய்யிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்தொருவராகனெடை கொடுக்கத்திரும்-

உள்நாக்கு வளர்ந்ததற்கு,

எவச்சாரம் சுர்க்கண்ணம் இரண்டும் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துஉள்நாக்கிற்தடவத்திரும்,

கக்குவானுக்கு,

நாயுருவிச்சாறும்-துளசிச்சாறும்-சமனாய்கலந்து-கோஷ்டம் விராகனிடை க-தட்டிப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிக் காலாழாக்கு வீதம்கொடுக்கத்திரும்,

மயிலிறகுச்சாம்பலும் மிளகுச்சாம்பலும் சமனாய்ப்பொ
டித்து ஆவின்நெய்யில்மத்தித்துக்கழற்சிக்காயளவுகொடுக்கத்தீரும்,

மயக்கம் சோகம் தாவரட்சிக்குக்குடிநீர்,

சோஷ்டம் சீரகம் ஏலம் சுக்கு வில்வவேர் அதிமதுரம் ஆ
வமயோடு சந்தனம் கல்கொம்பு வாட்டூலாவேர் நெற்பொ
ரி பலம்விழுக்காடுபொழம்வைத்து காலாழாக்குவிதம் கொடுக்கத்
தீரும்.

தாகத்துக்கு,

ஏலம் அதிமதுரம் பற்படாகம்சீந்தில் ஆவாகம்வேர் சந்த
னம் வில்வப்பழம் விலாமிச்ச வேர்ப்பிஞ்சு இவைகளைச்சமனாய்த்
தூக்கி இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக் கால்படியாய் வற்றவைத்
து சிறியோருக்கும்பெரியோருக்குங்கொடுக்கத்தீரும்.

வேறு,

புளியம்பட்டை மிளகு புங்கு வேலிப்பருத்தி நாயுருவி
இவைகளினிலைச்சாம்பல் சமனாய்க்கூட்டி ஓமம் விராகனிடை
-அ-பொரித்து நீர்விட்டுக்காய்ச்சி இறுத்து காலாழாக்குகொடுக்கத்
தீரும் இவைகளெல்லாம் இச்சாபத்தியம்.

கண்டுகடிக்கு,

கம்பிளிசுட்ட சாம்பலையும் புகையூறலையும் வேப்பெண்ணெ
யிற்குழைத்து அபானத்தில்வைக்கத்தீரும்.

க்ஷயசதி வறிச்சல் இருமல் தோஷம் தாகம் வரட்சிக்கு,

அதிமதுரம் கோஷ்டம் திப்பிலி திரிசாதம் சந்தனம் சாதி
ரப்பதி லவங்கம் லவங்கப்பத்திரி பற்படாகம் வெகுவாசி வகைக்கு
விராகனிடை-அ- கோரோசனைவிராகனிடை -ச- இவைநீரிலரைத்து
க்குன்றிபோலுருட்டிக்கொண்டு சருக்கரையிற்கொடுக்கத்தீரும்,

குழந்தைகட்கு மேனியில்வெள்ளைக்கொப்புளம் வெடித்தால்,

விளாமிச்சம்வேர் செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம்இவைகளை
ஓர்நிலாயாயரைத்துப்பூசத்தீரும், ஆவாரையிலையும் அல்லியிலையுஞ்
சமமாய்க்கழுநீர்மண்டியிலரைத்துப்பூசத்தீரும்.

வயிற்றுப்பொருமல்வலிமந்தத்திற்கு,

ஒருவசம்பைச்சட்டியிலிட்டுக்கரிக்கி, அதில்கோஷ்டம்விரா
கனிடை-உ- ஓமம்விராகனிடை-உ-கூடப்போட்டு ஓமம்பொரியும்
போது ஒருபடிதண்ணீர்விட்டு அரைக்கால்படியாய்வற்றவைத்து
கொடுக்கத்தீரும்.

சாம்பல்-மண்-தின்றதற்கு.

கீழ்க்காய்நெல்லிவேர் விராகனிடை - க-கடுக்காய்த்தோல்வி ராகனிடை - உ-மிளகு விராகனிடை-ரு-புளித்தமோரி லரைத்துக் கலக்கி சங்களவு மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

தொங்கல்-ஆமம்-மாந்தம்-பேதிக்கு.

வெள்ளாட்டுப்புழுக்கை-மூச்சந்திமண் - ஆவாரங்கொழுந்து வகைக்கு ஒருபிடி வசம்புவிராகனெடை-(எ)இவைகளைச் சட்டியிற் போட்டுத் தீப்பிடித்து வெந்தபின் வெந்தயம் ஓமம்வகைக்கு விராகனெடை(ச)போட்டு வறம் எரியும்போது ரு-ஆழாக்குபடி த ண்ணீர்விட்டுக் கால்படியாய்வற்றவைத்து சங்களவு மூன்றுவேளை கொடுக்கத்தீரும்.

எண்ணெய்த்தொங்கலுக்கு.

மண்ணாங்கட்டியைச் சட்டியிற்போட்டுப் பழுக்கவறுத்து ஒ ருபடிதண்ணீர்விட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து-ரு - பொ ழுதுகொடுக்கத்தீரும்,

ஒருபலம்சீயக்காயைத்தட்டித் தண்ணீரிலூறவைத்து ஒருசங் கு தண்ணீர்கொடுக்கத்தீரும்,

கக்குவானுக்கு வேறுபிரயோகம்.

வௌவாலையாவது முள்ளெலியையாவது புலியுப்புக்கண்ட த்தையாவது அதின்தோலையாவது நத்தைச்சதையையாவது ஆவி னெய்யில்வேகவைத்து கழற்சியளவுகொடுக்கத்தீரும்,

குழந்தைகளின்விரைவாதத்திற்கு.

குழந்தைகட்கு விரைகளைப்பற்றிப் பக்கத்தில் உப்பிசமாக் கண்டுதானால் அதற்கொடையைக் கையினால் நீவிவிட்டு நரம்புத்த டிப்பைப்பார்த்துக் கதிரைவெதுப்பிகொண்டு விரைக்கு எட்டு விரற்கடைக்குக்கீழ்ச் சுட்டுப் பனைவெல்லம் பெருங்காயத்தை வெ ள்ளைப்பூண்டில்வைத்துச்சுட்டு மூன்றுநாள் கொடுத்து விளக்கெ ண்ணெயில் மஞ்சட்பொடியைப் போட்டு மத்தித்துப் புண்ணிற் போடப் பொங்கிப் புண்ணாகி ஆறும்போது விரைவீக்கம் அண்ட வாயு வாதம் தீரும்.

முடக்கொத்தான்சாறு விளக்கெண்ணெ வகைக்குப்படி (வ) ஒரு கோழிமுட்டை வெள்ளைக்கரு இவைகளையொன்றாய்க்கலந்து அதில் அரிதகருஞ்சீரகநிசிராங்கை ஒருகழற்சிப்பருப்ப மரைத்துப் போட்டுப் பதமாய்க்காய்ச்சி மூன்றுநாள் கழற்சிக்காயளவுகாலை யும் சாயந்திரமுங்கொடுக்கத்தீரும்.

சுக்கு-திப்பிலி-மிளகு-வசம்பு-ஓமம்-வெள்ளுள்ளி- கழற்சிப்பருப்பு வேப்பங்கொழுந்து வகைக்கொருகழஞ்சவிதமரைத்து ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒருசிறுகரண்டிவீதம் இருநேரங்கொள்ளத்தீரும்.

சாரணைவேர் முடக்கொத்தான்வேர் சுக்கு கழற்சிப்பருப்பு வகைக்குப்பலம்(க)தட்டிப்போட்டுக் கியாழஞ்செய்து சங்களவு கொடுக்கத்தீரும்,

சுக்கு-மிளகு-வகைக்குப்பலம் அரைக்கால் நொச்சியிலை பலம்(வ)பூண்டு பலம்(ங)கழற்சிப்பருப்பு பலம்(உ)இவைகளையரைத்து அரைப்படி நிருமணக்கெண்ணெயிற் செவக்கக்காய்ச்சியொருசங்குவீதம்(ங)நாள்கொடுக்கத்தீரும்.

வசம்பு-கழற்சியிலை-உள்ளி வகைக்குப்பலம்(க)தட்டிவெதுப்பி யொத்தணமிடவும், குட்டித்தக்காளியிலையும் தைவேளையிலையும் வெதுப்பித்தட்டிக்கட்டத்தீரும்.

கோழிமுட்டை வெள்ளைக்கருவில் ஒருகழற்சிப்பருப்பும் ஒருவிராகனெடை சிற்றுமுட்டியிலையும் அரைத்துப்போட்டுப்புசித்து(ரு)நாள்கொள்ளத்தீரும்,

தைவேளை-முடக்கொத்தான்-மேனி-மூக்கிரட்டைச்சாரணைவேர் சவுரி-வகைக்குப்பலம்(ய)இவைகளையிடித்து (ய) படி தண்ணீரிற்போட்டிரண்டுபடியாய் வற்றவைத்திறுத்ததில் (உ) முத்திரைநேர்காலைத்திருப்பிப்போட்டுப் பிசைந்து பால்பிழிந்து ஒருபடிவிளக்கெண்ணெயிற்கலந்து திரிகடுகு வெள்ளுள்ளி ஓமம் கழற்சிப்பருப்பு வகைக்குவிராகனெடை(ஞ) அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒரு சிறுகரண்டிவீதம் பத்தியமாய்(ரு)நாள்கொடுக்கத்தீரும்-இவைகள் இச்சாபத்தியம்.

மசூராப்புழுநோயின்குணம்.

சீதமலமாயும் தண்ணீர்போலும் கருத்ததிறமாயும் கத்தரிக்காய் கசக்கிப்பிழிந்தசாறுபோலும் பிறவிர்த்தியாகும்,

வேறு,

மலங்கருகிநின்று-குதவாயிற்குத்திக்குழறிக் குருதிவிழும் மலத்துடன் சேருஞ்சீதகிக்காணும் உதட்டையதன்றும் இதுவயிறுளை நோயாகும்,

நிவர்த்தி,

மஞ்சள்-கருஞ்சீரி-திரிகடுகு-வசம்பு-ஏலம்-சிறுபூளைவேர்-சாதிக்காய் பலம்வீதம்தூக்கிச் சிறுபூளைச்சாற்றிலரைப்பு உழக்குமோ

திரெப்பிற்போட்டுப் பதமாய்க்காய்ச்சி மெழுகுபதமாய் வடித்தொருகாசெடை கொடுக்கத்தீரும்,

உழக்கு ஆவின்னெய்யில் நாயுருவி மேனி கொழுஞ்சி தாதனி வசம்பு சுக்கு மஞ்சள் வகைக்கொருபாக்களவு அரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிக் கால்படி நிறைகொடுக்கத்தீரும், இவைகள் இச்சாபத்தியம்,

வயிற்றுக்கிருமிவிழுதலுக்கு,

எலிச்செவியும்-முருங்கைவேரும்-திரிபலையும் நறுக்கிக் கியாழஞ்செய்து சங்களவு கொடுக்கக் கிருமிப்பூச்சிவிழும்,

நாகப்பூச்சிவிழுதலுக்கு,

பாகற்சாறு-கழற்சாறு- விளக்கெண்ணெய் வகைக்கு உழக்கு ஒன்றாய்க்கலந்து அதில் சுக்கு காந்லை ரசகர்ப்பூரம் உள்ளி வசம்பு வகைக்குவிராகனெடை(க)அரைத்துப்போட்டெரித்து ஒருசங்குகொடுக்கவிழும்.

ஓமம் - புரசவிரை - பேய்ப்பீர்க்கு-மிரண்டை - வகைக்குப் பலம்(க)இடித்து அரைப்படிநீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்ற வைத்து மூன்றுநாள்கொடுக்கப் பூச்சிகள் பந்துபந்தாய்விழும்;இச்சாபத்தியம்,

மலசலக்கட்டுக்கு,

இலைக்கள்ளிவேர்ப்பட்டை பலம்(ரு)மிளகு உள்ளி சுக்கு கடுக்காய் வகைக்குப்பலம்(கவ)வெயிலிற் காயவைத்துப் பொடித்து வடிகட்டி குழந்தைகளின்பெலமறிந்து முலைப்பாலி லல்லது வெந்நீரிலொருகாசெடை கொடுக்கத்தீரும்,

விரோசனவகுப்பு.

புடபதிமாத்திரை,

இரசம்-சுக்கு-வெண்காரம் - கெந்தகம் வகைக்கு விராகனெடை(க)நேர்வாளம் விராகனெடை(ச)இவைகளைச்சுத்திசெய்து குமிர்ந்தநீர்விட்டரைத்துப் பாசிப்பயற்றளவாய் உண்டைசெய்து ஒருண்டையைத் தண்ணீரிற்கொடுக்க உஷ்ணமாந்தம் பொருமல் வாதம்நீங்கும் பத்தியமில்லை,

அமிர்தசஞ்சீவி லிங்கக்குழம்பு,

சாதிலிங்கம்-வெண்காரம்-இரண்டுபங்கு ஆமணக்கின்பருப்பு நாலுபங்கு வாளம்எட்டுப்பங்கு இவைகளைச் சுத்திசெய்தரைத்துக் குன்றிப்பிரமாணங்கொடுத்துக் குளிர்ந்ததண்ணீர் கொடுக்கப் பேதியாகும் வெந்நீர்கொடுக்கப்பேதிகட்டும்.

வெருவிரேசனைய்,

வெள்ளைக்காக்கணம்வேர்-திப்பிலி- வகைக்கு விராகனெடை (௧)மிளகுவிராகனெடை(௨) கல்லுவீர்விட்டரைத்து ஒருவிராகனெடைமருந்தைக் குளிர்ந்தசலவரீர்க்கலந்துக்கொடுக்கவிருபோரும் இச்சாபத்தியம்.

சண்பகப்பூமாத்திரை.

சண்பகம்-ஏலம்-இலவங்கம்-கோஷ்டம்-கடுகுரோகணி வகைக்குவிராகனெடை(௪) சுத்திசெய்தவாளம் விராகனெடை(௫) வெந்நீர்விட்டரைத்துக் காற்குன்றிநிறையா யுண்டைசெய்து தேனிலாவது சுக்குக்கியாழத்திலாவது கொடுக்கப்பேதிக்கும்.

திந்திப்பு சுபேதிக்குழம்பு.

சந்தாவிசாரைப்பழம்-பலம் (௰) நிரகஸிப்பருப்புபலம்(௫) ஓமம்-சுக்கு-மிளகு வகைக்குவிராகனெடை(௪)கடுகுரோகணி பலம்(௩)சுத்திசெய்தவாளம்பலம்(௫)சர்க்கரைவேளைப் பலம்(௧)ஆவிரைப்பலம்(௨)புதியதேன்பலம்(௰) இவைகளைக் கல்வத்திலிட்டு(௪) சாமம் அரைத்து வழித்தெடுத்து கற்சாடியிற் காற்றுப்போகாமல் அடைத்துக்கொண்டு காசளவு அப்பத்திற்றடவி அருகிற சேர்க்கியத் தப்பிக்கத் தின்னும் நல்லசுபேதியாகும் பேதிமீதிருக்கில் வசம்பைச் சுட்டு இளவெந்நீரி லரைத்தாவது நீர்க்கஞ்சியாவது சாணிப்பாலாவது மோராவது நீவிவேர்க்கியாழமாவதுகொடுக்கப் பேதிநிற்கும் இச்சாபத்தியம்,

சுபேதியெண்ணெய்.

முருக்கைப்பட்டை மூக்கரைச்சாரணைவேர் சுருள்ளி இலைகளோர்சமமாய்த்தட்டிச் சாறுபிழிந்து அதற்குநிகர் விளக்கெண்ணெயைவிட்டெரித்து காலடிவீதம் கொடுக்க மலபந்தம் கரப்பன் சிரங்குதீரும் இச்சாபத்தியம்.

வசூரி நூல்.

வசூரிப்பரப்-விருத்தம்.

பார்த்துவசூரிநூல்தொகுப்பைப்பண்பாய்மாந்தர்தானறிய ... *
கோர்த்துதேகச்சூடலைந்தங்குதிப்புந்தனைமுமசாத்தியமும் ... *
தீர்த்துப்போகப்பண்டிதர்க்குத்திறமாய்யுரித்தஅட்டவணை ... *
சேர்த்துப்பிணியுந்தாஞ்கலச்சிறக்கமருந்துவுமைத்தோமே ... *

பனைமுகரி-பாலம்மை-வாகுதிரி-கொள்ளம்மை- கல்லுதிரி-க டுகெம்மை-மொழுக்கல்-உப்புதரி-கரும்பனசை-வெத்தயம்- பாசிப்பயற்றம்மை-விச்சிரிப்பன்-நீர்க்குருவால் - தவளை-என வகுரிபதினாறு.

காரணம்.

சரீரத்தில் வெக்கைமிகுந்து மூலத்திற்றூறிக்கொண்டு மூளையில் அதிக கொதிப்புண்டாகி அஸ்தியிற்கனமேறி மேற்படிரோகஞ்சம் பவிக்கிறது மேற்படிவியாதிகண்டபேரைக் கண்டு பயந்து இருக்கலங்கிறதும் மேற்படிரோகம் சம்பவிக்குமெனச் சொல்லப்படுகிறது.

பனைமுகரிக்குணம்.

காச்சல்மிதமாய்க்காய்ந்துஉடல்கடுக்கும் கண்சிவக்கும் கண்டதுண்டம் வீக்கும்பெரும்பாடு மிதற்றல் சன்னிந்தோன்றும்.

பாலம்மைக்குணம்

அகோரமாய்க் காச்சலடித்து மூன்றுநாளிரவிற் கிரசித்துருதோன்றி உடம்புகடுக்கும்- ௭-ம்நாளில் நீர்க்கோர்த்து-௯-ம் நாளிலிறங்கும்- ௰௫-ம் நாளில் ஆரோக்கியஸ்நானஞ்செய்யவும்.

வாகுதிரிக்குணம்.

காய்ச்சலதிகமாய்க்காய்ந்து- ௩- ம் நாளிற் கிரசித் துருதோன்றும் வாயாலிரத்தம்விழும்- ௭-ம் நாளில்நீர்க்கட்டி- ௰௧-ம் நாளிலிறங்கும் நீர்த்தாரையிலிரத்தங்காணும்.

கொள்ளம்மைக்குணம்.

காச்சல் மிதற்றல் சன்னி வலிப்புத்தோன்றி - ௩ - ம் நாளிற் கிரசித்துருதோன்றி ௰௩-ம் நாளிலிறங்கும்.

கல்லுதிரிக்குணம்.

அகோரக்காய்ச்சல் பேதிவாந்திகண்டு - ௩- ம் நாளிற் கிரசித்துருதோன்றி - ௭ - ம் நாளிற் சங்கங்கனிபோல் நீர்கட்டி - ௰ - ம் நாளிலிறங்கும் -௰௧-ம் நாள்ஸ்நானஞ்செய்விக்கவும்.

கடுகெம்மைக்குணம்.

காச்சலடித்த -௩-ம் நாளிற் கிரசித் கடுகுபோல் குரு தோன்றி யுடம்பெல்லா மதிகமாய்வீங்கும் மன்னைகட்டுங் குரல்கம்மும் பேதிகாணும்.

மொழுக்கன்குணம்.

காச்சல்மட்டாய்க்காயும் தேகமெல்லாங்கடுக்கும் இடுப்புவ லிங்காது சரீரம்வீங்கும் காந்தல்காணும்-௭-ம்நாளிற்குருதோன்று ம் ஸ்நானஞ்செய்யக்குணமாகும்.

உப்புநீர்க்குணம்.

காய்ச்சல் கண்டு மூன்றுநாளிற் சிரசிற் குருதோன்றி யுடம் பெல்லாம் உப்பும் போலிருக்கும் - ௫-ம் நாளிலநீர்கட்டி - ௭-ம் நாளிலிறங்கும் - ௰-ம் நாளில் ஸ்நானஞ் செய்து ஔஷதங்கொடுக்கவும்.

கருப்பனைக்குணம்.

காய்ச்சலடித்து - ௭-ம் நாளிற் சிரசிற்குருதோன்றும் உடம் பெல்லாங்குத்தும் கருக்கும் வசூரியுள்ளே வாக்கும்பேதியாச்சுக ராணும் மலங்கட்டிக்கொள் - ௯ - நாளிலிறங்கும் உடம்பெல்லாம் வியர்த்து சனையாகிக் கிரியுண்டாகும் விக்கலெடுத்து சுவாசம் மேல்நோக்கும் ௰௧ நாட்சென்றுல்ஸ்நானஞ் செய்து ஔஷதங் கொள்ளவும் இந்தரோகங்கண்டவர்கள் பிழைப்பதரிது.

வெந்தயஅம்மைக்குணம்.

காய்ச்சலடித்த ௩-ம் நாளிற்சிரசிற்குருதோன்றி ௭-ம்-நாளில்நீர்கட்டி-௯-ம் நாளிலிறங்கும் ௰௩-ம் நாளில் ஆரோக்கிய ஸ்நானஞ் செய்யவும்.

பாசிப்பயற்றம்மைக்குணம்.

காய்ச்சலும் பித்தமுமுண்டாகி - ௩ - ம் - நாளில்சிரசிற்குரு தோன்றும்- ௭-ம் நாளில்நீர்கட்டி - ௯-ம்- நாளிலிறங்கும்-௰௧- நாளில்ஸ்நானஞ்செய்து சரீரம்பிலக்கதீர்மோசனங்கொள்ளவும்,

விச்சிரிப்பின்குணம்.

காய்ச்சலடிக்கும் கண்சிவக்கும் வாந்திபேதியாளும் - ௩ - ம் நாளிற்சிரசிற்றேன்றித் தேகமெல்லாம் உமிபோல்வாரியிட்டிமறை யும்-௭-ம்-நாளில் ஸ்நானஞ்செய்யவும்வயிற்றுவலியுமாளும்

நீர்க்குருவான்குணம்.

காய்ச்சலடித்து-௩-ம் நாளிற்சங்கங்களிலேயாற்றேன்றி ௭-ம்-நா ளிலிறங்கும் -௯-ம்- நாளில் ஸ்நானஞ்செய்து தேகத்தைக் குளிர்ச்சிசெய்யும்.

தவளைக்குணம்.

காய்ச்சல்கண்டு நடக்கவொட்டாது குலையைப்போல் வலிக்கும் அன்னஞ்செல்லாது ௩-ம்-நாளிற்சிரசிற்குருதோன்றி ௯-ம்-நாளிலி றங்கும்-௰௩ம்-நாளில்ஸ்நானஞ்செய்யவும்.

வசூரியதிகம்படாதிருக்க.

தஞ்சரப்பரிச்சால்வேளைநாம்புநீக்கி யதைத்துப்புன்னைக்கா ய்ப்பிரமாணம்வெந்நீரிற்கலக்கிக்கொடுக்கவாந்திபேதியாளும் மசி

பத்தித் சுடுகஞ்சிகொடுக்க வசூரியதிசப்படாது கிளாயிலை பிரூவி
லை முக்குரட்டைவேர் தவசிமுருங்கைசமூலம் சுருள்ளி இவைகளை
நீராகாரகத்தண்ணீர் விட்டிடித்துப்பிழிந்து சீசாய்ஒருவிராகனெ
டையனாத்துக் கலக்கிற்காற்படிவீதம் மூன்றுநேரங் கொடுத்தா
லும்புளியிலைகோழியவரையிலைசுருள்ளி இலைகளை மயார்த்திகையா
யிடித்து நீராகாரத்தண்ணீர் விட்டுப்பிழிந்து வடிகட்டிக் காற்படி
வீதம்மூன்றுநேரங்கொடுத்தாலும் வெள்ளைக்குங்கிலியத்தைஅவி
ரியிலைச்சாற்றால்(௪)சாமமரைத்துச்சிறுசுண்டைக்காய்ப்பிரமாண
மேவுண்டைசெய் துலர்த்தியதி லோருண்டையை வெந்நீரிற்கொடு
த்தாலும் அல்லது அந்த உண்டையை வசூரிகண்டபின்பு கொடுத்
தாலும் அல்லது ஆட்காட்டிக் குருவிமுட்டை பத்தெட்டுடைத்
துவிட்டதிற் கொஞ்சஞ் சம்பாப் புழுங்கலரிசியை நனையத்தக்க
தம்பாட்டுக்கருக்காமற் பதமாய்ப் பொரித்துச்சிமிழிலடைத்துக்
கொண்டு காச்சல்கண்டவுடனேயந்த அரிசியையிடதுகையிற்கச
ட்டிவலதுகையாற் றிரிகடியொருபோது கொடுத்தாலு மல்லதுப
ழுப்பாதாட்சையைச்சுட்டுத் திரிகடிப்பிரமாணம் வெந்நீரில் மூ
ன்றுபோது கொடுத்தாலும் வசூரிமட்டுப்படும் மேற்கொள்ளாது

வசூரியுள்ளேபிராந்தினால்.

இளநீரைமேற்பட்டைசீவி வெந்நீரிலவித்துக்கண்திறந்து அந்
தநீரிற் சேற்றுவிரை மூத்தக்காசு வகைக்கு விராகனிடை (௫) அ
ரைத்துக்கலக்கியாவது அல்லது சீரகத்தைமட்டு மரைத்துக் கலக்
கியாவது (௩) போது கொடுத்தாலும் அல்லது மேதிக்கிடாரிச்சா
ணிப்பாலிற் பூநாகம் நற்சீரகம் வகைக்கு விராகனெடை (௫) அ
ரைத்து மூன்றுபோது கொடுத்தாலும் அல்லது பரிந்காயிருக்கி
ற கருடப்பட்சிக்கல் மான்கொம்புகாண்டாமிருகத்தின்கொம்பு இ
ம்மூன்றும் வகைக்குவிராகனெடை (௫) அரைத்து மான்கொம்பு
ஊறின தண்ணீரிற்கரைத்து காற்படிவீதங் கொடுத்தாலும் அல்ல
து பிரூவிலையைப் புதுச்சட்டியிலிட்டு நீராகாரத் தண்ணீர் விட்டு
நன்றாயவிசி அரைக்காற்படிவீதம் மூன்றுபோது கொடுத்தாலும்
வசூரிபூரிக்கும்.

வசூரியின்பேரில் அதிசாரபேதிகண்டால்.

பிச்சியிலையைப் புதுச்சட்டியிலிட்டு நீராகாரத் தண்ணீர்வி
ட்டுநன்றாயவிசி அரைக்காற்படிநீர்வீதம்-௩-போதுகொடுத்தாலும்
அல்லது கர்க்குவேப்பீர்க்கு எலுமிச்சவேர் கோரைக்கிழங்கு இவ
வைகப்பாய்ளவத்துக்கியாழஞ்செய்து அரைக்காற்படிவீதங்கொ
டுத்தாலும் அல்லது ஆல்-அத்தி-இத்தி-அரசு-மா-பிச்சி-நெதி-நாத்தி-

ஙாசா-இவ்வகைச்சூரணங்களுக்குப் பொழுதுசெய்து கொடுத்தாலும்
அல்லதுபொன்றுகட்டை-கிராம்பு,வெப்பிரக்குஇலைகளையோதி
லையாக்கிப்பொழுதுசெய்துகொடுத்தாலும் பெரிஅதிசாரம்நிற்கும்

வஜூரியின்பேரிற் கிட்டுகுதப்இரத்தங்கண்டால்.

மூத்திர நாவற்பட்டையை ஆவின்பால்விட் டிடித்துப் பி
ழிந்து வடிகட்டி ஞ படிவீதம் ங போது கொடுத்தாலும் அ
ல்லது ஆவாரைக்குச்சங்கத்தை ஓர் தினையளவுச் சட்டியிலிட்டு வறு
த்துக்கத்தண்ணீர்விட்டுக் பொழுதுசெய்து மூன்றுபோதுகொடுத்தா
லும் அல்லது பழைய மாங்கொட்டையைத் தட்டி யிளவறுப்புச்
செய்துஅரைத்து நீராகாரத்தண்ணீரிலாவது தயிரிலாவது அரைத்
துக்கொடுத்தாலும் மூத்திர கல்லத்திவேர்ப்பட்டை சருள்ளி சே
கம் வகைக்குவிராகனிடை ரு வெள்ளாட்டுப்பாலி லரைத்துக் கல
க்கி ஞ படிவீதம் ங போதுகொடுத்தாலும் தண்ணீர்க்குடங்களி
லிருக்கும் அடிமண்டியைத்தேற்றாவிரையாற் றேற்றி தெளிவையி
றுத்ததில் கருவேப்பிலையீர்க்கு கிராம்பு பிளாச்சுவகைக்குக் கழஞ்
சு(க)வீதம்வறுத்தரைத்துக்கொடுத்தாலும் சருள்ளியையாவினெய்
யில்வேகவைத்துக் கொடுத்தாலும் இரண்டு வில்வப்பழத்தைச் சு
டத்துவறுத் தொருபடிதண்ணீர்விட்டு எட்டொன்றாய்வற்றவை
த்து வடிகட்டியதில் அதிவிடயம் கிராம்புவகைக்கொருகாசெடை
வறுத்துப் பொடித்துப்போட்டு மூன்றுதினங் கொண்டாலும் அ
ல்லதுசுருவிளிச்சாறு ஆவினெய் சமன்கலந்து அரைக்காற்படிவீ
தம் மூன்றுபோதுகொள்ளக் குதப்பு இரத்தம் நிற்கும்.

வஜூரியின்பேரில்-அதிசாரங்கண்டால்.

செற்றில்-கோரைக்கிழங்கு-கடுக்குமேற்றோல்நீக்கிவகைக்குவிரா
கனெடை (ரு) வெதுப்பிப்பொழுதுசெய்து கொடுத்தாலும் அல்ல
து மாங்கொட்டைக் கோவையிலைச்சாற்றில் (ஙு) நாள் ஊறவைத்
து அதற்கு மேற்படியில்லையாகாத்துக் கலசஞ்செய்து(உ௰)எரு
வித்துப்புடம்போட பஸ்பமாகும் அந்தப்பஸ்பம்விராகனிடை (க)மா
ங்கொட்டையுப்பின தண்ணீரிற் கலக்கிக்கொடுத்தாலுநிற்கும்.

வஜூரியின்பேரிற் சிலேஷ்மம் நெஞ்சிற்கட்டித்
தொண்டைகம்மினால்,

கற்பூரவல்லிச்சாறு-படி-அரைக்கால்விளாமரசன்விராகனி
டை (ங) உரைத்து உள்ளுக்குக்கொடுக்கக்கபங்காரும்.

மாதுளம்பூவைப்பொழுதுசெய்து அதைக் கொஞ்சங்கொஞ்சம்
எருக்கஞ்சாறும்விட்டுக்கலந்து கொப்பளிக்கத் தொண்டைக்க
ம்மல் உடனேதீரும் இதை யுட்கொள்ளலாகாது.

வைசூரியிற்பெருஞ்சுரங்கண்டால்.

எலுமிச்சம்வேர்ப்பட்டை ஏலம் சீந்தில் விலாமிச்சு பற்பாடகம் சந்தனம் கோரைக்கிழங்கு வகைக்கு விராகனிடை(௧)நாலுக் கிட்டுக் கியாழஞ்செய்து(௩)போதுகொடுத்தாலும், மகாப் பூவிராகனிடை(௫)கியாழஞ்செய்து அதிற்கோரோசனைவிராகனெடை(௧)உரைத்து அரைக்காற்படிவீதம் மூன்றுபோதுகொடுக்கச் சுரநீக்கிவிடும்.

வைசூரியினால் மலசலங்கட்டி வயிறு உப்பிசங்கண்டால்.

சருள்ளி சுக்கு வகைக்குவிராகனெடை-(௫)-யும்-அரைத்து அமணக்கெண்ணெய்படி அரைக்காலிற் கலக்கிக்கொள்ள மலசலக்கட்டு உப்பிசமுந்தீரும்.

தாகத்திற்குக் கலைக்கொம்புத்தண்ணீர்செய்யும்விதம்.

கலைக்கொம்பை ஊறவைத்து நன்றாய்க்கழுவிப்போட்டு சவிரதான் பலம் இரண்டு சுடுதண்ணீரிற்போட்டு ஊறவைத்துக் கொண்டு அந்தத்தண்ணீரை தாகத்துக்கு வைசூரிகண்டிருக்கும்போது கொடுத்துக்கொண்டுவரத் தேகத்துக்கு ஆரோக்கியத்தையும் சுகத்தையுந்தரும் சிலவிணாபோகத்தில் கலைக்கொம்புநீரைச்சேர்த்துக்கொள்ளும்படி சொல்லியிருப்பதால் அதற்கு இந்தமுறைப்படிசெய்து உபயோகப்படுத்தவும்.

வைசூரியினால்நேத்திரத்தில்விதனங்கண்டால்.

சீசத்தைத் துணியிற்பொட்டணங்கட்டி முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் ஒத்தடஞ்செய்தாலும் அல்லதுகறிசோற்றில் வெண்ணெய்ச்சேர்த்து மசித்துத் துணியிற் பொட்டணங்கட்டி நீராகாரத்தண்ணீரில் தோய்த்துக் கண்ணில் ஒத்தடஞ்செய்யக் கண்விதனந்தீரும்.

விழியில் வைசூரிவாராதிருக்க.

வைசூரிக்காய்ச்சலடிக்கும்போது சுருள்விதை மறுமலிதல்வாயில்மென்று கண்ணிலூத வைசூரிகண்ணில்வாராது.

வைசூரியினால் வாயால்உதிரங்கக்குவதற்கும் நீர்த்தாரையி விரத்தங்காணுவதற்கும்.

நன்னாரிவேர்த்தோல் கலைக்கொம்பு வகைக்குவிராகனெடை (௨)புநாகம் ஐந்தெடுத்து நன்றாய்மண்சட்டியி அவைகளுடன் சேர்த்து சாந்தப்போலரைத்து கலைக்கொம்புஊறியதண்ணீரிற்கரைத்து அரைக்காற்படிவீதம் மூன்றுபோதுகொள்ள வாயாலிரத்தக்கக்குவதும் நீர்த்தாரையிரத்தப்விழுவதும் நிற்கும் சன்னிதோஷம் வைசூரிசொர்தநமுந்தீரும்.

வருசியினால்தெறிகின்றவேக்காட்டிக்கு.

பழங்கூரைமைக்கோலும் வேப்பிலையும் சேர்த்தவித்து-௩-நாள்வரைவேதுவிட்டு ஒத்திக்கொட்டக்குணந்தீரும்.

வேறு.

வட்டத்துத்திசமூலம் வேகவைத்து-௩-நாள்வேதுவிட்டொத்திக்கட்டக் குணந்தீரும்.

ஆறாவருசிப்புண்ணுக்கு.

மூத்திரத்தைக்கொதிக்கவைத்திறக்கி அதில் புளியவிலையைப்போட்டு அப்பொழுதுப்போட்டுப் பிசைந்தழுத்தியத் தயிலம்வரும் அதைப்புண்ணிற்போட ஆறும் சிக்கத்திறட்டவைத்தாம்,

வருசியிறங்கினதின்பேரில் நடப்பிக்குங்கிரமம்,

பரித்திப்பிஞ்சு அத்திப்பிஞ்சு காசிக்காய் நற்சீரகம் இவைகளை ஒரேநிறையாய் மோரிலரைத்து உள்ளுக்குக்கொடுக்கவும்.

அப்பால் வேப்பிலையும் மஞ்சளும் அறுகும் ஓர்நிறையாயரைத்து உச்சிமுதல்பாதம்வரை தேய்த்துக் குளிர்ந்தசலத்தில் ஒரு ஊறவிட்டொருநாளைக்கு மூன்றுமுறைஸ்நானஞ்செய்விக்கவும்,வேப்பிலையும் மஞ்சளும் அரைத்துப் பன்னீர்ப்பூசியபின்பு தயிலைத்தேய்த்துக் குளிர்ந்தசலத்தில் முன்போல மூன்றுமுறை ஸ்நானஞ்செய்வித்து அதன்பேரில் ஆவாரையிலையைமோரிலரைத்துச்சரசிலும் உடலிலுந்தேய்த்துக் குளிர்ந்தசலத்தில் மூன்றுமுறை ஸ்நானஞ்செய்வித்து அப்பால் ஆமணக்கெண்ணெயைத்தேய்த்து உசிலிவ அரைப்பிட்டு ஸ்நானஞ்செய்வித்து மோர்தீரும் அன்னமும் கருள்ளியும் உண்டுக்கச்செய்தால் தேகக்குளிர்ந்து பலக்கும் மேற்படி வியாதிகண்டவர்களுக்குச் சருவிகாரணங்கள் பலங்கெட்டிருப்பதால் ஆறுதிங்கள் செல்லும்வரை காரமான ஔஷதங்கள் கொடுக்கலாகாது கொடுத்தால் உபாதியைவிளைவிக்கும்.

மஹாமுள்ளின்குணம்.

வருசி இறங்குமுன் ஸ்நானஞ்செய்வித்தால் சரக்காய்த்துமஹாமுள்புடைத்துரணங்காணும்.

அதற்குநிவர்த்தி.

சாதிக்காய் நாக்குமூலம் கிராம்பு சீரகம் வகைக்குவிராகனெடை-(௫)பொடித்துக் கியாழஞ்செய்து அதற்குச்சமன் நிம்பசிகாய் கருள்ளிச்சாறுஞ்சேர்த்து முறித்துக் கொஞ்சந் தேன்விட்டமத்தித்து அரைக்கால்படிவீதம் மூன்றுபோதுகொடுத்து வட்டத்துத்திவேரும் கூடவுஞ் சமன்சேர்த்தரைத்து ஆமணக்கெண்ணெயில் மத்தித்து மஹாமுள் ரணத்திற்மேற்பூச ஆறும்.

வலுரியிருந் கண்ணிற்பூவிழுந்தால்.

பனங்குருத்தைத்தட்டிக் கண்ணிற்பிழிந்தாலும் அல்லது முருங்கைப்பூ நெருஞ்சிப்பூ நந்தியாவட்டப்பூ சீரகம் ஒன்றாய்ச்சேர்த்துத்தட்டிக் கண்ணிற்பிழிந்தாலும் மாறும்.

பத்தியத்திற்காம்பதார்த்தங்கள்.

எலுமிச்சம்பழம் பழம்புளி நெல்லிக்காய் பனங்கற்கண்டு கெளுத்திச்சுருவாடு பாசிப்பயறு குரலைக்கருவாடு வெள்ளாட்டுஉப்புக்கண்டம் காடை வெள்ளெலி உடும்பு ஊர்க்குருவி வாழைக்கச்சல் அத்திப்பிஞ்சு நீர்மோர் சருன்னி இவைமுதலியன.

பத்தியத்திற்காகாப்பதார்த்தங்கள்.

மாங்காய்-தேங்காய் இறுப்பைஎண்ணெய் நல்லெண்ணெய் சோற்றுவி நெல்லாவி கொட்டைமுத்தாவி தாளிதவாடை இந்தவாடைகள் தேகத்திற்பரிசப்பட்டால் கருஞ்சூலைகடுப்பு வைகைக்குமூடச்சல் சம்பவிக்கும்.

பாலவாகடம்-முற்றும்பெற்றது.

நயனவிதி.

நயனரோகவியாம்-விருத்தம்.

சொல்லுமனிதானவர்க்குத் தொகுத்திடாகநயனவிதி........ *
புல்லுந்தொண்ணூற்றாறவிதப்புகன்றார்முனிவரானவர்கள்.... *
அல்லும்வியாதிதாலகலஅடைந்தார்பருந்துபல்வித்மாய் ... *
வல்லவாயுர்வேதங்கண்டு வகுத்துச்செய்வோர்பண்டிதரே... *
பாரும்வாதகாசமெனப்பகர்ந்தபித்தகாசமுமாம்.... *
சேருஞ்சிலேத்மவதிகாசஞ்சிறந்தநீலகாசமுமாம்.... *
நீரும்குமரிகாசமுடனின்னைநீமேடிகாசமுமாம் .... *
நம்மத்தரகாசமுடன்கூமதுயிரத்தகாசமுமே.... *
வுக்கும்பஞ்சலகும்பம்விளங்கும்படலப்பில்லமுடன்.... *
வுபாலிக்கண்விழுந்திதனியாம்வெண்மாசப்படலம் .... *
வுமணியாம்வளர்த்திடன்பகருமந்தமதிமந்தம் .... *
வுப்பருவைசிற்றுக்கண்அழுையுஞ்சருக்குகண்ணுமே.... *
மேபுளிவுகாசவெவியன்னைகோபமனல்கோபம்.... *
மேபுகைச்சல்பற்பரோகம்சாத்தும்ஒட்டுக்கண்பிணியாம் ... *
ரவிமேற்றதிமலங்களுடன்புகலும்பாய்ச்சல்நீருகல் ... *
மிசால் ஜெலுங்கண்பிரிவு நவில்றார்செவ்வேர்க்குத்தமுமே *

சூத்தப்புக்கரதமாமுடமலீ கூறும்பக்கம்கண்கட்டி .... *
சத்தம்மிருட்கண்செவ்வலரிசாற்றுங்கூச்சம்ஆணிப்பூ .... *
பத்தம்நேத்திரவாயுவுடன் பகரும்புழுவெட்டாணியென ...... *
நத்தப்வலிப்புவெள்ளெழுத்தாசாத்தும்நேத்திரவலிபாதே ... *
பாதேயழற்சிவிழிநேத்திரப்படசுருக்குருதிசெஞ்சுடராம் .... *
நேரேவெழுச்சிடுவிச்சக்கண் விஷநாத்தவிளிகண்ணழிகண்ணும் ... *
கூரேமுடமயிர்க்கண்ணிலநச்சிஞர்க்குந்தொகை ணூற்றறுபின்னீ *
பாரேமுனிவர்மாத்தர்கட்குப்பகுத்தார்வியாதிதொகுத்தபே .. *

வாதகாசம்-பித்தகாசம்-சிலேத்துமகாசம்-நீலகாசம் - திமிரவிகாசம்-குமரிகாசம்-மந்தாரகாசம்-இரத்தகாசம்-சமருப்படம்-பில்லம்-படலம்-வெண்பாகுப்படலம்-மாலைக்கண்-விழிவிழுங்கி- மவெவளர்த்தி-மதிமந்தம்-பருவெளிவு-சுத்துக்கண்-குருக்குக்கண் - உலவு-காசவெரி-அன்னவோபம்-அனல்கோபம்-புகைச்சல்-பற்படரோகம் ஒட்டுக்கண்-கமலங்கள்-கவிரிவு-நீர்ப்பாய்ச்சல்-செவ்வேர் - சுத்தம்-சக்கிரவி-அமாம்-அர்க்காம்-கட்கட்டி-இருட்கண்-செவ்வரிப்படலம்-கூச்சம்-ஆணிப்பூ-புழுவெட்டு-நேத்திரவாயு-வெள்ளெழுத்து-கண்வலி-அழற்சிவிழி-கண்குருதி-செஞ்சுடர்-எழுச்சி-புனிற்றகண்-இலிகண்-அழிகண்-முடமயிர்-கண்ணிலநச்சி-முதலான கண்ரோகம்-௯௬.

அவைகள்பிறக்குமிடம்.

வாதகோபத்தால் கருவிழியிவிடத்து-சடு-ம்-சிலேத்துமகோபத்தால்-வெள்ளைவிழியிவிடத்து-உய-ம் - பித்தகோபத்தால் இமையோரத்தில்-வக-ம்-கடைக்கண்ணில்-மரு-ம்-பிறக்கிறது-

அவைவருவதற்குக்காரணம்.

பாதர் மயக்கத்தாலும் - மூலைத்திலக்கினி பதிரிப்பதாலும் மேகதிராலும்-மலக்கட்டுகளாலும்-தலைவாயுதியிலாலும்- என்னெய்முழுக்குத்தவறலும்-அதிகவிசனத்தாலும்-கடும்வெயிலில் - ஓயாது நடக்கிறதாலும்-அதிகசுமையெடுக்கிறதாலும் - மழையிலும்காற்றிலும் அலைப்படுவதினாலும்-தாம்பூலம்அடக்கி - நித்திரைசெய்வதாலும்-ஆத்திதபார்வையினாலும் மேற்படிரோகங்கள் சம்பவிக்கும்

வாதகாசத்தின்குணம்,

விழிவீக்கிக் கடுத்தது-நைத்துபோலெரித்து நீர்வடியும் நித்திரைசத்துப்வாராது.

சிகிச்சை.

ஒருபடி ஆவின்னெய்யில் தத்திராகமொருகிராங்கை அரிந்து சுருக்கிபடி(வ) நத்தைக்கூனை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம்

47

இவைகளைச்சிதைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துக்கொண்டு சிறுபூளைச்சாற்றை மூன்றுங் கண்ணிற்பிழிந்து அப்பால் மேற்படி நெய்யைக்கட்டியாவது அல்லது முள்ளி ஆவாரை அல்லி நீலி முருங்கை இலைகளின்பூவை ஓரளவாய் ஆவின்பால்விட்டரைத்து அப்பால் மேற்படிநெய்யும் தேனுங்கூட்டிக் களிம்புசெய்து கண்ணில்தீட்டியாவது நல்லெண்ணெய் படி (௧) நெருஞ்சிச்சாறு மூலப்பால் ஆவின்பால் வகைக்குப்படி அரைவீதம் இவைகளை யோர்நிலையாய்க்கலக்கி[illegible] சிற்றாமுட்டிவேர் கொன்றைப்பிசின் அதிமதுரம் விலாமிச்சவேர் வெட்டிவேர் கொத்தமல்லி சிறுபீளைவேர் செஞ்சந்தனம் கோஷ்டம் ஏலம் வகைக்குப்பலம்(௧) இடித்து எட்டுப்படிதண்ணீரிற்போட்டு (௧) படியாய் வற்றவைத் திறுத்துக் கூடவிட்டுச் சடாமாஞ்சில் சாஸ்திரபேதி வகைக்குப்பலம் (௧) ஆவினெய்யிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

பித்தகாசத்தின்குணம்.

வெள்விழியில் வெண்மேகம்போல் நீர்படர்ந்து கருவிழியிற்பாதி உளுந்துப்பிரமாணம் வெண்மையாய்த்தோன்றும்.

நிவர்த்தி.

சங்கு-திரிகடுகு-அரிதாரம்-அதிமதுரம்-புன்கவித்து-பீதரோகணி-முத்தம்-மனோசிலை-இவைகளை ஓர்நிறையாய் நந்தியாவட்டப்பூச்சாற்றிலரைத்துக் குளிகைசெய்து தேனிலுரைத்துக் கண்ணிற்போட்டு சிற்றாமுட்டி முசுமுசுக்கை குறும்பை சீந்திற்கொடி உத்தமதாளி தாமரைவளையம் வகைக்குப் பத்துப்பலமிடித்துப்பத்துப்படிதண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்திறுத்து அதில் அதிமதுரம் சண்பகப்பூ செவியம் கோஷ்டம் மஞ்சிட்டி ஏலம் லவங்கம் வகைக்குமூன்று [illegible] ஆவின்பாலிலரைத்துப்போட்டு ஒருபடி நல்லெண்ணெய்விட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து முழுகியும்வரத்தீரும்.

குமரிகாசத்தின்குணம்.

கண்விழிக்குக் கடுப்பும் வலியுங்காணும் பீளைகட்டும்.

நிவர்த்தி.

அருகு-அத்தம்-பச்சைப்புளித்து-இந்துப்பு-சங்கு-மிளகு-மஞ்சள் இவைகளை யோர்நிறையாய் ஆவின்பாலில்விட்டரைத்துமேற்படி நெய்யிற்போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு கண்ணில்வார்த்தும் ஆவினெய் கருவிளச்சாறு வகைக்குப்படி(௧) ஒன்றாய்க்கலந்ததில் கொக்குமந்தாரைக்கீழ்க்கை சீந்திற்றண்டு ஏலம் மல்லி விலாமிச்ச வெ

ட்டிவேர் சண்பகப்பூ நெல்லிமுள்ளி வகைக்குப்பலம் (௨) ஆவின் பாலிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகியும் வாத்திரும்,

நீலகாசத்தின்குணம்,

கண்சோதியைப்படுத்துச் சர்ப்பூசணைக்குபோல் வெளுவிக்காணும் படிபோல் நீர்படர்ந்து ஒளிமங்கும்,

நிவர்த்தி

வெள்ளாம-துத்தம்-துருசு-சாரமட்டிவேர்ப்பவளம் - நீக்கர் வேறிட்பச்சைக்கர்ப்பூரம் சாஸ்திரபேதி-இவைகளை யோர்தினாயா வி மாதுளம்பூச்சாத்திலரைத்துக் கயிறுசெய்து கண்ணிற்போட்டு பாதரிமுளமுங்கைகை பரித்தி செங்குன்றி முடக்கொத்தான் இலைகளின்சாறு வகைக்குப்படி(௨)நல்லெண்ணெய்படி(௧) ஒன்றாய்க்கலந்ததில் சாம் சடாமாஞ்சில் ஏலம்-மல்லி-காய்ச்சி-கோஷ்டம் வகைக்குப்பலங் கல்லிதமனைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவாத்திரும்,

நீரொளிகாசத்தின்குணம்,

கண்ணிற்சலங் கோர்த்துத்திரண்டு கருவிழியினடியில் பூப்போல் தோன்றியது திப்பெபொறிபோல் ஒளிவிடும்,

நிவர்த்தி,

குங்குமப்பூவும் பச்சைக்கர்ப்பூரமும் சமமாய் எலுமிச்சம் பழச்சாற்றிலும் தேனிலும் குழம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்போட்டும் ஆனைத்திப்பிலி அதிமதுரம் கக்கோலம் வெள்ளிலோத்திரம் சுக்கு திரிபலை வகைக்குப்பலம்ஒன்றாய்நெய் ஆவின்பாலிலரைத்து ஒருபடி நெய்யிற்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகியும்வாத்திரும்,

நீர்ப்பாய்ச்சலின்குணம்,

விழிதொந்துசிவந்து அனைத்தியாவெரியும் அருவிபோல் நீர்வடியும் நினைவெடுக்கும்,

நிவர்த்தி,

குன்றிப்பால் துருசு துத்தம் குமரிவேர் சங்கு இவைகளை ஓர்நிறையாய் தேனும் முலைப்பாலும்விட்டுக் குழம்புபோலரைத்துக்கொண்டு கண்ணில்தீட்டியும் கையாந்தகரை கருவாளைக் கிழங்கு கோமத்திராய் உத்தமதாளி தைவேளை மணித்தக்காளி தந்திபாலட்டம் இவைகளின்சாறு வகைக்குப்படி கால் நல்லெண்ணெய்படி(௨) ஆவின்நெய்படி அரை இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் வகைக்குப்பலம்(௧)அதிமதுரம்கோஷ்

௯௫

டம்-சந்தனம்- மஞ்சிட்டி-குருக்கை-சதகுப்பை -கண்டில் சடா மாஞ்சில் காசிகோலம் வசுவாசி-இந்துப்பு-தான்றிக்காய் வகைக்கு கழஞ்சு(௨)விதம் அரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து முழு கியும்வாத்திரும்

அக்னிகோபமென்ற அனல்கோபத்தின்குணம்,

நயனநொந்து சிவந்து வலித்துப்புடைத்துத் தீப்போலெரி ந்து நீர்வடியும்.

நிவர்த்தி,

மாதுளம்பூவும் காயும் பச்சைக்கர்ப்பூரமும் ஒத்திடையாய்க் கல்வத்திலிட்டு முலைப்பால்விட்டுச் சிதைத்துத் துணியில்முடிந்து க ண்ணிற்பிழிந்து இதனடியில்வருகிற தயிலங்களி லொன்றை முழு கிவரத்தீரும்.

முலைப்பால் நல்லெண்ணெய் வகைக்குப்பலம்(௧) விதங்கல ந்து கோஷ்டம் சண்பகப்பூ ஏலம் அதிமதுரம் முத்தக்காசு வி லாமிச்சம்வேர் வெட்டிவேர் சந்தனம் வகைக்குப்பலம்(௨)விதம் மேற்படி பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவரத்தீரும்.

கற்றாழஞ்சாறு நெல்லிக்காய்ச்சாறு நல்லெண்ணெய் வகை க்குப்படி(௧)ஒன்றாய்க்கலந்துகாய்ச்சிக் குறுகிவருகையில்பச்சைக் கர்ப்பூரம் புனுகுசட்டம் சந்தனம் சாதிக்காய் வகைக்கொருகழஞ் சு விதம் பொடித்துப்போட்டுவடித்து முழுகிவரத்தீரும்,

பித்தக்கண்ணின்குணம்.

சுரு[illegible]-சாந்தம்-செவியம்-வெள்ளைக்காக்கணம்வேர்-தூ தம்-அருகு-[illegible]லம்-இவையெல்லாம் ஒத்திடையாய் எலுமிச் ம்பழச்சாற்றில் அரைத்துக் கயிறசெய்து ஆவின்பாலும் மு லைப்பாலும் அரைத்து[illegible] கண்ணிற்போட்டுவரத்தீரும்.

அத்தப்-அருகு-கம்பிளிகட்டசாம[illegible]ல்-தலைமயிர் சுட்டசாம்ப ல் வகைக்கு விராகனிடை(௧)விதங்கல்வத்திலிட்டு [illegible]கொடிச்சாற்றி (௪)சாமம் அரைத்துலர்த்தியபின்பு ஆவின்வெண்ணெயைக்கூட் டிக் களிம்புபோலரைத்தால் கண்ணிலிட்டுவரத்தீரும்.

ஆவின்பாலும் நல்லெண்ணெயும் வகைக்கொருபடிவிதங் க ந்தகில் நிரியங்கு [illegible] தென்னம்பூவேர் அதிமதுரம் மட்டிப் பால் கோஷ்டம் சந்தனம் ஏலம் குதிரைவாலிவேர் கஸ்தூரி சவ் வாது [illegible] ஜடாமாஞ்சில் வகைக்குக்கழஞ்சு(௨) இவைகளை நீரிலரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படி னாயோகங்களி லொன்றைக் கண்ணிற்போட்டும் இந்த எண்ணெ யமுழுகிவரத்தீரும்.

காசவெகிர்குணம்,

எழுத்தைப்பார்த்துப் பின் மனிதனைப்பார்த்தா லிருட்போ ற்றோன்றும்,

நிவர்த்தி,

வாலுளுவைபரிசி-குங்குமப்பூ-சோப்பு- பச்சைக்கர்ப்பூரம்-சந்தனம்-சவ்வுகப்பூ-பீதரோகணி லவங்கப்பத்திரி- வெள்ளைச்சாரணைவேர்-வகைக்குக்கழஞ்சு (க) வெள்ளிப்பொடிகழஞ்சு (வ) இவைகளைத் தேனில் நாலுசாமமரைத்துக் கண்ணிற்போட்டு நல்லெண்ணெய் அவின்பால் மேற்படியிரத்தவிளைகைக்குப்படி(ஈ இவைகளைக் கலந்தகித் சத்தனம் தேவதாரம் பேரீச்சம்பழம் மூத்திரிப்பழம் காட்டெருமைப்பால் தாமரைப்பூ ஏலம் லவங்கப்பத்திரி மல்லி நெல்லி முள்ளி வகைக்குப்பலம்(ஈ)இவைகளை மேற்படியெண்ணெயிலாக்கிப்போட்டுக் காய்ச்சியெடுத்துத் தலைமுழுகிவர காசவெகி கண்மயக்கம் பித்தநீர் தலையிடிநீங்கும்.

படைச்சலின்குணம்.

கண் மங்கலாயும் உருவம் அநேகமாயுந்தோன்றும்.

நிவர்த்தி,

தலைப்பொடுகழஞ்சு(ஈ)நாத்தம் கழஞ்சு(உ)இந்துப்பு கழஞ்சு (க) இவைகளை பன்னைமட்டைச்சாற்றிலரைத்துக் குழிகைசெய்து மேற்படிசாற்றிலுரைத்துக் கண்ணிலிடத்தீரும்,

எலுமிச்சம்பழச்சாறு ஒருதுளி நல்லெண்ணெய் ஒருதுளி இலுப்பையெண்ணெய் உடைதின தண்ணீர் ஒருதுளி இவைகளை மொண்ணிகுப்பலத்து கையில்மத்தித்துக் கண்ணிற்போட்டுவரத் தீரும்,

கடுக்காய்ப்பருப்பு-வெ-திப்பிலி-கு-மிளகு-க- இவைகளை நெல்லிப்பழச்சாற்றிலரைத்துக் குழிகைசெய்து மேற்படி சாற்றிலா வது மேற்படி வற்றலூறின தண்ணீரிலாவதுரைத்துக்கண்ணிற்போட்டுவரத்தீரும்,

பலகறை-ஆடாதொடை(கு)நாத்தப் அருகு வகைக்கு விராகனிடை(வ)இவைகளை யெலுமிச்சம்பழச் சாற்றிலரைத்துக் குழிகைசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும்,

கடம்பவிரை-ஆவின்பாலிலரைத் துலர்த்திக்கொண்டு முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும்,

வெள்ளைச்சாரணைவேர் மிளகு திப்பிலி இவைகளைப் பொடியாய் உத்தமதாளிச்சாற்றிலும் குழிஞ்சாற்றிலும் நந்தியாவட்டப்பூச்சாற்றிலும் அரைத்துக் குழிகைசெய்து திரியுரைத்துக் கண்ணிற்போடத்தீரும்,

நல்லெண்ணெய்படி-அ-முலைப்பால்படி-அ-ஒன்றாய்க்கலந்ததில் அதிமதுரம் நற்சீரகம் வகைக்குவிராகனிடை-க-மிளகுவராகனிடை-இ-சற்றுமுன்சொன்ன ஒருபாகளவைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து ஒன்றைவிட்டொருநாள் தலைக்கிட்டு உசிலம்பொடியாவது பாசிப்பயறுவது அரைப்பிட்டுத்தேய்த்துச் சுடுதண்ணீரில் ஸ்நானஞ்செய்துவரத்தீரும்.

நல்லெண்ணெய்படி-உ-மிளகு அதிமதுரம் வகைக்குப்பலம்-க-இவைகளையாவின்பாலிலரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துமுழுகிவரத்தீரும்.

பதிமந்தக்குணம்.

கண்சிவந்து உறுத்திவலிக்கும் பீளைசாடும் நீர்வடியும் பார்வைமந்தமாயிருக்கும்.

நிவர்த்தி

கடல்நுரையுங்கற்கண்டும் மோர்தெளியாய்த் தேனிலரைத்துக் கண்ணிலிடத்தீரும்.

இதிலாறவிடில் இந்துப்பு மாசிக்காய் மயிலிறகு இவைகளைச் சமமாய்ப் பசுவின்பாலிலரைத்துக் கலிக்கஞ்செய்து மேற்படி நீரிலுரைத்துக் கண்ணிலெழுதிவரத்தீரும்.

இதிலுந்தீராவிட்டால் இந்துப்பு சதகுப்பை சங்கு மயிலிறகு கடல்நுரை மிளகு செங்கற்பொடி ஓரளவாயெடுத்துச் சம்பழச்சாற்றிலரைத்துக் கலிக்கஞ்செய்து ஆவின்பாலில் உரைத்துப்போடத்தீரும்.

இதிலுந்தீராவிட்டால் தெற்கில் படர்ந்திருக்கும் நாயுருவி வேரை ஒருநாள் முழுதும் இந்துப்பு நீரிலூறவைத்து பிறகு அதனை மேற்றிசையாய் நத்தியாவட்டப்பூச்சாற்றிலரைத்துக் கலிக்கஞ்செய்துகொண்டு மேற்படி சாற்றிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவரத்தீரும்.

மேற்படி வியாதிகளைச் செய்யும்போது இதனடியிற் சொல்லியிருக்கிறமருந்தைத் தலையிற்றேய்த்து அன்றுடம்ஸ்நானஞ்செய்துவந்தாற் பசுவில் அருந்துதிதோன்றும்.

கண்மந்தம் பித்தம் தீர்ப்பாய்ச்சகுக்குத்தைலம்.

சந்தனம் அதிமதுரம்-வகைக்குப்பலம் (க) குமரிச்சோற்றை ஒருபிடி இவைகளை ஆவின்பாலில்விட்டரைத்துக் கொதிக்கவைத்துத் தலையிற்றேய்ப்போட்டு அருத்தித்தேய்த்து ஸ்நானஞ்செய்துவரத்தீரும்.

பத்பரோகத்தின்குணம்.

கண்ணிமையினுள் இரத்தங்கட்டித் திரண்டு இளமாமிசம்போ லிருக்கும்.

நிவர்த்தி.

கண்ணிமையைப் பிதுக்கிக்கொண்டு அந்நீ சிரசப்பொரு[illegible] த்துவிப் பேய்ப்பீர்க்கிலையாற்றேய்த்து இரத்தம்போக்கி புளிய இலையைப்பிடித்துச் சாறுபிழிந்து குழம்பாய்க்காய்ச்சி மூன்றுநாள் கண்ணிற் பறவிலையயிட்டு அக்கம் அருக இர்ஜட்டு இலைகளை பேர்திரையாய் உப்பினிச்சாற்றில் மைபோலரைத்துலர்த்தித்தாய் பால் நெய்யுந்தேனும்விட்டு களிப்புபோலரைத்துக்கொண்டு கண் ணிற்போட்டுவரத்தீரும்,

சக்ருப்பத்தின்குணம்.

வெள்ளைவிழியில் நீர்கோர்த்து இமையிலிமிக் கபித்துவலிக்கு ம் பீளைகட்டும்.

நிவர்த்தி.

வெண்குன்றிப்பருப்பும் அதின்வேரும் வெள்ளைக்காக்கணம் வேரும் அதின்விரையும் முலைப்பால்வார்த்தரைத்து உருட்டிக் குளிகை செய்து தேனிலுரைத்துக் கண்ணிற்போட்டு ஆடுதின்னாப்பாளை இலை மணித்தக்காளி வரிக்கற்றாழை இலைகளில்சாறு நல்லெ ண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி(௧) கோஷ்டம் மட்டிப்பால் அதிமதுரம் விலாமிச்சம்வேர் வெட்டிவேர் ஏலம் வகைக்குக் கா லபலம் நிதமரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்

பில்லத்தின்குணம்,

கண்ணிமை பருவம் முருவமையும் நீர்கட்டித்திரண்டு புடைத் து விம்மியிருக்கும்.

நிவர்த்தி.

கண்ணிமையை உருத்திப்பிடித்து ஊசியாற்குத்திப்புரித்தட போட்டு ஆவின்பால் நெய் நல்லெண்ணெய் இம்மூன்றுமொவ்வொ ப்பக்கலந்து காலடிமீற்காய்ச்சியதில் எள்ளைப்பொடித்துச் சேலை ல்முடிந்து தோய்த்து நெற்றி புருவம் கன்னம் இவைகளில் ஒற்ற ணஞ்செய்து பச்சைக்கர்ப்பூரத்தை நெய்யிற் பொடித்துப்போ ட்டு சட்டியில் கொதிக்கவைத்து அதில் ஆனைக்கட நனைத்து இமையின் மேலிற்போட்டு பெருங்காயமுஞ் சீரகமும்பொடித்துத் தணலிற் றூவிப் புகைகாட்டிவரத்தீரும்.

செவ்வேர்க்குணம்.

கடைக்கண்ணிலிருந்து வெள்ளைவிழியெங்கும் செப்புநாம் போற் செவ்வரிபோடப்பட்டிருக்கும்.

நிவர்த்தி.

மேற்படி மாசை ஊசியால்திரட்டி புரித்துப்போட்டு வெட்பூளாவேரை முலைப்பால் விட்டுத்தட்டிக் கண்ணிற்பிழியத்தீரும்,

பருவணிசைக்குணம்.

கடைக்கண்ணிற் சதைவளர்ந்து படர்ந்து உறுத்து வலிக்கும்,

நிவர்த்தி.

ஊசியினாற் சதையைத்திரட்டி புரித்துப்போட்டு அதிமதுரத்தைத்தட்டி ஆவினெய்யிற்போட்டுச் சிவக்கக்காய்ச்சிக் கண்ணிற்கட்டிவந்தா லுந்தீரும்.

அல்லது-வெங்கலப்பொடி தலையோடு வெள்ளைக்கற்பொடி அத்தம் இந்துப்பு இவைகளை யோர்நிறையாய்ப் பழச்சாற்றிலரைத்துலர்த்திப் பின்பு வெண்ணெய்க்கூட்டிக் களிப்புபோலரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலும் பருவணிசைச்சதைவளர்த்தித்தீரும்.

படலத்தின்குணம்.

வெள்ளைவிழியிற் பாலாடைபோல் மாசுபடர்ந்திருக்கும்.

நிவர்த்தி.

மேற்படிமாசை ஊசியினாற்றிரட்டி புரித்துப்போட்டு மேற்படி அதிமதுரநெய்யைக் கண்ணில்வார்க்கத்தீரும், அல்லது திரிகடுகு அத்தம் செஞ்சந்தனம் வெள்ளைச்சாரணைவேர் தாமரைக்கிழங்கு பச்சைக்கர்ப்பூரம் இவைகளை யோர்நிறையாய் முலைப்பால் விட்டரைத்துக் கபிலமெய்து மேற்படிபாலினாலரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலும், அல்லது அஞ்சனக்கல் முட்டைத்தோல் சங்கு இப்பிலி சந்தனம் தலையோடு இவைகளையோர்நிறையாய்ப் பழச்சாற்றிலரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலும் சகலபடலமும் தீவிரக் குணப்படும்.

வெண்மாசுப்படலத்தின்குணம்.

விழியில் வெண்மாசுபடர்ந்து சரசரத்துக் குத்தெடுக்கும்.

நிவர்த்தி-

மீதரோகணி அத்தம் அருகம் பச்சைக்கர்ப்பூரம் திரிகடுகு நெல்லிப்பருப்பு செம்புப்பொடி படிகாரக்கல் இரும்புப்பொடி தலையோடு கடுக்காய் சிறுகீரைவேர் பொன்னாங்காணிவேர் வெட்பூளாவேர் ஓரிலைத்தாமரைவேர் வகைக்குவிராகனிடை (௧) இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலும் காணிச்சாற்றிலும் அரைத்துக்கபிலமெய்து முலைப்பாலினாலரைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும் அல்லது கடுக்கு திப்பிலி மிளகு சங்கு அரிதாரம் பூக்கம்பருப்பு அதிமதுரம் அத்தம் மீதரோகணி மனோசிலை பூந்திக்கொட்டை

பொரி புளிநரகம் வெள்ளி செவல்நெருஞ்செதும்பு இந்துப்பு இ
லைகளை மொர்திவாயாய் நந்தியாவட்டப்பூச்சாற்றில் மூன்றுநா
ளரைத்துக் கலிறுசெய்துகொண்டு தேனிலாவது மூலைப்பாலிலா
வது உரைத்துக் கண்ணிலிட படலம் வெள்ளைகாசப்படலம் ஆணி
ப்பூவுந்தீரும்.

மாலைக்கண்ணிற்குளிகை.

மாலைநேரத்தி லிருட்டுபிடித்தது போற்காணுதல்.

நிவர்த்தி.

புளியம்பூ செம்பு வெள்ளைகாக்கணம்வேர் அதிங்கு மத
தும் அருகம்நீராத்திணம் முத்து பவளம் சமமா யெடுத்துச்சம்பழ
ச்சாற்றிலரைத்துக் கலிறுசெய்துகொண்டு மேற்படி சாற்றிலுரை
த்துக் கண்ணிற்றீட்டவாறும்.

வெட்பாலையை மைப்போலரைத்துக் கோழிப்பித்தத்திற்குக் கல
சஞ்செய்து உமிக்காந்தலிற்றட்டிக் கைசந்திக்கு புள்ளுக்குக் கொடு
த்தாலும் அல்லது மேற்படி பித்தைநூல் போல்லெடுத்துப் பொ
டித்து மூன்றுநாள் கண்ணிற் றடவிவரும் மின்னட்டையொடுசதுப்பிலை
யும் வெற்றிலையுங்கசக்கிக் கண்ணிற்பிழிந்தாலும் மருதம்பட்டைநா
ற்சிரகம் சருக்கரை இவைகளைச்சிதைத்துப் பிழிந்தாலும் இலுப்பை
ப்பூவையாவது மகிழம்பித்தையாவது அல்லது சட்டாமணிக்கி
ழங்கையாவது அதிர்ச்சிக்கிராமையாவது மூலைப்பாலிலுரை
த்துப்போடத்தீரும்.

பொன்னாங்காணியை வெள்ளாட்டுப்பாலி லரைத்துப்போ
ட்டாலும் வெள்ளைச்சாரணைவேரைக் காடியிலரைத்துப்போட்டா
லும் மின்மினிப்பூச்சி நருள வெள்ளைச்சாரணைவேர் மூன்றையும்
ச் சதாப்பிலைச்சாறுவிட்டரைத்துக் கலிறுசெய்து மூலைப்பாலி
லரைத்துப்போட்டாலுந்தீரும்.

விழிபிதுங்கிக்குணம்.

ஒருநேரக் காலை முதல் மதியம்வரை நலமிருந்தாய் அதிர்த்
துக்குடைந்து இடிக்கும் ஒருநேரம் உச்சிமதியமாய் மிக்குடைந்து
போலிருக்கும் அப்பால் நாட்செல்லச்செல்லக் கண்ணிற் சதைவ
ளர்ந்து முழுப்பும்.

நிவர்த்தி.

மேற்படிகுணங்கண்டவுடன் வோகுவிராகணிடை(க) உப்புக்
கல் ஒ[illegible] அ தலையருக்கையில் ஒருகொட்டைப்பாகுப்பிரமாணை
ப் இ[illegible]ச்சுதைத்துத் துணியில்முடிந்து மூலைப்பாலி லூற
வைத்து ஒருசாமத்துக்கு ஒருவிசை கண்ணிற்பிழிந்து படலமட்

டைச்சாறு வணிச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி அரைக்கால் விதங்கலந்ததில் சிறுகீரைவேரை ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் அரைத்துப்போட்டுக் குழம்பாய்க்காய்ச்சிக் காலையிற்றலையிற்றடவிவிட்டு மாலையில் ஸ்நானஞ்செய்தும் காலையில் ஆவின்பாலிற்சர்க்கரைகலந்துகொடுத்து அசனத்திற்கு ஆவின்பாலுந் தயிருஞ்சேர்த்து இச்சாபத்தியமாய்க்கொண்டுவரத்தீரும்,

LAC...

மாலைகாசத்தின்குணம்.

கண்ணுறுத்திவலித்தெரியுஞ் சருவிழுச்சந்தே ... கூடிருக்கும் தியமவருயக்கைட்டுப்.

நிவர்த்தி.

இத்துப்பு மஞ்சள் சாரடைவேர்-துத்தம்-இலைகளை யோர்தியாய்ப் பழச்சாற்றில் அரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிடத்தீரும்-

மணிவளர்த்திக்குணம்.

கடைகண்ணிற் பலகாலும் மணிபோலெழும்புவதும் உடைவதுமாயிருக்கும்.

115326

நிவர்த்தி.

மிளகு-செம்புப்பொடி-நீர்லைத்தாமரைவேர்- சங்கோடு-துத்தம்-படிக்கிக்கல்-வகைக்குவிராகனெடை(௩)வுதுத்த துருசுவிராகனிடை(௨)இவைகளை யெலுமிச்சம்பழச் சாற்றில் மூன்றுநாள் அரைத்துச் செப்புச்சிமிழிலடைத்து மருந்துமறையும்படி நெய்சாற்றைவிட்டுமூடிவைத்திருந்து உலர்ந்தபின்பெடுத்து மேற்படிசாற்றுலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக்கண்ணிற் றீட்டிவந்தாலும், சூதம்விராகனிடை(௧)காரீயம்விராகனிடை(௨) துத்தம்விராகனிடை(௪)சங்கு விராகனெடை (௮) தாம்பரம் விராகனிடை(௰)இவைகளைப் பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து ஆவின்நெய்யில் உரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந் தீரும்.

ஒருபலம் சிற்றாமணக்கின்வேர்ப்பட்டையையிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு வற்றவைத்திறுத்துவடித்துக்குழம்பாய்க்காய்ச்சிக் கல்வத்திலிட்டுக் கடுக்காய்த்தோலுஞ் சர்க்கரையும் சமமாய்ச்சேர்த்து மைபோலரைத்துப் பின்பு தேன்விட்டுக் களிபோலரைத்துக்கொண்டு கண்ணிற்போட்டுவந்தாலும்,துத்தத்தை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற் றீட்டிவந்தாலுந் தீரும்.

மேற்படிவியோகங்கள் செய்யும்போது காலையில் முலைப்பாலிற் புளியைக்கரைத்துக் கொதிக்கவைத்துத் துணியிற் கட்டி

ஒத்தனஞ்செய்தும் கண்ணிற் படலங்களையிட்டுமே மயிலிறகால் தடவிக் காய்ச்சினாலும் இரத்தப்பும் சர்க்கரையும்வெறுப்பித் தனியிடமு டிக்க ஒத்தனஞ்செய்துவரவும்,

மந்தாரகாசத்தின்குணம்,

கண்சதரெல்லாம் வளரயுண்டாகி அரிப்பெடுக்கும் கண்சிவ த்துவலிக்கும் விழிசிறுக்கும்.

நிவர்த்தி,

அத்தம்-அரசு-வகைக்குவிராகனிடை(௧)சிறுதேரை-பொன்னு ங்காணி-பூரணத்தாமனா-இவைகளில்வேர் வகைக்கொருபாக்களவு எலுமிச்சம்பழச்சாற்றால் மைபோலரைத்துக்காசம்போல்வில்லை தட்டிக் காயவைத்துப் புதுச்சட்டியிற்பாதி மணற்கொட்டிக்கொண்டு அதில் நான்குநாழிகைவெறித்துப் பஸ்பித்துக் கிடைப்பிலடைத்துக் கொண்டு என்னுடைய மாணைம் கண்ணிலிட்டு குமரிமணி மேலிப் பாத்தி பொன்முட்டை இவைகளின்சாறு நல்லெண்ணெய் ஆவி ன்பால் வகைக்குப்படி(௧)வெட்பாலா-தேருந்தில் விதிலாகாந்தி வியரகிச்சுவேர் வெட்டிவேர் கொத்தமல்லி கோஷ்டம் வகைக்கு பலம்(௩)விதமனைத்துப் போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து அதூகத்திருப்பி,

உஷ்ணவுகண்ணின்குணம்,

கண்மணியிலுள் எப்போதும் உஷ்ணத்தைவலிக்கும்,

நிவர்த்தி,

வெள்ளைக்காக்கணம்வேர் விராகனிடை(௧)வெண்குன்றிவேர் விராகனிடை(௨)வெள்ளைச்சாரணைவேர் விராகனிடை (௩) மஞ்சள் விராகனிடை(௪)அத்தம் விராகனிடை(௫)அருகு விராகனிடை(௬) இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கலிக்கசெய்து மூலி கைசாறிலரைத்துக் கண்ணிலிடத்திரும்,

கண்ணூலே வு கண்ணருக்கல் ஓட்டிக்கண் படலங்களை

மூறிலானவிபரீகட்குமாத்திரை,

அத்தம்-இரும்புப்பொடி-முத்து-முட்டைத்தோல்-பச்சைக் கர்ப்பூரம் வகைக்குக்கழஞ்சு(௧)செம்புப்பொடி மெழுகு(௨) சீனா ன் மஞ்சாடி(௧)பவளம்-வெள்ளி-வகைக்குக்கழஞ்சு(௨)பொடித்து ப்போட்டு எலுமிச்சம்பழச்சாற்றிலும் முருங்கைப்பூச் சாற்றிலு ம் காடிநீரிலும் தனித்தனியே அரைத்துக் கலிக்கசெய்துகொண்டு வது அல்லது கோசலம்-தேன்-மூலைப்பால் வகைக்குப்படி அதி னால் ஒன்றுக்கொத்து நீர்வற்றககாய்ச்சிவடித்துவைத்துக் கொண்டு அதனை த்துப்பொடத்திரும்,

௭

வரணம்-சுக்கிலம்-உறைவிற்கு,

திரிபலை-தேற்றுவிரை-தாமரைப்பணி - ஓர்நிறையாய்க் குமரிச் சாற்றிலரைத்து முலைப்பாலிலுரைத்து(௨௧)நாள் கண்ணிற்போட் டுவரத்தீரும்,

கருங்குகண்ணின்குணம்,

குவளைப்புஷ்பமுகி நாட்குநாட் கண்கருக்கும்,

சங்கு-காந்தம்-கடல்நுரை - நன்றாய்ச்சுட்ட செங்கற்பொடி இந்துப்பு-மனோசிலை-சவிக்காரம்-துதரோகணி-பச்சைக்கர்ப்பூரம்- சமமாய் நந்தியாவட்டப்பூச்சாற்றிலரைத் துலர்த்திப் பின்பு வெண் ணெயைக்கூட்டி மைப்போலரைத்துக் கண்ணிற்தீட்டிவரக் கருங் குகண்முதலான வியாதிகளுந்தீரும்,

ஒட்டைக்கண்ணின்குணம்,

கண்ணிலெப்பொழுதம்பீளையும்நீருஞ்சொரியும்,

நிவர்த்தி,

நத்தை-திருகு-புளியம்பொருக்குச்சுட்ட சாம்பல் சுக்கச ய்ச்சரி இவைகளை யோர்நிறையாயாவின்வெண்ணெயா லரைத்துக் கண்ணிற்போட்டத்தீரும்,

மலக்குகண்ணின்குணம்,

இராக்காலத்திற் கண்ணில்நீர்செம்பிப் பகலில்மலக்கும்,

நிவர்த்தி,

சமுத்திராப்பழத்தைச் சுத்திசெய்துகல்வத்திலிட்டு ஆவின்வெ ண்ணெயைக்கூட்டிக் களிம்புபோலரைத்துக் கண்ணிற்தீட்டி இர ணடியிற்கண்டிருக்கும் பக்குவத்தைச் செய்துவரத்தீரும்,

கண்மந்தம் நீர்ப்பாய்ச்சல் மலக்கல் பித்தத்திற்கு,

சந்தனம்-குமரிமணி-அதிமதுரம்-வசைக்குப்பலம்(௧) இவை களைக்காற்படி-ஆவின்பாலிலரைத்துக் கலக்கிக்காய்ச்சித் தலையிற்த டவிட்டு மாலையில் ஸ்நானஞ்செய்துவரத்தீரும்,

இமைகுழிந்து-நீர்வடிந்து-பாபாத்து-வேதனைகண்டால் க டுக்காய்ச்சி நெற்றியில்சுடத்தீரும்,

கக்கட்டிக்கு,

நன்னாரி விரை சங்கு இவைகளில்வேரும் அதிமதுரமும் ஓர் நிறையாய் மைப்போலரைத்துக் காடியிற்கலக்கிக்கொண்டியிற்சொ க்கவைத்து இருப்புத்தசுடியால் களிம்புபோற்தேய்த்துக் கண்ணி ற்கொஞ்சம்போட்டுக் கட்டிமேலும்பூசத்தீரும்,

மூடமயிருக்கு,

செண்பகப்பூ-சந்தனம்-சிறுநாகப்பூ-வெட்டிவேர்-விளாமிச்சம்வேர்-சதகுப்பை-சாதிக்காய்-தக்கோலம் - சித்திரமூலம் - வகைக்கொருகழஞ்சுவீத பலாத்ற ஊட்டிப்படி தண்ணீர்விட்டு ஒருபடியாய்வற்றவைத்து அதைப் பீச்சாங்குழலிலூற் கண்ணிலடித்து மயிரையுரித்து அரிதாரம்-இந்துப்பு-செம்புப்பொடி-இவைகளை யொருநிறையாய்த் துளசிச்சாற்றிலரைத்துக் கலிறுசெய்து மூலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட்டுவந்தாலும், வெள்ளிக்காரம்-அத்தம்-திருக-மயில்மூட்டைத்தோல்-கோழிமுட்டைத்தோல் வகைக்கொருகழஞ்சுவீதம் பொடித்துக்கொண்டு எட்பிரமாணமெடுத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்,

இருண்டகண்ணுக்கு,

செல்லிமுள்ளி-பச்சைவிரை-வெள்ளுள்ளி-சிறுசீரை இவைகளைச் சமமாய் வெருகுபோலரைத்து அன்னம்செய்து மூலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலும் ஆவாரங்கரி வெள்ளைக்காசக்கரி சவுக்காரம் வகைக்குவிராகனிடை(க) திருகுவிராகனிடை(உ) சாம்பு விராகனிடை(௩) இவைகளைப் பசுவின்பால்விட்டு மைபோலரைத்துக் குளிகைசெய்து மூலைப்பாலிலுரைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும் அத்தம் திருக வெள்ளைச்சாரணைவேர் சேரான் வகைக்குக்கழஞ்சு(ஏ) எலுமிச்சம்பழச்சாற்றிலாட்டிக் கலிறுசெய்துகொண்டு பசுவின்சாற்றிலாவது அவரிலைச் சாற்றிலாவது உரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்,

இரத்தப்பாய்ச்சலுக்கு,

தேட்கொடுக்கிலையைக் கசக்கிக் கண்ணிற்பிழிந்தாலுந்தீரும்,

கண்ணெரிவுக்கு,

மாதுளம்பூ-நற்சீரகம்-நெருஞ்சிநெரால் - இவைகளையொருநிறையாய்ப் பசுவெண்ணெய்ச்சாற்றிலரைத்துக் கலிறுசெய்துகொண்டு மூலைப்பாலிலுரைத்துக் கண்ணில் தீட்டிவந்தாலும், செஞ்சந்தனம் சாலிரப்பேதி கேத்தூவினை இவைகளையொருநிறையாயரைத்து வெண்ணெயிற்குழைத்துப் பசுவின்பாலிட்டுவைத்தாலும் ஒருபடி ஆவின்பாலில் ஒருபலம் பொன்னாங்கண்ணிவேரையரைத்துக் கலக்கிக்காய்ச்சி உரக்கடத்திற்கடைந்து வெண்ணெயெடுத்துக் கண்ணிற்போட்டுவந்தாலுந்தீரும்,

கொட்டுப்பட்ட கண்ணோவுக்கும்
கோவைப்பட்டதற்கும்,

பன்னீர்ப்பெட்டியைக்காயவைத்து அதில் முருக்கிலைச்சாறுவிட்டு

கண்ணிலாவிபிடித்து புளியிலை துளசியிலை வகைக்கொருபிடி கடுக்
காய்(௫)இவைகளைபிடித்துப் பிட்டவித்துத் துணியில்முடிந்து ஒ
ருசொட்டுச்சாறு கண்ணிற்பிழிந்து வெதுப்பத்துடன் ஒத்தனஞ்
செய்து அப்பாலைத்தச்சாற்றில் எலுமிச்சம்பழத்தோடெட்ட கரி
யையரைத்துக்கலக்கிக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது
அல்லது கோழிமுட்டைத்தோடு வெண்ணெசசியிலை திப்பிலி தே
ற்றுவிரை மிளகு இவைகளைபொரிநிலாயாய் எலுமிச்சம்பழச்சா
ற்றிலரைத்துக் கொதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது அல்லது
கஞ்சாங்கோரைவேரை மேற்படிசாற்றிலரைத்துப் புறவளையமிட்
டாவது அல்லது மஞ்ஞற்கட்டியைப் பாற்க்காய்ச்சியதில்மு
லைப்பாலாவது முருக்கிலைச்சாறுவதாவிட்டு ஆவிபிடித்து மேற்ப
டிகட்டியை யரைத்துக் கண்ணிற்புறவளையமிட்டாவது ஆவினெ
ய் சிற்றாமணக்கெண்ணெ நல்லெண்ணெய் பொன்னாங்காணிச்சா
று இவைகளை பொரளவாய்க்காய்ச்சிச் சிரசிற்பதமிட்டுப் பொன்
னாங்காணி ஓரிலைத்தாமரை வெள்ளைக்காக்கணம் சிறகிலை இவைக
ளின்வேரைச் சமமாய் எலுமிச்சம்பழச்சாற்றில் மைப்போலரைத்
டிபுலர்த்தி அப்பால் ஆவின்வெண்ணெய்கூட்டிக் களிம்புபோல
ரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலும், அல்லது கடுக்காய்நெல்லி
சமூலம் கருவிலி மோர்நிலாயாய்ச் சிதைத்துத் துணியில்மு
டிந்து கண்ணிற்பிழிந்துவந்தாலுந் தீரும்.

கண்ணிற்புழுவெட்டிப்புண்ணுக்கு.

துத்தம்-துருசு-வெள்ளைப்பாஷாணம்-இவைகள் வகைக்கு வி
ராகனெடை(க)நிலாயாய்ப் பொன்னாங்காணியிலைச் சாற்றிலும் சி
றுகிரைச்சாற்றிலும் ஒருநாளரைத்து வில்லைதட்டிக் காயவைத்து
மேற்படிமூலிகையின்வேர்களை விளாங்காய்ப்பிரமாணமரைத்துக்
குகைபிடித்து அதில் மேற்படி வில்லைகளைவைத்துப் பொதிந்து
புளியம் பறணிக்குள்வைத்து புடம்போட்டு ஆவின்வெண்ணெய்
கூட்டிக் களிம்புபோலரைத்துக்கொண்டு புருவத்திலிட்டுவர புழு
செத்துப் புண்ணாறும் மயிர்முளைக்கும்.

வேறு.

வெள்ளைச்சீலையில் எருக்கம்பாலைத்தோய்த்து நிழலிலுலர்த்தித்திரி
யுருட்டி விளக்கிற் பசுவினெய்விட்டுத் தீயமேற்றிப் புகைச்சட்டி
த்தாரில் வைத்தஞ்சாம்பூசி மைப்பற்றவைத்துதிர்த்து விளக்கெ
ண்ணெயில் மத்தித்துக்கொண்டு கண்புருவத்திற் போட்டுவரத்தீ
ரும்.

வேறு.

விராலிக் குடல் இலாம்புநீக்கிக் காயப்போட்டு மைப்போற் பொடித்துக்கொண்டு கண்ணிமையிற் பண்டுவெல்லத்தைப்பூசி அதின்மேல் மெல்லியவெள்ளைத் துணியில் வெண்ணெய்யைத்தடவி மூடி அதின்மேற் பொடியைத் தூவி ஓரிரவு மல்லாக்கப் படுத்திருக்கப் புழுவெல்லாந் துணியில்வந்து ஒட்டியிருக்கும் காலையில் மேற்படி துணியைத் தண்ணீரிற்போட்டுப்பார்த்தால் புழுவெல்லாந்தண்ணீரில் மிதக்கும் இந்தப்படி மூன்றுநாள்செய்து அப்பால் சுவற்றிலொட்டியிருக்கிற நாட்பட்ட ஒட்டடையைத் தேனிலாவது முலைப்பாலிலாவது அரைத்துப் புருவத்திற்போட்டுவரப் புழுவெட்டு மாறி புண் ஆறி மயிர்முளைக்கும்.

வேறு.

மூத்தெருக்கஞ்செவிலேனை முலைப்பாலிலரைத்துப் புருவத்திற்றடவிவர புழுவெட்டுமாறி மயிர்முளைக்கும்.

கண்பூவுக்கு.

நேட்டொடுக்கிலையும் நந்தியாவட்டப்பூவும் ஒத்திடையாய்க் கசக்கிக் கண்ணிற்பிழிந்தாலும், பொன்னாரைவேர் கலிக்காய் இத்துப்பு பழம்பாசி இலைகளை யொத்திடையாய் முலைப்பால்விட்டுக் கட்டித் துணியில்முடிந்து நாளொன்றுக்கு மூன்றுதரமாக மூன்றுநாள் பிழியத்தீரும்.

முக்குளைச்செயிலையும் நந்திச்சுரும் ஒத்திடையாய் முலைப்பால்விட்டுச்சிதைத்துப்பிழியத்தீரும்.

உத்தமதாளி-நெருஞ்சில்-முருங்கை இலைகளின் பூவும் வெள்ளைச்சாரணைக்கொழுந்தும் நாய்வேளைக்கொழுந்தும் குருவிளியும் நற்சீரகமும் வகைக்குவிராகனெடை (௧) வீதம் முலைப்பால்விட்டுச்சிதைத்துக் கண்ணிற்பிழியத்தீரும்.

பூநாகம்-வெள்ளைக்காக்கணம்வேர் - வெள்ளைச்சாரணைவேர் - திருகு-அத்தம்-பவளம்-முத்து-செம்புப்பொடி-பொன்- ஒத்திடையாய் உடாத்தஞ்சாற்றலரைத்துக் கலிழ்செய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போடத்தீரும் அணிப்பூவும்மாறும்.

வேறு.

வையோடு-அத்தம்-திருகு-ஒத்திடையாய்க் குப்பைமேனிச்சாற்றிலரைத்துக் கலிழ்செய்து தேனிலுரைத்துப் போட்டுவரத் தாதுப்,வரட்டுப்பூவை அத்திமச்சிலைவை ஓரிலைத்தாமரை நந்தியாவட்டம் இலைகளின் வேரும் பூவும்-அத்தம்-திருகு-ஆமணக்குவேர்-வெத்த

195

தலையோடு-பல்கறை-இவைகளையோர்நிறையாய்ப் பனைமட்டைச் சாற்றிலரைத்துக் கழிறுசெய்துகொண்டு மேற்படி சாற்றிலுரைத் துக் கண்ணிற்றீட்டிவரத்தீரும்.

வேறு.

சீனிக்காரத்தைப் பீங்கானிலிட்டு எலுமிச்சம்பழச் சாறுவிட் டுக்காயவைத்து அந்தச்சீனிக்காரமும் பச்சைக்கர்ப்பூரமும் ஓர் நிறையாய் முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலும் பூவி ழுந்தகண் புறத்தின்காற்பெருவிரலைக் கயிற்றினாற்கட்டி(ன) உத்தா மணிப்பூவைக்கசக்கிக் கண்ணிற்பிழிந்துவந்தாலுந்தீரும்.

பூவெள்ளெழுத்திற்கு.

பீதரோகணி-நற்பவளம்-சாணடைவேர்-இவைகளைச் சமமாய்த் தண்ணீரிலரைத்துக் கழிறுசெய்து முலைப்பாலி லுரைத்துப் போடப் பூமாறும் தண்ணீரி லுரைத்துப்போட வெள்ளெழுத்து மாறும்,

ஆணிப்பூவுக்கு,

அத்தம்-பல்கறை-தேற்றாங்கொட்டை-மனோசிலை-தலையோடு மிளகு-திப்பிலி-சேவல்நெஞ்செலும்பு - வகைக்குக்கழஞ்ச(ரை)இ வைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கழிறுசெய்து காடியி லுரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலும் அல்லது-கடல்நுரை-மிள கு-சீனிக்காரம்-அதிமதுரம்-வெண்காரம்-கடுக்காய்-துருசு-அத்தம் மனோசிலை-அரிதாரம்-திப்பிலி-செம்புப்பொடி ஓர்நிறையாய் எலு மிச்சம்பழச்சாற்றி லரைத்துக் கழிறுசெய்து முலைப்பாலி லுரைத் துப்போட்டுவந்தாலுந்தீரும்,

வேறு,

நத்தைக்கூடு-மிளகு-ஆமையோடு முதலைப்பல்- பன்றிக்கொ ம்பு-சேவல்நெஞ்செலும்பு-வெள்ளி- புலிநகம் இவைகளையோர்நி றையாய் முலைப்பால்விட்டு மைப்போ லரைத்துக் கழிறுசெய்து கொண்டு தேனிலுரைத்துக்கண்ணிலிட ஆணிப்பூமுமாறும்,

...படலம்-அதிமாங்கிசவளர்த்திக்கு,

ஆமை... ...னைத்தத்தம்-தேற்றுவிரை-அத் தம்-துருசு இவை... ...யாய்க் காடியிலரைத்துக் கழிறு செய்து மேற்படி ... லுரைத்துப்போட்டுவரத்தீரும்,

பூ படலத்திற்கு,

கடுக்காய்-திப்பிலி-வெண்காரம்-சத்தைம்-கடல்நுரை - வெள் ளிலோத்திரம்-வகைக்குக்கழஞ்சு(கை)சங்கு-பவளம்-துருசு-வகைக்கு

கசமஞ்சு(ஈ) இவைகளை முருங்கைப்பூச்சாற்றிலரைத்துக் கழிறுசெய்து கண்ணிற்போட்டுவரத்தீரும்;

பூவிளை - துணிப்பூவுக்கு;

துத்தம்-துருசு-சீனிக்காரம்-வெள்ளைக்காக்கணம்வேர்-வளயலுப்பு இவைகளை பொர்திராய்ப் பண்ணைப்பட்டைச் சாற்றிலரைத்துக் கழிறுசெய்துகொண்டு மூலைப்பாலி லுரைத்துக் கண்ணிலிட்டுவரத்தீரும்;

அல்லது புளியிலையை வதுக்கிச்சம்பழச் சாறுவிட்டுச் சிறுகத்தாப்பிழிந்து அதிற்சேர்த்துவினாயும் பச்சைக்கர்ப்பூரமும் உரைத்துப்போட நீங்கும்;

பூப்படலம்-காசத்திற்கு.

முத்து பவளம்-துத்தம்-துருசு-படிக்கிக்கல் - பிங்கலேறும்பு-காசியம்-இரதம்-சீனிக்காரம்-வெண்காரம்-வெந்தயம் - தலைபோடு வகைக்கு விராகனெடை(க) எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கழிறுசெய்து மூலைப்பாலிலுரைத்துக்கண்ணிற்போட்டுவரத்தீரும்;

குருதத்திற்கு.

பச்சைக்கர்ப்பூரம்-காரியம்-ரசம்-மஞ்சள்-திப்பிலி-மிளகு-இவைகளைபொர்திராய்த் தத்தியாவட்டப்பூச்சாற்றிலரைத்துக் கழிறுசெய்துகொண்டு மூலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவத்தாலும் புளியங்கொழுந்தைப்பிடித்துச் சாறுபிழிந்து குழம்பாய்க் காய்ச்சிக்குழம்பிட்டு இத்துப்பு துத்தம் துருசு வகைக்கு விராகனிடை(க) இவைகளைப் பொடித்துப்போட்டு அரைத்துலர்த்திப் பின்பு தேனிவிட்டுக் குழம்புபோ லரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலும் இதுப்படிப்பின்னுக்கு விராகனிடை (க) துத்தம் துருசு வகைக்குவிராகனிடை(உ) இவைகளைக் காடியிலரைத்துக்கழிறுசெய்துகொண்டதி லரைத்துப்போட்டுவந்தாலுந் தீரும்.

குருதம் அடமாத்திற்கு.

சங்கு-இந்துப்பு-படிக்கிக்கல்-மஞ்சள்-சந்தனம்- மலைமிளகு இவைகளை பொர்திராய்ச் சுண்ணாம்பு [illegible] டைத்துக்கழிறுசெய்துகொண்டு தேனிலுரைத்துக் [illegible] போட்டுவரத்தீரும்.

இடிகண்ணுக்கு அரிப்புக்கு [illegible] கண்;

வெண்காரமும் மயிர்ச்சட்டசாம்பலும் பொர்திராய்ச் செய்பாலலரைத்துக் கழிப்புசெய்து கண்ணிலிட்டுப் போட்டுவந்தாலும் கல்லுத்திற் சக்கிலிச்சாறுபிழிந்து குழம்பாய்க் கழிப்புசெய்து லரைத்துக் கண்ணிற்போட்டுவந்தாலும் செக்கொட்டைகட்ட கரியப

அருகம் ஓர்நிறையாய்ப்பொடித்து ஆவின்வெண்ணெய்கூட்டிக்க ளிப்புபோலரைத்து இமையின்மேலிற்போட்டுவந்தாலும்இமைகண் மாறி உதிர்ந்தமயிர்முளைக்கும்.

குத்தம்பூவிற்கு.

சிறுகீரை-பொன்னாங்காணி-வெள்ளைச்சாரணை-வெள்ளைக்காக் கணான் இவைகளின்வேர் தேற்றான்விரை மண்டையோடு நாய்ப்பல் சேவல்மார்பெலும்பு முத்து பவளம் இவைகளை நந்தியாவட்டப் பூச்சாற்றில் மைப்போலரைத்துலர்த்திப் பின்பு நல்லெண்ணெய் விட்டுக் களிம்புபோலரைத்துக் கண்ணில்தீட்டிவரத்தீரும்.

அழிகண்ணிற்கு.

இந்துப்பும் கடுக்காய்விரையும் ஓர்நிறையாய்வெண்ணெயால ரைத்து செம்புப்பாத்திரத்திலப்பிவைத்திருந்து களிம்பூறிப் பசு மையானதின்பேரி லெடுத்துக்கொண்டுகண்ணிற்போட்டுவந்தாலு ம்அல்லது பூநாகத்தைத் துணியில்முடிந்து உமிக்காந்தலிற்புதை த்தெடுத்து அதற்குநிகர் நாவற்கொழுந்து சேர்த்து எலுமிச்சம்ப ழச்சாற்றிலரைத்துலர்த்தி வெண்ணெய்கூட்டிக் களிம்புபோலரை த்துக் கண்ணில்தீட்டிவர அழிகண்வறணம் சுக்கிரன்தீரும்.

கண்புண்ணிற்கு.

அத்தம்-அருகு-வகைக்கு விராகனிடை (௧) இந்துப்பு விராகனி டை(௨)மிளகுவிராகனிடை(௩)வெற்றிலைச்சாற்றில்மைப்போலரை த்துலர்த்தி யப்பால் வெண்ணெய்கூட்டிக் களிம்புபோலரைத்து க்கொண்டு புண்ணிற்போடத்தீரும்.

சேவற்பூவையறுத்ததில்வருகிற இரத்தத்தை மூன்றுநாள் இ ருபோதும்போடத்தீரும்.

நேத்திரவாயுவுக்கு.

அத்தம்-அருகு-வகைக்குவிராகனிடை (௧)சீனிக்காரம் விராக னிடை(௨)இரண்டுசெங்கொட்டைப்பச்சரிசி இவைகளை ஆவின் வெண்ணெயாலரைத்துக் களிம்புசெய்து கண்ணிற்போட்டும் தா மரைக்கிழங்கு நெல்லிக்காய் பொன்னாங்காணி இவைகளின்சாறுசி ற்றாமணக்கெண்ணெய் இளநீர் வகைக்குப்படி(௩) நல்லெண்ணெ ய்படி(௨)இவைகளைக்கலந்ததில் விலாமிச்சம்வேர் தாளிசபத்திரி ச ண்பகப்பூ சிறுநாகப்பூ சந்தனம் செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம் வகைக்குபலம்(௧)இவைகளை ஆவின்பாலிலரைத்துப்போட்டுப்ப தமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நேத்திரவாயு மண்டையிடிக்குக் கலிக்கம்.

பொன்னாங்காணி-கையாந்தகரை-கரிசாலை-சிற்றாமட்டி-கர்ப்பூரவெற்றிலை-இவைகளின் சாறு நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் ஆவின்னெய் வகைக்குப்படி(௧)மேற்படியால் படி(௩)இவைகளைக் கலந்து அதில் மிளகு கஸ்தூரிமஞ்சள் கருஞ்சீரகம் நற்சீரகம் வெள்ளைப்பூண்டு ஏலம் கிராம்பு சந்தனம் லவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை(௪) மேற்படி சாற்றி லரைத்துக் கலக்கிப் பதமாகக் காய்ச்சி வடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய்ப்படி(௰)சிராசேகமுநீர்ச்சாறுபடி(௰)இவைகளை ஒன்றாய்க்கலந்து அதில் வெள்ளைப்பூண்டுபலம் - அமுக்கராக்கிழங்குபலம்(௪)வெந்தயம்பலம்(௪) இடித்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்துத் தலைமுழுகிவரத்தீரும்.

ஒளிமயக்கம் வெளிமயக்கத்திற்கு.

முயலின்புழுக்கைசுட்டசாம்பலை ஆவினெய்விட்டுக் களிம்பு போலரைத்துக் கண்ணிலிட்டுவரத்தீரும்.

கண்ணில் நீர்ச்சொரிதற்கு.

பச்சைக்கர்ப்பூரத்தைப் பொன்னாங்காணிச் சாற்றிலரைத்து தாமிரத்தகட்டிற்றடவி அவரைக்கொழுந்தைச் சட்டியில் வறுத்து அதின்பாலிலே தளித்துக் கண்ணில் ஆவிபிடித்து அதற்கட்டை அடியிற்பட்டதை கருங்குங்கிலியம் சதகுப்பை ஓமம் கடுகு மிளகு வசம்பு-மஞ்சள்-இவைகளை ஒத்திடையாய்ப் பொடித்துத் துணியிற் பார்த்தியுருட்டித் திரியாக்கொளுத்தி நாசியிற் புகைபிடிக்கச் சகல ரோகமுந்தீரும்-

குவளைத்திற்கு.

அத்தம்-அருகு-வெந்தசெங்கற்பொடி-இவைகளை யோரிடையாய் மருட்கிழங்கை வாட்டிப்பிழிந்த சாற்றில் மைப்போலரைத்து வெந்நீர்விட்டு ஆவின்வெண்ணெய் கூட்டிக் களிம்பாயரைத்துக் குட்டிவைத்துப் பூசிப்போடத்தீரும்-

கண்கூச்சத்திற்கு.

வெப்பங்கொழுந்து-கற்றாழைமடல்-கடுக்காய்-தேற்றாவிதை இவைகளையோரிடையாய் முலைப்பாலிலரைத்துக் கொதிக்கவைத்து அப்புறமதைக் கட்டி பொன்னாங்காணிச்சாறு அதிமதுரம் இவைகளை முலைப்பாலிலிட்டுச் சிவக்கக் காய்ச்சித் துணியில்முடிந்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணில் நாளொன்றுக்கு௩-௫-தரம் பிழிந்து அஞ்சனமிட்டுவர செவ்வையுண்டாம் மேற்படி பொட்டணத்தை நனைத்து வெதுப்பத்துடன் ஒத்தடங்கொடுத்துவரத்தீரும்.

106

இமைத்தடிப்புக்கசிப்புக்கு.

அரப்பொடியைச் சங்கிலைச்சாற்றிலும் குமரிவேர்ச் சாற்றிலும் சம்பழச்சாற்றிலும் மயனோசயனைத்தலர்த்தி நல்லெண்ணெய்விட்டுக் களிப்புபோலரைத்துக்கொண்டு கண்ணிலிட்டுவரத்தீரும்.

கண்சிவப்பு நீர்வடிதலுக்கு.

பரித்திவினாப்பருப்பு மரமஞ்சள் திரிபலை இவைகளை ஓர்நிறையாய் வைப்போற்பொடித்துக் கண்ணிலிட்டும் - அப்பால் நந்தியாவட்டப்பூச்சாறு செப்புநீர் பனைமட்டைச்சாறு முருங்கைப்பூச்சாறு முலைப்பால் ஆவினெய் வகைக்குக் கார்படிவீதம் ஒன்றுய்க்கலந்து அதிற் சந்தனம் மரமஞ்சள் பனைக்குருத்து வகைக்குக்கழஞ்சு(௪) இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணில்விட்டுத் தலையிற் சலையில்தேய்த்து மாலையில் ஸ்நானஞ் செய்துவரத்தீரும்.

கண்சிவப்பு-கடுப்பு-பூ-படலத்திற்கு.

தேற்றுவினா-கடுக்காய்த்தோல்-புளியவினாத்தோல் - இவைகளைப்பொப்போற்பொடித்துத் துணியில்முடித்து முலைப்பாலில் ஊறவைத்துக் கண்ணிற்பிழிந்துவரத்தீரும்.

விழிக்கண்குருபிக்கு.

நன்றாப்வெந்த செங்கல்லைப்பொடித்து வடிகட்டிக் கல்வத்திட்டு ஆவின்வெண்ணெய்-தேன்-நல்லெண்ணெய் இவைகளில் வகைக்கொருசாமமரைத்துக் களிப்புசெய்து கண்ணிலிட்டாலும் பேய்ப்புல்லென்ற கொட்டைப்புல் தினைபோற் கதிருண்டாயிருக்கும் அதைக்கசக்கிக் கண்ணிற்பிழிந்துவரத் தீரும்.

கண்வலி-பணிவளர்த்திபூவிற்கு.

சண்பகப்பூ கா-காசென்றப்பூ-ா-நந்தியாவட்டப்பூ-ா - அவுரிவேர்-சங்கு-நல்லேயாம் வகைக்குக்கழஞ்சு(க) துத்தநாகஞ்சு(உ) இவைகளைப் புளியம்பூச்சாற்றிலும் எலுமிச்சம்பழச் சாற்றிலும் மைபோலரைத்துக் கழிறுசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணிலிட்டுவரத்தீரும்.

வெக்கடுப்பு-குத்து-அரைப்-கண்வலிக்கு.

கருவினா கற்றாழஞ்சோறு விளாங்காய்ப்பிரமாணம் சீனிச்சாம் விராகனிடை (௩) சாருவ்வி விராகனிடை (க) இருப்புக்கிட்டம் விராகனிடை (௪) இவைகளைச்சிதைத்துத் துணியிலே முடித்துக்கொண்டு சம்புனியைத் தண்ணீரிற்கலச்சியதில் மேற்படி பொட்டணத்

தைக் கோதிக்கவைத்துச் சூட்டுடன் கண்ணிலொத்தணஞ்செய்து ஒருநாளி கண்ணிற்பிழிந்து சந்தனம் ஏலம் நெல்லிமுள்ளி பிளாகு ம்பொன்னாங்காணி கரிசலை சுற்றுமஞ்சோறு சமன்கூட்டி ஆவின் வெண்ணெயி லரைத்துச் சிரசிற்றடவிட்டு உள்ளங்காலில் தேப்ப க்கத்தேய்த்து மாலையிற் குடிதண்ணீரில் ஸ்நானஞ்செய்து வந்தா லும் அல்லது எலுமிச்சம்பழத்தைப்பொத்துசெய்து அதி லாட் பொடியுஞ் சீனிக்காரமும் ஓர்திரையா பொன்றுப்பொடித்துச் செலுத்தித் தணியிற் பொட்டணமாய்ப்பிடித்து நெருப்பில்வா ட்டி ஒருசொட்டு கண்ணிற்பிழிந்து ஒத்தணஞ்செய்துவந்தாலும் அல்லது கவத்தில் வெண்ணெயைத்தப்பி நீர்வாங்கினதின்பின் மெ டுத்து அதில் எலுமிச்சம்பழச்சாறும் கரிப்பான்சாறும்விட்டுக்கலி ப்பும்போலரைத்துக் கண்ணில்தீட்டியும் சுக்காயையாவது உப்பு மண்ணையாவது மூலைப்பாலிலரைத்துக் கண்ணிற்புறவளையமிட்டு ம்வரத்தீரும்,

கண்வலிக்கு.

கரியப்பையைப்பொடித்துப்பொட்டணங்கட்டி நீராகாரத்தலி ஊறிற்றுவைத்து இரண்டுநாழிகைக்கொருவிசை கண்ணிற்பிழியக் கண்வலி உடனேமாறும்,

சுக்கிரப்புவெணுக்கு,

நாவற்பட்டையைமூலைப்பால்விட்டுச்சிதைத்துக்கண்ணிற்பி ழிந்து அப்பால் நத்தைச்சதையையும் ஆனைநெருஞ்சிற்காயை ப் சிதைத்தும் பிழிந்து ஆவாரைச்சியை கோழிமுட்டைவெள்ளை க்கருவிட்டு அரைத்துப் புறவளையமிட்டாவது அல்லது சோணைப் லைச்சாறும் கரிப்பான்சாறும் ஒன்றாய்க்கலந்து அதில் தேற்றாவி ரை கலிப்பாக்கு மிளகு இவைகளை யோர்நிரையாயரைத்துப்போ ட்டுக் கோதிக்கவைத்துப் புறவளையமிட்டாவது பொன்னாங்கண் ணிதனை ஆனைநெருஞ்சில் உத்தமதாளி மயிர்மாணிக்கம் இவைக ளின்சாறுகளைச் சமமாய்க்கலந்து தலையில் உலரஉலரத்தேய்த்துக் கொண்டிருந்து மாலையில் ஸ்நானஞ்செய்து வந்தாலும் அல்லது நல்லெண்ணெய்ப்படி (௧) வெள்ளுள்ளி முருங்கைப்பட்டை குப் பைமேனி துத்தி இவைகளின்சாறுவகைக்குப்படி (௧) ஒன்றாய்க் கலந்ததிற் கோஷ்டம் கழஞ்சு (௩) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவ டித்து மூன்றுநாள் காலையிற் றலையிற்றேய்த்து மாலையில் ஸ்நா னஞ்செய்துவரத்தீரும்,

இமைகண்ணுக்கும் புழுவெட்டுக்கும்,

தாலவளைய மூன் சிலாப்புகூடல்நீக்கியதின்பேரில் -எ- வினை

எருக்கம்பாலில் உலர உலர ஊட்டிக் காயவைத்துப் பொடித்தாலும் அருகம் சாத்தமும் ஓர் நிறையாய்க் கூட்டி வெப்பெண்ணெய் விட்டு மைப்போலரைத்துக்கொண்டு இமையிற்போட்டுவரத் தீரும்.

கண்ணில் நெருப்புப்பட்ட புண்ணுக்கு.

ஆவினெய் மேற்படி இலைச்சிறிது பனைமட்டைச்சாறு நல்ல தண்ணீர் இவைகளை ஒன்றாய்க் கலந்து காய்ச்சி கண்ணிற் சுட்டிவரத்தீரும்.

அக்கரப்பழுவெட்டிற்கு.

வேப்பங்கொழுந்தைக் கசக்கிவிட்டு நல்லெண்ணெய்விட்டுக் களிம்புபோலரைத்துப் பருவத்திலிட்டுவரத்தீரும்.

கண்பிரிதல் பழுவெட்டு பூவிற்கு.

ஊமத்தங்காயை விரைநீக்கி யதற்குள் பாலிற்சுத்திசெய்த பூநாகத்தை நிறையப்போட்டுமூடிச் சட்டியில்வைத்தெரித்துச்சாம்பலாக்கி யதற்குநிகர் துத்தம் அருகசேர்த்து ஆவின்வெண்ணெயாற் களிம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்றீட்டிவரத்தீரும்.

நீர்வடிதலுக்கு.

வெள்ளைச்சாரணைவேரைத் தேனிலரைத்துக் கண்ணிற்றீட்டிவரத்தீரும்.

அந்தகக்கண்ணிற்கு.

கெந்தகம்-தங்கம் வகைக்குப்பலம்(க) அஞ்சனக்கல்- காரீயம் வகைக்குப்பலம்(கூ) வெள்ளி-செம்பு-வகைக்குப்பலம் (உ) இவைகளையொன்றாய்க் குகையிலுருக்கி மயனமாய்ப்பொடித்துக் கண்ணிற்றூவிவரத்தீரும்.

அமரம் பிரிதற்கண்ணிற்கு.

வேப்பங்கொழுந்தும் புளியங்கொழுந்தும் இடித்துக் கியாழஞ்செய்து வடித்துக் குழம்பாய்க் காய்ச்சியதிற் றுணியை இரண்டுமூன் றுவிசை நனைத் துலர்த்தித் திரித்து விளக்கில் ஆவினெய் விட்டுத் தீபமேற்றிச் சட்டித்தாரில் ஊமத்தஞ்சாறுபூசி மைப்பற்றவைத்து திப்பிலி கடுக்காய் நெல்லிப்பருப்பு இவைகளை மேற்படி கொழுந்தி லரைத்துத் துணியிற்பூசி முன்போற் றீபமேற்றி மைப்பற்றவைத்து இருவகை மையையும் ஒன்றாய்க்கலந்து ஆவின்வெண்ணெயைக் கூட்டியரைத்துக் கண்ணிலிட்டுவந்தாலும் அல்லது மேற்படிகியாழத்தில் பினலையரைத் துலர்த்தி ஆவின்வெண்ணெய்க்கூட்டிக் களிம்புபோலரைத்துக் கண்ணிற்றீட்டிவந்தாலு நீங்கும்.

மெருகிக்கு.

பல்கறைகட்டசாம்பல் துத்தம் துருசு முட்சள் இவைகளை யோர்நிறையாய் நல்லெண்ணெயி லரைத்து துக்கியிற்பூசிக் கட்ட அற்றுவிழும் மூலமுளையிற்கட்டினாலும் விழும்.

வரணம்-சக்கிலம்-படலம்-குசம்-இரத்தச்செம்மைக்கு.

நந்தியாவட்டப்பூ-மிச்சிப்பூ-முருங்கைப்பூ-கொடிப்பைவேர் அதிமதுரம்-ஏலம்-கோஷ்டம்-செங்கழுநீர்க்கிழங்கு - எலுமிச்சம் வேர்-லவங்கம்-துத்தம்-கடல்நுரை-பவளம்-முத்து-இவைகளையோர்நிறையாய் வெள்ளாட்டுப்பித்தரைத்து கடிக் கயிறுசெய்துகொண்டு எலுமிச்சம்பழச்சாறும் ஆவின்வெண்ணெயு மொன்றாய்க்கலந்து காய்ச்சியதிலுரைத்துக் கண்ணில் தீட்டிவரத்தீரும்.

கண்கரித்துக் குத்திக் கலங்கிப் பொங்கி நீர்வடிந்தால்.

சங்கு-புங்கவித்து-வெள்ளைக்காக்கணம்வித்து-துத்தம்-துருசு இவைகளை யோர்நிறையாய்ப் படிச்சாந்தி லரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலி லுரைத்து நாளொன்றுக்கு மூன்றுநேரம்போட்டு வரத்தீரும்.

வெள்ளெழுத்திற்குவெண்ணெய்.

ஓரெலுமிச்சம் பழத்தைக் கயிற்றிற்கோர்த்து அதின்மேல் நூற்றெட்டுக் கிராம்பையூன்றி விளாங்காய்ப்பிரமாணம் பசுவின் வெண்ணெய்க்குட் பொதிந்து அமுக்கியதைப் புதுச்சட்டியில் அடியிற்படாமல் தொங்கவிட்டு அன்றுடம் வெவ்வேறே சுத்தசலம்வார்த்துவந்து நாற்பதாம்நாளெடுத்து லவங்கத்தையும் பழத்தையும் நீக்கி வெண்ணெயை செப்புச்சிமிழி லடைத்துக்கொண்டு சதகுச் சாரணைச்சாற்றில் கொஞ்சம்வெண்ணெயை யரைத்து-௭-நாள்வரைபோட்டுவர வெள்ளெழுத்தும் மற்றகண்ரோகங்களுந்தீரும்.

மேற்படி வெண்ணெய் பலம்(க) மிருதர்சிங்கியபலம் (வ) இவைகளை யெலுமிச்சம்பழச்சாற்றால் ஒருநாளரைத்துச் செப்புச்சிமிழிலடைத்துக்கொண்டு கண்ணிற்போட்டுவர வெள்ளெழுத்து முதலாகிய கண்ரோகங்கள்தீரும்.

மேற்படிவெண்ணெய் பலம்(க) மிளகுவிராகனிடை (௨) இவைகளைக் கல்வத்திலிட்டு களிம்புபோ லரைத்துக்கொண்டு கண்ணிற் போட்டுவர வெள்ளெழுத்துமுதலான கண்ரோகங்கள்தீரும்.

புரசம்பாலை-௩-௪-நாள் கண்ணிற்பிழிந்தாலும் அல்லது தாம்பை நந்தியாவட்டம் காவோள் புளி இவைகளின்பூவும் இலுப்பையிந் தேன்விட்டுக் களிம்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்போட்

டுவேர்தானும், அல்லது ஓரிலைத்தாமரைவேர் சங்கு-தலைபோடு-தக் கம்-தாருசு-வெள்ளைக்கற்பொடி இவைகளை யோர்நிறையாய் எலு மிச்சம்பழச்சாற்றிலும் முருக்கிலைச்சாற்றிலும் வகைக்கொருநாளா ரைத்துக் கயிறசெய்து முலைப்பாலிலுரைத்துக் கண்ணில்-சய) நா ள்போட்டுவரத்தீரும்.

மேற்காட்டிய பிரையோகங்களி லொன்றை உபயோகப்படு த்தி இதனடியில்வருகிற தயிலத்தையும் முழுகிவரக் கண்ணோய்சார் ந்தபிணிகள்தீரும்.

வெள்ளெழுத்து குருட்டுக்கண் முதலானகண்ரோகங்களுக்கும் உடம்புவலிக்குந்தயிலம்.

பொன்னாங்காணிரசம் பொற்றலைக்கரிப்பான்ரசம் நெல்லிக் காய்ரசம்-நல்லெண்ணெய் வகைக்குப்படி(அ)முசுமுசுக்கை-நெ ருஞ்சில்-கண்டங்கத்திரிக்காய்-முள்ளிக்கத்திரிக்காய் - தென்னம்பூ- வில்வம்-வாதநாராயணையிலை-இவைகளில் சாறு இளநீர் வகைக்குப் படி(க)இவைகளை ஒன்றாய்க்கலந்ததில் நன்னாரிவேர் பலம்-சய-தா மரைப்பூ-மிளகு-அதிமதுரம்-சந்தனம்-அன்னுக மொக்கு-வகைக் குப்பலங்(உ)சீரகம்-கொத்தமல்லி-வகைக்குப்பலம்(ச)கஸ்தூரிம ஞ்சள்-வெட்டிவேர்-சோம்பு-கல்லுப்பு - விலாமிச்சம்வேர் மல்லி கைப்புட்பம் வகைக்குப்பலம்(க)இவைகளை யெட்டுப்படி ஆவின் பாலிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்து முழுகிவ ரத்தீரும்.

மாலைக்கண் வெள்ளெழுத்துப் புகைச்சலுக்கு.

மிளகு-திப்பிலி-வகைக்குக்கழஞ்சு-௫ - கடுக்காய்விரை கழஞ் சு-௩-இவைகளைத் தனித்தனி சூரணித்து வெள்ளாட்டுப்பித்துக்குள் அ டைத்துப் புகைபடுகிறவிடத்தில் ஒருமண்டலங் கட்டிவைத்திருந் தெடுத்துப புளியம்பூச்சாற்றிலும் பனைமட்டைச்சாற்றிலுமரைத் துக் கயிறசெய்து முலைப்பாலி லுரைத்துக் கண்ணில் தீட்டிவர மாறும்.

கழல்வண்டுகட்டசாம்பல் வெள்ளுள்ளி மிளகு ஓர்நிறையா ய்க் கல்வத்திட்டு வெற்றிலைச்சாறும் நீர்முள்ளிச்சாறும் நல்லெண் ணெயும்விட்டுக் களிம்புபோலரைத்து அத்தி சத்தி மூன்றுநாள் க ண்ணில்தீட்டி விளக்கெண்ணெயைத்தேய்த்து நாலுந்தலைமுழுக்கு முழுகினால் அருந்ததி கண்ணிற்றோற்றும்.

{ நீலகாசம்-பித்தகாசம்-மந்தாரகாசம்-படலம் பில்லம் மயிர்க்குத்தல்-புழுவெட்டு-மாலைக்கண்-நீர்வடிதல் குத்தம் நேத்திரவாயு முதலானதற்கு. }

முத்து-வெள்ளி-தாம்பரம்-சங்கு-துருசு-துத்தம் -வெண்கலம்-தலைவோடு பொன்-பீதரோசனி-புங்கவிரை யோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலிலாவது நந்தியாவட்டப்பூச்சாற்றிலாவது உரைத்துக்கண்ணில்தீட்டி இதனடியிற்சொல்லிய தயிலத்தை முழுகிவரத்தீரும்.

மேற்படி ரோகங்களுக்குத்தயிலம்.

பொன்னாங்காணி-சிறுகீரை-சீந்திற்கொடி-எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் இவைகளின்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (க)முத்தக்காசு கோஷ்டம் அதிமதுரம் ஏலம் சண்பகப்பூ சிறுநாகப்பூ லவங்கம் வகைக்குப்பலம்(வ)விதமரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

கண்வலி-சிவப்பு-கடுப்பு-தினவு-நீர்வடிதலுக்கு.

தான்றிக்காய்-மாசிக்காய்-கடுக்காய்-காசுக்கட்டி - வகைக்கு விராகனிடை(க)அபின் பொரித்தசீனிக்காரம் வகைக்கு விராகனிடை(வ)சாண்டியிற் பொடித்துப்போட்டு அதில் வாட்பூலாவிலை கருவேப்பிலை வகைக்கு ஒருபிடிவீதம் இடித்துப் பிட்டவித்துச் சாறு பிழிந்துகொதிக்கவைத்து செப்புத்தடியால் மைப்போலரைத்துக்கண்ணிற் புறவிளையமிட்டுப் புளியிலையைவேகவைத்ததண்ணீரால் கண்ணைக்கழுவி - உ-௩ - விசைபோடத்தீரும்.

புளியக்கொத்துக் கண்ணில் ஒருநாளைக்கு(௩)விசை பிழிந்து துளசி புன்னைக்கீரை புளியிலை இவைகளை யோர்நிறையாயிடித்துத் துணியிற்கட்டி கண்ணில் ஒத்தடஞ்செய்து ஆவாரம்பூவையரைத்துச் சிரசிற்றளமிடத்தீரும்.

இருப்புத்தகட்டை நெருப்பிற்சிவக்கக்காய்ச்சி யெடுத்து அதில் எலுமிச்சம்பழச் சாற்றையாவது புளியிலைச்சாற்றையாவது விட்டுக் கரியபவளமும் கடுக்காய்த்தோலும் சீனிக்காரமும்பொடித்துப்போட்டு இருப்புக்குழவியாற் களிம்புபோல் நன்றாயரைத்துப் புறவிளையமிட்டுக் கருவேல் புளி ஓரிலைத்தாமரை பொன்னாங்காணி சிறுகீரை பஞ்சதிரவியம் கம்பிப்பிசின் பின்னும் கஸ்தூரிமஞ்சள் இவைகளை யோர்நிறையாய்க் காடிவிட்டரைத்துக் குழம்பாய்க்காய்ச்சி சிரசிற்றளமிடத்தீரும்.

அல்லது கருக்கின புழுங்கலரிசியும் அபினும் சமமாய் ஊமத்தஞ்சாற்றில் முக்கால்போற் களிம்பாயரைத்துக் கண்ணிற்புறவிளைய[illegible] கொடிப்பை சிறுகீரை வெட்பாலை மிளகு இவைகளை வகைக்கு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துக் காற்படி ஆவின்பாலிற் கரைத்துக் குழம்பாய்க்காய்ச்சித் தலையிற்றளமிட்டுவரத்தீரும்.

கோழிமுட்டையை புடைத்து வெள்ளைக்கருவைப் பிங்காணில்விட்டு அதிற்கொஞ்சஞ் சீனிக்காரத்தைப்போட்டுச் சிறுகீரைவேராற்கடைந்தால் வெண்ணெய்போல் வரும் அதைக்கண்ணிற்போட்டுக் கருவேலங்கொழுந்தும் மாதளங்கொழுந்தும் வகைக்கு ஒருபிடி வீதமிடித்துக் காற்படி ஆவின்பாலிற்போட்டு வேகவைத்துப் பிழிந்து குழம்பாய்க்காய்ச்சி இருப்புத்தகட்டிலிட்டு இருப்புக்குழவியாற் களிம்புபோலரைத்துக் கொண்டாவது அல்லது இருப்புத்தகட்டை நெருப்பிற்காய்ச்சியதிற் சீனிக்காரம் துத்தம் துருசு இவைகளை பொரிகாரமாய்ப் பொரித்துப்போட்டு எலுமிச்சம்பழச்சாறுவிட்டு மைபோலரைத்துக்கொண்டாவது கண்ணிற்புறவிளையமிட்டு மேற்சொல்லிய புகையைக் கட்டிவரத்தீரும்.

கண்வலி-வெக்கரிப்பு-நேத்திரவாய்விற்கு.

களிம்புள்ள வெண்கலத்தட்டில் முலைப்பாலாவது எருமைப்பாலாவதுவிட்டுச் செம்புக்குழவியாலரைத்துக் களிம்புண்டாக்கி அந்தக்களிம்பைப் பருத்திப்பஞ்சிலொட்டித் திட்டகலத்தில் மூன்றுவில்லைசெய்து ஒன்றின்மேலொன்றைவைத்து ஒருசட்டியில் புலியம்பொருக்குப்போட்டுத் தணலின்பேரில் அதிலாவிசம்படி எள்ளைப்பொடித்துப்போட்டுப் புகை பஞ்சிலேறும்படிவைத்து மூடிப் புகைபடக்கினதின்பேரில் காலைமாலை மதியத்தில் ஒவ்வொருவில்லையாகக் கண்ணிற்பிழிந்துவரத்தீரும்.

கொடிப்பை-ஓரிலைத்தாமரை-வெள்ளைக்காக்கணம்-சிறுகீரை-இவைகளின்வேர்களை ஓர்நிறையா யெலுமிச்சம்பழச்சாற்றில் மையமாய் அரைத்துலர்த்திப் பின்பு வெண்ணெய்கூட்டிக் களிம்புபோலரைத்துக் கண்ணில் தீட்டியாவது, அல்லது-சங்கு-புளி-வெள்ளைச்சாரணை-பொன்னாங்காணி-சிறுகீரை-கரிப்பான்-இவைகளினிலைச்சாற்றை ஓர்நிறையாய்க்கலந்து அதிற் றுணியை ௩-௪-விசை நனைத்துலர்த்தித் திரித்து நண்டுக்கொழுப்பிற் றுவைத்துத் தீயிற்கொளுத்திச் சாம்பலாக்கியதில் வெண்ணெயைக்கூட்டிக் களிம்புபோலரைத்துக் கண்ணில் தீட்டியாவது வரத்தீரும்.

கண்வேதனைபலதுக்கும் புறவலையம்.

சிற்றாமணக்கின்வேரும் பேராமணக்கின்வேரும் ஓர்நிறையாய் வெள்ளிப்பருத்திச்சாற்றில் மைப்போலரைத்துக் கலக்கிக் குழம்பாய்க்காய்ச்சிக் கண்ணிற்புறவலையமிட்டு உச்சியில் தலமிட்டெத்தீரும்.

கண்விக்கம் எரிவு திணவு படலம் சிவப்பு கடுப்பு நீர்வடிதலுக்குப்புறவலையம்.

கடுக்காய்த்தோல்-நெல்லிமுள்ளி-அதிமதுரம்-தேற்றாவிதை-கருவேப்பிலை-புளியங்கொழுந்து இவைகளை ஓர்நிறையாய்க் கற்றாழைமடலுக்குட்பொதிந்து உமிக்காந்தலிற்புதைத்து வெந்தபதத்தில் அருந்தெடுத்து முலைப்பால்விட்டுக் கலிப்புபோலரைத்துக்கொண்டு கண்ணிற்புறவலையமிட்டும், காயா-வசம்பு-புளி இலைகளின்லெச்சாறு வகைக்குப்படி(௨) ஓர்சூரக்கலந்ததில் நெல்லிமுள்ளி-சந்தனம்-தேற்றாவிதை-ஆமையோடு இவைகளை ஆவின்பாலில் மைப்போலரைத்துப்போட்டுக் குழம்பாய்க் காய்ச்சிச் சிரசிற் றாலமிட்டுவைத்து மாலையிற்கு கண்ணில் ஸ்நானஞ்செய்துவரத்தீரும்.

மேற்படிவியாதிக்கு ஒத்தணம்.

கரிசாலை கருவேப்பிலை கடுக்காய் கற்றாழஞ்சோறு இவைகளை யொவ்வொன்றாய்ச்சிதைத்தாவது அல்லது மருதம்பட்டை சீரகம் அதிமதுரம் இவைகளைச் சமமாய்ச்சிதைத்தாவது துணியில் முடிந்து அதைக் காண்டியில் நெய்விட்டு வெதுப்பியதில்வைத்து ஒத்தணஞ்செய்தாவது அல்லது ஒருபடி ஆவின்பாலில் ஒருபடிபுளியங்கொழுந்தும் நாலு கடுக்காயுந் தட்டிப்போட்டு வேகவைத்துக் கண்ணிலாவிபிடித்து அதைத் துணியில்முடிந்து ஒத்தணஞ்செய்து புறவலையம் தலைமுதலான பிரயோகங்களைச்செய்ய மிகுந்த நன்மையுண்டாம்.

மேற்படிவியாதிக்கு இமையின்மேலிடும் பற்று.

ஆவின்பாலில் உத்தாமணிவேர் அரைத்து மேற்படி நெய்யிற்போட்டு வேகவைத்து வடித்து இமையைச்சுற்றிப்பூசியுலர்த்தியபின்பு சந்தனத்தைப் புறவலையமிட்டு இரவில் மேற்படிநெய்யில் பஞ்சைமுட்டி இமையின்மேற்போட்டு நித்திரைசெய்யவும்.

மேற்படி வியாதிக்கு சாணை புறவலையம்.

சிற்றாமணக்கின்வேர் கடுக்காய்த்தோல் வகைக்குக்கழஞ்சு(௧) இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வ

னைவத்து வடிகட்டிக் கண்ணில் தாரைவிட்டாலும் அல்லது முசுக்கையிலை பொருமிடி அதிமதுரம் மாமஞ்சள் வகைக்குக்கழஞ்சு(க)இவைகளைச்சிதைத்து ஆவின்பாலிலரைத்து மேற்படிசீம்பிற்போட்டு வேகவைத்து வடிகட்டிக் கண்ணில் தாரைவிட்டு பொன்னுக்காணிவேர் சந்தனம் அதிமதுரம் இவைகளை ஓர்நிறையாய் முலைப்பாலிலரைத்துக்கலக்கி வெதுப்பிக் கண்ணிற்பூசவேயமிட்டு உச்சியிற் றாயிட்டிவரத்தீரும்.

கண்ணிற் சதைவளர்ச்சிக்கு.

கருநெல்லியும் சுருஞ்சாவும் ஓர்நிறையாய்ச்சிதைத்து மூன்று நாள் கண்ணிற்பிழியத்தீரும்.

கண்ரோகங்களுக்குமாத்திரை.

பச்சைக்கர்ப்பூரம்-இந்துப்பு-வகைக்குவிராகனிடை-அரைக்கால்-ரசம் விராகனிடை(வ)திப்பிலி மிளகு காரீயம் வகைக்குவிராகனிடை(௩)பூதாகச்சத்து கடுக்காய்ப்பருப்பு வகைக்கு விராகனிடை(க)அரிதாரம் விராகனிடை (உ) எலுமிச்சம்பழச்சாற்றில்(௯) நாளரைத்துக் கயிறுசெய்துகொண்டு முலைப்பாலி லுரைத்துக் கண்ணிற்றீட்டிவரப் படலம்-பில்லம்-சிவப்பு-நீர்ப்பாய்ச்சல்-திமிர்-முதலான கண்ரோகங்கள் தீரும்.

ஆமைபேடு-அஞ்சனக்கல்-நீலமேடு-கல்மதம்-குதிரைப்பல்-பவளத்தந்தம்-மான்கொம்பு-சேவல்முட்டைசெதிப்பு-தேற்றாவிரை அத்தம் அருகசந்து முத்து காவிக்கல் கடலாமையோடு பீதரோகணி வெள்ளிலோத்திரம் இவைகளை யோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து முலைப்பாலி லுரைத்துக் கண்ணிற்போட்டுவர படலம் பில்லம் வலி அழிகண் மணிவலித்தீ முதலானவைகள்தீரும்.

திரிகடுகு-திரிபலை-வாலுளுவையரிசி-வாய்விளங்கம்-தாமரைக்கிழங்கு-அதிமதுரம்-செப்புப்பொடி-இந்துப்பு செஞ்சந்தனம் முந்திரிப்பழம் மஞ்சள் நன்னாரிவேர் வெள்ளிலோத்திரம்-நத்தைப் பீதரோகணி காரீயம் வெண்காரம் இவைகளை யோர்நிறையாய் சங்கம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்துகொண்டு முலைப்பாலிலுரைத்துக் கண்ணிற்போட்டுவர திமிர் படலம் நீர்வடிதல் காசமுதலானவைகள்தீரும்.

திரிகடுகு-திரிபலை-அதிமதுரம்-பீதரோகணி-பொன்மெழுகு வெள்ளைக்காக்கணம்வேர் இவைகளை யோர்நிறையாய் கழுதைப் பாலிலும் ஆவின்பாலிலும் முலைப்பாலிலும் வகைக்கொருசாமம

ரைத்துக் கயிறுசெய்து மூலைப்பாலிலுரைத்துப்போட்டுவந்தாலு ம், அல்லது பச்சைக்கர்ப்பூரம் காரீயம் திப்பிலி மிளகு வகைக்கு க் கழஞ்சு (வ) இரதம் ஈரப்பிசின்-பூதாகம் வகைக்குக்கழஞ்சு ( ) இ வைகளை யெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து சிறு நீரி லுரைத்துப்போட்டுவந்தாலும், திமிர்-படலம்-காச முதலான வைகள்தீரும்.

தாம்பரம்-துருசு-அத்தம் முத்து-பவளம்-நீலம்-கருவிளாயக் வெண்காரம்-சனவாயோடு இவைகளைச் சமமாய்ப் பழச்சாற்றில ரைத்துக் கயிறுசெய்துகொண்டு புழுவெட்டு செவ்வேர் தசைவள ர்த்திக்கு எலுமிச்சம்பழச்சாற்றிலும், நீர்ப்பாய்ச்சல்கூச்சத்திற்கு பனிமட்டைச்சாற்றிலும், பூ-கட்டிக்கு நெரிஞ்சிலிலைச்சாற்றிலும் உரைத்துக் கண்ணிற்போட்டுவரத்தீரும்.

செம்புப்பொடி அத்தம் துருசு வெண்கலம் வளையல் வெ ள்ளிக்கல் ஓரிலைத்தாமரைவேர் வெட்பாலைவேர் வகைக்குக்கழஞ்சு (க) இந்துப்பு கழஞ்சு (வ) எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் கயி றுசெய்துகொண்டு மூலைப்பாலி லுரைத்துப்போடச் சகல கண் ரோகங்களுந்தீரும்,

வெள்ளைக்காக்கணஞ்வேர் அத்தம் துருசு பளிங்கிக்கல் சங்கு மஞ்சள் திப்பிலி சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் செம்புப்பொடி இவைகளை யெந்திராயாய் எலுமிச்சம்பழச்சாற்றில்-டு நாள்மை ப்பாலரைத்துக் கயிறுசெய்து மூலைப்பாலிலுரைத்துக் கண்வலி விட்டுவரச் சகலகாசம் சத்துக்குலைவு அழற்றி உட்குத்து உளைவு முதலான சகலகண்ரோகங்களுந்தீரும்.

வெங்காரம் செம்புப்பொடி வெண்கலம் காரீயம் வளைய லோடு வெட்பாலைவேர்ப்பட்டை ஓரிலைத்தாமரைவேர் வகைக்குவி ராகன் (க) இந்துப்பு விராகன் (வ) இவைகளை முருங்கைப்பூச் சாற்றி லும் எலுமிச்சம்பழச்சாற்றிலும் அரைத்துக் கயிறு செய்துகொ ண்டு வாணசுக்கிரனுக்கு நாயுருவிச்சாற்றிலும் உத்தாமணிச்சாற் றிலும், சொரிய அணிப்பூ படலம் மந்தாரகாசம் நீர்ப்பாய்ச்சல் எழுச்சி வலி நெரி சிவப்பு அறிகண்ணுக்கு நீர்ப்பூலாவேர்ச்சாற்றி லும் மேற்படி புண்டையும் சீனமும் வெங்காரமும் உரைத்துப் போடத்தீரும்,

பொன்னாங்காணி சிறுகீரை பூளா இவைகளில்வேர் திப்பிலி அத்தம் துருசு புளியம்பூ இவைபெல்லாமோர்நிறையாய் எலுமிச் சம்பழச்சாற்றிலரைத்துக் கயிறுசெய்து மேற்படிசாற்றி லுரைத் துப்போடச் சகலகண்ரோகங்களுந்தீரும்,

கண்ரோகங்களுக்குப்பொடி.

வெங்காரம் விராகனிடை(௧) துத்தம் விராகனிடை (௨) சீனிக்காரம் விராகனிடை(௩) முட்டைத்தோல் விராகனிடை(௪) பல்சுறை(ஆ) இவைகளை யெலுமிச்சம்பழச்சாற்றிலும், சிறுநீரைச்சாற்றிலு மைம்மைப்போலரைத் துருட்டிக் காயவைத்து மேற்படி வேரையரைத்துக்கவசஞ்செய்து சட்டியில்வைத்தெரித்துப் பஸ்பித்துப்பொடித்துக்கொண்டு எட்பிரமாணங் கண்ணிற்போட ஆணி பூ நீர்க்குழிநி குத்தம் சதைவளர்த்தி பற்பரோகம் அதிமாங்கிஷ வளர்த்தி உருத்தல் பில்லம் உத்துங்கம் நீர்ப்பாய்ச்சல் ருவேவளர்த்தி அமரத்திரும்.

ஒரிலைத்தாமரைவேர் பொன்னாங்காணிவேர் துத்தம் துருசு பவளம் முத்து நண்டோடு சங்கு இவைகளைச்சமமா யெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டில்வைத்து மூடிச் சீலமண்செய்து புளியம்பொருக்கிற் புடம்போட்டெடுத்துப் பொடித்து எட்பிரமாணங் கண்ணிற்றூவிவர பற்பரோகம் பூ படலம் விரணம் சுக்கிரல் நீங்கும்.

துருசு சங்குப்பொடி நண்டோடு பூலாவேர் ஒரிலைத்தாமரைவேர் இவைகளை வகைக்குவிராகனிடை(௨) வீதம் எலுமிச்சம்பழச்சாற்றில் மூன்றுநாளரைத்து வில்லைதட்டிக் காயவைத்து ஓட்டிலிட்டுச் சீலைசெய்து முன்போற்புடமிட்டு அதை யிருகூறாய்ச்செய்து ஒருகூறுக்கு நாலிலொன்று மிதரோகணியும் ஒருபணவிடைப் பச்சைக்கர்ப்பூரமுங் கூட்டிப்பொடித்து எட்பிரமாணங் கண்ணிற்றூவிவர பற்பரோகம் நீர்ப்பாய்ச்சல்தீரும்.

மற்றொருபங்கைப் பொடித்துக்கொண்டுஅரைப்பணவிடை வீதங் கண்ணிற்றூவிவர கண்படுவன் விழிகன்று குருடு அர்மாங்கிஷவளர்த்தி நீர்முட்டல் கிரந்தி நேத்திரவாயு பித்தகாசம் படகிரி செவ்வேர் பூ பொன்மணி மந்தாரகாசம் இரத்தப்படலம் அழியிருச்சம்பவித்துங் கண்கலக்கந்திரும்.

சீனம் சல்நார் வெள்ளைக்கற்கண்டு துருசு வகைக்குவிராகனிடை(௧) வெந்தநண்டோடு விராகனிடை(௨) இவைகளை மயனமாய்ப்பொடித்துக்கொண்டு நெல்லிடை கண்ணிற்றூவிவரப் படலம் காசம் பூ முதலான சகலகண்ரோகங்களுந்தீரும்.

சந்தனம் துத்தம் துருசு நாரம் மிதரோகணி பச்சைக்கர்ப்பூரம் இவைகளை யோரிடையாய் மைப்போற்பொடித்து எட்பிரமாணங் கண்ணிற்றூவச் சகலரோகங்களுந்தீரும்.

மஞ்சள் சந்தனம் அத்தம் அருக பச்சைக்கர்ப்பூரம் மனோசிலை இந்துப்பு வெட்பாலைவேர் பிதரோகணி வெள்ளிலோத்திரம் இவைகளை பேர்திரையாய் எலுமிச்சம்பழச் சாற்றில் மூன்றுநாளரைத்துலர்த்திப்பொடித்து எட்பிரமாணங்கண்ணிற் றூவிவரச்சகலகண்ரோகங்களுந்தீரும்.

கண்ரோகங்களுக்குக்குழம்பு.

குருவிச் செவ்விளநீரில் பொன்னாங்காணி சிறுகீரை இவைகளின்வேர் திரிபலை வகைக்குப்பலம்(க) சந்தனம் கோஷ்டம் லவங்கம் மரமஞ்சள் ஏலம் அதிமதுரம் சீரகம் தேவதாரம் சண்பகப்பூ செங்கழுநீர்க்கிழங்கு தாமரைவளையம் விலாமிச்சம்வேர் வெட்டிவேர் வகைக்குப்பலம்(கூ) இவைகளைப் பொடித்துப்போட்டுக்குழம்பாய் காய்ச்சிவடித்துக்கல்வத்திட்டு அதில் அத்தம்-கடல்நுரை அஞ்சனக்கல் பிதரோகணி சீனிக்காரம் வகைக்குக்கழஞ்சு(உ) பொடித்து மைபோலரைத்துலர்த்திப் பின்பு பச்சைக்கர்ப்பூரம் ஒரு பணவிடைகூட்டித் தேன்விட்டுக் குழம்புபோ லரைத்துக்கொண்டு கண்ணில்தீட்டிவர நீர்ப்பாய்ச்சல் புகைச்சல் பில்லம் படரோகம் படலம் வாதகாசம் பயித்தியகாசம் கண்பிரீதல்தீரும்.

அத்தம்-அருக-வெங்காரம்-மிளகு-இந்துப்பு-திப்பிலி-சுக்கு பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக்கழஞ்சு(க) இவைகளைப் பொடித்துத் தேனும் வெண்ணெயுங்கூட்டிக் குழம்புபோலரைத்துக் கண்ணில் தீட்டிவர வாணசக்கிரன் காசம் படலம் பூளை நிறவு சொரி அன்ன சோபம் அழிகண் அமரம் இமிர் நீர்ப்பாய்ச்சல்தீரும்.

கண்ரோகங்களுக்குமை.

பிதரோகணி மனோசிலை வகைக்கொரு கழஞ்சுவீதம் ஆவினெய்யிலும் பாலிலுமரைத்துப் புதுச்சட்டித்தாளிலீட்டிட விளக்கில் நெய்விட்டுத் தீபமேற்றி மைப்பற்றவைத்து அதற்குத்திரி துவல் சுட்டகரிசேர்த்து வெண்ணெயில்மத்தித்துக் கண்ணில்தீட்டச் சகலகண்ரோகங்கள்தீரும்.

வேப்பு-புளி-வெட்பாலை-மருக்கு-தேட்கொடுக்கு-வசம்பாத்தகனா வெள்ளைச்சாரணை சங்கு இவைகளின் சாறுகளை பேரளவாய்க்கலந்ததிற் றுணியை க-எ-விசை நனைத்துலர்த்தித் திரித்து விளக்கிலிட்டு நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றிப் புதுச்சட்டித்தாளில் மேற்படி சாறுகளைப்பூசி மைப்பற்றவைத்து அதற்குநிகர் அத்தம் அஞ்சனக்கல் புளியம்பூ கடுக்காயரிசி அதிமதுரம் இந்துப்பு இரும்புப்பொடியுங்கூட்டி ஆவின்வெண்ணெயா லரைத்துக்கொ

த்து கண்ணில்தீட்டிவர அழிகண் பில்லம் தடிப்பு நீர்வடிதல் படலந்தீரும்.

வேம்பு விரை-உப்பிலி சைபாந்தகரா தேட்கொடுக்கு சங்கு இலைகளினிலேச்சாறுகளை ஞானவாய்க்கலந்து மூன்போர்திலேயிதுட்டி மைப்பற்றவைத்து அதற்குநிகர் அத்தம் துருசு வெங்கலப் பொடி திப்பிலி இந்துப்புகூட்டி எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துலர்த்திப் பின்பு ஆவின்வெண்ணெய்கூட்டி யரைத்துக்கொண்டு கண்ணிற்றீட்டிவரக் கண்சிவப்பு படலம் எழுச்சி கண்பிசிசல் பூமுவெட்டு புகைச்சல் இமைதடிப்பு நீர்முட்டல்தீரும்.

சிறுகீரை பொன்னுங்காணி வேலிப்பருத்தி கரிப்பான் அவுரி கேசுப்பிஞ்சி பாடாவரை துளசி தூதுவேளை புளியாரை விஷ்ணுகாந்தி இலைகளின்சாறுகளைப் புதுச்சட்டித்தூளில் பத்துதரம் வுலரவுலாப்பூசி மேற்படி சாறுகளில் அண்ணபேதித்துலர்த்தித்திரித்துநெய்விட்டுத் தீபமேற்றிச் சட்டித்தூளில் மைப்பற்றவைத்துத் அத்தம் துருசு குன்றிப்பிரமாணங்கூட்டி ஆவின்வெண்ணெயாலரைத்துக்கொண்டு கண்ணில்தீட்டிவரச் சகலகண்ரோகங்களுந்தீரும்.

பொன்னங்காணி சிறுகீரை கரிப்பான் பொடுதலை குப்பைமேனி ஊமத்து முருக்கு அகத்தி புளி நீர்க்காம்பெல்லி வேம்பு எருக்கிலைப்பழுப்பு நாயுருவி வேலிப்பருத்தி துளசி இலைகளின் சாறுகளை மூன்போத் சட்டித்தூளிலும் சீலையிலும் தடவித்திரித்து நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி மைபற்றவைத்துத் அத்தம் துருசு சீனிக்காரம் வகைக்குவிராகனிடை(க) கூட்டி பொன்முட்டை செந்நாயுருவி எலுமிச்சம்பழம் இலைகளின்சாற்றிலரைத்துலர்த்தி வெண்ணெய்சேர்த்தரைத்துக்கொண்டு கண்ணிலிட்டுவரச் சகல கண்ரோகங்களுந்தீரும்.

கண்ரோகங்களுக்குக் கண்ணிற்கட்டுநெய்.

ஆவின்நெய்-பால்-வகைக்குப்படி(க)ஒன்றுப்பக்கலந்ததில் முட்க்கொத்தான்-சந்தனம்-பூமிசர்க்கரைக் கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு அதிமதுரம் அவரிவேர் தாமரைக்கிழங்கு வகைக்கொரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி வடித்துக் கண்ணிற்கட்டிவர நீலகாசம் கண்வலி வாணம் படலந்தீரும்.

நந்தியாவட்டப்பூ முருக்கைப்பூ பனைமட்டை பொன்னாங்காணி சிறுகீரை பச்சைமஞ்சள் எலுமிச்சம்பழம் இலைகளின்சாறு கிளிஞ்சில்நீர் வகைக்குப்படி(உ)ஆவின்நெய்படி (உ) இலைகளை

ஒன்றுக்கலத்தில் அதிமதுரம் கோஷ்டம் ஏலம் லவங்கம்சண்ட
கப்பூ வகைக்குக்கழஞ்சு(௨)அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து
நூல்துணிவிரைக் கண்ணிற்கட்டிவரப் பூ இரத்தப்படலம் சதைவ
ளர்த்திதீரும்.

ஆவின்நெய்யில் பனைமட்டை மருக்கிழங்கு இவைகளின்சா
று கினிஞ்சினீர் வகைக்குப்படி(௧) ஒன்றுக்கலத்தில் அதிமது
ம் பலம்(௧)ஆவின்பால்விட் டரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து
க் கண்ணிற்கட்டிவரக் கண்வேக்காடு ரணைச்சுக்கிரன் கண்ணோயில்
பேரிச்சண்ட வெள்ளைவாங்கும்.

ஆவின்நெய் முலைப்பால் வகைக்குப்படி அரைக்கால் கலத்த
தில் அதிமதுரம் பொன்னாங்காணிவேர் சிறுகீரைவேர் வகைக்கு
கழஞ்சு(௧)அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணி விட்டு
வரக் கண்ணெரிவுமாறிக் கண்குளிரும்.

நற்சீரகம் ஏலம் திப்பிலி மூத்திர பவளம் அதிமதுரம் அத்தி
ப்பிஞ்சு பத்திப்பிஞ்சு இவைகளை ஓர்நிறையாய் அரைத்து ஆவி
னெய்விட்டுக்காய்ச்சி மூன்றுநாள் கண்ணிற்கட்டி அப்பால்
நெல்லிப்பருப்பை முலைப்பாலிலரைத்துப் புறவேபமிட்டக் கண்
விதனம் மாறும்.

கினிஞ்சினீர் பனைமட்டைச்சாறு இளநீர் வகைக்குப்படி மா
காவி ஆவின்பால் நெய் வகைக்குப்படி மூன்றுமாகாணி ஒன்று
க்கலத்திற் குன்றுமப்பூ தாமரைக்கிழங்கு சந்தனம் வகைக்குப்
பணவிடை(௨)செங்கழுநீர்க்கிழங்கு பணவிடை(௪)நற்சீரகம் பண
விடை(௰)அதிமதுரம் கோரோசனை வகைக்குப் பணவிடை(௫)
இவைகளை அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்துக் கண்ணிற் கட்டி
னாலும், ஆவினெய்யும்பாலும்வகைக்குப்படி (௧) ஒன்றுக்கலத்த
திற் சிறுகீரைவேர் அதிமதுரம் செஞ்சந்தனம் நெய்தற்கிழங்கு
தாமரைக்கிழங்கு இவைகள் வகைக்குப்பலம்(௧) அரைத்துப்போட்
டுக் காய்ச்சிவடித்துக் கண்ணிற்கட்டினாலும் கண்சிவப்பு கடுப்பு
மாற்றல் முதலான ரோகங்கள்தீரும்.

ஆவின்பால்நெய் - முருங்கைப்பூச்சாறு உத்தமதாளிச்சாறு
வகைக்குப்படி(௨)மஞ்சள் அதிமதுரம் சந்தனம் சீரகம் ஏலம் இ
வைகளை அரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்துக் கண்ணிற்கட்டிவ
ரச் சுக்கிரம்தீரும்.

முடக்கொத்தான் சமூலமும் ஆவின்பால்விட் டிடித்துப் பி
ழிந்தசாறு படி(௪)மேற்படிநெய் படி(௨)ஒன்றுக்கலத்தில் அதி

துராம் பலம்(௪) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணி
த்தட்டிவர படலங்களும் நீர் அத்திக்காயந்தீரும்.

இன்னீர் ஆவின்னெய் வகைக்குப்படி(௨) ஒன்றுக்கலந்ததில் ந
ன்னாரி இருவேலி தெப்பத்திழங்கு சந்தனம் மஞ்சிட்டி வகைக்கு
விராகன்(௪) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணிற்கட்
டினாலும் முருங்கைப்பூ பசுமஞ்சள் எலுமிச்சம்பழம் பனைமட்
டை கோவையிலை இவைகளின்சாறு சிறுநீர் வகைக்குப்படி அரை
க்கால் ஆவின்னெய் படி(௧) ஒன்றுக்கலந்ததில் சிறுகீரைவேர் பொ
ன்னாங்காணிவேர் நந்தியாவட்டப்பூ இவைகளொருகொட்டைப்
பாக்களவு அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துக் கண்ணிற்கட்டி
னாற் கண்ணிற்பூ சிப்படிதல்மாறும்.

கண்ரோகமுடையவர்கட்குத் தலைக்குப்பதமிட

குங்குமப்பூத்தயிலம்.

குங்குமப்பூ மஞ்சிட்டி சந்தனம் அரத்தை வெட்டிவேர் வி
லாமிச்சம்வேர் ஆலம்விழுது அதிமதுரம் தாமரைக்கிழங்கு நீர்ப
விக்கிழங்கு பச்சை வகைக்குப்பலம்(௨) இவைகளொடித்து (அ) ப
டி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்திறுத்து அதில் நல்
லெண்ணெய்ப்படி ஒன்று கூடவிட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்துத்
தலைக்குப்பதமிட்டுவர நல்லமைபத்தரும்.

கண்ரோகமுடையவர்களுக்குக் காலிற்றேய்க்கத் தயிலம்.

சிவனிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(௧) ஒன்றுக்
கலந்ததில் நாமக்கிழங்கு விராகனிடை(௪) அரைத்துப்போட்டுக் கா
லித்தேய்த்துவர நன்மையுண்டாம்.

கண்ணில் வியாதிவராதிருப்பதற்கும் குளிர்ச்சிக்கும்

வெண்ணெய்.

சிறுமணைக்கின்வேளையாமைத்து ஆவின்பாலிற்கலக்கிக் காய்ச்
சிப் புரைகுத்திக்கடைந்து வெண்ணெயெடுத்துக் கண்ணில் இட்டு
வர நன்மையாம்.

கண்ணோய்கட்கு மருந்தரைக்கும்பாத்திரம்.

வெங்கலக்கல்வமாயும் செப்புக்குழவியுமா யிருக்கவேண்டும்
அதிலரைத்தால் உத்தமம்.

மேற்காட்டிய கண்ரோகமருந்துகளனைத்தும் இக்கல்வத்தி
லரைக்கவேணுமேயல்லது மற்றொன்றி லரைக்கலாகாது.

காலையிற் போடவேண்டிய மருந்தை இரவிலும் மாலையிற்
போடவேண்டியமருந்தை மாலையிலும் அதற்குரிய அனுபானத்

அதில் வெள்ளிக்கிண்ணத்திலாவது வைத்துக் கண்ணிற்றீட்டவும்-

கண்ணில்மருந்திடப்பொருந்தாக்காலம்.

மேற்படிரோகஸ்தர்கள் நெருப்பண்டை வெயிலில் நடந்துந் திருக்கும்போதும் ஸாகிரிவஸ்துக்களைப் புசித்திருக்கும்போதும் ஸ்நானஞ்செய்தவன்றைய தினத்திலும் கண்விழித்த தினத்திலுங் கண்ணில்மருந்திடலாகாது.

கண்ணில்மருந்தெழுதியபின் நடக்கவேண்டியக்கிரமம்.

காற்று வெயில் ஸாகிரிவஸ்துக்கள் குளிர்ந்ததண்ணீர் கைப்பு புளிப்பு காரமுள்ளபதார்த்தம்நீக்கி வெந்நீர் ஆவின்பால் நெய் அவரை பாசிப்பயறு சிறுகீரை பொன்னாங்காணி முருங்கைக்கீரை வாழைக்கச்சல் இவைகளை யநுசரித்துவந்தால் நன்மையுண்டாம்.

தந்தசுத்தி.

ஆலவிழுது-பூலா-நாயுருவி-வெள்ளெருக்கு-உகா - இவைகளின்வேர் வெட்டு-இதுக்களிலொன்றினால் தந்தசுத்தி செய்து வெந்நீரால் முகங்கழுவிவந்தால் நன்று.

தயிலந்தேய்த்துக்கொள்ளுங்கிரமம்.

சித்திரை-வைகாசி-ஆனி-ஆடி-ஆவணியில் ஒருகடிகையாயிலும், மார்கழி-தையில்-உ-கடிகையாயிலும், மாசி-பங்குனி-மற்றமாதங்களில் ௩-கடிகையாயிலுஞ் சிரசிற்றயிலமூறினபின் வெந்நீரில் உதிரிலைச்சீயக்காய்முதலியவை அரைப்பிட்டு ஸ்நானஞ்செய்துவருவதுமுக்கியம்.

கண்ரோகங்களுக்குத்தயிலம்.

சிறுகீரை-பொன்னாங்காணி-எலுமிச்சை-நன்னாரி- நற்றியாகட்டம்-வாதமடக்கி-சங்கங்குப்பி -முடக்கொத்தான் - பொன்முசுட்டை-தொச்சி-கறித்தகாக்கணம்-அமுக்கரா-சிற்றில-வெட்டிவேர்-விலாமிச்சம்வேர் தாமரை-நெய்தல் கார்த்தை சவுரி பேராமுட்டி-அ[illegible] இவைகளின்வேர் அதிமதுரம் தேவதாரம்-தான்றிக்காய் முத்தக்காசு வகைக்குப்பலம் ௩ சந்தனம்பலம்-அ-சிற்றாமுட்டிவேர்-பலம் ௰-மிளகுபலம்(௩)இவைகளையிடித்து-கஉ-படி ஜலத்திற்போட்டு ஊறவைத்தெரித்து எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய்ப்படி (௩) ஆவின்பால் படி (௪) கெற்படிநெய் படி (உ) செவ்விளநீர்படி (௪) முடக்கொத்தான் பொன்முசுட்டை-தொச்சி பொன்னாங்காணி கரிசலாங்கண்ணி இந்திரவல்லி கற்றாழை தண்ணீர்விட்டான்-வாதமடக்கி- இவைகளின் சாறு வகைக்குப்படி (௧) ஒன்றாய்விட்டு நாகணம் பூலாத்திப்பூ குவ

லங்கப்பத்திரி சந்தனம் தேவதாரம்-மந்திஷ்டிவேர் - வால்மிளகு-வட்டமாத்திசிலை-ஏலம்-சாதிக்காய்-கிராம்பு-கோஷ்டம்-வெட்டிவேர் அறுகலைக்கல் விளாமிச்சம்வேர்-மரமஞ்சள்-கொத்தமல்லி-குக்கில் அதிமதுரம்-செவியம்-சண்பகப்பூ - லவங்கப்பட்டை-தக்கோலம்-சாதிக்காய்-நெல்லிமுள்ளி-திப்பிலி-கடுகுரோகணி - இறநாகப்பூ-கேசரம்-பச்சை-வகைக்குக்கழஞ்சு க ஆவின்பாலை வார்த்துப் போட்டுச் சிறுதீயாயெரித்து மெழுகுபதத்தில் வடித்து அதற்கு டாமருகள்-அபின்-புனுகு-சவக்காரம்-கோரோசனை-கஸ்தூரி- பச்சைக்கர்ப்பூரம் வகைக்குக்கழஞ்சு (க) பொடித்துப்போட்டுவைத்துக்கொண்டு ஒவ்வொருநாள் தயிலந்தேய்த்து சீயக்காய் அரைப்பிட்டு முழுகிவர நயனகாசம் படலம் வில்லம் நீர் - பூவெட்டு ஏந்திப்பூ-குருடு நீர்ப்பாய்ச்சல்-குத்தல் முதலாகிய கண்ரோகங்கள் யாவும் தீரும்.

நெல்லிக்காய் வையாத்தகளை இலைகளின்சாறு பசுவின்பால்-வகைக்குப்படி உ நல்லெண்ணெய்ப்படி (ச) அதிமதுரம் - கோஷ்டம்-ஏலம்-இலவங்கம்-சண்பகப்பூ-சந்தனம்-வெட்டிவேர்- விளாமிச்சம்வேர் வகைக்குப்பலம் (க) அரைத்துப்போட்டுக் காய்ச்சிமுழுகிவரக் கண்காசம் படலம் புகைச்சல் பித்தந்தீரும்.

நெல்லிக்காய் வையாத்தகளை வகைக்குச்சாறு படி (உ) நல்லெண்ணெய் ஆவின்பால்-வகைக்குப்படி (க) இவைகளை ஒன்றுக்கலந்ததில் அதிமதுரம்பலம் (ச) அரைத்துப்போட்டுக்காய்ச்சி முழுக கண்படலம் காசம் கண்ணெரிவு கபாலவாதகுழிதீரும்.

நல்லெண்ணெய் கருஞ்செம்பைபிலைச்சாறு வகைக்குப்படி (க) முலைப்பால்படி (உ) ஒன்றாய்க்கலந்ததில் மிளகுபலம் (க) வால்மிளகுபலம் (க) பூந்திக்கொட்டை-வகைக்குப்பலம் (ஏ) இவைகளை அரைத்துக் கரைத்துக்காய்ச்சி வடித்து முழுக நேத்திரவாயுதீரும்.

கையாந்தகரை-பொன்னாங்காணி-முசுமுசுக்கை - தாழைவிழுது இவைகளின்சாறு-நல்லெண்ணெய்-முலைப்பால் - செவ்விளநீர் வகைக்குப்படி (க) ஒன்றாய்க்கலந்து மூன்றுநாள் வெயிலில்வைத்து அதில் சந்தனம்-அதிமதுரம்-விளாமிச்சம்வேர்-வெட்டிவேர்-செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம்-வகைக்குக்கழஞ்சு (க) கிராம்பு பனைவிட்டுருகு குங்குமப்பூ பனைவிதை (உ) இவைகளை அரைத்துக் கலக்கிக் காய்ச்சிமுழுக கண்புகைச்சல் பித்தகாசம் தலைமயக்கந்தீரும்.

வெள்ளை-கரிப்பால்-இவைகளின்சாறு நல்லெண்ணெய் - பசுவின்பால் வகைக்குப்படி (க) எலுமிச்சம்பழச்சாறுபடி (உ) ஒன்று

யிக்கலந்ததில்-கோஷ்டம்-நெல்லிமுள்ளி-அதிமதுரம்-ஏலம்-லவங்கம்-வெட்டிவேர்-விலாமிச்சம்வேர்-வகைக்குவிராகனிடை(௧)அரைத்துக் கலக்கிக் காய்ச்சிமுழுகப் பித்தகாசம் மகிலகாசம் வாட்டிமுதலியதுதீரும்.

சிறுகீரை-பொன்னாங்காணி-வல்லாரை-முசுமுசுக்கை-நெல்லிக்காய்-இவைகளின்சாறு-நல்லெண்ணெய்-ஆவின்பால் - இளநீர் வகைக்குப்படி(௨)இவைகளை பொரிமுக்கலத்ததில் இஞ்சி - பலம்(௩)வெட்டிவேர் தண்ணீர்விட்டான் கிழங்கு வகைக்குப்பலம் (௧)தாமரைக்கிழங்குபலம்(௩)மல்லிபலம்(௨)சீரகம்- காட்டுவிளங்கம் வகைக்குப்பலம்(௧)இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக்கலக்கி சூரியனில் இரண்டுநாள்வைத்துக் காய்ச்சிவடிக்கவும் அதில் பஞ்சதீபனியம் வகைக்குவிராகனிடை(௨)பொடித்துச் சீலையில் முடிந்து போட்டுக்கொண்டு தலைமுழுகிவர வித்திகம்- சூடு-நீர்கசம்-பித்தகாசந்தீரும்.

வெட்டிவேர்-விலாமிச்சம்வேர்-முத்தக்காசு - நன்னாரிவேர்-நெல்லிமுள்ளி-மரமஞ்சள்-சந்தனம்-மகிழம்பூ - வகைக்குப்பலம்(௧)இவைகளையிடித்துப் பதக்குத்தண்ணீரிற்போட்டு - எட்டொன்றாய்க் காய்ச்சியதில்-பச்சை-கச்சோலம்-நன்னாரி-வெட்டிவேர்- விலாமிச்சம்வேர்-கோஷ்டம்-சந்தனம்-இருப்பைப்பூ - சதகுப்பை-குங்குமப்பூ-சடாமாஞ்சில்-வெள்ளைக்குங்கிலியம்-மகரப்பூ - புனுகு-தேய்த்தகிழங்கு-சாதிக்காய்-ஏலம்-முத்தக்காசு-ஆலம் விளாமிசி-தாமரைக்கிழங்கு-கொறு-செவியம்-தாளிசபத்திரி-அரத்தைக்கல் - அதிவிடயம்-அதிமதுரம்-சம்பகப்பூ-மஞ்சிட்டி-வகைக்குக்கழஞ்சு(௧)இவைகளை யரைத்துப்போட்டு நல்லெண்ணெய்படி(௪) கூடவிட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவர தலைமயக்கம்- உடம்பெரிவு-கைகால-மதிமயக்கம்-வாந்தியெரிவு-படலம்-காசம்இழிப்பு-சதைவளர்த்தி-நீர்க்காசம்-தலை-நோய்தீரும்.

சிற்றாமுட்டிவேர் பலம்-௩-வில்வவேர்-வெட்டிவேர் - விலாமிச்சம்வேர்-நன்னாரிவேர்-சித்திரமூலி-சந்தனம்-அமுக்கிராக்கிழங்கு-வகைக்குப்பலம்-௩-இவைகளையிடித்து-பதக்கு - படி-தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க் கொழுஞ்செய்து அதில்-சிறுகீரை-பொன்னாங்காணி-முசுமுசுக்கை-ஓரிலைத்தாமரை- தண்ணீர்விட்டான்-கிழங்கு வல்லாரை சிராசெங்கழுநீர் கற்றாழை காவிழாது வகைக்குச்சாறுபடி(௨)நல்லெண்ணெய் ஆவின்பால் இளநீர் நெல்லிக்காய்ச்சாறு வகைக்குப்படி(௧)கூடவிட்டு பஞ்சதீபனியம் சிறுநாகப்பூ கோஷ்டம்-கஸ்தூரிமஞ்சள் திரிகடுகு-திப்பிலி சடாமாஞ்சில் செவ்வள்ளிக்

கொடி-வெட்பாலையரிசி-வாலுளுவையரிசி-பெருங்குரும்பை மல்லி மொட்டு-தேவதாரம்-பச்சை-இளிப்பாம்பட்டை - இச்சிலிக்கிழங்கு-நுஞ்சத்துப்பட்டை-வகைக்குவிராகன்-உ- இவைகளைப் பசுவின்பாலிலரைத்துக்கலக்கிக் காய்ச்சிவடித்து அதில் புனுகுசட்டம் கோரோசனை பச்சைக்கர்ப்பூரம் குங்குமப்பூ வகைக்கு விராகனெடை(க)பொடித்துப்போட்டுத் தலைமுழுகிவர கண்ரோகம் கூசு-ம் தீரும்.

நெல்லிக்காய்-முளமுருக்கை-இளநீர்-கரிசலாங்கண்ணி-கற்றாழையின்சோறு-தண்ணீர்விட்டான்கிழங்கு-வல்லாரை-இவைகளின்சாறு வகைக்குப்படி(க)பசுவின்பால்-நல்லெண்ணெய்-வகைக்குப்படி(அ)சிற்றாமணக்கெண்ணெய்-ஆவின்நெய்வகைக்குப்படி-உ-இவைகளைப்பொன்றாய்க்கலந்ததில் ஏலம் மதுரம் - கோஷ்டம்-மஞ்சிட்டி-நன்னாரிவேர்-விளாமிச்சம்வேர்-வெட்டிவேர்-லவங்கப்பட்டை-லவங்கப்பத்திரி சண்பகப்பூ-வகைக்குப்பலங்கால்-தாளிசபத்திரி பலம்(கஉ)சந்தனம்பலம்(உ)கோரோசனைபலம்(ய)பச்சைக்கர்ப்பூரம் அரைக்கால் இவைகளை இளநீர்விட்டரைத்துக் கலக்கிக்காய்ச்சி வடித்துத் தாளிபபுடம்வைத்து முழுகிவர உஷ்ணம் பித்தம் நீர்வு கடிவிஷம் கைகால்எரிவு பிரீ கண்காசம் படலம் நேத்திரவாயு முதலானவைகளுந்தீரும்.

நெல்லிக்காய்ச்சாறு-ஆவின்பால் - நல்லெண்ணெய் - இளநீர் வகைக்குப்படி-உ-நன்னாரி-சீந்தில்-முத்தக்காசு-சிற்றாமுட்டி- பொன்னாங்காணி பேராமுட்டி சிறசெங்கழுநீர் இருவேலி ஓரிலைத்தாமரை-வகைக்குப்பலம்(க) இவைகளையிடித்துப் பத்துப்படித்தண்ணீர்விட்டு இரண்டுபடியாய் வற்றவைத்ததில் நற்சீரகம் கருஞ்சீரகம் செஞ்சந்தனம் சாலாமிசிரி கிராம்பு ஏலம் மதுரம் லவங்கப்பட்டை சாதிக்காய் கோஷ்டம்வகைக்குக்கழஞ்சு(உ)அரைத்துப்போட்டு ஒன்றாய்க்கலந்து காய்ச்சிமுழுக பித்தவாயு நாவரட்சி பிரமேகம் அவயவங்களெரிவு உஷ்ணம்கண்ணெரிப்பாய்ச்சல் தலைவலிதீரும்.

பத்துப்படி தண்ணீரில் பத்துப்பல சந்தனத்தூளைப்போட்டு ஐந்தின ஊறவைத்து இரண்டுபடியாய்வற்றவைத்து விலாமிச்சம்வேர்-வெட்டிவேர்-நன்னாரி-பொன்னாங்காணி - சிற்றாமுட்டி-சீந்தில்-வில்வம்-இவைகளின்வேர் வகைக்குப்பலம்(க)இடித்து இருநாழித்தண்ணீர்விட்டு எட்டொன்றாய்வற்றவைத்து இருவகைக் கியா

டித்தையும் ஒன்றாய்க்கலந்ததில் மரமஞ்சள் மஞ்சிட்டி மாஞ்சில் மல்லி செவ்வள்ளிக்கொடி செவியம் விளாவரிசி சதகுப்பை வெட்பாலையரிசி பச்சை திப்பிலி கச்சோலம் தகரம் புனுகு சந்தனம் வகைக்குக்கழஞ்சு-௪-இவைகளை பொடித்துப்போட்டுக் காய்ச்சி வடித்து உள்ளுக்குஞ்சாப்பிட்டுத் தலைக்குத்தேய்த்து முழுகிவர மேற்சொல்லியரோகங்கள் தீரும்.

தாமரைக்கிழங்கு நெல்லிமுள்ளி ஆம்பற்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு நெய்தற்கிழங்கு வகைக்குப்பலம் (௫) இவைகளை யிடித்துலர்த்திப் பத்துப்படி தண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து அதிலொருபடி நல்லெண்ணெய்விட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர கண்ணோய்கள் தீரும்.

நெல்லிக்காய் கரிப்பான் தாமரைக்கிழங்கு பொன்னாங்காணி பேய்ப்புடல் கோவையிலை எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு பசுவின்பால் வகைக்குப்படி (௭) நல்லெண்ணெய் (௧) அதிமதுரம் சீந்தில் வதாரம் நாகணம் கோஷ்டம் எலம் முந்திரிப்பழம் பேரிச்சம்பழம் சந்தனம் சாதிக்காய் வகைக்குவிராகனிடை (௨) இவைகளை பொடித்துக்கலக்கிக் காய்ச்சிவடித்து மூன்றுநாளிலைக்கொருதலையிற்றேய்த்து உசில் அரைப்பிட்டு ஸ்நானஞ்செய்துவர எட்டுவகைக்காசமுந்தீரும்.

கருவேலம்பட்டை பலம் (௰) குமரி சீந்தில் கீழாநெல்லி கரிசலாங்கண்ணி பொன்னாங்காணி சிறுசெங்கழுநீர் தாமரைக்கிழங்கு நன்னாரி விலாமிச்சு சந்தனம் வகைக்குப்பலம் (௪) இவைகளெல்லாமிடித்துத் தண்ணீரிற்போட்டு எட்டிலொன்றாய்க்காய்ச்சியதில் நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி (௪) இளநீர் படி (௨) விட்டுக்கலந்து அதிமதுரம் கோஷ்டம் சதகுப்பை சன்னலவங்கப்பட்டை சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் சாதிக்காய் செவ்வள்ளிக்கொடி ஏலம் பச்சை திப்பிலிமூலம் மல்லி அகில் வாலுளுவை செஞ்சந்தனம் முத்தக்காசு சடாமாஞ்சில் கோரோசனை வகைக்குக்கழஞ்சு (௨) இவைகளை பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சி முழுகிவர நேத்திரநோய் (௯௬) ம் தலைவலியுந்தீரும்.

பேய்ப்பாகல்-வெள்ளறுகு-பிரமி-பொன்னாங்கண்ணி - பாதிரித்தாய்வேர் தகரை நெல்லிமுள்ளி வகைக்குப்பலம் (௩) சீகம் இடித்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு கற்றளைத்திருத்தகியாழம் படி (௧) ஆவின்பால்படி (௧) ஒன்றாய்க்கலந்ததில் மிளகு திப்பிலி சுக்கு அரத்தை சிறுதேக்கு மலைதாங்கிவேர் மரமஞ்சள் தான்றிக்காய் ம

ராம் பூபிசீக்கைக்கிழங்கு வகைக்குவீரசுகலீடை (ரு) ஆவின்பாலி லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத் திமிர்வாதந் தீரும்.

காத்தொட்டி வெற்றிலை மரமஞ்சள் கஞ்சா இலைகளின்சாறு வகைக்குப்படி (உ) ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி (உ) யிவைக்கு கருஞ்சீரகம்-கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு (க) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர கண்ணில்நீர்வடிதல் பீலைப்பிணியுந் தீரும்.

சிற்றாமணக்கெண்ணெய் குமரிச்சாறு வகைக்குப்படி (க) தேவதாரம்-சந்தனம்-பச்சைக்கர்ப்பூரம்-சாதிப்பத்திரி - அதிமதுரம்-கோரோசனி-தக்கோலம்-மஞ்சள்-சாதிக்காய்-கிராம்பு-ஏலம்புனு குசட்டம் முத்தக்காசு சடாமாஞ்சில் விலாமிச்சம்வேர் லவங்கம் மஞ்சிட்டி நன்னாரிவேர் தாமரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு சிறுநாகப்பூ திரிபலை வகைக்குக்கழஞ்சு (உ) மேற்படி சாத்திலரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவர நேத்திரரோகம் சிரசுரோகமுதலியதுந் தீரும்.

கற்றாழஞ்சாறுபடி (உ) இளநீர்படி (ரு) நல்லெண்ணெய்ப்படி (ரு) பசுவின்பால் படி (ரு) இவைகளைக்கலந்து மூன்றுநாள் சனியில் வைத்து நாலிலொன்றாய்க்காய்ச்சி அதில் செங்கழுநீர்க்கிழங்கு ஏலம் லவங்கம் பச்சை சந்தனம் விலாமிச்சம்வேர் வெட்டிவேர் இ[illegible] வெள்ளைக்குங்கிலியம் சிறுநாகப்பூ நரம் [illegible] மாஞ்சில் அதிமதுரம் அம்பரூசம் மரமஞ்சள் தகரம் புன்னைத்தாது தாமரைவளையம் [illegible] கொட்டிக்கிழங்கு நன்னாரி முத்தக்காசு வகைக்குக்கழஞ்சு (ங) இவைகளை அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து முழுகிவர கண்ணழற்சி சிவப்பு நீர்ப்பாய்ச்சல் பம்பரோகங்களுந்தீரும்.

சந்தனத்தூள்பலம் (ரு) விலாமிச்சம்வேர் வெட்டிவேர் முத்தக்காசு அதிமதுரம் ஏலம் இலவங்கம் இருப்பை கார்கோலரிசி அதில் வகைக்குப்பலம் (க) இவைகளை யிடித்துத் அரைநீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து அதில் நல்லெண்ணெய்ப்படி (ரு) ஆவின்பால் படி (ரு) பச்சைக்கச்சோலம் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் அதிமதுரம் ஏலம் லவங்கம் சிறுநாகப்பூ நன்னாரி குங்குமப்பூ மரமஞ்சள் செங்கழுநீர்க்கிழங்கு சண்பகப்பூ அகில் சந்தனம்வெள்ளைக்கொடி கோஷ்டம் வகைக்குக்கழஞ்சு (ரு) இவைகளையரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து அதில் குங்குமப்பூ புனுகு பச்

சைக்கர்ப்பூரம் வகைக்குவிராகனிடை (க) பொடித்துப்போட்டுத் தலைமுழுகிவர பன்னதாசம் படலம் பற்பரோகம் புகைச்சல் நீர்ப்பாய்ச்சல் கூச்சம் தலைநோய் கன்னச்சூலைதீரும்.

ஏலம்-லிவங்கம்-சாதிக்காய்-நெல்லி-தான்றி-கோஷ்டம் - கஸ்தூரிமஞ்சள் கருவாப்பட்டை செஞ்சந்தனப்பொடி கடுகுரோகணி-சிறுநாகப்பூ-அதிமதுரம்-கடுக்காய்-சதகுப்பை - சண்பகப்பூ-பச்சை-வெள்ளைக்குங்கிலியம்-குருந்தொட்டிவேர் வகைக்குப்பலம்(௫)இவையெல்லாமிடித்து (௨௪) படி தண்ணீரிற்போட் டெட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் பொன்னாங்காணிவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் மிளகு வகைக்குப்பலம்(௫) இவைகளையிடித்துத் தனித்தனி(௪)படி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்துவிட்டு இளநீர் தாழைவிழுதுச்சாறு வகைக்குப்படி(௨)நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி(௫) ஒன்றாய்க்கலந்து மேற்படி (௪) வகைமருந்தும் வகைக்குப்பலம் (௨)மேற்படிபாலில் டரைத்துப்போட்டுக்காய்ச்சி வடித்து முழுகிவர கண்ணீர்ப்பாய்ச்சல் இமைத்தடிப்பு பற்பரோக முதலானகண்ணோய்கள்தீரும்.

நல்லெண்ணெய் இளநீர் ஆவின்பால் வகைக்குப்படி(௧) சிறுகீரை கையாந்தகரை பொன்னாங்காணி நெல்லிக்காய் இவைகளின்சாறு வகைக்குப்படி(௩)வெட்பாலையரிசி கஸ்தூரிமஞ்சள்- பஞ்சதிரவியம் வகைக்குப்பலம்(௧)இவைகளையரைத்துக்கலக்கிக்காய்ச்சி முழுகிவர கண்ணெரிவு தடிப்பு காசந்தீரும்.

அவயவங்களினெரிவு பித்தத்திற்குத்தயிலம்.

சிற்றாமுட்டி நன்னாரி இருவேலி மூஸ்லீ நெய்தல் இவைகளின்வேர் சிற்றிற்றம்பு சீராசெங்கழுநீர் தாமரைக்கிழங்கு தண்ணீர்விட்டான் சிறுசினைவேர் வகைக்குப்பலம்(௧)இவைகளையிடித்து எட்டுமாக்கால் தண்ணீரிற்போட் டெட்டொன்றாய்க் காய்ச்சிவடித்து அதில் தாழைவிழுது தாமரைக்கிழங்கு பொன்னாங்காணி கையாந்தகரை ஒரிலைத்தாமரை நெல்லிக்காய் எலுமிச்சம்பழம்இவைகளின்சாறு வகைக்குப்படி(௨)நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி(௮)இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அதில் பஞ்சதிரவியம்-பச்சை-கஸ்தூரிமஞ்சள்-சிறுநாகப்பூ-செவ்வியம் - சடாமாஞ்சில் வகைக்குப்பலம்(௧)இவைகளை இளநீர்விட்டரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து அதில் புனுகு-பச்சைக்கர்ப்பூரமும் பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுகிவரத் தீரும்.

117

கண்கடுப்பு-சிவப்பு-நமைவிக்குத்தயிலம்.

நல்லெண்ணெய்படி(க)குப்பைமேனி-கையாந்தகரை ஆத ண்டை-நெருஞ்சி-கழற்கொடி இவைகளின்சாறு வகைக்குப்படி(க) யில் ஊக் கையாந்தகரைச்சாற்றில் சர்க்கரையைக் கரைத்து வெயி லில்தெளியவைத்து அந்தத்தெளிவுபடி (வ) ஒன்றாய்க்கலந்து பத மாய்க்காய்ச்சிவடித்து அதில் அபின் விராகனிடை(க) பொடித்து ப்போட்டுக்கொண்டு தலைமுழுகிவரத்தீரும்.

கண்ரோகங்களுக்கும் படலங்களுக்கும் தீர்க்கும் குமரித்தயிலம்

எட்டுப்படி குமரிச்சாற்றை ஒருபாண்டத்திலூற்றி ஒருபடி யாய்வற்றவைத்து அதில்நல்லெண்ணெய்ப்படி(க)சிறுநாகப்பூ-செ ங்கழுநீர்க்கிழங்கு அதிமதூரம் விலாமிச்சம்வேர் நன்னாரிவேர் அ ருநெல்லிக்கல் சந்தனம் வகைக்குக்கழஞ்சு-ரு-ஆவின்பால்விட்டரைத் துப்போட்டுக் காய்ச்சிமுழுகிவரத்தீரும்.

கபாலவலி-கபாலசன்னி கண்ணோய்கட்கு சப்பிரசத்தயிலம்.

தேங்காய்ப்பால்-பசுவின்பால் வகைக்குப்படி(உ) எலுமிச்ச ம்பழச்சாறு முலைப்பால் வகைக்குப்படி (க) ஒன்றாய்க்கலந்ததில் ஏலம்-லவங்கப்-பத்திரம்-சுக்கு-கோஷ்டம்-சண்பகப்பூ- வகைக்கு க்கழஞ்சு-க-அரத்தை-மிளகு-அதிமதூரம்-சதகுப்பைமயிரோசனை குருந்து கொடிமூலி மாப்பமெரித்தால் பெருங்குரும்பை வகைக் குக்கழஞ்சு-உ-இவைகளை யரைத்துப்போட்டு டயிக்காத்தலில் சூடா ய் அதான்வைத்திருந்து காய்ச்சி முழுகிவரத்தீரும்.

கண்ணோய்-செவிநோய்-தலைநோய்கட்குத்தயிலம்.

கையாந்தகரை கற்றாழை நெல்லிக்காய் இவைகளின்சாறு முலைப்பால் வகைக்குப்படி-க-நல்லெண்ணெய்ப்படி (கஉ) நன்னாரி வேர்-வெட்டிவேர்-விலாமிச்சம்வேர்-கோஷ்டம்-அதிமதூரம்- சந் தனம்-வகைக்குப்பலம்(உ) இவைகளை அரைத்துப்போட்டுக் காய் ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

கண்ணோய்-சிரசுநோய்க்கு-கர்ப்பூரசந்தனாதித்தயிலம்.

நல்லெண்ணெய் பசுவின்பால் இளநீர் கற்றாழை தாழை விழுது முசுமுசுக்கை கர்ப்பூரவள்ளி எலுமிச்சம்பழம் இவைகளி ன்சாறு வகைக்குப்படி(க)விலாமிச்சம்வேர் - வெட்டிவேர் ஏலம் ஓமம் குங்குமப்பூ சோம்பு சீரகம் மல்லி தேவதாரம் அரத்தை ம ரமஞ்சள் கிளிதூரம்பட்டை சாதிக்காய் கற்கடகச்சிங்கி சிறுநாக

ப்பூ சண்பகப்பூ கஸ்தூரிமஞ்சள் மஞ்சள் வெட்பாலையரிசி வினா
யரிசி-இறம்பைக்கு-மூலாக்கிழங்கு-பச்சை வாலுளுவையரிசி-மிளகு-
வகைக்குக்கழஞ்சு(௧) [illegible] வைகளெல்லாம் எலுமிச்சஞ்சாற்றாலரை
த்துப்பொட்டுக் காய்ச்சி முழுகிவர ஆக்கில் தீர்ப்பாய்ச்சல் சிப்ப
தல் தாசினாத்தி மண்டையடைக்குத்துதல் ஒருதலைவலி பொலிறி
த முதலான சிரசிரோகம்-சுமு(ம்) கண்ணோய் கூ-ம்-தீரும்.

பித்தம் கண்காசம்-காதடைப்பு-மந்தத்திற்குத்தயிலம்.

கையாந்தகரை நெல்லிக்காய் தோல்சி குமட்டை இவைக
ளின்சாறு-நல்லெண்ணெய்-பசுவின்பால் வகைக்குப்படி(௨)அதி
மதுரம் கழஞ்சு(௫)அரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகிவரத்
தீரும்.

நேத்திரரோகம் தொண்ணூற்றாறுக்குத்தயிலம்.

பொன்னாங்காணி கரிசலை ஆவாரைமொட்டு கொழுந்து இ
வைகளை ஆவின்பால்விட்டு இடித்தும் பிழிந்தசாறு சிற்றாமணக்
கெண்ணெய் ஆவினெய் நல்லெண்ணெய்-வகைக்குப்படி(௧)ஆவி
ன்பால்படி(௩)ஒன்றாய்க்கலந்து அகில் ஏலம் கிராம்பு அதிமதுர
ம் கோஷ்டம் சண்பகப்பூ சாதிக்காய் மிளகு வால்மிளகு மலாக்
காய்சந்தனம் செஞ்சந்தனம் மரமஞ்சள் அரத்தை தேவதாரம்
சாத்திரம்பழி வெட்டிவேர் வகைக்குப்பலம் அரைக்கால் பொடித்
துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து ஒன்றரைவிட்டெருதா
ச்சனிக்குத்தேய்த்துச்சீயக்காய் உசிலம் அரைப்பிட்டு ஸ்நான
ஞ்செய்துவர சகலகண்ரோகங்களுந்தீரும்.

கண்ணோய் சிரசிரோகத்துக்கு தயிலம்.

தாளைநெழுவிழுதுச்சாறு நெல்லிக்காய்ச்சாறு கரிசலாங்கண்ணிச்
சாறு சீந்திற்சாறு வகைக்குப்படி(௪) நல்லெண்ணெய்படி(௰)இ
வைகளை பொன்றாய்க்கலந்ததில் இலுப்பைப்பூ சந்தனம் அதிமது
ரம் ஏலம் லவங்கம் லவங்கப்பத்திரி நாகேசரம் வெட்டிவேர் மூசி
த்தகாசு சாதிக்காய் பேரிச்சம்பழம் கொத்தமல்லி தேவதாரம் வி
ளாமிச்சம்வேர் தாமரைக்கிழங்கு செங்கழுநீர்க்கிழங்கு ஆவிரம்
பூ வில்வம் கடுக்காய்தெல்லி வேர் மலர் வகைக்குப்பலம்(௧) இ
வையெல்லாம் இடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து மு
ழுகிவரத்தீரும்.

நயனவிதி முற்றிற்று.

விருத்தம்.

இரைசடை உலகிலுள்ள திரண்ட நூல்யாவும்பார்த்து .... *
வகைதொகுப்பினிலின்கோர்வை வகுப்புடனாய்ந்தேதான் ... *
குறையினைத்தீர்ப்பதற்குக் குறித்தவயித்தியசாரத்தை .... *
மறைமுனிபாதம்போற்றிவழுத்திநேன்காப்புத்தானே ... . *

வேறு.

காப்பானவாதபீனிசந்தானாகும் .... *
கருதிடதோர்பித்தபீனிசமுமாகும் .... *
சாய்பானசிலேத்மபீனிசமுமாகும் .... *
வகுத்தநீர்ப்பீனிசமாம்சீப்பீனிசம் : .... *
சேப்பானவுதிரபீனிசமுமாகும் .... *
செப்பானசிரப்பீனிசமூலப்பீனிசமாம் ... ... *
ஒப்பானகண்டபீனிசந்தானாகும் .... *
அப்பீனிசமெட்டுவிதந்தின்னமாமே . ... *

வாதபீனிசம்-பித்தபீனிசம் சிலேத்மபீனிசம்- நீர்ப்பீனிசம் இரத்தபீனிசம்-சீப்பீனிசம்-சிரப்பீனிசம்-மூலப்பீனிசம்-கண்டபீனிசம்-ஆகப்பீனிசங்கள் எட்டு.

பீனிசப்பொதுக்குணம்.

மூலத்திற்கனமேலிட்-பொலத்திற்சிரைசெத்தி ஒருநாசியடைத்து ஒருநாசியில் நீர்வடியும் அடிக்கடி தும்மல்விழும் பிடரியுந் தலையுங்கனத்து வலிக்கும் வாசத்தோறும் பொல்லாவாசனை நீர்திரண்டுவிழும் நாறும் தேகத்தில் வெதுப்புக்காணும் நாவில் ருசியும் நாசியில் மணமுங்கெடும் சிரசுநீர் நெஞ்சிலிறங்கிக் கட்டும்.

வாதபீனிசக்குணம்.

நாசிவரளும் நீர்வடியுந் நீர்பழுத்து சளிபோல்திரண்டு நாற்றமின்றிவிழும்.

பித்தபீனிசக்குணம்.

நாசியெரி மஞ்சள்நிறமாய்ச்சளிவடியும் புலால்நாறும்.

சிலேத்மபீனிசக்குணம்.

நாசி பாரிமாரி அடைத்து முத்துப்போல் நீர்வடிந்து நாறும் சிணுக்குப்போற் சளிவிழும் நாசியில் ஊசிபோற் குத்தும் கண்களிற்பீளைசாரும்.

நீர்ப்பீனிசக்குணம்.

விஷபித்தமும் வெட்டையும் அதிகரித்துச் சிரசிலேறி நாசிவழி நீர்வடிந்துகொண்டிருக்கும் பனிவாடை மழையிற்றோய்ந்தால் நீர்மிகுந்து பிடரியும் மூளையும் பசபசத்துண்டாம் நாசியரிக்கும் அடிக்கடி தும்மல்விழும் தலைகனத்துவலிக்கும்.

இரத்தபீனிசக்குணம்.

வெட்டையின்பேரிற் பித்தமிஞ்சி கபாலத்திலேறி அதில்வட்டமாய்ப்புண்ணாகி நாசிவழி இரத்தம்விழும் தலைவலிக்கும்.

சீப்பீனிசக்குணம்.

வெட்டையும் பித்தமும் கபாலத்தில் அதிகரித்து கபாலமூதக் நாசிவளை புண்ணாகிச்சீய்வடியும் தலைவலிக்கும்.

சிரப்பீனிசக்குணம்.

நாசிவழி-சிரப்போதும்-சுருள்விக்கும்போதும்- சீப்பிரண்டுவிழும் சீழம்போல்நாறும் மணந்தெரியாது விடாமற் றலைவலிக்கும்.

இவைகட்குநிவர்த்தி.

சையாந்தகரை-ஆதன்னடை-நாட்டைப்பழம் வெற்றிலை தெல்லிக்காய் எலுமிச்சம்பழம் நாரத்தம்பழம் நூக்குமுருக்கை முடக்கொத்தான் இவைகளின்சாறு வகைக்குப்படி (௧) நல்லெண்ணெய்ப்படி(௩)ஒன்றாய்க்கலந்து அதில்பின்வருபவை(௨)அதிமதுரம் கோஷ்டம் சண்பகப்பூ நற்சீரகம் வாய்விளங்கம் கொத்தமல்லி வால்மிளகு கஸ்தூரிமஞ்சள் ஏலம் லவங்கம் தாளிசபத்திரி லவங்கப்பட்டை வகைக்குவிராகனிடை(௫)கோரோசனைவிராகனிடை(௬)இவைகளைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சிப் பதமாய்வடித்து மூன்றுநாளைக்கொருதரமுழுகியும், பிள்ளைக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் வெற்றிலைச்சாற்றிலரைத்து வெள்ளைத்துணியில்தடவி அப்பால் நாட்டைப்பழச்சாற்றில்-அதைபாவனைத்து நிழலுலர்த்தித்திரித்து நாசியிற்புகைபிடித்துவரத்தீரும்.

நாரத்தம்பழம் எலுமிச்சம்பழம் புளியாரை தண்ணீர்விட்டான்கிழங்கு அறுகம்வேர் வல்லாரை கரிப்பாலை கரிப்பான் பொன்னாங்காணி இவைகளின்சாறு வகைக்குப்படி(௨) ஆவின்பால் சிற்றாமணக்கெண்ணெய் வகைக்குப்படி(௨)சந்தனம் சதகுப்பை மஞ்சிட்டி யானைத்திப்பிலி லவங்கம் லவங்கப்பத்திரி தாளிசபத்திரி லவங்கப்பட்டை சண்பகப்பூ வகைக்குப்பலம்(௧) சீரகம்-கிராம்பு

அதிமதுரம் வகைக்குப்பலம்(௩)நெல்லிமுள்ளி பலம்(௪) செங்கழுநீர்க்கிழங்குபலம் ௨ இவைகளை யாவின்பாலிலரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து மூன் றுநாளைக்கொருவிசை தலையிற்றேய்த்து உச்சியிலே யாசிப்பயறு மதுக்காரவேர்ப்பட்டை முசலியவைகளை யரைத்திட்டு ஸ்நானஞ்செய்து சாதிலிங்கம் பற்பகிட்டைப் பிளாகு கருஞ்சீரகம் தருக இவைகளை யோர்நிறையாய்ப்பொடித்துச் சாதித்திற்குழப்பிச் சிமிழ்கொளுத்தி நாசியிற் புகைபிடித்துவரத்தீரும்.

கரிசாலை அவுரி கஞ்சா பொன்னாங்காணி வெற்றிலை முசுமுசுக்கை ஆவிரைப்பட்டை எலுமிச்சம்பழம் நாரத்தைப்பழம் அத்திப்பட்டை இவைகளின்சாறு ஆவின்பால் வகைக்குப்படி(௧) ஆதண்டைச்சாறு பீச்சிலைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(௨) இவைகளை யொன்றாய்க்கலந்ததில் கருஞ்சீரகம் கோரோசனை கஸ்தூரிமஞ்சள் ஜாதிக்காய் அதிமதுரம் அரத்தை சுக்கு கோஷ்டம் சதகுப்பை குராசாணியோமம் இலவங்கப்பூ தாளிசபத்திரி திப்பிலிமூலம் சித்திரமூலம் பெருங்காயம் நெல்லிமுள்ளி பிச்சிவேர்ப்பட்டை மிளகரணைப்பட்டை அழிஞ்சிப்பட்டை கடுக்காய்நெல்லிவேர் வகைக்குக்கழஞ்சு(௧) இவைகளை யெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துச் சூட்டோடே அதிலொருபிடி முருங்கைப்பூவைப்போட்டு வைத்துக்கொண்டு தலைமுழுகிவரத்தீரும்.

கருநெல்லியெண்ணெய்ப்படி (௧) நாரத்தைப்பழம் வெற்றிலை ஆதண்டை உசிலப்பட்டை இவைகளின்சாறு வகைக்குப்படி(௨) ஒன்றாய்க்கலந்ததில் மிளகு வால்மிளகு சீரகம் சண்பகப்பூ வகைக்குப்பலம்(௧) இவைகளைப் பொடித்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

குப்பைமேனி ஆடுதின்னாப்பாளை அழிஞ்சிவேர் முள்ளி இவைகளின்சாறு வகைக்குப்படி(௧)நல்லெண்ணெய்ப்படி(௫)இவைகளை யொன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய்ப்படி (௪) கரிப்பான்சாறு கருநொச்சிச்சாறு வகைக்குப்படி(௨) ஒன்றாய்க்கலந்ததில் மிளகுபலம்(௧௦) சாம்பிராணிபலம்(௧) பொடித்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து அதில் நல்லமிளகு விராகனிடை(௪)போட்டு வைத்துக்கொண்டு முழுகிவரத்தீரும். அல்லது நல்லமிளகு வேண்டியதபட்சத்தில்(௨) ப

லம் சதகுப்பையை அரைத்து மூன்மருந்துகளுடன் சேர்த்துக் காய்ச்சிக்கொள்ளவும்.

வெள்ளைப்பட்டை சீந்திற்றண்டு வில்வவேர் நெருஞ்சிமுட்டிவேர் வகைக்குப்பலம்(௮)இவைகளை இடித்து(௮)மரக்கால் தண்ணீர்வற்போட்டு(௰௨)நாளில் எட்டிலொன்றாய் வற்றும்படி தீயெரித்து வடித்து அதில் நல்லெண்ணெய்ப்படி(௧)விட்டு அமுக்கரா வேர்ப்பட்டை பலம்(௫)சாதிக்காய் தக்கோலம் சண்பகப்பூ விலாமிச்சம்வேர் வெட்டிவேர் வகைக்குவிராகனிடை(௧) ஆவின்பாலிலரைத்துப்போட்டு அன்றுமுதல் ஒவ்வொருநாளும்பூமடலைப்போட்டு(௫)நாள்வரை மந்தாக்கினியாய்க் காய்ச்சிவடித்து அதிற்புனுகு குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் வகைக்குவிராகனிடை(௪)பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு நாசியில் நசியஞ்செய்து தலையிற்றேய்த்து ஸ்நானஞ்செய்துவரத் தீரும்.

மூலைப்பிணிச்சகுணம்.

நாசியிற் கோழிச்சதைபோலும் அதில் குருபோலும்வளரும்.

கண்டப்பிணிசகுணம்.

நாசியிற் சுண்டைக்காய்போற் சதைவளர்ந்து அடைக்கும் சிரசுநீர் நெஞ்சிலிறங்கிக் கல்கட்டும்.

நிவர்த்தி.

ஆயிற்பட்டை மிளாக்காய்ச்சந்தனம் வகைக்குவிராகனிடை(௨)மட்டிப்பால் சாம்பிராணி வகைக்குவிராகனிடை(௧௦) மிருதாசிங்கி ஜாதிலிங்கம் அரிதாரம் வகைக்குவிராகனிடை(௧)இலுப்பைப்பிண்ணாக்கு விராகனிடை(௨)ஊமத்திலைச்சாற்றி லரைத்து எருக்கம்பாலும் சதுரக்கள்ளிப்பாலும் ஒருதுணியிலூட்டி உலர்த்தி யப்பால் அம்மருந்தை அதிற்பூசிக்காயவைத்துக் கொஞ்சங்கத்தரித்துச் சுக்காணில்வைத்துப் புகையைநாசியிலேற்ற மூலப்பிணிசம் கண்டப்பிணிசம் சிறுப்பிணிசம் கபாலநோய்வகை முதலான வைகளுந்தீரும்.

நீர்ப்பிணிசத்திற்குத் தயிலம்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெய் வெள்ளாட்டுப்பால் வகைக்குப்படி(௧)செவியம்-திரிகடுகு-வாய்விளங்கம்-கருஞ்சீரகம்-அரத்தை கஸ்தூரிமஞ்சள் திப்பிலிமூலம் நொச்சிப்பட்டை வகைக்குப்பலம்(௧)இவைகளை அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நொச்சி கரிசாலை வெற்றிலை ஆதண்டை பச்சைமஞ்சள் இவைகளின்சாறு வகைக்குப்படி(௧)கருஞ்சிச்சாறு நல்லெண்ணெய்

வகைக்குப்படி(ச)மிளகுபடி(வ)உடைத்துப்போட்டுப் பதமாய்க் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய் ஆவின்பால் இளநீர் கற்றாழை முசுமுசுக் கை கரிப்பூசவல்லி எலுமிச்சம்பழம் இவைகளின்சாறு வகைக்குப் படி(க)ஒன்றாய்க்கலந்து அதில் நாயுருவி சந்தனம் விலாமிச்சம் வேர் வெட்டிவேர் ஏலம் ஓமம் அரத்தை தேவதாரம் மஞ்சள் இ லுப்பைப்பட்டை தான்றிக்காய் சண்பகப்பூ சிறுநாகப்பூ கஸ்தூரிம ஞ்சள் மரமஞ்சள் விளாவரிசி சிறுதேக்கு வாலுளுவையரிசி வகைக் கு விராகனிடை(ஐ)அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழு கிவரத்தீரும்.

பூவரசு வெள்ளெருக்கு மல்லிகை இவைகளின்வேர் கஸ்தூ ரிமஞ்சள் சிறுநாகப்பூ வெடியுப்பு பறங்கி இவைகளை ஓர்நிறையா ய் புகையிலைச்சாற்றிலரைத்துத் துணியிற்றடவித்திரித்துப்புகையை நசியமிட்டுத் தீர்ப்பினிசமுதலானவைதீரும்.

பீனிசம் சலம்வடிதல் தலைபாரிப்பு அம்மலுக்குத்தயிலம்.

ஆயிற்பட்டை பலம்-சா சங்கம்வேர்-அரத்தை-மிளகு வகை க்குப்பலம்(க)மஞ்சள்பலம்(ஐ)இவைகளையிடித்துப் பதக்குநீரிற் போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து இறுத்து அதில் நல்லெண் ணெய் படி(ச)நொச்சி முசுமுசுக்கை ஆயில் கரிசாலை இவைகளி ன்சாறு வகைக்குப்படி(உ)ஆவின்பால் படி(க) கூடவிட்டு அதிம தூரம் சதகுப்பை அரத்தை கோஷ்டம் கடுக்காய் சீரகம் வெலிப் பரித்திவேர் வகைக்குப்பலம்(வ) இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

இரத்தபீனிசம் சிரப்பீனிசத்திற்குத் தயிலம்.

ஆதன்டை ஆடாதோடை கையாந்தகரை நொச்சி பச்சமஞ் சள் நாரத்தம்பழம் இவைகளின்சாறு வகைக்குப்படி (உ) நல்லெ ண்ணெய்ப்படி(உ)இவைகளை யொன்றாய்க்கலந்ததில் கொத்தமல்லி மிளகு சுக்கு உள்ளி மரமஞ்சள் கருஞ்சீரகம் வகைக்குப்பலம்(ஐ) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

அவரைவேர்-நெல்லிக்காய்-பொன்னாங்காணி கரிசாலை - தா ழைவிழுது-இவைகளின்சாறு-ஆவின்நெய்-பால்-தயிர்- சிற்றாமணக் கெண்ணெய் நல்லெண்ணெய் வகைக்குப்படி(க)ஒன்றாய்க்கலந்த தில் மிளகுபடி(க)பொடித்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழு கிவரத்தீரும்.

பொன்னாங்காணி கையாந்தகரை முசுமுசுக்கை வெற்றிலை சருகு இலைகளின்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(௧) ஒன்றுக்கலந்ததில் மிளகு அரிதாரம் நாபிசரகம் வால்மிளகு வகைக்குக்கழஞ்சு(௪) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துமுழுகிவர சிறுப்பீனிசம் பொவனுவ ஒருத்தலைவலி தீரும்.

கண்டங்கத்தரிப்பழம் துளசி வெற்றிலை இலைகளின் சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (௧) ஒன்றாய்க்காய்ச்சிவடித்து முழுகிவர மேற்படிரோகங்கள் தீரும்.

திரிகடுகு மஞ்சள் வகைக்குக்கழஞ்சு (௫) இந்துப்பு கழஞ்சு (௧) இவைகளைக் கண்டங்கத்திரிப்பழச்சாற்றில் அரைத்து துணியிற்றடவிச் சிரியுருட்டித் திரித்தொருத்தி ஆற்றி நாசியிற்புகையைப்பிடிக்கச் சிறுப்பீனிசந்தீரும்.

பீனிசம் மண்டையிடி பொவனுவக்குத்தயிலம்.

முத்தினை ஆயிற்பட்டை பலம்-௫-சிற்றாத்தை பலம்-௨-திலக்குரும்பு வில்வம் தழுதாழை காட்டாமணக்கு பாதிரி கொங்கிலவு கடுக்குதம்பை மிலவி கண்டங்கத்தரி நெருஞ்சி நொச்சி சொடிவேலி சங்கு அமுக்கரு சாரணை முருங்கை ஆதலை மூக்கு ஈன்டி வெள்ளருத்தி இவைகளின் வேர் சமூலு கருக்கொள்ளு உளுந்து கொதும்பை வகைக்குப்பலம்(௧) இடித்து(௰)மரக்கால்நீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்திறுத்ததில் நல்லெண்ணெய்படி(௮) தண்ணீர்விட்டான்கிழங்குச்சாறு படி(௧) ஒன்றும்விட்டு தேவதாரம் பொன்முசுட்டைவேர் இந்துப்பு மாஞ்சில் அதிமதுரம் கோஷ்டம் நன்னாரிவேர் வெட்டிவேர் மாகாளிக்கிழங்கு சதகுப்பை நெருஞ்சிவித்து சந்தனம் மரமஞ்சள் மஞ்சள் ஏலப்பாலைவேர் விலாமிச்சம்வேர் வகைக்குப்பலம்(௨) குங்குமப்பூவிராகனிடை(௧)கஸ்தூரி விராகனிடை(௨) இவைகளை நாலுபடி ஆவின்பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர கண் தெரிவாகும் பித்தங் கீழ்நோக்கும்.

ஒருகலம் இஞ்சியையிடித்துச் சாறுபிழிந்து அதில் நல்லெண்ணெய் படி(௧) நொச்சிச்சாறு ஆவின்பால் வகைக்குப்படி(௨) ஒன்றாய்க்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

பீனிசம் மண்டையிடி வாதம் கபப்புக்குத் தயிலம்.

ஆயிற்பட்டை புங்கம்பட்டை செங்கத்திழங்கு செம்முள்ளிவேர் வகைக்குப்பலம்(௫) இடித்துப் பதக்குநீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்திறுத்து அதில் நல்லெண்ணெய் படி (௨)

செம்முள்ளிவேர் கொடிவேலிவேர் நிலக்குமிழ்வேர் வாகைவேர் கோஷ்டம் அதிமதுரம் வாய்விளங்கம் அரத்தை இந்துப்பு குக்கிலியம் சதகுப்பை வகைக்குக்கழஞ்சு(௧) அரைத்துப்போட்டு நசியஞ்செய்து தலைமுழுகிவரத்தீரும். உள்ளுக்குங்கொள்ளலாம்.

பீனிசம் மண்டையிடி நாசிகாபீடம் வரட்சிக்குத்தயிலம்.

சீந்திற்கொடிச்சிற்றாமுட்டிவேர் வகைக்குப்பலம்(௫௰) இவைகளைப்பிடித்து நாலுமரக்கால் தண்ணீர்விட்டு குறுணியாகக் காய்ச்சிவடித்து அதில் நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி (௧)கூட்டிவிட்டு திரிகடுகு திரிபலை அதிமதுரம் கோஷ்டம் ஏலம் சன்னலவங்கம் சண்பகப்பூ சிற்றரத்தை வெட்டிவேர் விலாமிச்சம்வேர் சதகுப்பை சடாமாஞ்சில் மரமஞ்சள் மஞ்சிட்டி தேவதாரம் அகில் குக்கிலியம் சந்தனம் கொத்தமல்லி வாய்விளங்கம் புனுகுசட்டம் நன்னாரி முத்தக்காசு சாதிக்காய் கிராம்பு வகைக்குவிராகனிடை (௧) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

பீனிசம் விடாத்தலைவலி சயால்குலை
பித்தசவாயுவுக்குத்தயிலம்.

நொச்சிச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(௧) ஒன்றாய்க்கலந்ததில் சுருள்ளி இரண்டுசேர்க்கைதட்டிப்போட்டுக் காய்ச்சிமுழுகிவரத்தீரும்.

கபாலவலி பீனிசத்திற்குத்தயிலம்.

ஆவின்பிடை செங்கொன்றை சடைக்கஞ்சா வரிசிவேலை வெற்றிலை நாட்டைப்பழம் பச்சைமஞ்சள் இஞ்சி முசுமுசுக்கை சஞ்சாங்கோரை இவைகளின்சாறு வகைக்குப்படி(௧) நல்லெண்ணெய் படி(௨) இவைகளை பொன்றாய்க்கலந்ததில் ஏட்டிக்கொழுந்து சதகுப்பை சுக்கு வசம்பு உள்ளி தேவதாரம் அரத்தை கடுக்காய் வகைக்குக்கழஞ்சு(௨) வீதம் நொச்சிச்சாற்று லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

மண்டையிடி கபால்குலை பீனிசம் நாசிப்புண்ணுக்குத்தயிலம்.

எலுமிச்சம்பழச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(௧) நத்தைச்சூரிவேர் பலம்(௧௨) ஆவின்பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

கபாலவலி குத்து குலை பீனிசம் நேத்திரநீர்க்கட்டிப்பு
மேகச்சூட்டுக்குத்தயிலம்.

நாவிப்பழச்சாறு நல்லெண்ணெய் பொற்றலைச்சாறு ஆவின்

பால் வகைக்குப்படி (௪) ஒன்றாய்க்கலந்து அதில் ஒருபலமிளகை மேற்படிபாலி லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத் தீரும்.

பீனிசம் மண்டையிடி குத்து சிரோபாரத்திற்குத்தயிலம்.

அருக்களுக்கிழங்கு பலம்(௫) இடித்துப் பக்குவமாய்ப்போட்டு சட்டொல்லாய்க்கொழுந்தெய்து அதில் பழச்சாறுபடி(௧)காடித் தண்ணீர் நொச்சிச்சாறு எருக்கம்பூச்சாறு வகைக்குப்படி(௨)கூட விட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

தேங்காய்ப்பால் நல்லெண்ணெய் ஆவின்பால் எலுமிச்சம் பழச்சாறுவகைக்குப்படி முக்கால் இவைகளை ஒன்றாய்க்கலந்து அ தில் கார்கோலரிசி சித்தரத்தை வலம்புரிக்காய் வகைக்கு விராகனிடை(௩)செவ்வள்ளிக்கொடி விராகன் (உ௰) ஒன்றுமட்டு விராகனிடை(௪)இவைகளை ஆவின்பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர சகலபீனிசமும் மண்டைக்குத்தும் நீங்கும்.

கையாந்தகரைச்சாறு நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி(௧)ஒன்றாய்க்கலந்து அதில் திரிகடுகு இந்துப்பு வசம்பு வாய்விளங்கம் அதிமதுரம் வகைக்குப்பலம் (௩) மேற்படிபாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வாரத்திற்கு இரண்டுவிசை முழுகிவரத்தீரும்.

ஆடுதின்னாப்பாளைச்சாறு படி(௨)நல்லெண்ணெய்படி(௧) ஒன்றாய்க்கலந்து மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்து வாரத்துக்கிரண்டுமுறை தலையிற்றேய்த்து மதுக்காலமேவர் அரைப்பீட்டுஸ்நானஞ்செய்துவரத்தீரும்.

அகத்திக்கீரைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி (௧) ஒன்றாய்க்கலந்து அதில் கஸ்தூரிமஞ்சள் மிளகு கருஞ்சீரகம் வகைக்குப்பலம்(௩)மேற்படிசாற்றி லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்துத் தலைமுழுகி மேற்படிகடுகைத் தணியிலிலவைத்துத்திரித்துப்புகைபிடித்துவரப் பீனிசம் மண்டையிடி குத்து சிரோபாரந்தீரும்.

பீனிசம் இரத்தபீனிசம் நீர்ப் அழுகற்பீனிசம் சித்தபீனிசத்திற்குநசியம்.

ஆவின்னெய்ப்படி(௧)அருகம்வேர்ச்சாறு முருங்கைப்பால் வகைக்குப்படி(௨)இவைகளை ஒன்றாய்க்கலந்து அதில் அதிமதுரம் கோஷ்டம் மஞ்சள் வாய்விளங்கம் ஒவ்வொன்றும் கோரோசனை வகைக்கு விராகனிடை(௪)கஸ்தூரி கிராம்பு வகைக்குவிராகனிடை(௨) விளாமிச

ச்சாற்றிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து மூக்கில்நசியஞ்செய்ய உச்சியிலுந்தேய்த்தவாத்தீரும்.

நாலைந்து கொப்பரைத்தேங்காய்ப்பூவைச் சட்டியிலிட்டு அதில் புளியங்கொட்டை மேற்றோல் ஒருசிரங்கை பொடித்தத்துவிப்பிசைந்துவைத்து மூன்றுநாழிகை சென்றபின்பு பிழிந்தால் நெய்வரும் அதைச் சீசாவிலடைத்துக்கொண்டு நாசியில் பத்துநாள்நசியமிடத்தீரும். அல்லது மேற்படிநெய் படி காலில் அருகு வெளிச்சிப்பிசின் வகைக்குவிராகனிடை (௨) பொடித்துப்போட்டுக்காய்ச்சி நசியஞ்செய்தவாத்தீரும்.

ஆவினெய் மாதுளம்பூச்சாறு வகைக்குப்படி அரைக்கால் ஒன்றாய்க்கலந்ததில் கோஷ்டம் ஏலம் குங்குமப்பூ லவங்கப்பட்டை அதிமதுரம் கருஞ்சீரகம் லவங்கப்பத்திரி வகைக்கு விராகனிடை (௧) இவைகளை ஆவின்பாலி லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து நாசியில் நசியமிடச் சகலபீனிசமுந்தீரும்.

பீனிசம் நச்சுத்தலைப்பிடிக்குப் பற்று.

ஆத்தை பிஞ்சு வகைக்குப்பலம் (௨) அபின்விராகனிடை (௧) இவைகளைக் காற்படி வெந்நீர்ச்சாற்றிலரைத்துக்கொதிக்கவைத்துத் தலையிற்பற்றுப்போட்டு மறுநாள் சீயக்காயரைப்பிட்டு வெந்நீரில் ஸ்நானஞ்செய்தவாத்தீரும்.

பீனிசம் முற்றிற்று.

சிரசுநோய்.

விருத்தம்.

சாருஞ்சிரநோய்மண்டையிடிசாற்றுத்தலைம்பரிகாரம் ......*
நேருந்தயிலங்கபாடவரைதிரையும்புகையுமாக்கிராணம்........*
சேருமூலிதனையறிந்துசிறக்கும்பாகம்வகுப்புடனே..........*
பாருமுனிவர்பண்டிதர்க்குப்பகர்ந்தாராயுர்வேதமிதே...... ...*

சிரசின்நோய்மண்டையிடிக்கு.

ஆத்தை சதகுப்பை இரிகடுகுவகைக்குவிராகனிடை (௫) அரைத்து அரைப்படி நொச்சிச்சாற்றிற் கலக்கிமூடித்து வடிகட்டிக்கொடுத்து ஆத்தையைப்பொடித்து நாசியில் நசியமிட்டு மிளகு ஒருரூபாயிடை சாம்பிராணி அரைரூபாயிடை கடுகு புழுங்கலரி

சி வகைக்குக் கால்ரூபாயிடை இவைகளை முலைப்பால்விட்டு மைப்போலரைத்து நெற்றியிற்பற்றுப்போடத்தீரும்.

மேற்படிவியாதிக்குஆவி.

வேப்பிலைக்கு நொச்சி உத்தாமணி பேய்ப்பீர்க்கு தும்பை இலைகளின் இலை எருக்கம்பழுப்பு சிறுபீளைவேர் இவைகளை ஒரு சிட்டியிலடைத்துத் தண்ணீர்விட்டு வேகவைத்திறக்கி தலையிலிறுக்கமூட்டி ஆவிபிடித்து ஆவிபடங்கினபின் ஒரு செங்கல்லைப் பழுக்கக்காய்ச்சி அதிற்போட்டு மறுபடியும் முன்போலஆவிபிடித்தால் தேகம்வியர்த்துத் தலைப்பாரம்வாங்கும்.

மேற்படி வியாதிகட்கு ஒத்தடம்.

மாவிலிங்கம்பட்டை பலம்(௫) ஆவிரப்பட்டைபலம்(௪) பெருமாத்துப்பட்டைபலம்(௩) உகாய்ப்பட்டைபலம் (௨௰) இவைகளையிடித்து மூன்றுபங்குசெய்து நாளொன்றுக்கு மூன்றுவிசை வறுத்துச் சிரசிலும் பிடரியிலும் ஒத்தடஞ்செய்யலாகும்.

மேற்படி வியாதிக்குத்தயிலம்.

நல்லெண்ணெய்படி(௧) பசுமஞ்சட்சாறு ஆதண்டைச்சாறு ஆவின்தயிர்த்தண்ணீர் வகைக்குப்படி(௧) ஒன்றாய்க்கலந்து அதில் குருந்தொட்டி முள்ளி கண்டை வேலை நெய்க்காப்பிரல்வி இவைகளின்வேர் கோஷ்டம் தேவதாரம் மிளகு சுக்கு வகைக்குக் கழஞ்சு(௨) குக்கில் கழஞ்சு(௪) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

மேற்படி வியாதிகட்குப்புகை.

சுக்கு திப்பிலி மஞ்சள் மரமஞ்சள் சதகுப்பை மிளகு குடன் இவைகளை யோர்நிலையர்க் குன்றிமணிச்சாற்றால் மைப்போலரைத்துத் துணியிற்றடவியுருட்டி தீயிற்கொளுத்தி நாசியிற்புகைபிடிக்கலாகும்.

ஒருதலைவலி மண்டையிடி கபாலவாயு கபாலவலி குத்துக்குத்தயிலம்.

மலைவேப்பு செவ்வலரி ஆதண்டை கருநொச்சி இவைகளின் சாறு வகைக்குப்படி அரைக்கால் நல்லெண்ணெய்ப்படி(௧) ஒன்றாய்க்கலத்ததில் கருஞ்சீரகம் வால்மிளகு ஒருதலை வெள்ளைப்பூண்டு வகைக்குப்பலம்(௧) அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

ஆவின்பால் கரிப்பான்சாறு இளநீர் நல்லெண்ணெய் வகைக்

ருப்பருத்தி(ஈ)யிலைருபலம்(உ) சந்தனம்பலம் (க) அதிமதுரம்பலம் (உ) இவைகளை ஆவின்பாலினாலரைத்துப்போட்டுக் காய்ச்சி முழுகி வரத்தீரும்.

பொடுதலைச்சாறு சவுரியிலைச்சாறு ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி(க) ஒன்றாய்க்கலந்ததில் மிளகுபலம்(உ) அரைத்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய் குப்பைமேனிச்சாறு வகைக்குப்படி(க) ஒன்றாய்க்கலந்து காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நாலுபலம் பச்சைக்கொடிவேலிவேர்ப் பட்டையைக் கற்றாழைச்சாற்றிலரைத்து ஒருபடி நல்லெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

ஒருபடி நல்லெண்ணெயில் அதிமதுரஞ்சுக்கு வசம்பு வகைக்குப்பலம்(உ) சிதைத்துப்போட்டுச் சிவக்கக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய்ப்படி(க) எருக்கம்பழுப்புச்சாறுபடி அரைக்கால் சுக்கு இந்துப்பு அதிமதுரம் வசம்பு திப்பிலி திப்பிலிமூலம் வெள்ளுள்ளி வகைக்குப்பலம்(எ) இடித்துப்போட்டுக்காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

கரிப்பான்சாறு ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி(க) சிற்றாமணக்கின்வேர் பெருஞ்சீரகம் கிச்சிலி விளாமிச்சி அதிமதுரம் சுக்கு இந்துப்பு வகைக்குப்பலம்(க) ௸ பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

நல்லெண்ணெய் ஆவினெய் வெற்றிலைச்சாறு எலுமிச்சம்பழச்சாறு வகைக்குப்படி(க) கருஞ்சீரகம்படி(வ) பொடித்துப்போட்டுக் காய்ச்சிவடித்து ஒன்றைவிட்டொருநாள் முழுகிவரத்தீரும்.

௸ வியாதிக்கு நசியம்.

ஒருபலம் சுக்கையிடித்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து அதில் தேங்காய்நெய்ப்படி(வ) குங்குமப்பூ விராகனிடை(க) பொடித்துப்போட்டு ஒன்றாய்க்கலந்து காய்ச்சி நாசியில் நசியமிடத்தீரும்.

கடல்நுரை மஞ்சள் வெங்காரம் திரிகடுகு மரமஞ்சள் இவைப்பிலொன்றுக்கு வகைக்குவிராகனிடை (உ) காற்படி நல்லெண்ணெயிற்போட்டுக்காய்ச்சி வடித்து நாசியில் நசியமிடத்தீரும்.

வாய்விளங்கம் மிளகு செவியம் இந்துப்பு அக்கிராகாரம் சுக்கு வகைக்குக்கழஞ்சு(உ) இவைகளை வையாத்தகளைச் சாற்றிலரைத்

ள அரைக்காற்படி ஆவின்நெய்யிற்போட்டுக் காய்ச்சியெடுத்து நசியமிடத்தீரும்.

குப்பைமேனிவேர் நூன்கு கசப்பு இலைகளை ஓர்நிறையாய் மூலைப்பாலில்விட்டுச் சிதைத்து நாசியில் நசியமிட்டாலும் அல்லது தைவேளைவேரும் வெள்ளைப்பூண்டும் சிதைத்துக் காதிற் பிழிந்தாலும் வெற்றிலையும் பெருங்காயமும் ஓர்நிறையாய்ச்சிதைத்து வெதுப்பிக் காதிற்பிழிந்தாலும் தீரும்.

ஈருள்ளியும் முருங்கையிலையுமாவது அல்லது வெள்ளுள்ளியும் முருங்கைப்பட்டையுமாவது சிதைத்து வலதுபக்கத்தில் தலைபிடித்தால் இடதுநாசியிலும் இடதுபக்கத்தில் இடித்தால் வலதுநாசியிலும்பிழியத்தீரும்.

மேற்படிவியாதிக்குப்புகை.

சந்தனம் விலாமிச்சம்வேர் பெருங்காயம் இவைகளை மூலைப்பாலிலரைத்துச் சீலையிலூட்டித்திரித்து நல்லெண்ணெயிற் றோய்த்துத் தீயிற்கொளுத்தி அந்த நாசியிற்புகைபிடிக்கத்தீரும்.

நெல்லிக்காய்க்கெந்தகம் விராகனிடை(௭) கருங்குங்கிலியம் எருக்கங்கரி கொடிவேலிவேர் வகைக்குவிராகனிடை(௧)கருஞ்சீரகம் அக்கிராகாரம் அத்தம் வகைக்குவிராகனிடை(வ)இவைகளை எருக்கம்பழுப்புச்சாற்றாலும் குப்பைமேனிச்சாற்றாலுமரைத்துத் துணியிலூட்டித் திரித்துத் தீயிற்கொளுத்தி நாசியிற்புகையைப்பிடிக்கத்தீரும்.

மிளகும் தலைச்சுருளிவேரும் ஓர்நிறையாய்ப்பொடித்துத்துணியில்வைத்துச்சுருட்டிக்கட்டித் தீயிற்கொளுத்தி நாசியிற் புகைபிடிக்கத்தீரும்.

அரிதாரமும் எருக்கம்வேரும் சமமா யெலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துத் துணியிற்றடவித்திரியுருட்டிப் புகைபிடிக்கத்தீரும்.

செங்கொட்டைவேரைச் சீலையில்வைத்துச் சுருட்டித் தீயிற்கொளுத்தி அவித்து நாசியிற்புகைபிடித்தாலும் கவிழ்தும்பைவேரும் மஞ்சளும்பொடித்துத் துணியில்வைத்துச்சுருட்டிப் புகைபிடிக்கத்தீரும்.

கருஞ்சீரகம் முட்டைத்தோல் கழற்சிப்பருப்பு இவைகளை ஓர்நிறையாய் நொச்சிச்சாற்றிலரைத்துத் துணியிற்றடவித் திரியுருட்டிப் புகைபிடிக்கத்தீரும்.

மேற்படி வியாதிக்குப்பற்று.

எலுமிச்சம்பழத்தைச் சுட்டுச் சாறுபிழிந்து அதிற் சுக்கு மி

க் கிட்டின் ஒரு திவலைவாய மாத்து நெற்றியிலும் உச்சியிலும் பூச தீரும்.

உருத்திரசென் ஒரு சிவனார்வேம்பு கர்ப்பூரம் அதிமதுரம் தேற்றான் சந்தனம் வசம்பு கோஷ்டம் மூத்தக்காசு லவங்கப்பட்டை இவைகளை பெரிதாய்ப் பச்சரிசிக்கழுநீரில் அரைத்துச் சாய்த்தி நெற்றியிலும் உச்சியிலும் பூசலாகும்.

சுரநோய்-முற்றிற்று.

சுரம்.

—※—

விருத்தம்.

சொன்னமுடைக்கத்தாசிரவருப்ப தோற்றக்குளிருஞ்செய்கைமுதல் *
பல்லதுக்காதிர்ப்பமசாத்தியமும் பகரும்பலநாலாயர்ந்து......*
மல்குமண்டீத்தியர்தனதிய மகிழ்வாய்யுரைத்தவேதசிதம்........*
நல்லவாதப்பித்தசாதமெனத் தொகுத்தார்முனிவர்வகுத்தாரே *

வாதசுரக்குணம்.

உடல்கடுக்கும் சந்துபொருத்துக்கள் உளையும் சிற்றுநோகும் இருவிலாவுந்நோகும் தலைவலிக்கும் உடல் குளிர்த்து நடுங்கி மயிர்க்கூச்செறியும் கரத்தோன்றும் மலங்கட்டும் பசி மந்திக்கும் வாய் துவர்க்கும் இளைக்கும் இரண்டுகாலுங் குளிர்ந்திருக்கும் முகம் வாய் கண் நீர்மலம் கறுக்கும் இரவும் பகலும் நித்திரைவாராது தாகம் அசதி கொட்டாவியுண்டாகும்.

நிவர்த்தி.

சிற்றாமுட்டி நாயுருவி கொழுஞ்சி கிளா முக்குரட்டை துராதூஊ கண்டங்கத்திரி வில்வம் சிறுவழுதலை சங்கு இவைகளின்வேர் வகைக்குப்பலம்(உ) நொச்சி ஆடாதொடை சிறுபீளை நிலவாகை இவைகளின் இலை வகைக்கு ஒருபிடி இடித்து ஒருபாண்டத்திற் போட்டு (அ)படி தண்ணீர்விட்டு ஒருபடியாய் வற்றவைத்துக்கொண்டு திப்பிலி திப்பிலிமூலம் கோரோசனை அரத்தை சுக்கு வகைக்கு விராகனிடை(க) கடுக்காய் நெல்லிமுள்ளி பேய்ப்புடல் வகைக்குப்பலம்(க இடித்து வஸ்திரகாயஞ்செய்து ஒருகோக்கு அளாக்காற்படி கியாழத்தில் திரிகடித்தூள்போட்டு நாலுநாள் இந்தப்படிகொடுக்க தீரும்.

குருந்தொட்டி நொச்சி சிற்றில் கத்தன்குப்பை துராதூ கண்டங்கத்திரி பற்படாகம் நிலவேம்பு வாதமடக்கி சிறுதெருஞ்சி

க்கொடிவேலி இவைகளின்வேர் ஆடாதோடை நெல்லி வேம்பு மாதாக்கை இவைகளில் நாக்கு முத்தக்காசு திரிகடுகு இவைகளை யெல்லாம் ஒருவேளைக்கு ரூக்கதுக்கவிதம் சிதைத்து இரண்டு படிநீர்விட்டுக் கால்படியாய் வற்றவைத்துத் தேன்விட்டு இந்த போது கொடுக்கத்தீரும்.

மேற்படிகாக் கண்டங்கத்திரி வெள்ளருகு இசங்கு இவைகளைச் சமனாய் அரைத்து எலுமிச்சங்காய்ப்பிரமாணம் மூன்றுபோது வெந்நீரிற்கொடுத்து அப்பால் கருஞ்சீரகம் கடுக்காய்க்காத்தராய் வேதை கொல்லைமேரிப்பட்டை வகைக்கு வராகன் (௩)இவைகளைச்சிதைத்து ஒருபடி தண்ணீர்விட்டு அரைக்கால் படியாய் வற்றவைத்து அதில் அரைவராகனிடை இந்துப்பைப் பொடித்துப்போட்டு இச்சம்படி மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

வாளைக்குழிப்பாதிரி சங்கம்வேர் கூவிளை நன்னாரி நெருஞ்சில் சேர்ந்தில் பேராமுட்டி சிற்றாமுட்டி ஆடாதோடை கண்டங்கத்தரி விலாமிச்சு அவுரி செவ்வியம் சிறுதேக்கு சிறுகாஞ்சொரி முக்காவேளை சந்திச்சாரணை இவைகளின்வேர் பேய்ப்புடல் முத்தக்காசு தேவதாரம் அரத்தை வசம்பு திரிகடுகு கோஷ்டம் இவைகளை ஓர்நிறையாய் இடித்து ஒருவேளைக்குப்பலம்(அரைவீசாக்கால்) விதம் இருநாழிநீர்விட்டுக் கால்படியாய் வற்றவைத்து(௩) போது கொடுக்கத்தீரும்.

பாவட்டை கொள்ளு சிற்றாமுட்டி வெள்ளிப்பருத்தி இவைகளின்வேர் ஓமம் மிளகு வகைக்குப்பலம்(௨) இடித்து இரண்டுபடி தண்ணீர்விட்டுக் கால்படியாய் வற்றவைத்து இச்சம்படி(௩) போதுகொடுக்கத்தீரும்.

சித்தரத்தை பொன்முசுட்டை சிறுதேக்கு சுக்கு திப்பிலி செவ்வியம் கோஷ்டம் திப்பிலிமூலம் சித்திரமூலம் சுக்கு வெள்ளருகு சீரகம் அட்டை நிலவேம்பு முருக்கு கழற்சி கண்டங்கத்திரி பேராமுட்டி பாவில் சிறுகாஞ்சொரி விஷ்ணுகாந்தி இவைகளின்வேர் வகைக்குப்பலம்கா இவைகளையிடித்து(௨௪) படங்கு செய்து ஒருவேளைக்கு ஒருபலத்தூளை மூன்றுபடி தண்ணீர்விட்டு [illegible](௩)படியாய் வற்றக்காய்ச்சி அதில் வாதராட்சசக் குளிகையில் இரண்டுபணவிடை உரைத்து தேன்கூட்டிக்கொடுக்க இருவேளைகொடுக்க [illegible] மூப்பத்திரண்டுந்தீரும்.

பர்ப்படகம் சித்தில மல்லிநாகம் கண்டங்கத்திரி செம்முள்ளி முள்ளி இவைகளின்வேர் முத்தக்காசு சுக்கு வகைக்குக்கழஞ்சு(௨)

இடித்து நாழிநீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி (௩) வேளை கொடுக்கத்தீரும்.

முள்ளி கண்டங்கத்திரி பேராமல்லி சிற்றாமல்லி இவைகளின் வேர் சுக்கு வகைக்குக் கழஞ்சு (௨) இடித்து (௪) படி - நீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்து வடித்து அதில் உழக்கு அரிசியை வறுத்துப்போட்டுக் கஞ்சிகாய்ச்சிக்கொடுக்கத்தீரும்.

பித்தசுரக்குணம்.

கொடூரமாய்ச் சுரங்காயும் புலம்பங்காணும் பிதற்றும் நெஞ்செரிக்கும் கிறுகிறுக்கும் சத்திக்கும் அசதி ஆயாசங்காணும் தேகம் புளிக்கும் வியர்க்கும் தலைநோக்கும் தாகிக்கும் முகங்கடுக்கும் தொண்டைபுண்ணாகும் நாவுலரும் கசக்கும் முகம் கண் நீர் மலம் மஞ்சளிக்கும் சிறக்கும் அடிக்கடி பசித்து மந்திக்கும் வயிற்றில் நின்று பித்தம் வற்றிக் குலைகுளிர்ந்தால் சுரம்விடும் நாட்செல்லில் இரத்தம்வற்றி தேகம்வெளுத்து வீக்கங்கண்டு அடிக்கடி குளிருண்டாய் மலங்கட்டி உயிர்பிரியும்.

நிவர்த்தி.

ஏலம் அதிமதுரம் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் சுக்கு கொம்பு இலுப்பைப்பூ நன்னாரிவேர் ஆடாதோடையிலை பேய்ப்புடல் கோரைக்கிழங்கு சீந்திற்றண்டு பற்படாகம் முல்லைவேர் வில்வவேர் மல்லி நெல்லிமுள்ளி இவைகளையோர்நிறையாய் இடித்துத் தூட்செய்து வேளையொன்றுக்குக் காற்பலத்தூளை இருநாழி சலத்திற்போட்டுக் காற்படியாய்வற்றவைத்து ஆறுபோது கொடுக்கத்தீரும்.

நற்சீரகம் இந்துப்பு திப்பிலி அசமதாகம் கருஞ்சீரகம் சுக்கு இவைகளை யோர்நிறையாய் இடித்து வடிகட்டி வேளையொன்றுக்குத் திரிகடிப்பிரமாணம் ஆறுபோது சாப்பிட்டு வெந்நீர்குடிக்கத்தீரும்.

பேய்ப்புடல் கோஷ்டம் மல்லி சுக்கு சீரகம் நெற்பொரி வில்வவேர் சிற்றாமுட்டிவேர் இவைகளை யோர்நிறையாய் இடித்து வேளையொன்றுக்கு ஒருபலத்தூளை இரண்டுபடி தண்ணீரிற்போட்டு (௮) படியாய் வற்றவைத்து (௩) போது கொடுக்கத்தீரும்.

விலாமிச்சு சிறுகாஞ்சொறி வில்வம் பாதிரி தும்பை செவ்வள்ளி நன்னாரி நிலவாகை இவைகளின்வேர் அதிமதுரம் கோஷ்டம் சீரகம் மல்லி பேய்ச்சுரக்காய் ஆனைத்திப்பிலி நெல்லிமுள்ளி சுக்கு வகைக்குப்பலம் (௧) இடித்து அதை (௰௬) பங்காகச்செய்து வேளை

வெல்லத்து ஒருபலந்தூளிதம் மூன்றுபடி சலம்விட்டுக் காற்ப
டியாய் வற்றவைத்து அதில் கோரோசனைகுளிகையொன்று உரை
த்து தேன்கலந்துவிட்டு இருபோது கொடுக்கப் பித்தசுரம் இருப
தொன்றுந்தீரும்.

சீந்தில் கொடிவேலி சிறுகாஞ்சொறி இலைகளின்வேர் பற்
பாடகம் முத்தக்காசு மல்லி நிலவேம்பு இவைகளை யோர்நிறையா
யெடுத்து ஆறுபோது வேளையொன்றுக் கொருபலந்தூளிதம் இ
ரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொ
டுக்கத்தீரும்.

பற்படாகம் சிறுகாஞ்சொறி இலைகளின்வேர் முத்தக்கா
இவைகளையோர்நிறையாய் யிடித்து மூன்றுபோற் கியாழஞ்செய்
கொடுக்கத்தீரும்.

கச்சங்குடத்து நெய்தற்கிழங்கு வெட்டிவேர் விளாமிச்ச
வேர் அதிமதுரம் வில்வவேர் சிற்றாமுட்டிவேர் தாமரைக் கிழங்
சந்தனம் இலுப்பைப்பூ இவைகளை யோர்நிறையாயிடித்து மூ
போற் கியாழஞ்செய்துகொடுக்கத் தீரும்.

பேய்ப்புடல் பலம்(க)கொம்பு சுக்கு கோரைக்கிழங்கு நி
லவேம்பு மல்லி வகைக்குப்பலங்கால் இவைகளையிடித்துக் கியாழ
செய்து கொஞ்சந்தேன்விட்டுக்கொடுக்கமாறும்.

தூதுளைவேர் சீந்தில்வேர் சுக்கு அதிமதுரம் மாஞ்சில் பா
ப்பயறு சிற்றாமுட்டி வகைக்குக்கழஞ்சு(உ)இடித்து ஒருபடிதண்
ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி ஆ
றுபோதுகொடுக்கத்தீரும்.

வில்வவேர்-அதிமதுரம்-சுக்கு-இலுப்பைவேர் - சிற்றாமுட்டி
வகைக்குக்கழஞ்சு(உ)நாலுபடிதண்ணீரிற்போட்டு ஒருபடியாய்வ
ற்றவைத்து இறுத்து அதில் பொரியரிசிபடி(வ)போட்டுக் காய்ச்சி
க்கொடுக்கத்தீரும்.

சிறுகாஞ்சொறி வேலிப்பருத்தி சீந்தில் ஆடாதோடை வல்ல
ரை அருகம்புல்-சுக்கு-இலைகளின்வேர்-வேளையொன்றுக்கு வகைக்கு
ப்பலம்(வ)வீதம்யிடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக்காற்படி
யாய் வற்றவைத்து ஆறுபோது இந்தப்படிகொடுக்கத்தீரும்.

கையாந்தகரை-துளசி-தூதுளை-நொச்சி-ஆடாதோடை - வ
கைக்கொருபிடி யிடித்துப் பிட்டவித்ததில்-ரூ- திப்பிலியைமுடி
ந்துவைத்து வெந்தபின் சாற்றைப்பிழிந்ததில் மேற்படிதிப்பிலி
யரைத்துக்கலக்கி இந்தப்படி ஆறுபோதுகொடுக்கத்தீரும் இவை
களெல்லாம் இச்சாபத்தியம்.

பித்தசுரலக்ஷணம்.

தேகத்தில் அனலதிகரித்து நிமிஷோதி சரீரம் தீக்கொதிப்பி லெவெளிக்கும் உடம்பெல்லாம் கந்தகச் சாக்காயும் மூக்கில் நீர் வடிகல் சுரத்தப்பிறக்க இருமலுண்டாகும் கோழைவரும் தொண்டைகளிக்கும் தலைநோக்காடுமாம் கண்ணும் நாசியுஞ்சலந்தும் மிட்டுவிட டேக்காங்காயும் சரீரம் வியர்வையெழும்பும் காந்தபத்தினியோலி தங்கும் மலத்தீயும் நாவறதடிக்கும் வெறுக்கும் இளிக்கும் காக்கும் வாந்திஞரம் உடல் கனமாம் வெறுக்கும் மலம்வறளுமூத்திரமங்கும்.

நிவர்த்தி,

ஆடாதோடை-மலைநாக்கி-அரத்தை-கண்டங்கத்தரி- தூதுவளை சீந்தில்-சிறுகாஞ்சொறி-சிறுவழுதலை - இவைகளின்வேரும் திரிபலை சுக்கு-பேய்ப்புடல்-வகைக்கொருகழஞ்சுவிதம் பொடித்து மூன்றுபங்குசெய்து வேளையொன்றுக்கு ஒருபங்கை இரண்டுபடி தண்ணீர்விட்டுக் காற்படியாய்வற்றவைத்து அதில் திரிகடுகு வகைக்குப்பட்டை அதிமதுரம் சிற்றரத்தை மல்லி திப்பிலிமூலம் ஓர்நிறையாய் வெதுப்பிப்பொடித்து வடிகட்டித் திரிகடித்தூளுங் கொஞ்சத்தேனும்விட்டு ஆறுபோதுகொடுக்கத்தீரும்.

அரத்தை-கண்டங்கத்திரி-துளசி-சிறுவழுதலை-மூக்காவேளை-வில்வம்-காஞ்சொறி-வேப்பீர்க்கு-நெல்லிப்பிஞ்சு-புளியிரசு-வகைக்கொருபிடி-இவைகளைச்சிதைத்து இரண்டுபடி தண்ணீர்விட்டுக் காற்படியாய் வற்றவைத்து அதில் திப்பிலி திப்பிலிமூலம் தேசாவரம்-வாய்விளங்கம்-மல்லி-கடுகுரோகணி-அரத்தை வகைக்குவிராகனிடை(க)கடுக்காய்-பேய்ப்புடல்-வகைக்குப்பலம்(உ) இவைகளைப்பொடித்து வடிகட்டித் திரிகடிப்பிரமாணம்போட்டு இந்தப்படி நாலுநாள்கொடுக்கத்தீரும்.

அரத்தை-சிறுவழுதலை-சிறுகாஞ்சொறி-கண்டங்கத்தரி-ஆடாதோடை இவைகளின்வேர் கற்றுமஞ்சருகு இப்பூரல் சுக்கு மூத்தக்காசு இவைகளை வேளையொன்றுக்கு அரைப்பலம் அரைக்கால்பலம் விதம்பிடித்து-உ-படி தண்ணீர்விட்டுக் காற்படியாய்வற்றவைத்து-திப்பிலி விராகனிடை(க)வெதுப்பிப்பொடித்துப்போட்டுக் கொஞ்சத்தேனிட்டுக் கலந்து ஆறுபோதுகொடுக்கத்தீரும்.

பிரண்டை கண்டங்கத்தரி அரத்தை சிறுகாஞ்சொறி வெட்பாலை பொன்முசுட்டை மூவிலை இவைகளின்வேர் அரத்தை சுக்கு இவைகளை ஓர்நிறையாய் வேளையொன்றுக்கு அரைப்பலவிதம் சி

னைத்து இரண்டுபடி தண்ணீர்விட்டு நாலொன்றாய்க்குறுக்கி [illegible]
ப் அரிந்து கொடுக்கத்தீரும்.

சுக்கு திப்பிலி மிளகு அதிமதுரம் கூந்திரிகம் சித்திர
மூலம் திருநீற்றுப்பச்சிலை கண்டங்கத்திரி ஆடாதொடை கர்ப்பூர
வல்லி வகைக்குப்பலம்-க-இடித்துத் தூட்செய்து பனிநீர்த்தியக்
செய்து வேண்டியமட்டும் கொருபக்குவிதம் இரண்டுபடி ச
நிர்விட்டுக்காற்படியாய்வற்றவைத்து அதில் சந்திரோதயமா
த்திரையுங் கோரோசனைக்குளிகையொன்றுமுரைத்துக் கலந்து
வடிகட்டிக்கொடுக்க சிலேத்துமசரமாகத் தீரும்.

அதிமதுரம் கண்டங்கத்திரி செம்முள்ளி கண்டு [illegible] இலைக்கரி
வேர் சுக்கு வகைக்குக்கழஞ்சு ந-ஒருபடி தண்ணீர்விட்டு அரை
க்காற்படியாய்க் கொழுஞ்செய்து திட்டிலித்தாளிப்போட்டு அ
போது கொடுக்கத்தீரும்.

பாதிரி வில்வம் பெருங்குமிழம்வேர் வகைக்குக்கழஞ்சு-
(ச)படிநீர்விட்டு ஒருபடியாய் வற்றவைத்துவடித்து அதிற்கா
ற்படி பொரியரிசியைப்போட்டுக் கஞ்சிகாய்ச்சிக் குடிக்கத்தீரும்.

வாதசிலேத்தும சுரக்குணம்.

சுரம் குளிர்காதும் வாய்கசத்தலும் பற்கடிக்கும் காதடை
க்கும் கண்ணெரிச்சலும் நாவுதடிக்கும் இருமலெடுக்கும் இரத்
ம்வீழும் தொண்டைகம்மும் மலக்கட்டும் பசி மந்திக்கும் வ
ளையத்தாக் கனோட்புண்டாகும்.

நிவர்த்தி.

வெட்பாலையரிசி விலாமிச்சம்வேர் வேம்பு நெய்தற்கிழங்கு
பெருங்குரும்பை அதிமதுரம் மூக்கிரட்டைம் பேரீச்சம்பழம்
சம்பு வில்வப்பழத்தோடு பொன்முசுட்டைவேர் தண்ணீர்விட்டாம்
திரிகடுகு அரிசிவிடையம் பற்பாடகம் மூத்தக்காசு வகைக்குவிராகனெ
டை(க)இடித்து இருநாழிநீர்விட்டு உழக்காய்க்காய்ச்சி நிப்பி
லிப்பொடி விராகன்(க)கொஞ்சந்தேன்விட்டு இராத்திரிக்கும், கா
லையில் திரிகடுகு சீரகம் வெள்ளுள்ளி வகைக்குவிராகனிடை (க) இ
ளவெந்நீரில்ளைத்துக் கலக்கிக் கொதிக்கவும் இந்தப்படி மூன்றுநா
ளைகொடுக்கத்தீரும்.

சன்னிவாதசுரக்குணம்.

மார்பு சமுத்து நெற்றி வியர்க்கும் விக்கலெடுக்கும் நெத்த
ம் விழிபசக்கும் மேல்மூச்சுண்டாகும் வயிறுவலிக்கும் சுரிச்சல்
காணும்.

நிவர்த்தி.

திப்பிலி-சிறுதேக்கு-முத்தக்காசு-பற்படாகம்-சுக்கு-செங்கழுநீர்-கிழங்கு-கோஷ்டம்-ஆடாதோடை-பீர்க்கு-சிற்றாமன்டு சிறு காஞ்சோரி-நிலவேம்பு-இவைகளை வகைக்குப்பலங் கால்வீதம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு காற்படியாய் வற்றவைத்து மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

உட்சுரத்தின் குணம்.

இராப்பக லிடைவிடாது காங்கையும் உடல்வெளுத்து வற்றும் பித்தத்தால் மயக்கம் தலைநோவுங் காணும்.

நிவர்த்தி.

வெந்தயம்-மிளகு-வகைக்குப்பலம் (வ) வீதஞ்சிதைத்து ஒரு படி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து (௫)நாள் கொடுக்கமாறும்.

காற்படி காய்ச்சின ஆவின்பாலிற் சீனியும் சாத்திரவேதியும் வகைக்கு விராகனிடை (௧) பொடித்துப்போட்டு நாலுநாள் கொடுக்கத்தீரும்.

பொன்னுக்காணி முசுமுசுக்கை பழம்பாசி நீர்ப்பூலா சிற்றுமுட்டி சீதேவியார் செங்கழுநீர் தாமரைவிழுது இவைகளின் சாறு இளநீர் வகைக்குப்படி (வ) ஆவின்னெய்ப்படி (௧) ஒன்றாய்க்கலந்து அதில் நாவிக்காய் கோஷ்டம்-அதிமதுரம்-சீரகம்-நெல்லிமுள்ளி யக்கி சன்பகப்பூ சிறுநாகப்பூ சடாமாஞ்சில் தேற்றான்விரை-நன்னாரி முத்தக்காசு-விளாமிச்சம்வேர்-வெட்டிவேர்-வகைக்குக்கழஞ்சு (௫) ஆவின்பாலிலரைத்துப்போட்டு சீனிபலம் (௧) கூடச்சேர்த்துக் காய்ச்சிவடித்து அந்திசந்தி சாப்பிட்டுவரத்தீரும்,

மந்தசுரத்தின் குணம்.

உடல்காயும்-வெளுக்கும்-நடுங்கும்-நாவுவரண்டு தடித்துத் தித்திக்கும் அடிக்கடி இருமல்காணும் வயிறுகழியும்.

நிவர்த்தி.

பேராமுட்டிவேருஞ்சுக்கும் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்,

சிந்திற்றண்டு கடுக்காய் வெட்பாலைவேர் கலிப்பாக்கு சுக்கு கடுகுரோகணி சிறுமுகச்சிவேர் வகைக்குப்பலம் (வ) இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்.

சுக்கு-நறுக்குமூலம்-முசுமுசுக்கைவேர்-வகைக்குப்பலம் (வ) இவைகளையிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு வற்றவைத்து மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

அசீரணசுரத்தின்குணம்,

சுரக்காயும்-வயிறுபொருமிக்குழியும்-வலிக்கும்-வாயுமிகப்ப ரியும் அடிக்கடி புளித்தேப்பம் கொட்டாவி விக்கல்களுண்டாம் நாவு லரும் கைக்கும் உடல்நோகும் வியர்க்கும் குரல்கம்மும்.

நிவர்த்தி,

சுக்குமஞ்சருகு-அலஞ்சருகு-மூக்காவேளைவேர் முருங்கை வேர்ப்பட்டை-வகைக்குப்பலம்-க-தொச்சிவேர் பலம்(ச)இவைக ளையிடித்து(ச)படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத் து வேளையொன்றிற்கு அரைக்காற்படிவிதம் மூன்றுபோதுங்கொ டுக்கத்தீரும்,

திரிகடுகு-திரிபலை-திப்பிலிமூலம்-சங்கவேர்-சித்திரமூலம்-வச ம்பு-ஓமம் வகைக்குப்பலம்(வ)இவைகளை முன்போற்கியாழஞ்செ ய்துகொடுக்கத்தீரும்,

திரிபலை-பேய்ப்பாற்சொற்றி-கடுகுரோகணி-சுக்கு-பேராமு ட்டி சிற்றாமுட்டி வகைக்குப்பலம்(வ) முன்போற் கியாழஞ்செய் துகொடுக்கத்தீரும்,

அஸ்தியைப்பற்றியசுரத்தின்குணம்,

தாகமிகுந்தசோணும் தேகம்வெளுக்கும் குளிர்ச்சியா யிருக் கும் ஒவ்வொருநேரம் சுரம் அதிகமாய்க்காய்ந்து விட்டுவிடும்,

நிவர்த்தி,

பேய்ப்புடல்-முத்தக்காசு-பற்படாகம்-பாடக்கிழங்கு - கடுகு ரோகணி-சுக்கு-பேய்ச்சொற்றி வகைக்குப்பலம்(வ) இவைகளை இ டித்து(உ)படி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்-இவைகளெல்லாம் இச்சாபத்தியம்;

இரத்தத்தைப்பற்றினசுரத்தின்குணம்,

சுரம் அதிகமாய் அடிக்கும் தாகிக்கும் இளைப்பு வியர்வைமூ ர்ச்சைகளுறும் சித்தப்பிரமைகொள்ளும் உடம்புநோகும்,

நிவர்த்தி,

தாமரைவளையம் அமுக்கருக்கிழங்கு கொடிவேலிவேர் பே ராமுட்டி வசம்பு சுக்கு வகைக்குப்பலம் (வ) இவைகளை இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத் தீரும்,

மாமிசத்தைப்பற்றியசுரத்தின்குணம்,

அதிகமாய்ச்சுரமடிக்கும் சுவாசகாசம் தேகமெல்லாம் ந மைச்சலெடுக்கும் நோகும் அபாசம் மூர்ச்சைகளுறும் மயிர்க்கூ ச்செறியும்,

நிவர்த்தி,

போரூமட்டி நாயுருவி-சுக்கு-திப்பிலி- கடுரோகணி மரு ட்டிழங்கு சீந்திலாமுட்டி பாலைவேர் பேய்ப்பாற்சொற்றி வகைக்கு ப்பலம்(௧)மூன்றுபோற் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்,

சகலமுறைச்சுரத்திற்கு,

திப்பிலி-திப்பிலிமூலம்-வகைக்குவிராகனிடை.(௫) சேவியம் வாய்விளங்கம்-மல்லி-வகைக்குவிராகனிடை(௩)கடுக்காய் பேய்ப்ப டல் நெல்லிமுள்ளி வகைக்குப்பலம்(௧)இவைகளையிடித்து(௩)பங் குசெய்து மேலேசொல்லிற்கு ஒருபங்கை இரண்டுபடி தண்ணீரி ற்போட்டுக் கால்படியாய்வற்றவைத்து(௩)போது கொடுக்கத்தீரு ம், மணலைவறுத்து அதில் தொட்டிச்சாறுபடி(௧௦)விட்டுக் கொதிக் கும்போது வடித்து மேற்படி பொடியைப் போட்டாவது ஆறு போதுகொடுக்க முறைச்சுரமுதலான சகலசுரங்களுந்தீரும்,

விடாச்சுரத்திற்கு,

ஒருகல்லைடைக்காய்ப்பிரமாணம் அவிரிவேருடன் ஐந்துமிளகு கூட்டி வெற்றிலைத்தூக்கலக்கி அதில் கல்லுறும்பைக் குன் றிமணிப்பிரமாணம் கரைத்துக்கொடுக்கவும் இந்தப்படி (௩) போ துகொடுக்கத்தீரும்,

மூன்றுமுறைக்குளிர்சுரத்திற்கு,

சிறுதேக்கு பற்படாகம் முத்தக்காசு சீந்திற்றண்டு - நல்லூரி சிறுகாஞ்சொறிவேர் தேவதாரம் கோஷ்டம் பேய்ப்புடல் சுக்கு வகைக்குப்பலம்(௧ இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு வற் றக்காய்ச்சி இந்தப்படி(௩)போதுகொடுக்கத்தீரும்,

ஒன்றைவிட்டொருநாள்வரும் மாறற்சுரத்திற்கு,

பற்படாகம்-பேய்ப்புடல்-அதிமதுரம்-சீந்திற்றண்டு- அதன் வேர் கொடிவேலிவேர் முத்தக்காசு மல்லி வகைக்குவிராகனிடை(௩)இ வைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியா ய் வற்றவைத்து அதில் தேன்விட்டுக்கொடுக்கத்தீரும், இந்தப்படி மூன்றுநாள் கொடுக்கவும்,

தாபசுரத்திற்கு,

போரூமட்டி-சிற்றாமுட்டி-சிறுகாஞ்சொறி-நல்லூரி - சிறுகீ ரை பெருங்குமிட்டி-அவரை-நிலவேம்பு-முத்தக்காசு - சிறுதேக் கு மல்லி இவைகளை யோரோர்ந்து வகைக்குக்காற்பலம் இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து பகலில் மூன்றி ரம் கொடுக்கத்தீரும்

முந்திரிப்பழம்-சிறுநாகப்பூ-அதிமதுரம்-செங்கழுநீர்க் கிழங்கு-நன்னாரிவேர் இவைகளை வகைக்குக் கழஞ்சுவிதம் சிதைத்து ஒருபடி சலத்திற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கவும், இந்தப்படி மூன்றுநாள்கொடுக்கத்தீரும்,

முத்தக்காசு-மாவிலிங்கு-மேற்படிவேர் விலாமிச்சம்வேர் பற்படாகம் நெற்பொரி சிறுபயறு வகைக்குக்கழஞ்சு(௨)நாலுபடி சலத்திற்போட்டு(௧)படியாய் வற்றவைத்து அடைகியாழம் வைத்துக்கொண்டு ஒருவேளைக்கு அரைக்கால்படிவிதம் சந்தனம் பச்சைக்கர்ப்பூரம் உருத்திராக்ஷம் வகைக்கு விராகன்(௧)அரைத்துக்கலக்கி(௩)போதுகொடுக்கத்தீரும்,

கோஷ்டம்-அதிமதுரம்- நெல்லிமுள்ளி - விலாமிச்சம்வேர்-வெட்டிவேர்-முத்தக்காசு-சந்தனம்-நெற்பொரி வகைக்குக்கழஞ்சு (௨) அரைப்படி இளநீரிற்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்,

தாபசுரம் தாவரட்சிக்கு,

வில்வவேர் விலாமிச்சம்வேர் நெரிஞ்சில்வேர் நன்னாரி அதிமதுரம்-சோம்பு-விளாவரிசி-முத்தக்காசு-நெற்பொரி-முந்திரிப்பழம்-நெல்லிமுள்ளி-இலுப்பைப்பூ சுக்கு வகைக்குவிராகனிடை(௩) இவைகளைச்சிதைத்துக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

விஷபாகசுரத்திற்கு.

நெருஞ்சில்-விழி-குருந்தொட்டி-சிறுபூளை அமுக்கிரா நன்னாரி-பெருங்குமிழ்-சித்தில்-முள்ளி-பாதிரி-சிறுவழுதலை - சிறுகாஞ்சொறி-சிற்றாமணக்கு-மலைதாங்கி-சத்திச்சாரணை - கூவிளை - ஆடாதோடை-சிற்றாமுட்டி-பேராமுட்டி-வெதுப்படக்கி நீர்முள்ளி இவைகளின்வேர்-விலாமிச்சம்வேர்-கற்றாழஞ்சருகு-பற்பாடகம்-சாமனைவளையம்-சல்லிலவங்கம்-அக்கிலத-திப்பிலி - திப்பிலி[illegible] செவியம்-சித்திரமூலம்-கோஷ்டம்-சிறுதேக்கு-தேசாவரம்-சீந்தில் [illegible]க்கிழங்கு வகைக்கு இருகழஞ்சுவிதம் இடித்து [illegible] ஒருபக்கை இரண்டுபடி சலத்திற்போட்டுக் கால்படியாய்வற்றவைத்து அதில் ஒருகழஞ்சு வெங்காரத்தைப் பொரித்துப்போட்டுக் கொடுக்கவும் இப்படி ஆறுவேளைகொடுக்கத்தீரும்,

சுரத்தில்பேதி உடல்வீக்கங்கண்டால்.

சுக்கு-நன்னாரி-துதுவளை-துளசி-கஞ்சாங்கோரை- நீர்முள்ளி-வெதுப்படக்கி இவைகளின்வேர் பிரமி கையாந்தகரை-வகைக்குகு[illegible]-கக்குத்தோர் உ படிக்காய்(௧) இவைகளையிடித்து இரண்டுபடி

தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து மூன்றுபோது கொடுக்கத்திரும்.

கரைக்கொடி மேற்படிபழுப்பு பிஞ்சுக்காய்நெல்லிவேர் வகைக்குப்பலம்(௧)(௨)படி சலத்திற்போட்டுக் கியாழஞ்செய்து கொடுக்கத்திரும்.

இசிவிற்காணுஞ்சுரத்திற்கு.

பேராமுட்டி-விஷ்ணுகாந்தைபாலை - பேய்ப்பாற் சோற்றிநாகமல்லிகை-சிற்றாமுட்டி-இவைகளின்வேர்-கடுரோகணி-சுக்கு இவைகளை வகைக்குப்பலம்(௨)விதம் சிதைத்து இரண்டுபடி சலத்திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து(௩)போது கொடுக்கத்திரும்.

திப்பிலி-மருட்கிழங்கு-சுக்கு-நிலவேம்பு-கடுகுரோகணி-நெல்லி-பேய்ப்புடல்-பாவட்டைவேர்-இவைகளை முன்போற் கியாழஞ்செய்துகொடுக்கத்திரும்,

தனிச்சுரம்-நடுக்கல்சுரத்திற்கு.

பிள்ளைக்கியாழஞ்செய்து சாப்பிட்டாலும் அல்லது தேவதாரம் பற்படாகம் கடுக்காய் சுக்கு கண்டங்கத்திரி கோஷ்டம் குறிஞ்சிவேர் சிறுதேக்கு வகைக்கு ஒருபலம்விதம் இரண்டுபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்துக்கொடுக்கத்திரும்.

சீந்தில்-வழுதலை-நிலவேம்பு-குறிஞ்சி-இவைகளின்வேர் - சுக்கு கடுக்காய்-கடுகுரோகணி-கோஷ்டம்-சிறுதேக்கு-தேவதாரம் - பற்படாகம் ஆடாதோடை வகைக்குப்பலம்(௨)விதம் இடித்துஇரண்டுபடிதண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க்காய்ச்சி வேளையொன்றுக்கு அரைக்காற்படிவிதம் திப்பிலிப்பொடி விராகனிடை(௧) கூட்டிப்போட்டு ஆறுபோதுகொடுக்கத்திரும்.

பழஞ்சுரத்திற்கு.

சிறுகாஞ்சொறி-சிறுவழுதலை-சீந்தில்- இவைகளின்வேர் பற்படாகம்-பேய்ப்புடல்-சுக்கு-முத்தக்காசு-வகைக்குப்பலம்(௨)இடித்து மூன்றுபங்குசெய்து வேளைக்கொருபங்குவிதம் இரண்டுபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துத் தேன்விட்டுக்கொடுக்கத்திரும்.

நன்னாரிவேர் விளாமிச்சம்வேர் முத்தக்காசு திரிகடுகு மல்லி செந்தொட்டிவேர்-பற்படாகம் - பேய்ப்புடல் வகைக்குக்கழஞ்சு (௨)இடித்து(௩)பங்குசெய்து வேளையொன்றுக்கு ஒருபங்கை இர

யிப்படி தண்ணீரிற்போட்டு வற்றவைத்து அதில் தேனுந்திப்பிலிப்பொடியும்போட்டுக் கொடுக்கவும், இந்தப்படி அதுபோதுகொடுக்கத்தீரும்.

சிறுதேக்கு-சீந்திற்கொடி-பற்படாகம்-கோஷ்டம்-திப்பிலி-நிலவேம்பு-சுக்கு-சிறுகாஞ்சொறி-முத்தக்காசு-ஆடாதோடை வகைக்குப்பலம்(௳)வீதம்-௪-படி-நீர்போட்டு எட்டொன்றாய்க்கியாழஞ்செய்து-௩-போது கொடுக்கத்தீரும்.

சந்நிசுர நடுக்கல் சுரத்திற்கு.

நெற்பொரி-வறுத்தபாசிப்பயறு-பற்படாகம்-பெரும்பூசணிவேர்-வில்வவேர்-வகைக்குக்கழஞ்சு(௧)இடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கவும் தாகம்அதிகமாயிருந்தால் காற்பலம் அதிமதுரத்தைக்கூட்டிக் கியாழஞ்செய்து கொடுக்கத்திரும்.

சனிசுரம்-மலபந்தத்திற்கு.

பேய்ப்புடல்-கடுக்காய்-நெல்லிமுள்ளி-ஆடாதோடை-கண்டங்கத்தரி-மரமஞ்சள்-கடுகுரோகணி-செம்முள்ளிவேர்-கட்டுக்கொடிவேர்-சந்தனம்-வேலிப்பருத்தி-திப்பிலி-வகைக்குக்கழஞ்சு(௧)இடித்து மூன்றுகூறுசெய்து வேளையொன்றுக் கொருபங்கை இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கச்சனிசுரம் மலபந்தம்தீரும்.

சுரத்திற்குக்கொடுக்கும்விரேசனம்.

கற்றாழஞ்சாறு-கடுக்காய்-கருவேம்பின்பட்டை-கார்கோலவி வகைக்குப்பலம் (௳) இவைகளைச்சிதைத்துக் கியாழஞ்செய்து கொடுக்க விரேசனமாகிச் சுரம் மட்டுப்படும்,

சுருக்குச்சுரத்திற்கு.

கொத்தமல்லி-திரிகடுகு-போராமுட்டி-வகைக்குக் கழஞ்சு(௧) வீதம் இடித்து நாழிநீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி(௩)நாள்கொடுக்கத்தீரும்,

அதிசாரசுரத்திற்கு,

பசிப்பாலை-சுக்கு-முத்தக்காசு-சிறுகாஞ்சொறிவேர் இவைகளை ஒரேநிறையாய்க் கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்,

கொடிப்பட்டை-அதிவிடையம்-முதியார்கூந்தல்-சுக்கு-முத்தக்காசு-இவைகளை-வேளையொன்றிற்கு காற்பலவீதம் வைத்து ஒரு

படிநீர்விட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் இலவ ம்பிசின் விராகன்(௧)பொடித்துப்போட்டுக்கொடுக்கத்தீரும்.

பிஞ்சிசுருவம்-பொன்னாங்காணிவேர்-நன்னாரிவேர்-அதிம துரம்-கோரைக்கிழங்கு-கஞ்சாங்கோரை-வெட்டிவேர்-விளாம்பிச ன்வேர்-மல்லிசந்தனம்-சுக்கு இவைகளை யோர்நிறையாய்க்கியாழ ஞ்செய்துகொடுக்கத்தீரும்,

கோரைக்கிழங்கும் மாம்பட்டையும் வகைக்கு ஒருபலம் இடி த்துப் பிட்டவித்து அரைக்காற்படி சாறுபிழிந்து அதில் இலவம் பிசின் அதிவிடையம் வகைக்கு விராகன்(௧) பொடித்துப்போட்டு க்கொடுக்கத்தீரும்,

பெருமரத்துப்பட்டை-வில்வப்பிஞ்சு-சேர்தொட்டி-மாது ளம்பிஞ்சு-அதிவிடையம்-சுக்கு-முத்தக்காசு-வகைக்குப்பலம்(௧) இவைகளைச்சிதைத்துக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

மாம்பட்டை வில்வப்பழச்சதை முத்தக்காசு நிலவேம்பு பெரு மரத்துப்பட்டை-சுக்கு-வகைக்குப்பலம்(௧)இவைகளைக் கியாழஞ் செய்துகொடுக்கத்தீரும்.

மலராத மாதுளம்பூ அதிவிடையம் கோரம்பட்டை மாது ளந்தோல் வில்வப்பழச்சதை குடசப்பாலை சுக்கு முத்தக்காசு ஆ வாரம்பூ வகைக்குப்பலம்(௧)இவைகளைக் கியாழஞ்செய்துகொடுக் கத்தீரும்.

சிற்றாமுட்டிவேர்-வில்வக்காய்-சீந்திற்றண்டு-குடசப்பாலை-சு க்கு-முத்தக்காசு-நிலவேம்பு-கஞ்சாவிரை-வகைக்குப்பலம் (௧) இ வைகளைக்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

அதிசாரகாத்திற்குக்குளிகை.

திரிகடுகு-சாதிக்காய்-கிராம்பு-இலவம்பிசின்-விளாம்பிசின் வி ல்வப்பிசின் அதிவிடையம் கசகசப்பருப்பு சீரகம் ஓமம் கர்கட க்சிங்கி-சிறுதேக்கு-மாதுளம்பிஞ்சு-வில்வப்பழச்சதை பொன்னு கட்டை வேர் இவைகளை யோர்நிறையாய் நல்லெண்ணெய்விட்டுப ணக்கவறுத்து தயிர்தன்னில்விட்டரைத்து ஒருபணவெடை உண்டை செய்து வடிகிரின் ஒருண்டை கொடுக்க காய்ச்சல் சுறிச்சல் முத லியவையுந்தீரும்.

அசாத்தியகாத்திற்கு.

சுக்கு-கொத்தமல்லி-சீரகம்-வகைக்குப்பலம்(௧) இதை இ டித்து நாழிநீர்விட்டுக் கியாழஞ்செய்து மூன்றுநாள் கொடுக் கத்தீரும்.

பிரமேகசுரத்திற்கும்மாறற்சுரத்திற்கும்.

பெருங்குமிழ்வேர்-நன்னாரிவேர்-தாமரைக்கிழங்கு இலுப்பைப்பூ-மூந்திரிப்பழம் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் கோரைக்கிழங்கு சுக்கு சிறுகாஞ்சொரிவேர் அதிமதுரம் நெல்லிப்பருப்பு வகைக்குக்கழஞ்சு(௧)இடித்துப்போட்டுக்கியாழஞ்செய்து தேன்விட்டு மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

விஷசுரக்குணம்.

ஒருபுறங்குளிரும் ஒருபுறங்காயும் தேகத்தில் விஷம்ஏறினது போற்றோன்றும்.

நிவர்த்தி.

நெல்லி-தான்றி-வேப்பிர்க்கு-சீந்திற்றண்டு-மல்லி-முத்தக்காசு-இவைகளை வேளைபொன்றுக்குக் காற்பலவீதஞ்சிதைத்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

சிறுவழுதலை-சீந்தில்-தாமரை இலைகளின்வேர் முத்தக்காசு சுக்கு இவையெல்லாம் வகைக்கும்பலம்(௪)சிதைத்து இரண்டுபடி சலத்திற்போட்டுக்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

கோழியவரைவேர்-சித்திரமூலம்-வேப்பிர்க்கு-சிறுபுள்ளடி பற்படாகம் சுக்கு செவியம் வகைக்குப்பலம்(வ) இவைகளை முன்போற்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

சுக்கு-கடுக்காய்-நிலவேம்பு-வேப்பம்பட்டை-சீந்தில்-பேய்ப்புடல்-வகைக்குப்பலம்(வ)முன்போற்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

ஆடாதோடை-பிர்க்கு நிலவேம்பு சீந்திற்றண்டு பேய்ப்புடல் பேய்ப்பிர்க்கம்வேர் வெட்பாலையரிசி வகைக்குப்பலம் (வ) முன்போற்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

கெர்ப்பகாலத்திற்காணுஞ்சுரத்திற்கு.

சிராசெங்கழுநீர்வேர்-வெட்பிர்க்கு-சிறுவழுதலைவேர்-கொங்கிலவின்வேர்-சுக்கு-மல்லி-வகைக்குக் காற்பலவீதங் கியாழஞ்செய்து சர்க்கரைகலந்துகொடுக்கத்தீரும்.

குளிர்சுரத்திற்கு.

கோஷ்டம்-திப்பிலி-கண்டங்கத்தரி-சிறுதேக்கு-நிலக்குமிழ்-சுக்கு-நிலவேம்பு-முத்தக்காசு சிறுகாஞ்சொரி சீந்தில்-பற்படாகம் வகைக்குப்பலம்(௪)இடித்து இரண்டுபடி சலத்திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி (௬) வேளை கொடுக்கத்தீரும்.

பெருந்தும்பையைப்பிடித்துப் பிட்டவித்து மாகாணிப்படி சாறுபிழிந்து அதற்குநிகர்தேன்விட்டுஇந்தப்படிமூன்றுவிசைகொடுக்கத்தீரும்.

ஆடாதோடை-தூதுளை-முத்தக்காசு-சிறுவழுதலை-பற்படாகம்-பங்கம்பாளை-சுக்கு-சந்தனம்-நன்னாரிவேர் வகைக்குப்பலம்(க) இடித்து இரண்டுபடி சலத்திற்போட்டு காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி ஆறுவேளைகொடுக்கத்தீரும்; இவையெல்லாம் இச்சாபத்தியம்,

சீந்தில்-நிலவேப்பு-சிறுகாஞ்சொறி-மல்லி-வட்டத்திருப்பி-விலாமிச்சம்வேர்-வெலிப்பருத்தி-வெட்டிவேர்-பற்படாகம்-சுக்கு-வகைக்குப்பலம்(க)இடித்துப்போட்டு முன்போற்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்,

பேய்ப்புடல்-முத்தக்காசு-பற்படாகம்-சீந்திற்றண்டு- வகைக்குப்பலம்(க)இடித்துப்போட்டு முன்போற்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

ஆதளைசமூலம்-நன்னாரிவேர்-முத்தக்காசு-திரிபலை- வீழிப்பட்டை-வெட்டிவேர் விலாமிச்சம்வேர் தாமரைக்கிழங்கு இவைகளை வேண்டுமொன்றுக்கு விராகனிடைமூன்று விதம் இடித்து இரண்டுபடி தண்ணீர்ந்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து ஆறுபோது கொடுக்கத்தீரும்.

சுக்கு-செவியம்-மல்லி-சர்க்கண்டு-பறங்கிப்பட்டை-பேய்ப்புடல்-திப்பிலிமூலம்-லவங்கம்-அதிமதுரம்-முத்தக்காசு-வெட்டிவேர்-விலாமிச்சம்வேர்-கண்டங்கத்தரி-சீந்தில்-பற்படாகம் - நன்னாரி-ஆதளை-ஆடாதோடையிலை வகைக்கு விராகனிடை(க)விதமிடித்துப்போட்டு முன்போற்கியாழஞ்செய்து கொடுக்கத்தீரும்.

சண்பகப்பூ-சாதிபெதி-வெட்டிவேர் விலாமிச்சம்வேர்-தக்கோலம்-நெற்பொரி-சுக்கு-இவைகளை வகைக்குவிராகனிடை(க) விதம் காற்படி மாதுளம்பழச்சாற்றிலரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

சீரகமுங்-குருத்தொட்டிவேரும் வகைக்குப்பலம்(க) கியாழஞ்செய்து(க)போது கொடுக்கத்தீரும்.

மிளகாயிலை(கூ)மிளகு(எ) வெள்ளைப்பூண்டு (ச) இவைகளையரைத்து(கூ)போதுகொடுக்கத்தீரும்.

நாரகார்த்தைவேர் ஆளிவேர்-சுக்கு-வகைக்குப்பலம்(க)இடித்து-இரண்டுபடிதண்ணீரிற்போட்டு (அ) படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி(ரு)போது கொடுக்கத்தீரும்.

விடசக்குளிர்சுரத்திற்கு.

சரிப்பான் ஒருபிடி வேப்பீர்க்கு ஒருபிடி மூன்றும் நறுக்கி ச் சாட்ர்சட்டியிற்போட்டுப் பொன்னிறமாகவெதுப்பி அதில் ஒ ருபிடி மிளகைப்போட்டு வறுத்து வெள்ளுள்ளி ஒருபூடு கிள்ளிப் போட்டு சரிப்பானிலை தொச்சியிலை வகைக்கொருகொட்டைப்பா க்களவு அரைத்துப்போட்டு ஒருபடி நீர்விட்டுக்காய்ச்சிக் காற்படி யாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி மூன்றுநாள் இரு போதுகொடுக்கத்தீரும்.

திரிதோஷசுரத்திற்கு.

சந்தனம்-அதிமதுரம்-லவங்கம்-வெட்டிவேர் - விளாமிச்சம் வேர்-மல்லி-சுக்கு நிலவேம்பு-பற்படாகம்-சிற்றரத்தை செவியம் இவைகளை யோர்நிறையாயிடித்து வேளையொன்றுக்கு ஒருபலத் தூளை இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத் து இருபோதுங்கொடுக்கத்தீரும்.

வட்டத்திருப்பி-தூதுளை-நன்னாரி சிறுவழுதலை சிறுகாஞ்சொ ரி-கண்டங்கத்திரிவேர்-ஆடாதோடை-திரிபலை-சுக்கு-இவைகளை ஓர் நிறையாயிடித்து(சு)போது ஒருவேளைக்கு அரைப்பலத்தூளை ஒ ருபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து வடிகட்டி யதில் திப்பிலி விராகனிடை(ச)வெதுப்பிப் பொடித்துப்போட்டு க் கொஞ்சந்தேன்விட்டு இந்தப்படி கொடுக்கத்தீரும்.

தூதுளை கண்டங்கத்திரி நிலவேப்பு சீந்தில் சிறுகாஞ்சொரி நன்னாரி முள்ளி ஆடாதோடை விஷ்ணுகரந்தை இவைகளின்வேர் முத்தக்காசு கொத்தமல்லி சிற்றரத்தை செவியம் திரிகடுகு திரிப லை பேய்ப்புடல் கோஷ்டம் சன்னலவங்கம் வகைக்குக்கழஞ்சு(சு) இடித்து ஆறுபங்குசெய்து ஒருபங்கை இரண்டுபடி தண்ணீரிற் போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி (சு) போது கொடுக்கத்தீரும்.

தோஷசுரத்திற்கு.

சமூர்சி-நன்னாரி-பேராமுட்டி-வில்வம் இவைகளின்வேர் முத் தக்காசு-பேய்ப்புடல் செவ்வல்லிக்கொடி செங்கழுநீர்க்கிழங்கு இ வைகளை வேளையொன்றுக்கு அரைப்பலம்வீதம் இடித்து இரண் டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்து அத ற்குதில் [illegible]க்கிச்சாறுகூட்டிக்கொடுக்க இந்தப்படிமூன்றுபோது கொடுக்கத்தீரும்.

சீந்தில் ஆதளை செங்காஞ்சொரி நன்னாரி முன்னை ஆடாதோடை விஷ்ணுகாந்தி இலைகளின்வேர் கண்டங்கத்தரி நிலவேம்பு முத்தக்காசு பல்லி ஆத்தை செவியம் திரிகடுகு திரிபலை பேய்ப்புடல் கோஷ்டம் சன்னலவங்கம் வகைக்கு விராகனிடை(௧) இவைகளையிடித்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி (௩) போதுகொடுக்கத்தீரும்.

சந்தனம் பற்பாடகம் வெட்டிவேர் விளாமிச்சம்வேர் சிறு செங்காஞ்சொரிவேர் இப்பூரல்வேர் லவங்கம் நன்னாரிவேர் இவைகளை வேளையொன்றுக்கு வகைக்குக்கழஞ்சுவிதம் இடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக் காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கத்தீரும் இவைகளெல்லாம் இச்சாபத்தியம் புளியைக்கூட்டி கொஞ்சமாய்ச்சேர்க்கவும்.

சன்னிசுரத்திற்கு

ஊதவேளைச்சாறு இஞ்சிச்சாறு வகைக்குப்படி(௪)தனித்தனி முறித்து ஒன்றுப்படக்கலந்து அதில் திரிகடுகுப்பொடி திரிகடி ஒரு துட்டெடை தேன்கூட்டிக்கொடுக்கத்தீரும்.

சன்னிதோஷசுரத்திற்கு.

வாலுளுவையரிசி நிலவேம்பு கண்டங்கத்தரி ஆத்தை அவரிவேர் திரிகடுகு கசம்பு வெள்ளுள்ளி கொடிவேலி கஞ்சாங்கோரை பேய்ச்சுரைக்காய் மாசிக்காய் மஞ்சிட்டி ஏலம் லவங்கம் பறங்கிப்பட்டை வாய்விடங்கம் சங்கவேர்ப்பட்டை நாயுருவிவேர் புளியம்பட்டை ஆதளை மூக்கிரட்டை பேய்ப்புடல் கடுகுரோகிணி ஓமம் கருஞ்சீரகம் மாவிலிங்கம்வேர் வகைக்குப்பலம்(௧) வீதம் இடித்து இரண்டுபடி நீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் துட்டெடை கோரோசனைப்பால் கலந்துகொடுக்கவும் இந்தப்படி மூன்றுபோது கொடுக்கத்தீரும்.

சகலசுரத்திற்கும் பொதுப்பிரயோகம்,

முத்தெருக்கஞ்செவி நிலப்பனை கோரைக்கிழங்கு சுக்கு கடுகுரோகணி நிலவேம்பு சித்திரமூலம் செவியம் முக்குரட்டை சீந்தில் விஷ்ணுகாந்தை வகைக்குப்பலம்(௧) இவைகளையிடித்து(௪)படி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி ஆறுவேளைகொடுக்கத்தீரும்.

சிற்றாமுட்டி-பேராமுட்டி-நன்னாரி-விஷ்ணுகாந்தி-சுழிபீட்டான் இலைகள் - இவைகளின்வேர் பற்பாடகம் சிற்றாமுட்டி சுக்கு ஆடாதோடையிர்க்கு கண்டங்கத்தரி சிறுசெருப்படை வல்லாரை வ

வகைக்குப்பலம்(௧)மல்லி நற்சீரகம் கடுகுரோகணி திரிகடுகு சிறு தேக்கு-திப்பிலிமூலம்-செவியம்-கடுக்காய்-தாளிசப்பத்திரி-நெல்லிப்பருப்பு வகைக்கு விராகனிடை(௨)இவைகளைச்சிதைத்துப் பத்துப்படி தண்ணீரிற்போட்டு(௩)படியாய் வற்றவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு உழக்குக் கியாழமாக(௫)நாட்கொடுத்து ஆறும்நாள் பிஞ்சுகடுக்காய் மிளகு இவைகளைக் கியாழஞ்செய்துகொடுத்து(௬)ம் நாள் ஸ்நானஞ்செய்வித்துப் புளிசேர்க்கவும்.

சித்திரமூலம்-மூத்தக்காசு-அக்கிராகாரம்-அதிமதுரம்-கோஷ்டம்-ஏலம்-லவங்கம்-திரிகடுகு-திரிபலை-வெட்பாலையரிசி-பொரித்த சீரகம்-மிளகுபற்பாடம்-வகைக்கு விராகனிடை(௧)இவைகளைச் சிதைத்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி ஆறுபோதுகொடுக்கத்தீரும்.

சிற்றாமுட்டி-கொழுஞ்சி-கிரா-நாயுருவி-முக்குறண்டி-நாரளை-கண்டங்கத்தரி-வில்வம்-முள்ளிக்கத்தரி-சுக்கு இவைகளின்வேர் வகைக்கிரண்டுபலம் நாக்கி ஆடாதோடை பிரமி நிலவாகை - இவைகளின்இலை வகைக்கொருபிடி இவையெல்லாமிடித்து(௮)படிதண்ணீரிற்போட்டு அரைப்படியாய் வற்றவைத்துக்கொண்டு திப்பிலி திப்பிலிமூலம் தேசாவரம் அரத்தை சுக்கு விராகனிடை (௩) கடுக்காய்-நெல்லிமுள்ளி-பேய்ப்புடல் வகைக்குப்பலம் (௧) இவைகளையிடித்துச் சூரணஞ்செய்து வேளையொன்றுக்குக் கால்படிகியாழத்தில் திரிகடித்தூள்போட்டு எட்டுவேளைகொடுக்கத்தீரும்.

சலைபழஞ்சுரத்திற்குநெய்.

வெல்வேல்வேர் கழற்சிவேர் நாயுருவிவேர் சிறுபீளைவேர் விஷ்ணுகாந்திவேர்-வசம்பு-பூண்டு-வகைக்குக்கழஞ்சு(௧) இவைகளைப ழைத்து ஒருபடி ஆவின்நெய்யிற்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்குக் கழஞ்சுவிதங்கொள்ளத்தீரும்.

விடாச்சுரம்-வயிற்றெரிவு-இருமல்-சொறிசிரங்குக்குநெய்.

ஆவின்நெய்-சுத்தசலம்-வகைக்குப்படி(௧)ஒன்றாய்க்கலந்ததில் முந்திரிப்பழம்-வெட்பாலையரிசி-அத்திதிப்பிலி-கெந்தகம்-அதிவிடையம்-நெல்லி-நிலவேம்பு-விலாமிச்சம்வேர்-வில்வவேர்-வகைக்குக்கழஞ்சு(௧)இவைகளைத் தண்ணீர்விட்டரைத்துப்போட்டுக் காய்ச்சி வடித்து வேளையொன்றுக்கு முக்கழஞ்சுவீதம் உண்டுவரத் தீரும்.

சுரம்-விக்கல்-தாகம்-அரோசியம்-தலைநோய்

பிரமேகத்திற்குநெய்

ஆவின்நெய்-சுத்தசலம்-வகைக்குப்படி(௧)ஒன்றாய்க்கலந்ததில் திப்பிலி-கடுகுரோகணி-வெட்பாலையரிசி-பேய்க்கொய்நெல்லி விள

வேர் வேப்பம்பட்டை நாவல் நெல்லிமுள்ளி சந்தனம் ஆடா தோடை விளாமிச்சம்வேர் முந்திரிப்பழம் சிறுசண்பகப்பூ அதிவிடையம் வகைக்குவிராகனிடை (௧) இவைகளைத் தண்ணீரிலரைத்துப் போட்டுக் காய்ச்சிவடித்துக்கொண்டு வேளையொன்றுக்கு இருகழஞ்சுவீதந் தேனுடன் மத்தித்துச் சாப்பிட்டுவரத்தீரும்.

சகலசுரத்திற்கும் கண்குளிர்ச்சிக்கும் நெய்.

சிறுசெங்கழுநீர்ச்சாறு படி (௪) நெய்படி (௪௨) ஒன்றாய்க்கலந்ததில்-மஞ்சிட்டி-தாமரைக்கிழங்கு-ஏலம்-இலவங்கம்- கடுகுரோகணி கோஷ்டம் நன்னாரிவேர் அதிமதுரம் சந்தனம் வகைக்குவிராகனிடை (௧) இவைகளை பசைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து வேளையொன்றுக்கு ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குச் சாப்பிட்டு மேனியிற்பூச சகலசுரமுந்தீரும் கண்ணுங்குளிரும்.

மாறற்சுரம் முறைக்காய்ச்சல் கபக்காய்ச்சல் அதிசார சுரம் விஷசுரம் அஜீர்ணசுரம் பூதசுரம் முதலானசுரத்திற்கு எண்ணெய்.

வெருகங்கிழங்கு-சிற்றாமுட்டி-சிறுகாஞ்சொறி-அவுரி - சிறசெங்கழுநீர்-துளசி-நொச்சி-பெருங்காந்தை-வகைக்குப்பலம் (௰) நான்செய்து (௬) மரக்கால் தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வடித்ததில் கொம்பரக்குபலம் (௧) ஒருபடி நீரிற்போட்டு அரைப்படியாய் வற்றவைத்து வடித்துவிட்டு நல்லெண்ணெய்ப்படி (௨) மோர் பதக்கு கூடவிட்டு அரத்தை அதிமதுரம் முத்தக்காசு வெட்பாலையரிசி கோஷ்டம் வாய்விளங்கம் மஞ்சிட்டி திரிகடுகு கொடிவேலி ஓமம் மரமஞ்சள் கருவேப்பிக்கு கடுகுரோகணி சந்தனம் வால்மிளகு மஞ்சள் கஸ்தூரிமஞ்சள் லவங்கப்பட்டை சதகுப்பை செவியம் தக்கோலம் வெள்ளுள்ளி திப்பிலிமூலம் புனைசூரல் சிறுதேக்கு வகைக்குப்பலம் (௨) இவைகளை மைப்போலரைத்துப்போட்டு நாலுநாள் சிறுதீயாயெரித்து (௫)ம்நாள் பதமாய்க்காய்ச்சி வடித்து ஒருகழஞ்சுவீதம் உள்ளுக்குக்கொடுத்து உடம்பிற்பூசி நசியமிடத்தீரும்.

தேகம் குளிர்காய்ச்சலுக்கு மட்டுக்கொள்ளும் எண்ணெய்,

வெருகினிலை-தண்டு-கிழங்கு-வில்வவேர்-சாரணைவேர் - சிற்றாமுட்டி-பேராமுட்டி-அமுக்கரா-விஷ்ணுகாந்தி - வகைக்குப்பலம் (௩) இடித்துப் பதக்குநீர்ற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து வடித்ததில் நல்லெண்ணெய்ப்படி (௨) விட்டு ஆவின்பால் மோர் வகைக்குப்படி (௨) மரமஞ்சள் அதிமதுரம் மஞ்சிட்டி விலாமிச்சம்

வெண் நன்னாரிவேர் அரத்தை சந்தனம் வில்வப்பழச்சதை கோஷ்டம் திப்பிலி திரிபலை தேவதாரம் அதிமதுரம் வகைக்குக்கழஞ்சு(க)இவைகளை பாலாத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து உள்ளுக்குக்கொடுத்து மேலுக்கும்பூசி நசியமிட்டுத்தீரும்.

சாத்திரிக்குத்தயிலம்,

வெருகங்கிழங்கு-சமூலம் வகைக்குப்பலம் (ய) கருந்தொட்டி-அமுக்கரா-சித்திரமூலம்-சத்திச்சாரணை இலைகளின்வேர் வகைக்குப்பலம்(க)இவைகளையிடித்து(ச)மரக்கால்தண்ணீரிற்போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து வடித்து அதில் ஆவின்பால் வெள்ளாட்டுப்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி (உ) கூட்டிவிட்டு நன்னாரி சித்திரமூலம் கொத்துமுட்டி வில்வம்வேர் அமுக்கரா இலைகளின்வேர் சுக்கு லவங்கம் இந்துப்பு குக்கில் சாரணைவேர் அதிமதுரம் கோஷ்டம் வசம்பு முத்தக்காசு சிற்றரத்தை தேவதாரம் மஞ்சள் திப்பிலி சந்தனம் விளாமிச்சம்வேர் மிளகு லவங்கப்பத்திரி வகைக்குக்கழஞ்சு (க) வெள்ளாட்டுப்பால் விட்டரைத்துப்போட்டு மெழுகுபதமாய்க்காய்ச்சிவடித்து ஒன்றைவிட்டொருநாள் ஸ்நானஞ்செய்துவர விடாச்சுரம் வாதசுரம் பித்தசுரம் விஷசுரம் அசாத்யமாறல் இரண்டாமாறல் ஒன்றைவிட்டமாறல்சுரமுந்தீரும்,

வெருகங்கிழங்கு பலம்(அச) அமுக்கராவேர் பலம்(கய) சித்திரமூலம் கொத்துமுட்டி வகைக்குப்பலம்(ய)இவைகளையிடித்து நாலுமரக்கால் காடிதண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து வடித்து அதில் நல்லெண்ணெய் ஆவின்பால் வகைக்குப்படி(க) சாதிக்காய்-திப்பிலி-சிறுதேக்கு தேவதாரம் முத்தக்காசு கோஷ்டம் அதிமதுரம்-சிறுநாகப்பூ-சடாமாஞ்சில் சந்தனம் விளாமிச்சம்வேர் ஏலம் லவங்கப்பட்டை தாளிசபத்திரி சீரகம் வகைக்குப்பலம்(வ இவைகளை ஆவின்பாலில் அரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவர அஸ்திசுரம் மேகசுரம் பாண்டுரோகமுந்தீரும்,

வெருகங்கிழங்கு-விராகனிடை(உய)அதின்கல்கம்விராகனிடை(ஈ)இவைகளையிடித்து(ஞ)படி காடித்தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்திறுத்ததில் நல்லெண்ணெய் படி(ஓ)கூட்டி கொம்பரக்கு சதகுப்பை சிற்றரத்தை வகைக்குவிராகனிடை(இ)அரைத்துப்போட்டுப் பதமாய்க்காய்ச்சிவடித்து சுரம்வருகிற தினத்தில் சுரம்வருமுன் தயிலத்தேய்த்து சுரம்வந்துவிட்டபின் அரைப்பெட்டி வெந்நீரில்முழுகத்தீரும் உப்பு புளி புகையிலைதள்ளவும்,

134

புளியிலைச்சாறும் நல்லெண்ணெயும் ஓரளவாய்க்கலந்து கா
ய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்,

கொம்பரக்கு பலம் ௨௬) அமுக்கரா வெந்தோன்றி சிற்றாமு
ட்டி நன்னாரி வில்வம் வெருகங்கிழங்கு விஷ்ணுகாந்தி சீந்தில்செ
ந்தொட்டி ஆதளை வகைக்குப்பலம் ௩) இவைகளை யிடித்துத்
ண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்து வடித்து அதில்
நல்லெண்ணெய் படி ௩) கூடவிட்டு முத்தக்காசு சதகுப்பை ஆத்
தைச் சந்தனம் கடுரோகணி மஞ்சள் பெருங்குரும்பை தேவதா
ரம் சிறுநாகப்பூ மஞ்சிட்டி மதுரம் கோஷ்டம் நன்னாரிவேர் வி
லாமிச்சம்வேர் சித்திரமூலம் கொன்றைப்பட்டை மூக்காவலைசே
ரி வகைக்குக்கழஞ்சு ௨ இவைகளை யரைத்துப்போட்டுக் காய்ச்சிவ
டித்து முழுகிவர எரிவாட்சி தீரும்.

நல்லெண்ணெய்ச் சீரசெங்கழுநீர்ச்சாறு வகைக்குப்படி (௧)
ஒன்றாய்க்கலந்து அதில் அதிமதுரம் கோஷ்டம் லவங்கப்பட்டை
ஏலம் மஞ்சிஷ்டிவேர் கடுரோகணி சண்பகப்பூ சந்தனம் விலா
மிச்சம்வேர் தண்ணீர்விட்டான்கிழங்கு முத்தக்காசு தாமரைவளை
யம் கஸ்தூரிமஞ்சள் செங்கழுநீர்க்கிழங்கு நன்னாரிவேர் வெட்டி
வேர் வகைக்குவிராகனிடை (௫) இவைகளை அரைத்துப்போட்டுக் கா
ய்ச்சிவடித்து முழுகிவர விடாச்சுரம் வெப்பு தாகம் சன்னிக்காய்
ச்சல் முதலான சகலசுரமுந்தீரும்.

பெருங்கிழங்கு சிற்றாமுட்டிவேர் அசுவகெந்திக் கிழங்கு சு
க்கு வில்வவேர் செங்கழுநீர்க்கிழங்கு தேவதாரம் சந்தனக்கட்டை
விஷ்ணுகரந்தைவேர் அதிமதுரம் வகைக்குப்பலம் (ம) கொம்பரக்
கு பஞ்சலவணம் கொடிவேலிவேர் சிறுதேக்கு நாவிக்கிழங்கு ம
ருட்கிழங்கு தாளிசப்பத்திரி சடாமாஞ்சில் கடல்நுரை ஓமம் கு
ராசாணிஓமம் சாதிப்பத்திரி புளியம்பொருக்கு இலுப்பைப்பொ
ருக்கு சிறுநாகப்பூ சாதிக்காய் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி
சிற்றாமணக்கிலைவேர் செவ்வள்ளிக்கொடி புளியமாற்கிழங்கு வ
கைக்குப்பலம் (வ) இவையெல்லாம் இடித்து ஒருபாண்டத்திலிட்
டு நல்லெண்ணெய்ப்படி (௰) கூடவிட்டுப் பசுமாய்க்காய்ச்சிவடித்
து அதில் பச்சைக்கற்பூரம் குங்குமப்பூ கஸ்தூரி புனுகுசட்டம்
வகைக்குவிராகனிடை (௧) பொடித்துப்போட்டு வைத்துக்கொண்டு
உள்ளாக்குக் கண்டிநிறைசாப்பிட்டும் தலைமுழுகியும்வர அஸ்திசு
ரம் சித்தசுரம் ஐயசுரம் முதலாகிய சகலசுரமும் சுகமாந்தீரும்.

பொற்சீந்தில் பலம் ௨௰ இடித்து இருபதுபடி தண்ணீரிற்
போட்டு இரண்டுபடியாய் வற்றவைத்து அதில் காடி நல்லெண்

ணெய் வகைக்குப்படி(உ)ஒன்றாய்விட்டு வெருகங்கிழங்கு அமுக்
கறாங்கிழங்கு வகைக்குப்பலம்(க)அரைத்துப்போட்டுப் பதமாய்க்
காய்ச்சிவடித்து முழுகிவர சன்னி வாதசுரம் மாறற்சுரம் விஷசுர
முதலான பலசுரங்கள்தீரும்,

உட்சுரம் காலெரிவிற்குத் தயிலம்.

[illegible]ழஞ்சாறு நெல்லிக்காய்ச்சாறு பூசுமுசுக்கைச்சாறு ஆ
வின்பால் வகைக்குப்படி அரைக்கால் நல்லெண்ணெய் படி(உ) இ
வைகளையொன்றாய்க்கலந்து அதில் அதிமதுரம்பலம் (க) அரைத்
துப்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரத்தீரும்.

சுரத்திற்கு மேற்பூசுந்தயிலம்.

அமுக்கரு சிற்றாமுட்டி பேராமுட்டி இவைகளின் வேர்ப்
பொடி கொம்பரக்குப்பொடி வகைக்குப்படி(க)இவைகளைப் பத
க்குநீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்திறுத்து அதில் நல்
லெண்ணெய் நல்லமோர் வகைக்குப்படி(க)நன்னாரி மூசிழ் அரத்
தை கோஷ்டம் அதிமதுரம் சதகுப்பை கடுகுரோகணி கச்சோல
ம் தேவதாரம் மஞ்சள் மரமஞ்சள் கஸ்தூரிமஞ்சள் பெருங்குரு
ம்பை அமுக்கராய்வேர் மஞ்சிட்டி சந்தனம் சிறுநாகப்பூ வகைக்கு
விராகனிடை(க)அரைத்துப்போட்டு மூன்றுநாள் சிறுதீயாயெரித்
து நாலாம்நாள் காய்ச்சிவடித்து உடம்பிற்தேய்த்துப் பதமிட்டு
காது மூக்கில் நசியஞ்செய்யத் தீராதசுரந்தீரும், உடல்தேறும்-இ
வைகளெல்லாம் இரசபத்தியம், புளியைச்சுட்டுமட்டாய்ச்சேர்த்
துக்கொள்ளவும்.

ஆடாதோடைச்சாறு நல்லெண்ணெய் வகைக்குப்படி(க)கல்
கத்தில் அதிமதுரம் வேப்பம்பட்டை விராலித்தோல் வேப்பம்வி
த்து பிராய்வேர் ஊமத்தம்வேர் குன்றிவேர் மேலிவேர் இந்துப்
பு இவை வகைக்குவிராகனிடை(க)இவைகளை ஆடாதோடையிலைச்
சாற்றிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து உள்ளுக்குக்கொடுத்
து மேலிலும்பூச சன்னி சுரம்தீரும்.

ஆவின்மோர்படி(ச)நல்லெண்ணெய்படி(க)சிற்றாமுட்டி
வேர்த்தோல்-கோஷ்டம் சுக்கு பொன்மெழுகு பூசுட்டைவேர்
அதிமதுரம் இந்துப்பு மஞ்சள் தேவதாரம் நன்னாரி மாகாளிக்கிழ
ங்கு பெருங்குரும்பை தக்கோலம் சித்திரக்கொடி விலாமிச்சம்வே
ர் சிறுகீரைவேர் தகரம் கச்சோலம் ஏலம் சாதிக்காய் லவங்கப்பத்
திரி சாரணைவேர் திப்பிலிமூலம் வகைக்குவிராகனிடை (க)மோரி
லரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து கழுத்திற்குக்கீழ் உடம்பிற்

றேய்க்கக் குளிர் காய்ச்சல் பித்தரூட்சை தாபசுரம் மத்தரூட்சை விஷசுரம் முதலான பலசுரங்கள்தீரும்.

சீராசெங்கழுநீர்ச்சாறு சிந்திற்சாறு வகைக்குப்படி (க) நல்லெண்ணெய் ஆவினெய் வகைக்குப்படி (உ) இவைகளைக்கலந்து அதில் அதிமதுரம் தேவதாரம் மதனகாமப்பூ கோஷ்டம் சந்தனம் மஞ்சிட்டி சதகுப்பை வெட்டிவேர் காட்டாத்திப்பூ சடாமாஞ்சில் அல்லி கொம்பாக்கு விலாமிச்சம்வேர் தாமரைக்கிழங்கு அதின் அரும்பு செஞ்சந்தனம் ஏலம் நன்னாரி கச்சோலம் லவங்கப்பட்டை லவங்கப்பத்திரி காக்கணம்வேர் நெய்தற்கிழங்கு சிற்றாமுட்டி கடுகுரோகணி பெருங்குரும்பை அரத்தை திப்பிலி வகைக்கு விராகனிடை (க) இவைகளைப் பாலிலரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து உடம்பிற்றேய்க்கச்சகலசுரமும்மேலெரிவும்தாகமுந்தீரும்

சீராசெங்கழுநீர்ச்சாறு படி (க) ஆவின்பால் நல்லெண்ணெய் வகைக்குப்படி (உ) ஒன்றாய்க்கலந்ததில் வெட்டிவேர் கடுகுரோகணி சந்தனம் அதிமதுரம் வகைக்குவிராகனிடை (ரு) இவைகளை பரைத்துப்போட்டுக் காய்ச்சிவடித்து உள்ளுக்குக் கரண்டிதினம் கொடுத்து மேனிலும்பூசிவரக் கொடியசுரம் விஷசுரம் நாட்பட்டசுரம் வெட்டைதீரும்.

மோர்படி (ச) பழங்காடிபடி (க) நல்லெண்ணெய்படி (கு) ஒன்றாய்க்கலந்ததில் சிற்றாமுட்டிவேர் பலம் (ச) இடித்து நாலுபடி தண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய்க்காய்ச்சி வடித்துவிட்டு சத்திச்சாரணை நன்னாரி குருந்தொட்டி பொன்முசுட்டை முத்தக்காசு சிந்தில் விலாமிச்சம்வேர் சிறுகீரைவேர் அமுக்கறாவேர் கோஷ்டம் மஞ்சள் இந்துப்பு அதிமதுரம் சுக்கு செவ்வள்ளிக்கொடி பொன்மெழுகு கச்சோலம் ஏலம் லவங்கம் லவங்கப்பத்திரி சாதிக்காய் சிற்றரத்தை கிராம்பு தேவதாரம் திப்பிலி திப்பிலிமூலம் முந்திரிப்பழம் கடல்நுரை வகைக்குக்கழஞ்சு (க) இவைகளை மோரிலரைத்துப்போட்டு மூன்றுநாள்வரை சிறுகொதிப்பாய்வைத்துநாலாநாள் பதமாய்க் காய்ச்சிவடித்து உடம்பிற் றேய்த்து அரைக்கடிகை சென்றபின் சிரசிற்றேய்த்து சீயக்காய் அரைப்பிட்டுத் தண்ணீரிஸ் ஸ்நானஞ்செய்ய விஷசுரம் மாறற்சுரம் வாதசுரம் வெட்டை பித்தம் காந்தல் அஸ்திசுரம் முதலானபலசுரமுந் தீரும்,

குருந்தொட்டிவேர் பலம் (ரு) இடித்து ஐந்துபடி சலத்திற்போட்டு வற்றவைத்தகியாழம்படி (க) (உஉ) பலம் கொம்பாக்கைக் கிளிக்கட்டி மூன்றுபடி சலத்திற்போட்டு வற்றவைத்த கியாழம்

படி(௭)ஐந்துபலம் அமுக்கிராவேரையிடித்து மூன்றுபடி சலத்தி
ற்போட்டு வற்றவைத்தெடுத்து படி(௮)பழையமோர் நல்லெண்
ணெய் வகைக்குப்படி (௧) இவைகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து
அதில் முள்ளிவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேர் சீந்திற்கொடி
பொன்முசுட்டைவேர் குருந்தொட்டிவேர் நன்னாரிவேர் பழுக்
கைப்பட்டை சத்திச்சாரணைவேர் சிறுசீறாவேர் கோஷ்டம் அதிம
தூரம் சுக்கு இந்துப்பு மஞ்சள் கச்சோலம் ஏலம் லவங்கம் சித்ர
ரத்தை திப்பிலிமூலம் சாதிக்காய் செவ்வள்ளிக்கொட்டி தேவதார
ம் லவங்கப்பத்திரி வகைக்குக்கழஞ்சு (௧) மோரிலரைத்துப்போட்
டு மூன்றுநாள் சிறுதீயாயெரித்து நாலாநாள் பதமாய்க் காய்ச்சி
வடித்து நாலுநாளைக்கொருவிசை தலைமுழுகிவர பலசுரம் வெட்
டைரூடுதீரும்.

கடல்நுரை மஞ்சள் கோஷ்டம் சந்தனம் பொன்மெழுகு
விலாமிச்சம்வேர் சதகுப்பை மூத்தக்காசு மஞ்சிட்டி இலுப்பைப்
பூ கடுகுரோகணி கப்பிப்பிசின் பெருங்குரும்பை வெட்டிவேர்
இந்துப்பு சுக்கு வகைக்குக்கழஞ்சு(௧)மோரிலரைத்து ஒருபடி ந
ல்லெண்ணெயிற்போட்டு ஆறுபடி தண்ணீர்விட்டுக்காய்ச்சி உட
ம்பிற்றேய்க்க சுரம் காந்தல் வாய்நீரூறல் வரக்ஷிதீரும்;

வெருகங்கிழங்கு தண்டு இலை சமூலம் துலாம்(௧) சிற்றாமுட்
டி பேராமுட்டி சிந்தில் வில்வவேர் அமுக்கிராவேர் விஷ்ணுகராந்
தை சாரணைவேர் வகைக்குப்பலம்(௫)இவைகளையிடித்து(௪) மரக்
கால் தண்ணீரிற்போட்டுக் குறுணியாய் வற்றவைத்து வடித்து அ
தில் குறுணி நல்லெண்ணெய் தயிர்த்தண்ணீர்படி (௪) கூடவிட்டு
வெட்டிவேர் அதிமதூரம் சந்தனம் தேவதாரம் மூத்தக்காசு குங்
கிலியம் பிராய்வேர் குக்கில் மஞ்சிஷ்டிவேர் திரிகடுகு வகைக்குப்
பலம்(௧) அரைத்துப்போட்டுக் காய்ச்சி உள்ளுக்குக்கொடுத்துமே
லும்பூச சீதசுரம் பூதசுரம் முட்டைதீரும், இவைகளெல்லாம் இ
ச்சாபத்தியம், புளியைச்சுட்டு மட்டாய்க்கூட்டலாம்;

சுரத்திற்குநசியம்.

குளிர்சுரம் அடிக்கும்போது சிறுதும்பையிலையையும் மிள
கையும் ஒன்றாய்ச்சிதைத்து நாசியில் நசியம்பண்ணத்தீரும்.

திப்பிலியையும் வெலிப்பருத்தியிலையையும் ஒன்றாய்ச்சிதைத்
து நாசியில்நசியமிட்டாலும் அல்லது இந்துப்பு உள்ளி கொம்ம
ட்டிப்பாகலிலை இவைகளை ஒன்றாய்ச்சிதைத்து நாசியில் நசியமிட்டா
லும் சுரம்தாழ்ந்தீரும்.

காசமுதலானதற்கு லவங்காதிமாத்திரை.

லவம் கிராம்பு சுக்கு திப்பிலி முந்திரிப்பழம் பேரீச்சம்பழம் தாளிசபத்திரி அதிமதுரம் கோஷ்டம் விளாமிச்சம்வேர் ஏலம் சாய்ச்சந்தனம் லவங்கப்பத்திரி சாதிக்காய் சாதிப்பத்திரி கோரோசனை இலுப்பைப்பூ சண்பகப்பூ ஓரிலைத்தாமரைவேர் வகைக்கு விராகனிடை (க) இவைகட்கு நிகர் கடுகுரோகணி கூட்டி செவ்விளநீரால் இரண்டுசாமமரைத்துப் பருத்திவிரைப்பிரமாணம் உண்டைசெய்து உட்சுரம் அதிசாரசுரம் ஆமசுரம் வெப்புச்சுரம் இவைகட்கு முலைப்பாலிலும், தோஷசுரத்திற்குக் குதிரைவாலிக் கியாழத்திலும் கொடுக்கத்தீரும், காசம் சுவாசகாசம் இரத்த காசத்திற்குத் தேனிலுங் கொடுக்கத்தீரும்.

க்ஷயகாசத்திற்குச் சீரகமாத்திரை.

நற்சீரகம் பேரீச்சங்காய் முந்திரிப்பழம் செங்கழுநீர்க்கிழங்கு திரிகடுகு கோஷ்டம் அதிமதுரம் சந்தனம் கருஞ்சீரகம் கஸ்தூரிமஞ்சள் கஸ்தூரி கிராம்பு கடுகுரோகணி சாலிராமபேதி முத்தக்காசு மல்லி சூடன் வகைக்குக்கழஞ்சு(உ) இவைநீரிலரைத்துத் துவரங்காய்ப்போ லுருட்டிக்கொண்டு முலைப்பாலி லுரைத்து ஆறு போதுகொடுக்கத்தீரும்.

காசத்திற்குக் குங்குமக்குளிகை.

குங்குமப்பூ பலம்(க) திரிகடுகு திரிபலை சாதிக்காய் கிராம்பு லவம் சந்தனம் தேவதாரம் கடுகுரோகணி வகைக்குப்பலம்(உ) இவைகளை ஆறுசாமம் எலுமிச்சம்பழச்சாற்றிலும் நாலுசாமம் இஞ்சிச்சாற்றிலும் இரண்டுசாமம் கண்டங்கத்திரிப்பழச் சாற்றிலும் ஆட்டிச் சிறுபயறளவு உண்டைசெய்து கொண்டு அநுபானங்களின்றி குளிர்சுரமுதலான சன்னிகாசந்தீரும்.

காசத்திற்குக் கோரோசனைக்குளிகை,

கோரோசனை குங்குமப்பூ பச்சைக்கர்ப்பூரம் ரசசெந்தூரம் ரசகர்ப்பூரம் லவம் அப்பிரகசெந்தூரம் கிராம்பு கோஷ்டம் சாதிக்காய் அக்கிரகாரம் வகைக்குக்கழஞ்சு(க) சந்தனக்கியாழத்தில் (ச) சாமமும் சண்பகப்பூக்கியாழத்தில் (உ) சாமமும் குங்குமப்பூக்கியாழத்தி லிரண்டுசாமமுமரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து திப்பிலி தூளர்த்தி முலைப்பாலில்விட தொண்டைக்கட்டு இலேஷ்ய காசம் சன்னி-ஷ-ம்-மண்டைச்சூலை நீர்த்தோஷம் மயக்கம் இ வைத்மகாரம் வலிப்பிவைதீரும்.

சுரத்திற்குச் சஞ்சீவிமாத்திரை.

இரசசெந்தூரம் லிங்கம் சாரம் பூரம் கெந்தி ரசபஸ்பம் நாவிக்கிழங்கு இராம்பு பத்திரி ஏலம் திரிகடுகு திரிபலை வாளம் வகைக்குப்பலம்(உ) நிம்பக்காய்ச்சாற்றில் ஒருசாமம் முலைப்பாலில் இரண்டுசாமம் குமரிச்சாற்றில் நாலுசாமம் கொன்றைப்பூச் சாற்றில் நாலுசாமம் அட்டிக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து முலைப்பாலிலாவது தேனிலாவது கொடுக்க சன்னிதோஷம் சுரங்கள் தீரும்

சுரத்திற்கு ரசகர்ப்பூரமாத்திரை.

சுத்திசெய்த ரசகர்ப்பூரம் பலம்(வ) வாளம்பலம்(க) அழிஞ்சி வேர்ப்பட்டை கொடிவேலிவேர்ப்பட்டை வகைக்குப் பலம்(வ) கையாந்தகரைச்சாற்றிலும் முலைப்பாலிலும் வகைக்கு(உ) சாமம் அட்டித் திவலைப்பிரமாணம் மாத்திரைசெய்துகொண்டு தேனிற் கொடுக்க சகலசுரமுந்தீரும்.

சுரத்திற்கு இரதமாத்திரை.

சுக்கு-மிளகு-திப்பிலி-கடுக்காய்-இந்துப்பு-கடுகுரோகணி இரசபஸ்பம் வகைக்குக்கழஞ்சு(க) வாளம்கழஞ்சு(எ) இவைகளை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்து மிளகுப்பிரமாணம் உண்டைசெய்து ஒருண்டையை அனுபானத்திலிட விரேசனமாகிச் சுரந்தீரும் பேதி அதிகமானால் குளிர்ந்ததண்ணீர் கொள்ளவும் மீதிருல்பாலும் அன்னமுங்கொள்ளநிற்கும்,

வேறு.

வெள்ளைக் காக்கணன்விரை திரிபலை மிளகு திப்பிலி இரசம் கெந்தகம் வாய்விளங்கம் இவைகளைச் சமமாய்க்கரிப்பான்சாற்றில் ஒருநாளரைத்து சுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து இஞ்சிச்சாற்றிலிட சுரந்தீரும்.

கெந்தகமும் மிதிபாகலிலையும் ஓர்நிறையா யரைத்துப் பாசிப்பயறளவு உண்டைசெய்து காற்பல மிளகை உடைத்துப்போட்டுக் கியாழஞ்செய்து அதில் மேற்படி மாத்திரையை உரைத்துக் கொடுக்கக் குளிர்சுரந்தீரும்.

சுரத்திற்குலிங்கமாத்திரை.

லிங்கங்கழஞ்சு-க-திப்பிலி கழஞ்சு-உ-ஆவின்பாலாலரைத்து பயறளவு உண்டைசெய்துகொண்டு சுக்குக்கியாழத்திலிட சகலசுரமுந்தீரும்.

சாதிலிங்கம் தாளகம்-மனோசிலை வகைக்குவிராகனிடை(௧)காட்டுக்கரணைக்கிழங்கிலாவது கருக்கரணைக்கிழங்கிலாவது பொதிந்து சீலைமண்செய்து இரண்டுபடி உமிக்குட்புடம்போட்டு வெளிப்படுத்திச்சாற்றி லொருநாளரைத்துப் பாசிப்பயறும்போ லுண்டைசெய்து சுக்குக்கியாழத்தில் ஒருண்டைவீதம் ஐந்துவேளை உப்புப்புளிதள்ளிக்கொடுத்து (௩)ம்நாள் அல்லது(௭)ம்நாளில் தலைக்குத்தண்ணீர்விட்டு உப்புவறுத்துக்கூட்டி-௰-ம் நாள் தயிலஸ்நானஞ்செய்வித்து புளிகூட்டிக்கொள்ளவும் மருந்தில்விறு அதிகரித்தால் சிறுகீரைவேரும் மிளகும் ஓர்நிறையாய்க் கியாழஞ்செய்து மூன்றுபோதுகொடுக்கமாறும்.

அர்த்தநாரீஸ்வரம்,

அப்பிரகம் நாகம் வெங்காரம் தாளகம் சாதிலிங்கம் கல்நார் பேரீச்சம்பழம் இவைகளை ஓர்நிறையாய்க் கொம்புபாகலிலைச்சாற்றில் ஒருநாளாட்டி வில்லைதட்டி புலர்த்திக் குகையிலிட்டுச்சில்லுப்போட்டுமூடிச் சீலைமண்செய்து மணல்மறைவிற் புடமிட்டுக் கள்ளிப்பாலிலும் எருக்கம்பாலிலும் அரைத்துலர்த்திப் பொடித்துச் சிமிளிலடைத்துக்கொண்டு பணவிடையற்பம் சுடுதண்ணீரிற்கொடுக்க வலதுபுறத்திற்சுரம்விடும் குளிர்ந்ததண்ணீரிற்கொடுக்க இடதுபுறத்துச்சுரம்விடும்

தாளகத்தைச் சிறுதுண்டுகளாய்வெட்டி சுண்ணாம்புக்குட் பதித்துப்பாலைவைத்து தேசினீர்விட்டு நீற்றியபின் துணியில்முடிந்து சுண்ணாம்புத்தண்ணிக்குள் தொங்கவைத்து இரண்டுசாமமெரித்துச் சுத்திசெய்த தாளகம் விராகனிடை(௩)புகையூரல் நீற்றுத கற்சுண்ணம் வகைக்குவிராகனிடை(௧)இவைகளை முலைப்பாலி லிரண்டுசாமமரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து வேளையொன்றுக்கு ஒருண்டையாக இரண்டுவேளை வெல்லத்திற்கொடுத்து(௩)நாள் உப்புப்புளிதள்ளிப் பத்தியமாயிருந்து எட்டாம்நாள் ஓமந்தேய்த்து ஸ்நானஞ்செய்து உப்பு வறுத்துக்கூட்டவும்-சுரம்-௩௪-ம்-தீரும்

வேறு.

சுத்திசெய்ததாளகம்-நேர்வாளம்-காவிக்கல் வகைக்குப்பலம்(௧)இலந்தை கவிழ்தும்பை நல்லதும்பை பெருந்தும்பை இலைகளின்சாற்றால் வகைக்கு ஒருசாமமாட்டி மிளகுபோ லுண்டைசெய்துகொண்டு குளிர்சுரத்திற்கு அரைபடி மோரைமுறித்து அந்தத்தெளிவுதண்ணீரிலும், அதிசாரசுரத்திற்கு சுக்குக்கியாழத்திலும் பழஞ்சுரத்திற்குப் பேய்ப்புடலுஞ் சுக்குஞ்சேர்ந்த கியாழத்திலும் சிலேத்மசுரம் இருமலுக்கு தேனும் திப்பிலிப்பொடியுஞ்சேர்த்து

அதிலும், தாபசுரத்திற்கு விஷ்விரோகம் சுக்குச்சேர்ந்த கியாழத்திலும், அஸ்திசுரத்திற்கு பசுவின்நெய்யிலும், வாதசுரத்திற்கு வாதமடக்கிகியாழத்திலும் ஒருகுளிகை கொடுக்கத்தீரும். மூன்றுநாளைக்கு உப்புபுளிதள்ளவும்-பேதியதிகரித்தால் மா-ஆல்-இலுப்பை இலைகளின்கொழுந்தை வகைக்கொருபிடியரைத்து இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அழுக்காய்க்காய்ச்சிக்கொடுக்க பேதிநிற்கும்.

தாளகம்-கெந்தி-ரசம்-கருநாவிக்கிழங்கு-வெங்காரம்-திப்பிலி மூலம் சுக்கு கடுக்காய்-நெல்லிமுள்ளி - வெள்ளைப்பூண்டு இவைகளை ஜெயபாத்தகைச்சாற்றில்(௩)சாமம் அரைத்து மிளகுப்பிரமாணம் உண்டைசெய்து ஒருநாளைக்கு மூன்றுவேளை மூன்றுஉண்டை பசுவின்நெய்யில்விட சுரம் தீரும்.

ஷெ. தாளகம்-ரசம்-கருநாவிக்கிழங்கு-காந்தம் - கருங்கோரை வேர் இவைகளை யோர்திவாயா யெலுமிச்சம்பழச் சாற்றிலரைத்து உளுந்துப்பிரமாணம் உண்டைசெய்து கற்றாழைமடற் சாற்றிலாவது முலைப்பாலிலாவது இருஉண்டைகொடுக்க நாலுநாழிகையில் சுரந்தீரும்.

சுரகோடாரி.

வெள்ளைப்பாஷாணம் கௌரிபாஷாணம் அகம் வகைக்குவிராகனெடை(௧)இவைகளைக் கல்விலிட்டு மிளகுகியாழத்தில்(௨)சாமம் பொரித்து எலுமிச்சஞ்சாற்றிலும் வெற்றிலைச்சாற்றிலும் வகைக்கிரண்டுசாமமரைத்து உளுந்தளவு குளிகைகட்டி நோய்-இஞ்சி-வெந்நீர்-சாறுகளில் வேளைக்கு இருஉண்டை வீதம்(௩)வேளைகொடுக்கச் சகலசுரமுந்தீரும்(௩)நாள்வரை புளிதள்ளி உப்பு வரத்து நீக்கவும்-ஆம்-நாளில் தலைக்குத்தண்ணீர்விட்டுப்புளிகூட்டவும்.

நாலுமுறைச்சுரத்திற்கு மகேஸ்வரமாத்திரை.

மகேஸ்வர-சுக்கு-மிளகு-திப்பிலி-திப்பிலிமூலம்-இவைகள் வகைக்குப்பலம்(௧)துவரிச்சாறு-வெள்ளாட்டுக்கோமியம்-இவைகளில் வகைக்கொருசாமமரைத்து மிளகுபோலுண்டைசெய்து சுரத்திற்கு வெந்நீரிலும் சன்னிக்கு முட்டைமேனிச்சாற்றிலும் வாயுக்கும் கபத்துக்கும் குளிர்ந்ததண்ணீரிலும் கொடுக்கத்தீரும்.

சாத்திரத்துப்பச்சைக்கர்ப்பூரவுண்டை.

ரசபற்பம் கெந்தகம் பச்சைக்கர்ப்பூரம் லவங்கம்-சாதிக்காய்-நேர்வாளம்-இவைகளை பொற்றிலைக்கையாந்தகரைச் சாற்றிலரைத்து உளுந்துப்பிரமாணம் உண்டைசெய்து ஒருஉண்டை வீதம் சர்க்கரைகலந்துசாப்பிடச் சகலசுரமும் விட்டுத்தீரும்.

* இரண்டாமுறை நான்முறை-குளிர்சுரமுதலான
சகலசுரத்திற்கும் அஞ்சனம்.

இரண்டுமேழுக்கு சிற்றப்பூலை எலுமிச்சம்பழச்சாற்றால் மைப்போலரைத்து மண்வெட்டியின் பின்புறத்தில் அப்பிவைத்துவிளக்கில் நல்லெண்ணெய்விட்டுத் தீபமேற்றி வைப்பற்றவைத்து அதை வெங்கலத்தட்டில் பின்புறத்திலிட்டுக் கொஞ்சம் நல்லெண்ணெய்விட்டு இருப்புக்குழியாற் கரிப்போலரைத்துக் கொம்புச்சிமிழிலடைத்துக்கொண்டு பணவிடை கண்ணிற்றீட்டத் தீரும்

சுரம்-குளிர்சுரம்-வயிற்றுவலி-பொருமல்
முதலான வியாதிக்கு விரேசன மாத்திரை.

நிர்வேளு-கடுக்காய்-திருகோக்ளி-இந்துப்பு - இரசபற்பம்-வகைக்குக்கழஞ்சு(க)சுத்திசெய்த நேர்வாளப்பருப்பு கழஞ்சு(எ) எலுமிச்சம்பழச்சாற்றால் மைப்போலாட்டி சிறுசுண்டைக்காய்ப் பிரமாணம் உண்டைசெய்து வெந்நீரிற்கொடுக்கவும், பேதியதிகப் பட்டால் ரோக்காரர்களுக்கு வசம்பைச்சுட்டு தேனில் மத்தித்துக் கொடுக்கவும், மற்றவியாதிக்காரர்களுக்கும் , பாலும் அன்னமுங் கொடுக்கத்தீரும்,

சுரநோயின் நட்சத்திரங்களின்பலனறிய.

ஆதிரையுஞ் சோமவாரமுங்கூடியதினத்திலாவது திருவோணமும் அருக்கனுங்கூடியதினத்திலாவது சனியுங்கார்த்திகையுங்கூடியதினத்திலாவது விசாகமும் வெள்ளியுங்கூடியதினத்திலாவது, இரேவதியும் புதனுங்கூடியதினத்திலாவது செவ்வாயுஞ்சித்திரையுஞ் சேர்ந்ததினத்திலாவது சுரங்கண்டால் மரணமாம்.

சுரம் முற்றிற்று.

சன்னி.

சன்னி பதின்மூன்றின் நாமங்கள்.

விருத்தம்.

கூறுமென்றடத்திற் சந்திகம் அந்தகன்றான் .... *
ருமையானசீதாங்கம் உருத்திராக்கன் .... *
தேறுமென்சித்தவிப்பிரமமுண்டாம் .... *
தெரியாதகண்டகுப்சம் கருணிகாகன் .... *

மீறுமேன்விக்கநாதன்பொக்கநேத்திரன்....... ....*
மிதமானபிரீத்தட்டிமுருக்கிதாபம்...... ... .*
ஆறுமேன்பிரலாபசன்னிபதின்மூன்றாம்... ... .*
அப்பனே அகஸ்தியனாருளினாரே.... ....*

தந்திரிகன்-அந்தகன்-சிதாங்கம்-உருத்திரதாகம் -சித்தவிப்பிரமை-கண்டகுப்சம்-கருணிபாசம்-விக்கநாதம் - பொக்கநேத்திரம் பிரீத்தட்டி-முருக்கிதாகம்-பிரலாபம் முதலானசன்னிகள் தேகத்திலுற்பத்தியாகிறது.

அசாத்தியசன்னிகள்.

மேற்படிசன்னிகளில்-அந்தகன் - சிதாங்கம் - கண்டகுப்சம்-பொக்கநேத்திரம்-அபிணிபாசம்-உருத்திரதாகம்-பிரீத்தட்டி இவைகளை அசாத்தியமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அந்தகசன்னிக்குணம்.

அகோரமாய்ச்சுரங்காயும் மெய்வியர்க்கும் வாய்நீர்வடியும்விக்கல் வாந்தி இருமல் தாகம் பிரமை பிரதாபம் வீக்கம் நடுக்கல் ஆராட்டங்காணும் தலைநடுக்கும் சுற்றும் வயிறெரியும் பித்தம் பலவீனத்தை யுண்டாகும்-௰ நாளிற்கொல்லும்.

நிவர்த்தி.

கொடுவேலிவேர் பலம் - ௨ - வாய்விளங்கம் சுக்கு திப்பிலி மிளகு வகைக்குப்பலம் -௨- இரண்டுபடிதண்ணீரிற்பெய்துக் கால்படியாய்க் கியாழஞ்செய்து மூன்றுவேளைகொடுக்க அந்தகசன்னி முதலான ௰௩-சன்னியுந்தீரும்.

கடுக்காய் நெல்லிக்காய் தான்றிக்காய் கொத்தமல்லி வாய்விளங்கம் குறுந்தொட்டிவேர் முத்தக்காசு ஆகிய இவைகளை வகைக்குப்பலங்கால்விதம் இடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டு நாலிலொன்றாய் வற்றவைத்துக்கொண்டு அடிக்கடி கொடுத்துக் கொண்டிருந்தால் தாகம் வாந்தி விக்கல்தீரும்.

நெரிஞ்சி நொச்சி சித்திரமூலம் சுக்கு பேய்ப்புடல் மிளகு திப்பிலிமூலம் செவியம் வகைக்குப்பலம்-௧ - இடித்து ஒருபடி சலத்திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத் தீரும்.

சிதாங்கசன்னிக்குணம்.

உடல் நொந்துகுளிரும் நடுங்கும் வியர்க்கும் வயிறு பொருமியிளைத்துக்கழியும் தாகம் பிரதாபம் விக்கல் வாந்தி அயர்வு சோபம் மூர்ச்சையுண்டாம் பலன்கெடும் குரற்கம்மும் இருமும்

இளைக்கும் பெருமூச்சுக்காணும் எங்கும் நெஞ்சிற்கபமடைக்கும் எழுந்துவிழுந்துதள்ளாடும் -௰௫-நாளில்மரணம்

நிவர்த்தி

திப்பிலிதிப்பிலிமூலம் செவியம் சித்திரமூலம் மிளகு சுக்கு இலவம்வேர் கடுகுரோகணி உமரிவேர் பற்படாகம் சிறுதேக்கு பேய்ப்புடல் வகைக்குப்பலம் -௨- விதமிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு-௮-படியாய்வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

நன்னாரிவேர் வில்வவேர் முத்தக்காசு கடலிராஞ்சிப்பட்டை பேய்ப்புடல் செங்கழுநீர்க்கிழங்கு பற்படாகம் பேராமுட்டி சிறுதேக்கு செவியம் வகைக்குப்பலம் -௧ நாலுபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வேளையொன்றுக்கு அரைக்காற்படிவீதம்-௬-போதுகொடுக்கத்தீரும்,

ஏலம் லவங்கம் சந்தனம் பூசணித்தண்டு சுரைத்தண்டு நாநாணிவேர் சுக்கு வகைக்குப்பலம் -௨-விதமிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்,

கண்டகுச்சசன்னிக்குணம்.

சுரங்கொரோமாய்க்காயும்-உடல்புண்போலுளையும்-நடுங்கும் நெஞ்செடுக்கும்-தலைவலிக்கும்-நித்திரைகொள்ளும்- தொண்டைநாவுலர்ந்து முள்ளுண்டாகிப் புண்ணாகும் பல்லீறில்இரத்தம்வடியும் வயிறுகழிந்துபொருமும்-பொய்பிதற்றும்-தாபசோபம்-பிரதாபம்-வாந்தி-விக்கல்-கபம்-மூச்சு-இளைப்புக்காணும் கண்ணுங்காதும் கம்மும் எழுந்து அழுது களைத்துவிழும்-௰௫-நாளிற்கொல்லும்.

நிவர்த்தி.

திரிகடுகு-திரிபலை-வெட்பாலையரிசி - கடுகுரோகணி - ஆடாதோடைவேர்-மஞ்சள்-மரமஞ்சள்-இவைகளை - வகைக்குக்காற்பலம் விதமிடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

கடுக்காய்ப்பூ-நாயுருவிவேர்-முத்தக்காசு-நிலவேம்பு- சிறுதேக்கு-மஞ்சள்-மரமஞ்சள்-கடுகுரோகணி-கோஷ்டம் - கொடிவேலி செவியம்-திரிகடுகு-பெருங்குமிழ் - நெல்லிமுள்ளி - தான்றிக்காய் தேவதாரம்-பிரமி-வசம்பு-இவைகளை முன்போற்கியாழஞ்செய்து கொடுத்து-திப்பிலியும்-நாயுருவியிலையும் ஒன்றாய்ச்சிதைத்து நாசியில் நசியமிடத்தீரும்.

நொச்சியிலை-சந்தனம்-பற்படாகம்-கடுகுரோகணி- வெட்டிவேர்-விலாமிச்சம்வேர்-பச்சை-நாராசரத்தை-பாவட்டை -நன்னாரி

கவிழ்-குவ்வா இலைக்கள்ளி வேளையொன்றுக்கு (௨) பலம் வீதம் இடித்து இரண்டுபடிதண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

சித்திரமூலம்-உமூரிவேர்-இலவவேர்-திப்பிலி-சுக்கு-குங்கிலியம்-செவியம்-திப்பிலிமூலம்-வகைக்குப்பலம்(௨)வீதம் இடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்.

பொக்கநேத்திரசன்னிக்குணம்.

உடல்சிக்காயும்-விழிபருத்துக்காணும் - அதில் பனித்துளி போல் நீர்வடியும் பார்வைமங்கும் இருகாதுமடைக்கும் பொய் பிதற்றும்-பிரமைகொள்ளும்-விக்கல் தாகம் - சுவாசப்புண்டாகும் (௮)நாளிற் கொல்லுமிது.

நிவர்த்தி.

ஆடாதோடை-சந்தனம்-தூதுளை-சுக்கு-இலுப்பைப்பூ-சிற்றாமுட்டி-சிறுவழுதலை-ருத்திராக்ஷ-பற்பாடகம்-இலைக்கள் வகைக்குஒருபலவீதமிடித்து நாலுபடி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்க்கியாழஞ்செய்து வேளையொன்றுக்குக் காற்படிவீதம் (௭) போதுகொடுக்கத்தீரும்.

பாதிரி சுக்கு எருக்கம்வேர் பற்பாடகம் பேய்ப்புடல் சித்திரமூலம் கடுக்காய் வகைக்குப்பலங் கால்வீதமிடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும் இச்சாபத்தியம்;

அபின்னியாசசன்னிக்குணம்.

மூர்ச்சைதாடியும் படபடத்துநிற்கும் அகோரமாய்ச் சொக்காயும் முகத்தெளிவாயு மினுமினுப்பாயுமிருக்கும் சரீரநோகும் நித்திரை தாகம் வியர்வை புலம்பல்களும் கண்ணைப்பிக்கும் காது அடைக்கும் நாசிகறுக்கும் வாய்பேசாது மென்ருமக் கண்டாகும் தொண்டைகட்டும்(௧௩)நாளிற்கொல்லும்,

நிவர்த்தி,

வாதமடக்கி நிலவேம்பு சுக்கு வசம்பு ஓமம் திப்பிலி பேய்ப்புடல் பற்பாடகம் இலைக்கள் வகைக்குக் காற்பலவீதமிடித்து (௧)படி நீரிற்போட்டு அரைக்காற்படியாய்க்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்,

வாதமடக்கிவேர் சம்மந்திராய்வேர் தேசாவரம் கோஷ்டம் சடாமாஞ்சில் சித்திரகோரை சிறுதேக்கு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் இலைக்கள் மூன்றிலொன்றுபாகமாக்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

உருத்திரதாகசன்னிக்குணம்,

வாய்காயும் உதடுலரும் நாக்கும் விழியும் சிறுக்கும் அதிக்குள்ளும்போதுமிருக்கும் நெஞ்சிற்கபங்கட்டி யிருமும், இளைக்கும் தொண்டைநோகும் ஆகம்நடுங்கும் கழுத்தும் நெற்றியும் வியர்க்கும் தாகம் விக்கல்காணும் பிரமைகொள்ளும் அசையமிடும் இரைப்புடன் போகஞ்செய்யவிரும்பும்(ய)நாளிற்கொல்லும்,

நிவர்த்தி,

இலந்தையிலை நன்னாரி சிந்திற்றண்டு வெட்டிவேர் விலாமிச்சம்வேர் பூநாகம் முசுறுமுட்டை ஆடாதோடை முத்தக்காசு சுக்கு பேய்ப்புடல் இவைகளை முன்போற் கியாழஞ் செய்துகொண்டு மேற்படி கியாழமும் இஞ்சிச்சாறும் ஓரளவா யொன்றாய்க்கலந்து அதில் கொஞ்சம் முலைப்பாலுந் திப்பிலிப்பொடியும் சேர்த்துக்கொடுக்கத்தீரும்.

வேப்பம்பட்டை சுக்கு உழுநீவேர் உப்பிலிவேர் சித்திரமூலம் சுக்கு சம்பங்கி வகைக்குப்பலம்(வ)விதமிடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும் இதுசாத்தியம்,

பிரத்தட்டிசன்னிக்குணம்,

ஆமோசரமாய்ச்சுரங்காயும் உடல்பசக்கும் தலைசுழற்றும் மதுக்குறுத்தாம்போம் பிதற்றும் வயிறூதியும் உப்பிசமாகும் உதடு நாக்கு உலரும் சிறுக்கும் விரியும் இரத்தம்வரும் முகத்தைப் பார்க்கும் பெருமூச்சு இருமல் விக்கல் இளைப்பு தாகம் வாந்திகாணும் (ய)நாளிற்கொல்லும்.

நிவர்த்தி.

பூசணித்தண்டு முத்தக்காசு சுக்கு சச்சந்திராய்வேர் ஆதொ கண்டங்கத்தரி பற்படாகம் மல்லி சிறுவழுதலை இவைவகையொன்றுக்குக் கால்பலவிதம் இடித்து ஒருபடி தண்ணீரிற்போட்டுக் கியாழஞ்செய்து(ச)போது கொடுக்கத்தீரும்.

அழிஞ்சிவேர் சுக்கு சித்திரமூலம் பேய்ப்புடல் மரமஞ்சள் சிந்திற்றண்டு வகைக்குப்பலம்(வ) விதம் இடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும்

தாந்திரிகசன்னிக்குணம்.

உடல்காயும் பிதற்றும் தாகிக்கும் வாந்தியாகும் உண்ணவுவரண்டு கறுத்திருக்கும் வயிறுளையும் கழியும் மிடறுதினவாகும் காது

கோளாறு கண்ணில்நீர்வடியும் புகைந்திருளும் விழுந்தழுதுசோரும்-௨௬-நாளில்தீரும்.

திவர்த்தி.

பிரமியிலை முந்திரிப்பழம் முத்தக்காசு வசம்பு தண்ணீர்விட்டான்கிழங்கு கொல்றைப்பட்டை கடுக்காய் கடுகுரோகணி நெல்லி தான்றி சிற்றாமுட்டிவேர்ப்பட்டை பேய்ப்புடல் நிலவேம்பு திரிகடுகு கொடுவேலி தேவதாரம் இவைகளை வேளையொன்றுக்குக் காற்பலவீதமிடித்து(௨)படி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து இந்தப்படி ஆறுபோதுகொடுக்கத்தீரும்.

முத்தக்காசு-சந்தனம்-சுக்கு-பற்படாகம் - விலாமிச்சு - இருவேலி இவை வகைக்குக்காற்பலவீதமிடித்து (௪) படி தண்ணீரிற்போட்டு ஒருபடியாய் வற்றவைத்திறுத்ததில் காற்படிபொரித்தநெர்லைபோட்டுக் கஞ்சிகாய்ச்சிக்கொடுத்து அகிற்சந்தனம் குங்கிலியம் சாம்பிராணி தேற்றுவிரை தகரவிரை தேவதாரம் கர்ப்பூரம் தேன் இவைகளை யோர்நிரையாய் நெருப்பிற்போட்டுப் புகைபிடிக்கத்தீரும்.

நெல்லிப்பருப்பு-கடுக்காய்-நிலவேம்பு-பற்படாகம் கண்டங்கத்தரி கடுகுரோகணி-கச்சோலம்-சுக்கு-திப்பிலி-வகைக்குப் பலம்(வ)இடித்து ஒருபடிநீரிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

திப்பிலி-முத்தக்காசு-பேய்ப்புடல்-சுக்கு-சீரகம் கொத்தமல்லி-கூவிளம்வேர்-கொட்டாங்கரந்தை-சீந்தில்-இவைகளை-முன்போற்கியாழஞ்செய்துகொடுக்கத்தீரும்.

சித்தவிப்பிரமசன்னிக்குணம்.

உடம்புமிகநொந்து சுரங்காயும்,வாதபித்தங்கோபித்துப்பிதற்றும் மதிமயங்கும் அழுதுவிம்மும் மிகச்சிரிக்கும் ஆடும் பாடும் கண்களிக்கும் அடிக்கடி எழுந்துவிழும், அழுதுபுரளும் அலறும் அயரும் விழிக்கும் வந்தபேரை வாஞ்சைபோற் றடவி மகிழும் நெடுமூச்செய்தும்-௨௧-நாட்சென்றால்தீரும்.

திவர்த்தி.

கடுக்காய்-பற்படாகம்-கடுகுரோகணி-நிலவேம்பு-முந்திரிப்பழம்-தேவதாரம்-தண்ணீர்விட்டான்கிழங்கு-முத்தக்காசு - கொன்றைப்பட்டை பேய்ப்புடல் தேசாவரம் இவைகளை வேளையொன்றுக்குக் காற்பலவீதம் இடித்து ஒருபடிதண்ணீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி-௬-வேளை கொடுக்கத்தீரும்.

மூத்திரிப்பழம்-பற்படாகம்-நன்னாரிவேர்-முன்னைவேர் - வில்வவேர்-சந்தனம்-விலாமிச்சம்வேர்-வெட்டிவேர்- பேரிச்சம்பழம்-சுக்கு-திப்பிலி-இவைகளை வேளையொன்றுக்குக்காற்பலவீதமிடித்து-௨படி தண்ணியிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

நொச்சியிலை முன்னியிலை கஞ்சாங்கோரையிலை வெள்ளருக்கி திரிகடுகு வகைக்குப்பலம்(வ)வீதஞ்சிதைத்து ஒருபடிநீரிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

தாத்திரிகசன்னிக்குணம்.

உடல்சத்துநொந்து உளையும் குத்தும் காயும் வியர்க்கும் நாகிக்கும் தலைவலிக்கும் வாட்நீர்வடியும் இருமல் சத்தி மயக்கம் ஆசாட்டம் உழத்திகாணும் நித்திரை சற்றும்வாராது புத்திகலக்கும் பலங்கெடும் ஏழாநாளில்தீரும்,

நிவர்த்தி.

பாதிரிவேர்-உமூரிவேர்-நொச்சிவேர்-சித்திரமூலம்- கரிப்பான்-செந்தொட்டிவேர்-பேய்ப்புடல்-வகைக்குப்பலம்(வ)வீதம் இடித்து ஒருபடி தண்ணியிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

பெருவாகை-பெருக்குமிழ்-வில்வம்-முன்னை - சிற்றாமுட்டி பேராமுட்டி-சிறுவழுதலை-கண்டங்கத்தரி-நெருஞ்சி-பாதிரி இவைகளின்வேர்-திப்பிலி-இந்துப்பு-அரத்தை-சுக்கு- தாதுளை-சித்தில்-மஞ்சள்-கோஷ்டம்-தேவதாரம்-தண்ணிவிட்டான்கிழங்கு-குக்கில் வகைக்கு வேளையொன்றுக்குக் காற்பலவீதம் இடித்து ஒருபடிதண்ணியிற்போட்டு அரைக்காற்படியாய்வற்றவைத்து(க்)கொடுத்துக்கொடுத்து-நொச்சி-கருவேப்பிலை-குக்கிலியம் இவைகளைப் பொடித்துத் திரியுருட்டி நாசியிற் புகைபிடிக்கத்தீரும்.

சிறுதேக்கு-கடுக்காய்-கோஷ்டம்- சிறுவழுதலை - தேவதாரம் சித்தில்-திப்பிலி-இவைகளை வேளையொன்றுக்குக் காற்பலவீதம் இடித்து ஒருபடி சலத்திற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுத்தும் திப்பிலியை நொச்சிச்சாற்றிலரைத்துக் கண்ணிலிட்டும் திரிகடுகு கோஷ்டம் சீரகம் மஞ்சள் மரமஞ்சள் வசம்பு இவைகளை பொடியாய் வெள்ளாட்டுநீர்விட்டுச் சிதைத்துநாசியில் நசியமிடத்தீரும்.

சண்பகப்பூ-கடுகுரோகணி-சந்தனம் - செங்கழுநீர்க்கிழங்கு கோஷ்டம்-சுக்கு-விலாமிச்சம்வேர்-வெட்டிவேர்- நன்னாரிவேர்-ப

ற்பாடகம்-மஞ்சிட்டி - வகைக்குப்பலங்கால் ஒருபடி தண்ணியிற் போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

பிரலாபசன்னிக்குணம்,

உடல்நோகும்-காங்காயும்-குளிரும்-நடுக்கும்-தாகிக்கும்-விக்கலெடுக்கும்-பிதற்றும்-பொய்பேசும்-நெஞ்சிற் கபங்கட்டியிருமும் இளைக்கும் தலைசுற்றும்-எழுந்து-எங்கிருக்கும்-தள்ளாடும்-மாதர்மேலிச்சைகொள்ளும் அய்யோவென்றலப்பயபிடும்(௰௪) நாள் செல்லுற் குணமாகும்.

நிவர்த்தி,

நிலவேம்பு-வட்டத்திருப்பி மூத்தக்காசு-சிறுவழுதலை சிறுகாஞ்சொறி-கண்டங்கத்தரிவேர் சிறுதேக்கு - திப்பிலி இவைகளை வேளையொன்றுக்குக் காற்பலவிதமிடித்து ஒருபடி தண்ணியிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

கோங்கிலவம்பட்டை-சங்கவேர்-பேராமுட்டி - சிற்றாமுட்டி-கொடிவேலிவேர்-வெற்றிலைக்காம்பு-செவியம் - திப்பிலிமூலம்- வகைக்குப்பலம்(வ)விதமிடித்து ஒருபடிதண்ணியிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கத்தீரும்.

சருனியாசசன்னிக்குணம்.

உடல்சோரும் வெதும்பும் தலைவலிக்கும் தாகிக்கும் பொய்பேசும்-தலைசுற்றும் மூர்ச்சை-வாந்தி விக்கல் இருமல்காணும்- நெஞ்சூறாற்படும்-திடுக்கிட்டெழுந்திருக்கும்-நித்திரைகொள்ளாது(௯௰) நாளில்தீரும்.

நிவர்த்தி.

அரத்தை-சிறுதேக்கு-திரிகடுகு-சிறுவழுதலை மூத்தக்காசு- கடுக்காய்-கடுகுரோகணி-கோஷ்டம்-வசம்பு-கடுக்காய்ப்பூ - தான்றிக்காய்-நெல்லிப்பருப்பு-வகைக்குப்பலம்(வ)விதம் இடித்து ஒருபடிதண்ணியிற்போட்டு அரைக்காற்படியாய் வற்றவைத்துக் கொடுக்கத்தீரும் இவைகளெல்லாம் இச்சாபத்தியம்.

சிங்குகசன்னிக்குணம்.

கருங்கடுக்காய் வகைக்குப்பலம்(௫) திப்பிலி நாகேசரம் மிளகு வகைக்குப்பலம்(௧)சித்திரமூலம்பலம்(௪) செவியம் பலம்(௩) லவங்கம் திப்பிலிமூலம் வகைக்குப்பலம்(௨)கருணைக்கிழங்கு கோஷ்டம் வகைக்குப்பலம்(௮)சூரணித்துப் பனைவெல்லம் பலம்(௫)கூட்டிப் பக்குவப்படுத்தி வெல்லம்போல் கடுக்காய்ப்பிரமாணம்சாப்பிட்டுமோர்குடித்துவரத்தீரும்,

பிரண்டையை வேர்த்திச் சூரணித்து அதற்குதிகர் சர்க்கரை கலந்து திரிகடிப்பிரமாணம் ஆவின்னெய்யிற் குழைத்து நாற்பது நாள் உண்ணத்தீரும்.

கடுக்காய் கொடிவேலிவேர் வகைக்குப்பலம் (ரு) திப்பிலிமூலம் நவச்சாரம் வகைக்குப்பலம்(உ) மிளகு சீரகம் திப்பிலி வகைக்குப்பலம்(க) சுத்திசெய்த சேங்கொட்டை காணாக்கிழங்கு வகைக்குப்பலம்(அ) வெல்லம்பலம்(௪) இவைகளை உரலிலிட்டு மெழுகுபோல் இடித்துக்கொண்டு வேளையொன்றுக்குத் தான்றிக்காய்ப்பிரமாணம் ஒருமண்டலங்கொள்ளத்தீரும்.

சிவத்தநாயுருவி சமூலம்பலம்(௰) இடித்து முப்பத்திரண்டுபடி தண்ணீரிற்போட்டு எட்டிலொன்றாய் வற்றவைத்து இறுத்து அதில் ஆவின்னெய்ப்படி(க) மேற்படிபால்படி(௪) விட்டுக்கலந்து கொடிவேலிவேர்ப்பட்டை நற்சீரகம் சிவதை சேங்கொட்டை ஆவிப்பட்டை திரிகடுகு மூவிலைவேர்ப்பட்டை திரிபலை பொன்முசுட்டைவேர் வெட்டிவேர் புங்கவேர்ப்பட்டை சுத்திசெய்தவாளம் இந்துப்பு பூண்டு சிறுகாஞ்சொறிவேர் கஸ்தூரிமஞ்சள் புளியமரத்திழைக்கு பிரண்டைக்கிழங்கு மருட்கிழங்கு காட்டுக்கரணைக்கிழங்கு வகைக்குவராகனிடை-௩-வீதம் மேற்படிபாலிலரைத்துப்போட்டுச் சிறுதீயாய் நாலுநாள் எரித்து-ரு-ம்-நாள் பதமாய்க்காய்ச்சிவடித்து திரிபலையை ஒன்றாய்ச்சுட்ட சாம்பல் திரிகடியில் இசன்பிசாவிடை நெய்விட்டு மத்தித்து பத்துநாள் உண்டைவைத்திற்கொடுக்கச் சகலமூலமுந்தீரும்.

பெருந்தும்பை நொச்சி கருவேப்பீர்க்கு முருங்கையீர்க்கு சாரணைவேர் முத்தக்காசு சுக்கு திப்பிலி மலைதாங்கிவேர் வகைக்கு கழஞ்சு(ரு) இவைகளை யொன்றாய்ப்பிடித்து மூன்றுபங்கு செய்து ஒருபங்கில் இரண்டுபடி தண்ணீர்விட்டு அதில் மிளகு திப்பிலி சுக்கு பூண்டு ஓமம் வசம்பு இவைகளை வகைக்கொரு கழஞ்சுவீதம் இடித்துப்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்துக் கிழிகட்டியுமை குத்தத் திரைத்துக்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

இந்தப்படி-க-நாள் ஆவிபொழுதுசெய்ய மூலம் கட்டோடே விழுந்துபோகும்.

சுக்கு கருவேப்பீர்க்கு-வெள்ளுள்ளி-திப்பிலி-வகைக்கு விராகனிடை(ரு) இவைகளைக்கிழிக்கட்டி இரண்டுபடி தண்ணீரிற்போட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து அதில் மேற்படி மருந்தையரைத்துக்கலக்கிக் கொடுக்கவும் இந்தப்படி(ரு) நாள் ஆறும்போது சொட்ச் மூலம் கரைந்துபோகும்.

வெள்ளுள்ளி-சருவேட்பிர்க்கு சுக்கு-திப்பிலி - வேட்பிர்க்கு வகைக்குப்பலம்(உ)தட்டி இரண்டுபடிநீர்விட்டு அரைக்காற்ப டியாய்வற்றவைத்து நாளொன்றுக்கு இருவேளையாகச்சாப்பிட மூ லவேர் அற்றுப்போகும்.

ஆதளை-மருள்-காரனை-காட்டுக்கரனை-பிரண்டை- அறுகு-மி ளகரணை-நீர்ப்பூண்டு-இவைகளில்மூலம் ஆனைசமூலம் இவைகளை பேர்நிழலாயிடித்துச் சூரணஞ்செய்து திரிகடிவீதம் தேனில் (௪௰)நாள்கொள்ள சகலமூலமுந்தீரும்.

பிரண்டைசமூலமும் அவித்துலர்த்தி யிடித்து வடிகட்டின தூள்படி(வ)கருங்குருவைமாவுபடி(வ)மிளகு-சுக்கு-ஓமம்-இவைக ளைவெதுப்பிப் பொடித்ததூள் வகைக்குப்பலம்(வ) ஒன்றாய்க்கல ந்து திரிகடிப்பிரமாணம் நல்லெண்ணெயிலாவது வெண்ணெயி லாவது சாப்பிட்டுவரக் கிரப்பு சிரத்தம்முதலான சகலமூலமும் மூளையுந்தீரும்.

உகாயிலைச்சாறுபடி(க)நெல்லிக்காய்ச்சாறு படி(வ)ஒன்றாய்க் கலந்து சட்டியில்விட்டு அதில் முற்றின கருங்கோழியை சோய ம் கால் சிறகு தலை குடல்நீக்கி சட்டியிற்போட்டு நன்றாய் வேக வைத்து எலும்பையுதறி உரலிற்போட்டு சுக்குபலம்(உ) கடுக்காய் மிளகு வகைக்குப்பலம்(ரு)உள்ளி-தான்றிக்காய்-திப்பிலி-வகைக்கு ப்பலம்(க)அசமதாகம்பலம்(ந)கருஞ்சீரகம்-கடுகு வகைக்குப்பல ம்(வ)சவுக்காரம்-பெருங்காயம்-மாவிலிங்கு-சாரணை-நொச்சி-பிர ண்டை இவைகளின்வேர்ப்பட்டை வகைக்குவிராகனிடை(க)இந்த ப்பு விராகனிடை(உ)இவைகளைவெதுப்பிக் கூடப்போட்டு ஒருக ழஞ்சு சதுரக்கள்ளிவேர்ப்பாலும் உழக்கு நல்லெண்ணெயுங் கூட விட்டு கட்டப்பாரையால் மெழுகுபோ லிடித்து கொட்டைப்பா க்குப்பிரமாணம் சாப்பிட மூலமுளை அற்றுவிழுந் தப்போகும் சக லமூலமுந்தீரும்.

மாவிலிங்கு இலையையரைத்து ஒருபாக்களவு எருமைத்தயிரி ற்கலக்கிக்கொடுக்க முளைவிழும்,

ஒருநிறஞ்செய்ந்த கோழிக்குஞ்சை சிறகு குடல் நீக்கிகால்நீ க்கி அதின்வயிற்றுக்குள் காற்பலம் வெள்ளைப்பூண்டையரைத்தடை த்துப் பூசி வாழைமட்டையில்வைத்துக்கட்டி உமிக்காந்தலில் இரவிற்பு தைத்துக் காலையிலெடுத்துத்தின்னவும் இந்தப்படி மூன்றுநாளரு ந்த மூலமுளைமுதலான மற்றமூலரோகங்கள்தீரும்.

மூலமுளை-அபானக்கடுப்புக்குப் புகையுமொத்தனமும்.

முதலைப்பாயிசத்தை அனலிற்போட்டு அபானவாயிற் பு
கைபிடிக்கத்தீரும்.

வெள்ளுள்ளி பலம்(உ)அரைத்து-கூ-உண்டைசெய்து வேளை
யொன்றிற்கு ஒருண்டையாகப் புளியந்தணலிற்போட்டு பவனத்
திற்புகைபிடிக்கத்தீரும்.

மரவட்டையைபுலர்த்திப் பொடித்துத் தணலிலிட்டு மூன்று
நாள் அபானத்திற்புகைபிடிக்கக் கடுப்புத்தீரும் முளைகளையும்.

பால்சாம்பிராணியும் ஏலமுஞ்சமனாய்ப்பொடித்து நெருப்
பிற்றூவி அபானத்திற்புகைபிடிக்கத்தீரும்.

மாதுளை-ஆவாரை-நீர்ப்பூலா இலைகளின்கொழுந்தும் குழித்
தாமரையிலையும் வகைக்கு ஒருபிடி ஈருள்ளி(க)இலைகளைச்சிதைத்
து நெல்லிக்காய்ப்பிரமாணம் ஆவின்வெண்ணெய்கூட்டி இருப்
புக்கரண்டியில் வதக்கித் துணியில்முடிந்து ஒத்தனஞ்செய்துவட்
ட கடுப்புத்தீரும் முளைகருகும்.

மூலமுளைக்கும் மூலக்கடுப்புக்கும்.

மருதம்பட்டை பலம்(வ) அரைத்து அரைக்கால்படி ஆவின்
பாலிற் கலக்கி மூன்றுநாள்கொடுக்க மூலமுளைகளையும் கடுப்புந்
தீரும்.

இரத்தமூலத்திற்கும் மூலமுளைக்கும் எண்ணெய்.

பூநாகம் பலம் (ச) நாரகரந்தையிலை வில்வக்காய்ப் பிரமா
ணம் இவைகளையரைத்து அரைப்படி நல்லெண்ணெயிற்போட்டு
க் காய்ச்சிவடித்து ஐந்துநாள் இருபோது ஒருகரண்டிவீதங்கொ
ள்ளத்தீரும்.

உள்மூலம் இரத்தமூலம் சீதக்கழிச்சலுக்கு.

ஒருபிடி மூவிலையின்னிலை குருவைநெல்லரிசியுடன் கூட்டி
அரைத்து அடைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து மூன்று
நாள்கொடுக்கத்தீரும்.

மருக்கொழுந்தை குருவைநெல்லரிசியுடன் சேர்த்திடித்து சுக்
கு மிளகு திப்பிலி பூண்டு ஓமம் வகைக்குப்பலம்அரைக்கால்பொ
டித்துப்போட்டுப்பிசைந்து களிக்கிண்டியாவது ஆவின்நெய்யில்
அடைதட்டியாவது மூன்றுநாள் கொடுக்கத்தீரும்.

மூலரோகம் மேற்படிநூலுக்கு.

காட்டுக்கருணைக்கிழங்கு கழஞ்சு-௰ சுக்கு கழஞ்சு(௪)கொடி வேலிவேர் பிஞ்சு வகைக்குக்கழஞ்சு(௨)இவைகளைச் சூரணஞ்செய்து கழற்காய்ப்பிரமாணம் நல்லெண்ணெயிற் குழைத்து இருபோது ஏழுநாள் கொள்ளத்தீரும் புளிதள்ளவும்.

உள்மூலம் பிறமூலத்திற்கு.

மூக்குரட்டை யில்லையை எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்துக் கருங்குருவைமாவில் பிசைந்து அடைதட்டி நெய்யில் வேகவைத்து-௫ நாள் கொடுக்கத்தீரும்.

மூலக்கடுப்பு இரத்தமூலத்திற்கு.

அவாக்காற்படி ஓமத்தை ஏழுதடவை வறுத்துத்தெளித்து உலர்த்திப்பாக்கி அதிலுடன் இரண்டுவிராகனிடை கற்கண்டைச்சுட்டகாரம் பிஸ்யுப்கூட்டித் தேனில்மத்தித்து வேளையொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் கொள்ளத்தீரும்,

உள்மூலம்-பிறமூலம்-விஷபாண்டு-காமாலை-வீக்கங்களுக்கு.

வடக்கே ஓடியிருக்கிற சங்கவேர்ப்பட்டையை ஒருநாரத்தங்காய்ப்பிரமாணம் அரைத்து சோமநாதப்பெருங்காயம் விராகனிடை(௨)பொடித்து ஒன்றாய்விட்டு ஒருபிங்காணியிலிட்டு மருந்தமிழும்படி எலுமிச்சம்பழச்சாறுவிட்டுக் கெண்டி வெயிலில்வைக்கப் பொங்கிவரும் அதையெடுத்து நாலொன்றிற்கு முன்னிக்காய்ப்பிரமாணம் ௬ நாள் கொள்ளத்தீரும்.

உள்மூலம் பிறமூலம் வெட்டுப்பாவைமுற்றிரணவியாதிகட்கு சூரணம்.

காட்டுக்கருணை-கதிக்கருணை-பிரண்டை-புளியமடல் இவைகள் கிழங்கு வகைக்குப்பலம்-௫-கொடிவேலிவேர் திரிகடுகு திப்பிலி திப்பிலிமூலம் இந்துப்பு வளையலுப்பு அட்டுப்பு பெருங்காயம் வெட்பாலையரிசி விளாவரிசி உள்ளி அதிவிடையம் சீரகம் கடுகுரோகணி கருஞ்சீரகம் தேவதாரம் வகைக்குப்பலம்(௧) இவைகளைச் சூரணித்து மூலநாவருட்டுஞ்செய்திற கருங்கோழியைக் கால்-தலை-மயிர்-குடல்-இறகு-நீக்கி அதன்வயிற்றுக்குள் மேற்படிமருந்துகளை வைத்துத்தைத்து ஒருபானையில் மூன்றுபடி ஆவின்பாலும் மூன்றுபடி காடியும்விட்டு வாயில் சீலையை மேலேகட்டி அதில்மேல்கோழியைவைத்து மூடி வெந்தபின் எலும்பைநீக்கி இடித்து உலர்த்திச் சூரணித்துக்கொண்டு திரிகடிப்பிரமாணம் தேனிலாவது சர்க்க

கியொழுத்திலாவது நெய்யிலாவது கொள்ளத்தீரும், புளி புகையி லைதள்ளவும்,

மூலபாண்டு மத்தாக்கிலிக்கு.

ஓமம்-சுக்கு-சொடுவேலிவேர்-வகைக்குப்பலம்(௧) கடுக்காய்ப் பலம்-௩ இவைகளை இடித்துக்கொண்டு நீர்கசிப்பிரமாணம் மோ ரிற்கொள்ளத்தீரும்,

மூலவாயுக்குணம்,

மலந்தீயும்-மந்திக்கும்-உடல்வெளுக்கும்-வயிறு சதாகாலமு ம் இரைந்துகொண்டிருக்கும்,

நிவர்த்தி,

வெள்ளுள்ளிபலம்-௫-அரைத்து அரைப்படி ஆவின்பாலிற்க லக்கிக்காய்ச்சிப் புரைகுத்தி உறையவைத்து தயிரெடுத்து அந்தத் தயிரை அந்திசந்தி இருபோது மூன்றுநாள் அன்னத்திலிட்டுச் சா ப்பிட மூலவாயு பொருமல்தீரும்,

விளாத்திக்கிய வரிக்கடுக்காய்-௨ ஒருகளிப்புண்டு(௨) பெரு ங்காயம் கழஞ்சு(௨) முடக்கத்தான்சாறுக்கு ஒருபிடி இவைக ளை நன்றாய்ச்சிதைத்து ஒருபடி விளக்கெண்ணெயிற்போட்டு ப தமாய்க்காய்ச்சிவடித்து ஒருகரண்டிவீதம்(௰௫)நாள்கொள்ள சக லவாயுவும் மலக்கட்டுந்தீரும்-

எருமைத்தயிரைத் துணியில்முடிந்து தொங்கவிட்டு தண்ணீ ர்வடிந்தபின்பு எடுத்து அதில் வெள்ளைப்பூண்டை பரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணம் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

வெந்தவேர்பலம்(௧) திரிபலை கொத்தமல்லிஇர்தப்பு தேசா வரம் செவியம் முத்தக்காசு திரிகடுகு கருஞ்சீரகம் நற்சீரகம் சித் தாரத்தை அல்லபேதி விலாமிச்சு வகைக்குக்கழஞ்சு(௧)தேவதாரம் லவங்கப்பத்திரி சாதிப்பத்திரி சந்தனம் பொரிகாரம் கஸ்தூரிம ஞ்சள் சடாமாஞ்சில் வாய்விளங்கம் வகைக்குக்கழஞ்சு(௩௨) இவை களை இடித்துவடிகட்டி அந்த இடைக்குச் சீனிகூட்டி திரிகடி தே னிலாவது இஞ்சிச்சாற்றிலாவதுகொள்ள அபானவாயுவும் மலக்க ட்டு நீர்க்கட்டுந்தீரும்-

கார்ப்படிவிளக்கெண்ணெயில் சருள்ளி ஒருசிரக்கை முடக் கொத்தான்இலை ஒருபிடி வெள்ளரிவிரை பாதி அரைக்கால் சத்திச்சா ரணைவேர் ஒருபிடி இவைகளை பைம்பொலனாக் அரிபொட்டு இவை சிகாசாய்ச்சி வடித்துக்கொண்டு மேற்படிகம்ருகும் எண்ணெயா டு கொள்க்கு ஒருகரண்டிவீதம் பத்தியமாய்ச்சாப்பிடவேர மலக் கட்டும் நீர்க்கட்டுந்தீரும்.

மேற்படி வியாதியால் நீரடைத்தால்,

வெள்ளரிவிதையை வெதுப்பி அதற்குநிகர் வெல்லங்கூட்டித்தண்ணீர்விட்டரைத்து அடிவயிற்றிற்பூச உடனேநீரிறங்கும்,

திப்பிலி-மிளகு-இந்துப்பு-வெடியுப்பு வகைக்குக்கழஞ்சு (௧) சுக்கு அதிமதுரம் அமுக்கிரா வகைக்குக்கழஞ்சு (௨) ஜாதிக்காய்-சண்பகப்பூ-கோஷ்டம்-குருந்தொட்டிவேர் வகைக்குக்கழஞ்சு-௩-அதிவிடையம் சந்தனம் நெல்லிப்பருப்பு கல்நார் ஜீரகம்-இலவங்கப்பத்திரி வகைக்குக்கழஞ்சு (௪) ஓமம் கழஞ்சு (௫) மிளகு விலாமிச்சம்வேர் சிவன்வேம்பு வகைக்கொருபிடி கடுக்காய் (௰) இவைகளைத் தூள்செய்து திரிகடிப்பிரமாணம் தேனில் மத்தித்துச்சாப்பிட்டு இதனடியில்வருகிற தயிலத்தை முழுகிவரத்தீரும்,

மேற்படி வியாதிக்குத் தலைமுழுகத்தயிலம்,

மேற்படி பிரயோகத்திற்கண்ட மருந்துகளில் இந்துப்பையும்வெடியுப்பையும் நீக்கி மற்றமருந்துகளை இடித்து ஒருபடி நல்லெண்ணெயிற்போட்டுக் காய்ச்சிவடித்து முழுகிவரவும்,

மூலக்கிராணி மூலவாயுவுக்குலேகியம்,

கரிக்கரனை-காட்டுக்கரனை-சேமக்கிழங்கு- புளியம்பிரண்டைக்கிழங்கு-கோப்பிரண்டை- நல்லபிரண்டை-வகைக்குப்பலம்-௧-திரிகடுகு-திரிபலை-ராசாணிஓமம்-ஓமம்-தாளிசபத்திரி-சிறுநாகப்பூ முத்தக்காசு-நன்னாரிவேர்-கற்றாழஞ்சருகு-தாமரைக்கிழங்கு-அதிவிடையம்-கிராம்பு-கருஞ்சீரகம்-பொன்முசுட்டைவேர்- சித்திரமூலவேர்ப்பட்டை-அமுக்கிராக்கிழங்கு-வகைக்குப்பலம் (௨) இவையெல்லாம் இடித்து வடிகட்டிக்கொண்டு சூரணங்கண்ட இடை பனங்கற்கண்டைப் பாகிற்கலக்கிப் பாகுசெய்து சூரணத்தைப் போட்டுக்கிண்டி காற்படிநெய்விட்டு லேகியக்குறுவருகிற சமயத்தில் கூகைநீர் சாதிக்காய் சாதிப்பத்திரி ஏலம் வகைக்குவிராகனிடை (௨) பொடித்துப்போட்டு தேன்படி (௪) கூடவிட்டுக் கிண்டி மெழுகுபதத்திலிறக்கிக்கொண்டு ஒருமண்டலங்கொள்ளத்தீரும்,

மூலவாயு-அக்கினிமந்தம்-பயித்தியவாயு-ஆனந்தவாயுக்கு,

சுக்கு-மிளகு-திப்பிலி-சித்திரமூலம்-கோஷ்டம்- திப்பிலிமூலம்-எவச்சாரம்-இந்துப்பு-அதிவிடையம்-பெருங்காயம்-ஓமம்- நற்சீரகம்-வாய்விளங்கம்-வசம்பைச்சுட்டசாம்பல்-கரியுப்பு வகைக்குக்கழஞ்சு (௪) இவைகளை இடித்துச் சூரணித்து இதற்குநிகர் கடுக்காய்ப்பொடிகூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டு வெந்நீர்கொள்ளத்தீரும்,

மூலவாயு-மூலம்-உண்டை அசனஞ்சமியாததற்கும் கிரிமிக்கும் லேகியம்,

நாகடுக்காயை வெள்ளாட்டுநீரிலவித்து விரைபோக்கி யுதி
ர்த்தி வறுத்துப் பொடித்துக்கொண்டு சிவதை சித்திரமூலம் மஞ்ச
ள்-சுக்கு-திப்பிலி-செங்கொட்டை-காசினிரு நிலவாரை காணைக்கி
ழங்கு பிரண்டை-புளியமட்டக்கிழங்கு-வெந்தோன்றிக்கிழங்கு-சார
ணைக்கிழங்கு இவைகள் வகைக்குப்பலம்(க)பாலில் அவித்துலர்த்தி
செய்துக்கொண்டு கடுகுபலம் (உ) இவைகளை யிடித்துச் சூரண
ஞ்செய்து இரண்டுபடி வெள்ளாட்டுப்பாலில் ஒருபலம் சர்க்கரை
கூட்டிப்பாகுசெய்து அதில் மேற்படி பொடிகளைத் தூவிக்கிண்
டி தேன்படி (வ) நெய்படி(க) கூடவிட்டு லேகியஞ்செய்துகொ
ண்டு வேளையென்றுக்கு இருகழஞ்சுவீதம் ஒருமண்டலங்கொள்ள
மேற்படிவியாதிகள்தீரும், மலசலம் தாராளமாய்ப்போகும் பசி
தீவிரமுண்டாகும் தாதுவிர்த்திக்கும் கிருமிகள் அற்றுப்போகும்
இச்சாபத்தியம்.

மூலவாயு-மூலம்-உதரரோகம்-வலிகுன்மம்-பயித்தியவாயு சன்னிவாயு உடம்புவியர்வை பசிமந்தத்திற்கு.

திப்பிலிபலம்-௬-சுக்கு-மிளகு-திப்பிலிமூலம்-செவியம்- சித்
திரமூலம்-கடுகு-வாய்விளங்கம்-கருஞ்சீரகம் அசமதாகம் இந்துப்
பு வெடியுப்பு சவுக்காரம் கொத்தமல்லி சதகுப்பை அதிமதுரம்
வெட்பாலையரிசி-சாதிப்பத்திரி-கிராம்பு-தாளிசபத்திரி- லவங்கப
த்திரி வகைக்குப்பலம்-௩-இவைகளைவெதுப்பிச் சூரணித்து அதற்
குப்பாதி சீனிகூட்டி திரிகடிப்பிரமாணம் தேனிற்குழைத்து [illegible]-
நாள்கொள்ளத்தீரும்.

மூன்றுபலம் கருப்பட்டிக்கட்டியைத் தண்ணீரிற்போட்டுப்பா
குசெய்து அதில் திரிகடுகு ஓமம் தேசாவரம் குராசாணிஓமம் க
ருஞ்சீரகம் சிற்றரத்தை சதகுப்பை கசப்பு வெள்ளுள்ளி அதிம
டையம் பெருங்காயம் ஏலம் கிராம்பு வெங்காரம் மறுப்புளி சதி
திச்சாரணைவேர்ப்பட்டை நாய்க்கடுகு வகைக்குவிராகனிடை [illegible] அ
ரைத்துப்போட்டுக்கிண்டி [illegible] நெய்விட்டு லேகியஞ்
செய்துகொண்டு வேளையொன்றுக்கு இருகொட்டைப்பாக்குப்பி
ரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

மூலரோகம் முற்றிற்று.

அதிசாரம்.

விருத்தம்.

சொன்னார்தொகுப்பு அதிசாரம் தோற்றும்வாதபித்தமென ...*
மன்னேசிலேத்தமதிசாரம் வகுக்குஞ்சுரத்தினதிசாரம்... ......*
பின்னையசாத்திரஅதிசார மொழிந்தாராயுர்வேதமிது...... ...*
பொன்னேமாந்தர்பிணிக்கவென் றருள்கன்றூர்முனிவர்புகன்றாரே*

வாத அதிசாரக்குணம்.

வயிறுபொருமிப்பொருமிக்கழியும் தொப்புளில்நிந்நோகும் அங்கம்நொந்துவாடும் அயரும் மலங் கருமையாயிருக்கும் நுரைவிழும் காற்றுப்பரியும்,

பித்த அதிசாரக்குணம்.

மலம் ஒருகால் செம்மையாயும் பசுமையாயும் இறங்கும் ஒருகால் சீதம் இரத்தம்விழும் அபானங்கடுத்துநோகும் எரியும் அரோசிபங்காணும் அன்னத்தைத்தள்ளும் வாந்தியுண்ணும் தாகம் அதிகரிக்கும் வியர்க்கும்.

சிலேத்தும அதிசாரக்குணம்.

மலம் வெண்மையாய்க்கழியும் சீதம் நுரைவிழும் அபானங் கடுக்கும் வயிறுபொருமும் வலிக்கும் அரோசிபங்காணும் அன்னத்தைத்தள்ளும் இருமல்காணும்.

அதிசாரதோஷக்குணம்.

இரத்தம்விழும் பிதற்றும் வாந்திக்கும் விக்கலெடுக்கும் தேகம் நடுங்கும் வயிறுபொருமும் வியர்க்கும் தாகிக்கும் அவயவம் மிகுதியாய்க் குளிர்ந்திருக்கும் நித்திரை சோபம் அதிகரிக்கும்.

சுர அதிசாரக்குணம்.

சுரம் தீவிரமாய்க்காயும் தாகமிகும் பலவிதமாய் வயிறுகழியும் சீதம் இரத்தம்விழும் அரோசிக்கும் அன்னத்தைத்தள்ளும்.

அசாத்திய அதிசாரக்குணம்,

மலம்போலும் தேன்போலும் கரிபோலும் தயிலம்போலும் வெண்மையாயும் பிருத்தநாற்றத்துடன் பலவிதமாய்க் கழிச்சல்காணும் இடைவற்றும் சோகமிக்கும் தேகம்வற்றும் மயக்கங்காணும் நினைவுதப்பிக்காணும் விக்கலெடுக்கும் தொண்டைகம்மும் வை

கால்சோர்ந்து நடுக்கும் விழிவிரித்து வெளுக்கும் உதடு வெளுக்கும் கை-கால்-மூக்கு-நெஞ்சு-தொப்புள் குளிர்ந்திருக்கும் அவயவங்களில் நரம்புதோன்றும்.

இவைகட்குநிவர்த்தி,

பெருமரத்துப்பட்டை அதிவிடையம் முத்தக்காசு அசமதாகம் குழப்பாலைப்பட்டை இவைகளை யோர்நிறையாயரைத்துத் தயிரிலாவது காடியிலாவது கலாத்துக்கொடுக்கத்தீரும்.

மிளகு-அதிவிடையம்-சாதிக்காய்-சாதிப்பத்திரி-சாஸ்திரபேதி-லவங்கப்பட்டை-முத்தக்காசு-இந்துப்பு-நற்சீரகம்-கசுக்கட்டி-மாதுளம்பிஞ்சு-வில்வக்காய்ச்சதை-பெருமரத்துப்பட்டை-ஆத்திப்பூ-மாங்கொட்டைப்பருப்பு-அழிஞ்சில்விரைப்பருப்பு-வட்டத்திருப்பிவேர்ப்பட்டை-இவைகளை-வெதுப்பிச் சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிலும் மற்ற அநுபானங்களிலுங் கொடுக்கத்தீரும்-இச்சாபத்தியம்,

மாங்கொட்டைப்பருப்பு அபின் கருநாவி கஞ்சாவித்து அதிவிடையம் சாதிக்காய் இவைகளை யோர்நிறையாய்க்கூட்டி வெத்தித்கியாழத்தாலாட்டி சிறுபயறுபோலுண்டைசெய்து அநுபானங்களிலிடத்தீரும்.

கஞ்சா-பொரிகாரம்-காரியபற்பம்-அபின்-சுக்கு-கருநாவி-சீரகம்-குடசப்பாலை-கழற்பருப்பு-அதிவிடையம் ஓர்நிறையாய் ஊமத்திலைச்சாற்றாலாட்டி கழற்சிப்பிரமாணம் உண்டைசெய்து தேனிலிடத்தீரும்,

குடசப்பாலை அதிவிடையம் கோரைக்கிழங்கு சாதிக்காய் சுக்கு அபின் கஞ்சா கழற்பருப்பு இலவம்பிசின் சீரகம் மாங்கொட்டைப்பருப்பு வில்வப்பழம் இவைகளையோர்நிறையாய் எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து மேற்படி சாற்றிலிடத்தீரும்,

கடுக்காய்க்கரி துணியைச்சுட்டசாம்பல் விளாம்பிசின் இலவம்பிசின் இவைகளை யோர்நிறையாய் அத்திப்பட்டைச் சாற்றாலரைத்து நான்றிக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து தேனிற் கொடுக்கத்தீரும்,

மலைதாங்கிவேர்-கோரைக்கிழங்கு-ஆத்திவேர்ப்பட்டை- நீர்ப்பூலாவேர்ப்பட்டை நாவல்வேர்ப்பட்டை மாதுளம்பிஞ்சுத் தோல் அபின் ஆத்திப்பிஞ்சு மாம்பருப்பு அசமதாகம் கோஷ்டம் சுக்கு சீரகம் சாதிக்காய் இவைகளை யோர்நிறையாய்த் தென்னம்பா

ளைச்சாற்றால் மூன்றுநாளாட்டி தேற்றுவிரைப் பிரமாணம் உண்டைசெய்து வாழைப்பூச்சாற்றில் ஒருண்டைகொடுக்கத்தீரும்.

மாதுளம்வேர்ப்பட்டை சுவிளாவேர்ப்பட்டை மாங்கொட்டைப்பருப்பு ஓமம் குருசாணிஓமம் சாதிக்காய் சாதிப்பத்திரி அதிவிடையம் லவங்கம் திரிகடுகு கஞ்சா வெட்பாலையரிசி கடுக்காய்க்கரி கோஷ்டம் நற்சீரகம் காயம் கொன்றைவேர்ப்பட்டை திப்பிலிமூலம் வெந்தயம் சித்திரமூலம் காட்டாத்திப்பூ புளியவிரைத்தோல் உலமத்தைவிரை கழற்பருப்பு இவைகளைச் சமமாய்ப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத்தீரும்.

ஓமத்தை வெதுப்பித்தேய்த்து உமிப்போக்கி அதற்குநிகர் காட்டாத்திப்பூகூட்டி திரிகடி இஞ்சிச்சாற்றிலிடத்தீரும்.

சாதிக்காய்-சாதிப்பத்திரி-கிராம்பு-கோஷ்டம்-சீரகம்- அபினாம்-அதிவிடையம்-அபின்-கோரோசனை வகைக்கு விராகனெடை (உ) மூலப்பாலாலரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம் உண்டைசெய்துவைத்துக்கொண்டு ஒருசட்டியில் சுக்கு-ஓமம்-மிளகு வகைக்குவிராகனெடை (க) வறுத்துக்கொட்டிக்கொண்டு அந்தச்சட்டியில் இலந்தையிலை ஒருபிடிபோட்டு வதக்கி மேற்படி மூன்றுவகை மருந்தையும் கட்டிப்போட்டு ஒருபடி தண்ணீர்விட்டு அரைக்கால்படியாய் வற்றவைத்து அதில் மேற்படி மாத்திரை ஒன்று உரைத்துக்கொடுக்கவும் இப்படி மூன்றுநாள்கொடுக்க அதிசாரந்தீரும்.

ஆவாரையிலையை வதக்கி மேற்படி மூன்றுவகைமருந்தையும் முன்போல்வெதுப்பிக் கியாழஞ்செய்து மாத்திரைஒன்று உரைத்துக்கொடுத்தாலும் அல்லது விடத்திலையையும் மேற்படிமருந்தையும் முன்போற்கியாழஞ்செய்து மாத்திரை ஒன்றுஉரைத்துக்கொடுத்தாலும் வயிற்றுக்கடுப்புத்தீரும்.

அதிசாரம் முற்றிற்று.

கிராணி.

விருத்தம்.

சுரமூலக்கிராணியெனக்குறிக்கும்வாதக்கிராணியொன்றாம் . . . .
தேமப்பித்தக்கிராணியென்றாம் சேவிப்புச்சிலேத்மக்கிராணியென்
றாம், சோறுஞ்சீழுக்கிராணியென்றாம் ருசிக்குந்திரிகிராணியெ
ன்றாம், ஆமக்கிராணிபிறந்தவிதம் அறைத்தார்முனிவாதாற்றாமே

மூலக்கிராணி-சீய்க்கிராணி-நீர்க்கிராணி-வாயுக்கிராணி
ஆசிகாகிராணி அஜீரணகிராணி,

மூலக்கிராணிக்குணம்.

கீழ்வயிறு கடுத்துளைத்து குருதிவிழும் அபானவாயு கீழ்நோக்கி உறுப்புத்தள்ளும் மலங்கழியும் நாளுக்குநாள் உடல்வற்றும் வயிறுநோகும் நாவரளும் இளைப்பு சோபதாபமுமுண்டாகும்,

வாதமூலக்கிராணிக்குணம்.

மலங்கழியும் சீதம் இரத்தம்விழும் தொப்புளில் சுருக்கெனவலிக்கும் உளையும்,

பித்தமூலகிராணிக்குணம்.

மலஞ்சிறுத்துக் கழியும் பலவிதமாய்நாறும்,

சிலேத்மமூலகிராணிக்குணம்.

உதிரமாயும்-வெண்மலமாயும்-கழியும்-காற்றும்பரியும்,

இவைகட்கு நிவர்த்தி,

திப்பிலி-சுக்கு-மிளகு-சாதிக்காய்-கிராம்பு-இந்துப்பு-ஏலம்-சீரகம்-பெருங்காயம்-வேலம்பிசின்-மாம்பிசின்-இலவம்பிசின்-மூத்தக்காசு புளியவிரைத்தோல் மாதுளந்தோல் அபின் வகைக்குவிராகனிடை-(க)பொடித்து இதற்குநிகர் சுத்திசெய்த கஞ்சாத்தூள் கூட்டி வேளையொன்றுக்கு ஒருவிராகனிடைவீதம் தேனிற்கொள்ள மூலக்கிராணிதீரும்,

மஞ்சள்-பிரண்டை-வெள்ளைப்பூண்டு-சுக்கு-மிளகு-வகைக்குவிராகனிடை(உ)யைப்பெற்பொடித்து ஒருகோழிமுட்டைக் கருவிற்பொரித்துச்சாப்பிடத்தீரும்,

அதிவிடையம்-கிராம்பு-சுக்கு-திப்பிலி-சீரகம்-ஓமம்-யானைத்திப்பிலி-ஏலம்-லவங்கப்பட்டை-அதிமதுரம்-அபின்-இந்துப்பு-அத்திவிரை-கழற்பருப்பு-கோஷ்டம் நெல்லிமுள்ளி-மாம்பருப்பு காசுக்கட்டி-கருங்குங்கிலியம்-களிப்பாக்கு-வில்வப்பழச்சதை-விளாவிரை-பெருமரத்துப்பட்டை-மலைதாங்கிவேர்-சிறுகாஞ்சொறிவேர்-கொடிவழுதலைவேர்-சிறுவழுதலைவேர்-புளியவிரைத்தோல் வில்வப்பிசின் விளாம்பிசின் வெளிச்சிப்பிசின் கம்பிப்பிசின் மருதம்பிசின் உதியம்பிசின் சிழுவைப்பிசின் சண்பகப்பூ அத்திப்பிசின் வகைக்குப்பலம்-க-பொடித்துக்கொண்டு இலவம்பட்டை மாம்பட்டை வேலம்பட்டை அத்திப்பட்டை உதியம்பட்டை ம

ருதம்பட்டை வகைக்குப்பலம் - க - இடித்து - ச - படிதண்ணீரி ற்போட்டு அரைப்படியாய்வற்றவைத்து வடித்தகசாயத்தாலாட்டி கழற்காய்ப்பிரமாணம் உண்டைசெய்து அறுபது நாழிகைசென் று எருமைத்தயிரை வடிகட்டி அதில் ஒருண்டைகொடுக்க மூலகிரா ணிதீரும். வெள்ளாட்டுநெய்யிற் சக்கிரகிராணிதீரும். ஒருபிடிகா ரிக்கியில் ஒருபடி எருமைமோர்விட்டு உழக்காய்க்காய்ச்சிவடி த்து அதில் ஒருண்டையையரைத்து நல்லெண்ணெய் ஒருகரண்டை விட்டுக்கொடுக்க சகலகிராணியும் தீரும்.

உப்பையரைத்து ஒருசக்கலவெள்ளைப்பூண்டின்மேற்பூசி உமி க்காந்தலில் வெதுப்பி உப்பையும் தோலியையும் முளையையும் நீக்கி அரைத்துத் தயிரிற்கலக்கிக்கொள்ளத்தீரும் கடுப்புதீரும்,

பிரண்டைவேர்ப்பொடி சுக்கு மிளகு கடுகு வெள்ளைப்பூடு ஓமம் கருஞ்சீரகம் கருவேப்பிலை பெருங்காயம் இந்துப்பு வகைக் குப்பலம் - க - ஒருகருங்கோழியை இறகு குடல் தலை கால் நீக்கி சற்றுவேகவைத்து எலும்புகளைந்த மாமிசம் இவைகளைத் தனித் தனியே பிரண்டைச்சாற்றால் மைப்போலரைத்து ஒன்றாய்ச்சேர் த்துப்பில்லைதட்டி நல்லெண்ணெயில் வேகவைத்து அந்திசந்தி சாப்பி ட்டுவரத்தீரும்,

கொட்டாங்கரந்தையுஞ் சீரகமும் ஓர்நிறையாயரைத்து வில் லைதட்டி நல்லெண்ணெயில்வேகவைத் துண்ணத்தீரும்,

அத்திப்பட்டை ஆயிற்பட்டை வாய்ப்புலாவேர்ப்பட்டை நா வற்பட்டை நெல்லிப்பட்டை இவைகளைச் சமமாயிடித்துப்பிழிந் தசாறுபடி - வ - சாதிக்காய் வசுவாசி கிராம்பு திப்பிலி வகைக்கு வராகனெடை - க - ஏலம் வராகனெடை - உ - சுக்கு மிளகுவகை க்குப்பலம் - வ - இவைகளை நெ. சாற்றாலரைத்துக்கலக்கி ஆவினெ ய்படி - வ - கூட்டிவிட்டுவேகவைத்து லேகியமாய்ச்செய்துகொண்டு வேளையொன்றுக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம்கொள்ள த்தீரும்,

பாவட்டையிலை பலம்-ரு-வெள்ளைப்பூடு சுக்கு வகைக்குப்ப லம்-க-மிளகுபலம் - வ-வட்டத்திருப்பி வெப்பாலையரிசி திப்பிலி தேசாவரம் அத்திக்கிப்பிலி கொடிவேலிவேர் பெருங்காயம் கிரா ம்பு சாதிக்காய் இந்துப்பு வெடியுப்பு பொட்டிலுப்பு எவச்சாரம் வகைக்குப்பலம்-உ-ஓமம்பலம் - அரைக்கால்-இவைகளில் பாவட் டையிலையை நல்லெண்ணெயிலரைத்தும் மற்றச்சரக்குகளை மோ ரில்விட்டரைத்தும் ஒன்றாய்க்கலந்துகொதிக்கவைத்து நல்லெண்ணெ

ப்படி அரைக்கால்கடைவிட்டு லேகியம்செய்து ஒருகொட்டைப்
பாக்குப்பிரமாணம் இருபோதுசாப்பிட்டுவரத்தீரும்,

புளியாரைச்சாறு குறுணி ஆவினெய்படி-உ-தயிர்நாழி அதி
விடையம் திரிகடுகு இந்துப்பு பெருங்காயம் எவச்சாரம் சாதிக்
காய் வெட்பாலையரிசி திப்பிலிமூலம் கிராம்பு மாதளம்பூ மரம
ஞ்சள் லவங்கம் வகைக்குக்கழஞ்சு க-அரைத்துப்போட்டுக்காய்ச்
சி ஒருகரண்டிவீதங்கொள்ளத்தீரும்,

மூலக்கிராணி அதிசாரத்திற்கு,

புன்னைக்காலிவித்து சப்பற்பம் அதிவிடையம் அத்திப்பூ சமு
த்திராப்பருப்பு சாதிக்காய் ஊமத்தம்வித்து சுக்குநாவி கஞ்சா
வித்து மாங்கொட்டைப்பருப்பு அதின் வில்வப்பழச்சதை கொ
ன்றைவேர்ப்பட்டை மாதுளந்தோடு பொன்முசுட்டைவேர்ப்ப
ட்டை ஏலம் ஓர்சீராயாய்ச் சிந்திச்சாற்றாலாட்டிச் சுண்டைக்காய்
ப்பிரமாணம் உண்டைசெய்து தேனிற்கொள்ளத்தீரும்,

வாயுகிராணியின்குணம்,

உண்ட அனஞ்சமியாது வயிற்றேரும் பொருமும் இரை
த்தகழியும் புளித்தேப்பம்விடும் இருமும் வாயுபரியும் நாட்செ
ன்றால் புறத்தாள் அதைத்துவற்றும் அனஞ்செல்லாது உடல்வ
ரண்டு வற்றிவரும் நாவறளும் தாகமிகும் கனவுகாணும் வெருவும்

நிவர்த்தி.

மேற்றோல்சீவியுலர்த்தின இஞ்சிபலம்(ம) ஏலம்-லவங்கம்-ம
ரம்-திரிகடுகு-திரிசாதம் இந்துப்பு-ஓமம்-அதிவிடையம்- வகைக்
குக்கழஞ்சு(க)இவைகளை ஆவினெய்விட்டுப் பொன்னிறமாய் வெ
தப்பிச் சூரணித்து அதில்பாதி சீனிகூட்டித் திரிகடிப்பிரமாணம்
சாப்பிடத்தீரும் புளியுங் காப்பலும் பதார்த்தமுந் தள்ளவும்.

சேங்கொட்டை-திரிபலை-கொடிவேலி வகைக்குக் கழஞ்சு-உ
இந்துப்பு கழஞ்சு(ம)இவைகளையிடித்து ஒரு சுருட்டியிற் போட்டு
மூடி-சீலைமண்செய்து குக்குடபுடம்போட்டுப் பொடித்துக்
காசிடை ஆவின்வெண்ணெயிற் குழைத்துக் கொள்ளத்தீரும் பத்
தியமாயிருக்கவும்.

அதிவிடையம்-பெருங்காயம்-சிறுநாகப்பூ-திப்பிலி- சாதிப்ப
த்திரி வகைக்குக்கழஞ்சு-க-ஆனைத்திப்பிலி கழஞ்சு(ச) சுக்கு-கடுகு
வெள்ளுள்ளி-வகைக்குக்கழஞ்சு-அ- நாய்க்கடுகு திப்பிலிமூலம்-வ
கைக்குக்கழஞ்சு-ம-அபின்கழஞ்சு-உ-இவைகளை வெதுப்பித் தூள்

செய்து சீனிபலம்(௫)கூட்டிக் கலந்துகொய்ந் அந்திசந்தி திரிக
டிப்பிரமாணம் முத்தக்காசும் சுக்கும் சேர்த்துச்செய்தகியாழத்தி
லாவது இஞ்சிச்சாற்றிலாவதுகொள்ள ஆசவக்கிராணியுந்தீரும்.

சுக்கு-மிளகு-வெள்ளைப்பூண்டு-கஸ்தூரிமஞ்சள்-சீரகம்-ஓம
ம்-சத்திச்சாரணைவேர்-குப்பைமேனிவேர்-வகைக்குப்பலம்(௧)பிர
ண்டைச்சாற்றாலரைத்து நல்லெண்ணெய்விட்டு லேகியஞ்செய்து
ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

சுக்குபலம்(௨)திப்பிலிபலம்(௫)மிளகுபலம் அரைக்கால்-ஓம
ம்பலம்(௧)பூண்டு பலம்(௧)இவைகளை வெவ்வேறாய் வெதுப்பியிடித்
து அவைகண்ட இடைக்குப்பாதி ஆடுதீண்டாப்பாளைச் சூரணங்
கூட்டி கழற்காய்ப்பிரமாணம் இரண்டுநேரமும் சாப்பிட்டுவரத்
தீரும்.

கொடிவேலி-திரிகடுகு-ஓமம்-சிறுதேக்கு-ஆனைத்திப்பிலி-கோ
ஷ்டம்-இருவகை உப்பு வகைக்குப்பலம்(௧)பெருங்காயம்-வசம்பு
கட்டகரி-வகைக்குப்பலம்(௩)கடுகுபலம்(௮)இவைகளைப்பாய்ச் சூர
ணித்து அதற்குநிகர் சீனிகூட்டி திரிகடிப்பிரமாணம் வெந்நீரில்
கொள்ளத்தீரும்.

சட்டியைநல்லாய்க்காயவைத்து ஒருபிடி உப்பிட்டுக்கருகவ
றுத்துக் கொட்டிப்போட்டு அதில் ஒருபிடி பிரண்டைக் கொழுந்
தை யரிந்துபோட்டுக் கருகவறுத்து ஒருபடி எருமைமோர்விட்டு
வற்றவைத்திறுத்து அதிவிடையம் உள்ளி திரிகடுகு ஓமம் வசம்புஇ
வைகளை வகைக்குவிராகனிடை(௧)வெதுப்பிப் பொடித்துப்போ
ட்டுக்கொடுக்கத்தீரும்.

ஓமத்தைக் கருகவறுத்துத் தேய்த்து உமிபோக்கிப்பொடி
த்துத் திரிகடிப்பிரமாணம் தேனிற்கொள்ளத்தீரும்.

வாயு கிராணிக்கும் க்ஷீணத்திற்பேதிக்காணும்பேதிக்கும்.

நூறுவருஷஞ்சென்ற வேப்பம் பட்டைவிராகனிடை(௨௰)மி
ளகு விராகனிடை-௨ம்-இடித்துச் சூரணஞ்செய்து சர்க்கரை விரா
கனிடை-௩ம்-இவைகளை ஒன்றாய்க்கலந்து வேளையொன்றிற்கு இர
ண்டுவிராகனிடை வீதம்-எ-நாள்கொள்ளத்தீரும்.

சக்கிரகிராணிக்குணம்.

வயிறூதும்-சீய்போலும்-சீதம்போலும்-நெய்போலும்-
வெந்நீர்போலும்-புலாக்கழுவின தண்ணீர்போலும் பலவிதமா
ய்க்கழியும் அபானங்கடுக்கும்.

நிவர்த்தி.

அத்திப்பிஞ்சு-வாழைப்பிஞ்சு-மல்லி-சீரகம்-முத்தக்காசு வில்வவேர் பேராமுட்டிவேர் இவைகளை யோர்நிறையாயிடித்துக் கஷாயஞ்செய்துகொடுக்கத்தீரும். வாதங்கூடியிருந்தால் சுக்கும் திப்பிலியும் மேற்படியொழுத்துடன் கூட்டிக்கொள்ளவேணும்.

திரிகடுகு-திரிபலை-வாய்விளங்கம்-கடுகுரோகணி - அதிவிடையம் ஓமம் குறுசாணிஓமம் நற்சீரகம் கருஞ்சீரகம் இந்துப்பு வசம் [illegible] கிராப்பு காசுக்கட்டி வெள்ளுள்ளி சாரணைவேர்ப்பட்டை சாதிக்காய் சாதிப்பத்திரி வசவாசி அதிமதுரம் வகைக்குவிராகனிடை-உ-பெருங்காயம் விராகனிடை-௯- இவைகளை இடித்துப்பாய்ச்சூரணித்து திரிகடிப்பிரமாணம் தேனில் எழுநாள்கொள்ளத் தீராதகழிச்சலுந்தீரும்.

இரத்தகிராணிக்குணம்,

அடிவயிறுவலிக்கும் நெஞ்செரியும் ஏப்பம்பரியும் தாகிக்கும் சலமாயும் இரத்தமாயும் தண்ணீராயுங்கழியும் உண்ட அசனம்சமியாது ஆயாசங்கடுக்கும் உடல்நடுங்கும் எல்லை ஓயும்.

நிவர்த்தி,

பெருமரத்துப்பட்டை முத்தக்காசுவகைக்குப்பலம்-௪-வீதம் இடித்து இரண்டுபடிதண்ணீர்ப்போட்டு-[illegible]- படியாய் வற்றவைத்துக் கொடுக்கவும் இந்தப்படி-௯-யோது கொடுக்கத்தீரும்,

சாதிக்காய் சாதிலிங்கம் சீரகம் சுக்கு கிராம்பு இலவம்பிசின் அபின் இந்துப்பு கழற்பருப்பு ஊமத்தின்வித்து இவைகளை ஓர்நிறையாய்வெதுப்பி எலுமிச்சம்பழச்சாற்றுலாட்டி மாதுளங்காய்க்குள்வைத்து அவிபுடம்போட்டுத் தோலுடன் தயிர்வார்த்தரைத்துக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து வாழைப்பூச்சாற்றிலிடத்தீரும்

கிராணியின்பேரிற்காணும் பாண்டுவிஷபாகவீக்கத்திற்கு.

அரப்பொடி-கிட்டம்-கார்த்தம்-கடுக்காய்மேற்றோல்- நெல்லிமுள்ளி-கருஞ்சீரகம்-நற்சீரகம்-பூண்டு-பெருங்காயம்-திரிகடுகு -வ விராகனிடை-௬-இவைகளை வறுத்துச்சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் அந்திசந்தி ய நாள்கொள்ளத்தீரும்.

அஜீரணகிராணிக்கு.

வேப்பீர்க்கு ஒதியீர்க்கு கக்கு சேகம் ஓமம் இவைகள் வகைக்குப்பலம்(அ)வீதம்வெதுப்பி ஒடிபடி தண்ணீர்ப்போட்டு அரை

கஷா

க்காற்படியாய் வற்றவைத்துக்கொடுக்கவும் இந்தப்படி-௯-போது கொடுக்கத்தீரும்.

கிரிகெருகு-கருஞ்சீரகம்-நற்சீரகம்-வளச்சாரம்-அதிவிடையம் இவைகளை யோர்நிறையாய் வெதுப்பிக் கல்வத்திலிட்டுப்பொடித்து நல்லெண்ணெய்விட்டு லேகியம்போ லரைத்துக்கொண்டு வேளை யொன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

வெள்ளறுகும் குப்பைமேனியும் சமனாய்ச்சூரணித்துத் திரிகடிப்பிரமாணம் ஆவின்வெண்ணெயிற்கொள்ளத்தீரும்.

சகலவிரணிக்கும்.

இந்துப்பு-காயம்-விளையலுப்பு-வெள்ளுள்ளி-சுக்கு-திப்பிலி ஓமம்-பிரண்டை-சவட்டுப்பு-சித்திரமூலம்- இவைகளைப் பிரமிச்சாற்றி லளவு-எலுமிச்சம்பழச்சாற்றிலளவு அரைத்துக்கொண்டு ஒருஉடும்பைத் தலை-கால்-குடல்-தோல்நீக்கி அதின் வயிற்றுக்குள்வைத்துத்தைத்து மடக்கிக்கட்டிப் புட்டுபோலவித்துக் காயவைத்து இடித்துச் சூரணம்பண்ணி திரிகடிப்பிரமாணம் ஒருமண்டலங்கொள்ளத்தீரும்.

கோவைத்தண்டை இடித்து மேற்றோலியைத்தள்ளி நீர்சுவற வைத்துத் தூள்செய்து ஓமத்தைவறுத்துத்தேய்த்துச் சூரணித்து இரண்டையும் ஓர்நிறையாய்க்கலந்து நல்லெண்ணெயிற்கொட்டைப்பாக்குப் பிரமாணம் கொள்ளத்தீரும்-பத்தியம் பாலுஞ் சோறுங்கொள்ளவும்,

ஒருவிராகனிடை காசியத்தைச் சட்டியிலுருக்கி ரசம் விராகனிடை (௪) கூட்டித் தொந்திக்கக் கல்வத்திலிட்டுக் காந்தம் விராகனிடை(௯)கெந்தி விராகனிடை (௨) வெள்ளைத்தரத்தம் விராகனிடை (௪)சேர்த்து நாலுசாமம் அரைத்திவைத்துக்கொண்டு பஞ்சமூல வியாழத்திலும் மற்ற அனுபானங்களிலுங்கொடுக்கத்தீரும்.

காந்தம்-லிங்கம்-கல்மதம்-சாதிக்காய்-சாதிப்பத்திரி-குங்குமப்பி லின்-மாதுளம்பிஞ்சு இவைகளை யோர்நிறையாய் அத்திப்பால்விட்டரைத்துக் காசிடையாக உண்டைசெய்து வெல்லத்திற்கொடுக்கத்தீரும்,

சாதிக்காய்-சால்திரபேதி-கல்மதம்-அபின் இவைகளையோர்நிறையாய் அத்திப்பால்விட்டரைத்துக் குன்றிபோலுண்டைசெய்து வெந்நீரில் உரைத்துக்கொடுக்கத்தீரும்.

நாவற்பட்டை-அரசம்பட்டை-அத்திப்பட்டை- கருங்காலிப் பட்டை-ஒதியம்பட்டை வகைக்குப்பலம்-ம- இடித்து ஜர்ஜரமாக் கால் தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய் வற்றவைத்து அதில்பனை வெல்லம் பலம்(ம)தட்டிப்போட்டுப் பாகுசெய்து சுக்கு- சீரகம் மிளகு ஓமம்-ஏலம்-கோரோசனை-குராசாணிஓமம்-கற்கடகச்சிங்கி கிராம்பு-மல்லி-திப்பிலி சாதிப்பத்திரி-சாதிக்காய் - அதிவிடயம் வகைக்குப்பலம்(௧)அரைத்துப்போட்டுக்கிண்டி ஆறினபின் தேன் விட்டு லேகியஞ்செய்துகொண்டு நேரமொன்றுக்குக் கொட்டைப்பாக்குப்பிரமாணஞ் சாப்பிட்டுவரத்தீரும்.

சீதம் விழுவதற்கு.

அருக்கன்வேரும் இஞ்சியும் சமமாய்ப்பொடித்துத் தேனில்மத்தித்துக்கொடுக்கத்தீரும்.

{ இரத்தக்கிராணி சலக்கிராணி உளைப்புத்தல் ஊதல் அலர்ச்சி - வயிறிரைதல்-வாயு - அன்னஞ்செமியா மை பொருமல்-விஷசுரம் தொப்புளைச்சுற்றிவலித் }

தலுக்கும்

திரிபலை-மூத்தக்காசு-வெள்ளைக்குங்கிலியம்-திரிகடுகு- கோஷ்டம்-சீரகம்-அதிமதுரம்-சாதிக்காய்-கஞ்சா-கிராம்பு-ஏலம் - வெட்டிவேர்பரிசி-அபின்-தேவதாரம்-கூகைநீர் - வில்வப்பிஞ்சு பாதிரிவிதைப்பருப்பு-அத்திப்பிஞ்சு-நல்லவல்லிக்கரப்பருப்பு - மாம்பருப்பு புளியங்கொட்டைமேற்றோல்-மாதுளம்பிஞ்சு - பொன்முசட்டை வேர்-ஆவாரைவித்து-கஞ்சாவித்து-கற்கடகச்சிங்கி - அதிவிடயம் இலவம்பிசின்-விளாம்பிசின்-தன்றிவேர்ப்பட்டை- நிலப்பனைக்கிழங்கு-வடவிராக்கிப்பட்டை-பெருமரத்துப்பட்டை-மாமஞ்சள் வகைக்குக்கழஞ்சு(௧) வெதுப்பிப்பொடித்துக்கொண்டு வெள்ளைப்பிட்டுகள் சதுரமாக்கயிர் வகைக்குப்படி(௧) ஒன்றாய்க்கலந்து அதில் கருப்புக்கட்டி பலம்(ம)பொடித்துப்போட்டுப் பாகுசெய்து மேற்படி பொடியைத்தூவிக்கிண்டி நல்லெண்ணெய் படி(௩) விட்டு லேகியஞ்செய்து அண்டைக்காய்ப் பிரமாணம் லேகியத்தில் அப்பக்காத்து தொத்துரைத்தைவைத்து நாலுநாள்கொள்ளத்தீரும்.

மேற்படி கருப்புக்கட்டியைப் பாகுசெய்யும்போது ஒருபடி சர்க்கரையைவிட்டுக்கொள்ளலாமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது அதேதியமாறுல் விட்டுக்கொள்ளலாம்.

சலகிராணி சுரிச்சல் வயிற்றுக்கடுப்பு உளைவு அசீரணம்
பித்தம் நீர்ச்சுருக்கு பிரமேகத்திற்கு.

செங்குமுதி-வெட்டிவேர்-நெய்தல்-அல்லி-தாமரை - நிலப்பனை

அமுக்கரா நீர்வன்னி நன்னாரி-சூரிக்கத்தாமன்ர - வில்வம் - மாதுளை வாழைப்பூ-கரிசலை-வெருகு மலைதாங்கி-கற்றாழை-சங்கு - சித்திரமூலம் இவைகளின் மூலம்-முத்தக்காசு-அதிவிடையம்-கச்சோலம் - அதிமதுரம்-கோஷ்டம்-ஆவாரைப்பஞ்சாங்கம்வகைக்குப்பலம்(௧)இவைகளை உலர்த்தி இடித்துச்சூரணித்து இரண்டுபடி ஆவின்பாலிற்கருப்புக்கட்டி பலம்(௰)போட்டுப் பாகுசெய்து அதில்மேற்படி சூரணத்தைத்தூவிக்கிண்டி நெய்படி(௧)தேன்படி(௧)கூட்டிவிட்டு லேகியஞ்செய்து வேளையொன்றுக்கு ஒரு கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்.

{ கிராணி கழிச்சல்-அபானக்கடுப்பு-எரிப்பு - உதப்ப
சூலை-காசம்-பிரமியம்-எலும்புருக்கி-உள்ளுருக்கி
தாதுபுஷ்டி இவைகட்கு. }

கூவிளை-மாதுளை-அத்தி-ஆத்தி-மருது-ஆல்-அரசு-இத்தி - பரித்தி-ஆவரை-இலவு-இலந்தை-கொன்றை - முருக்கை - அகத்தி-மா-விகோவை-வேம்பு-முசட்டை-கதலி- அரிஞ்சி-தாமரை - அனிச்சை-ஆதளை-விராத்தி-இவைகளின்பிஞ்சு-பிரசம்-அதிமதுரம்-வகைக்குப்பலம்(௧)இவைகளையெல்லாம் உலர்த்தி இடித்துச் சூரணித்து இரண்டுபடி ஆவின்பாலில் சர்க்கரை கற்கண்டு வகைக்குப்பலம்(௫)போட்டுப் பாகுசெய்து அதில் மேற்படி சூரணத்தைத்தூவிக்கிண்டி ஆவினெய்-நல்லெண்ணெய்-வகைக்குப்படி(௧)தேன்படி(௧)விட்டு லேகியஞ்செய்து வைத்துக்கொண்டு கொட்டைப்பாக்குப்பிரமாணம் சாப்பிட்டுவரத்தீரும்-தாதுபுஷ்டி உண்டாகும்.

வெள்ளைக்கழிச்சலுக்கு.

வெள்ளறுகும்திப்பிலியும் புளியவிதைத்தோலும்-வகைக்கு விராகனிடை(௧)வீதம் மைப்போற்பொடித்து எருமை வெண்ணெயிற்குழைத்துண்ணவும் இப்படி(௩)போதுகொள்ளத்தீரும்.

நீர்க்கழிச்சலுக்கு.

சாதிக்காய் சாதிப்பத்திரி-கிராம்பு-சாதிலிங்கம்- லவங்கப்பத்திரி-அபின்-வகைக்குச்சமஞ்சு உ-சூதன் முநாளாட்டி - செப்பிலடைத்துக்கொண்டு அனுபானங்களில் வேளையொன்றுக்கு அரைவிராகனிடைவீதங்கொடுக்கத்தீரும்

சலக்கழிச்சலுக்கு.

ஆவாரம்பூ-ஆவாரைப்பிசின்-ஆவாரைப்பிஞ்சு - ஆவாரங்கொழுந்து ஆவாரைவேர்ப்பட்டை வகைக்குப்பலம்(௨)இவைகளைச்சிதைத்து

இரண்டுபடிதண்ணீரிற்போட்டு ஓரிரவில் ஊறவைத்துக் காலையில் அரைக்காற்படியாய் வற்றவைத்து அதில் கல்நார் சமைதம் இராம்பு சாதிப்பத்திரி வகைக்குக்கழஞ்சு(க)அரைத்துக் கலக்கிக்கொடுக்கத்தீரும்.

அக்கிட்டிஞ்ச அதிமதுரம் ஓமம் இருதப்பு சருக்ளி மிளகு சுக்கு சீரகம் ஓர்நிறையாய் ஆவின்வெண்ணெயில்வெதுப்பிப் பதத்தில் வடித்துக்கொள்ளத்தீரும்.

விளாம்பிசின் இலவம்பிசின் கருவேலம்பிசின் மஞ்சள் தேற்றாவிரை நெல்லிமுள்ளி காசுக்கட்டி புளியவிரைத்தோல் வாழைவிரை அபின்கசக்கசா அதிவிடயம் வகைக்குக்கழஞ்சு(க)சந்தனம்விராகனிடை(ஐ)ஆவாரைவிரை சீனிக்சக்கரை வகைக்குவிராகனிடை உ-இவைகளைப்பிடித்து தாழம்விழுதுச்சாற்றிலும் ....ச்சாற்றிலும் அரைத்து இலந்தைக்கொட்டைப் பிரமாணம் .... செய்து தேனிலாவது எருமைமோரிலாவதுகொள்ள உட்காய்ச்சல் சாகம் மேகம் கலக்காழிச்சல்தீரும்.

வயிறு இரைத்து கழிதலுக்கு.

கிரீசுடிவெந்தயத்தை நல்லெண்ணெய்விட்டு வறுத்துச் சிவந்துவருகிறபருவத்தில் ஆவரையிலை பொருமிடி கூடப்போட்டு வறுத்துக் கருகிவருகிறபதத்தில் எருமைமோர் ஒருபடிவிட்டுக் காய்ச்சி இறுத்துக்கொடுக்கத்தீரும்.

மூலக்கழிச்சலுக்கு.

ஒருதலைவெள்ளைப்பூண்டும் கஞ்சாவிரையுமோர்நிறையாய்வெதுப்பி நல்லெண்ணெயும் கொஞ்சம் தென்னங்கருப்புக்கட்டியுஞ்சேர்த்து லேகியம்போலரைத்து எலுமிச்சங்காய்ப்பிரமாணம்தூங்குமுன் காலையிற்கொள்ளத்தீரும்.

கழிச்சல் காத்திற்கு அபின்மாத்திரை.

அபின்-விராகனிடை(ஐ)சுக்கு விராகனிடை (எ) திப்பிலி விராகனிடை(அ)சீரகம் விராகனிடை(௬)மிளகுவிராகனிடை (ய) இவைகளை விஷ்ணுமூலிக்கிழங்கால் நாலுசாமம் அரைத்துக் குன்றிபோலுண்டைசெய்துகொண்டு வில்வம் விஷ்ணுமூலி சீரகம் வெற்றிலைக்காம்பு இவைகளை யோர்நிறையாய்க் கியாழஞ்செய்து அதில் ஒருகுளிகைவீதம் ஆகுமளவு கொடுக்க காய்ச்சல் கழிச்சல் தாபசும் நீங்கும் புளிதள்ளவும் இதைச் சிறியோருக்கும் பெரியோருக்கும் உபயோகப்படுத்தலாம்.

கழிச்சலுக்கு.

விளாம்பிஞ்சைப் பொடித்து எருமைத்தயிரில் மூன்றுநாள் கொடுக்கத்தீரும்,

மூத்திர அதிசாரகிராணிக்கு,

இந்துப்பு ஓமம் இராம்பு சுண்டைவற்றல் சாதிக்காய் சாதிப்பத்திரி அபின் காந்தம் லிங்கம் நற்சீரகம் ஏலம் திரிகடுகு இலவங்கப்பட்டை கருஞ்சீரகம் மாங்கொட்டைப்பருப்பு அதிவிடையம் வகைக்கு விராகனிடை(க) கோரக்கர்மூலி-விராகனிடை(௩அ) இவைகளில் காந்தம் லிங்கம் கஞ்சா இம்மூன்றையுஞ் சுத்திசெய்து மற்ற சருக்குகளை வெதுப்பிப்பொடித்துச் சீனிபலம்-க கூட்டித்தேன்விட்டுப்பிசைந்து கொட்டைப்பாக்குப் பிரமாணம் சாப்பிட்டு வெந்நீர் [illegible] குடிக்கத்தீரும்.

சகலகழிச்சலுக்குக்காந்தசெந்தூரம்,

காந்தம்பலம்(ச) ஆவாரம்வேர்ப்பட்டைபலம்(ச) இவைகளைப்பொடித்துக் கற்றாழைமடல் அல்லது சோற்றுக்கற்றாழைச்சாற்றில் அரைத்து வில்லைதட்டிக்காயவைத்துச் சட்டியிலிட்டுச் சீலைமண்செய்து நாலுசாமம் புடமிட்டெடுக்கச் செந்தூரமாகும் அதில் பணவிடை வீதம் அநுபானங்களிற் கொடுக்கத்தீரும்-பத்தியம் எருமைப்பால் மோர்கூட்டிக் கொள்ளலாம்,

வயிற்றுக்கடுப்பிற்கு,

ஞாழற் பலக்கழிச்சலுக்கும் செம்பரத்தம்பூவும் இலுப்பைப் பூக்கும் வயிற்றுப்புண் ஆகியவைக்குங் கொண்டு நிலத்துடன் தீரும்,

தீவர்த்தி,

வெட்டுக்காயம்-வெட்டுப்பூண்டு தீர்ப்பூண்டு - இவைகளில் வேர்க்கொல் ஆலவிழுதின் கொழுந்து வகைக்கு ஒருபிடிவீதம் ஒன்றாய்ச் சேர்த்துப் பொடியுஞ்செய்தாவது அல்லது இவைகளையரைத்து எருமைமோரிலாவது தயிரிலாவது கலக்கிக்கொடுக்கத்தீரும்,

மாதுளங்காயைப்பிடித்து மாவாக்கிப் பிட்டவித்துப் பிழிந்தசாற்றில் பழ அரைக்காயில் ஒருவிராகனிடை ஓமம் வறுத்துப் பொடித்துப்போட்டுக்கொடுக்கத்தீரும்,

நற்சீரகம் பலம்(ஒ) இவைகளைப்புடமிட்டுச்செய்து பொடித்து வடிகட்டி சீனிபலம்(க) கூட்டித் திரிகடிப்பிரமாணம் சாப்பிட்டுத் தயிர் [illegible] அல்லது மோரிலாவது மத்தித்துக்கொள்ளத்தீரும்,

இளநீரில் எலுமிச்சம்பழச் சாறுபிழிந்து கொடுத்தாலும் எலுமிச்சம்பழச்சாற்றில் சீனிகலந்து சாப்பிட்டாலும் நெல்லிக்காய்ச்சாற்றில் சீனிகலந்துகொடுத்தாலும் வெந்தயமும் நெல்லிப்பருப்பும் வறுத்துப்பொடித்துத் திரிகடி புளித்தபழந்தயிரிலாவது நல்லெண்ணெயிலாவது கொடுத்தாலும் நெல்லிப்பருப்பை எலுமிச்சம்பழச்சாற்றிலரைத்துச் சீனிகூட்டிக்கொடுத்தாலுந்தீரும்.

வில்வப்பிஞ்சு திப்பிலி-சாதிக்காய்-ஓமம்-சுக்கு-இவைகளை ஓரிடையாய் வறுத்துப்பொடித்துச் சீனிக்கருப்புக்கட்டியும் வெண்ணெய்ங்கூட்டி மெழுகுபோலரைத்து ஒரு கொட்டைப்பாக்குப்பிரமாணங்கொள்ளத்தீரும்,

மாதுளங்காயை வட்டமாகநறுக்கி விரையெடுத்துப் போட்டு அதற்குள் வெந்தயம் ஓமம் சீரகம் வகைக்கொரு விராகனிடை வைத்துமூடிச் சீலைசுற்றி சாணிக்குட்பொதித்து சாணிவெந்தபின் எடுத்துக் கவசம்நீக்கி ஒருவிராகனிடை சீந்திற்சர்க்கரை கூட்டி அரைத்துத் தயிரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்,

கிராம்பு சாதிக்காய் சாதிப்பத்திரி அதிவிடையம் அபினி களிப்பாக்கு மாம்பருப்பு நாள்ளி இலவம்பிசின் இலவம்பிஞ்சின் மேற்றோல் நெல்லிவற்றல் காட்டாத்திப்பூ கருவேப்பிலை மாதுளம்பூ விளாம்பிசின் காசுக்கட்டி புளியவிரையின்மேற்றோல் தான்றிக்காய் வகைக்கொருவிராகனிடை (க) நற்சீரகம் விராகனிடை (௰) இவைகளை வெதுப்பிச் சூரணித்துத் திரிகடியளவு தேனிலாவது தயிரிலாவது கொள்ளத்தீரும்,

கற்கடகச்சிங்கி விராகனிடை (உ) ஈருள்ளி விராகனிடை (க) நற்சீரகம் விராகனிடை (க) இவைகளை வெதுப்பியரைத்து எருமைத்தயிரிற்கலக்கிக்கொடுக்கத்தீரும்.

குத்தம்-வரட்புல்-முத்தக்காசு-சுக்கு-ஓமம் - அதிவிடையம் பொன்முசுட்டைவேர் நற்சீரகம் குங்கிலியம் இவைகளை யோர்த்தி ளாயாயரைத்து ஆவின்நெய்யில் வெகமைத்துண்ணத்தீரும்,

ஒருகழஞ்சு மிளகை ஆவின்மோரில் மூன்றுநாள் ஊறவைத்தெடுத்து அதனுடன் கீழ்க்காய்நெல்லி வரட்புல்லாக் கொழுந்து வகைக்கொருபாக்களவு அரைத்து மேற்படிமோரிற் கலக்கிக்கொடுக்கத்தீரும்,

அத்திவேரை ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் அரைத்து எருமைத்தயிரிற் கலந்துகொடுக்கத்தீரும்,

ஒரு எலுமிச்சம்பழத்தை எருமைத்தயிரிற் பிழிந்துகொடுக்கத்தீரும்,

வெள்ளைக்குங்கிலியம் விராகனிடை(௧) பொடித்து மோரிற் போட்டு மத்தாற்கடைந்து வடிகட்டி அரைவீசம்படி தேங்காய்ப்பாலிற் கலந்துகொடுக்கத்தீரும்.

வெள்ளைக்குங்கிலியம்-மாதளம்பூ-ஓமம்-சாதிக்காய்-நெல்லிமுள்ளி-திரிகடுகு வகைக்குவிராகனிடை(௧) வெதுப்பிப்பொடித்துத் திரிகடித்தூளும் சர்க்கரையுங்கலந்து எருமைத்தயிரிற் கொடுக்கத்தீரும்.

வெண்கிளுவை-அத்தி-நாவல்-இவைகளின் பட்டைகளைச் சமமாய் இடித்துப் பிட்டவித்துப் பிழிந்தசாறு படி அரைக்காலில் ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் வெண்ணெய்கலந்து கொடுக்கத்தீரும்.

சாதிக்காய்-காசுக்கட்டி-வசுவாசி-ஓமம்-இலவம்பிசின் - லவங்கம்-அதிவிடையம்-குங்கிலியம்-வகைக்குக்கழஞ்சு(௧) அபின்கழஞ்சு(௪) பரித்திஇலைச்சாற்றாலரைத்துத் தேற்றாவிதைப்பிரமாணமும் பரித்திக்காய்-இலந்தைத்தம்பலம் - இவைகளையரைத்து வகைக்கு ஒருகொட்டைப்பாக்குப்பிரமாணம் வெண்ணெயிற் குழைத்துக் கொடுக்கவும்,

வெந்தயம்-பெருங்காயம்-வெள்ளைப்பூண்டு வகைக்கு விராகனிடை(௧) முருங்கைப்பிசின் விராகனிடை(௰) சிலக்கவறுத்து ஒருபடி தண்ணீர்விட்டு ஒருசிரங்கையாய்வற்றவைத்துக்கொடுக்க வாயுக்கழிச்சல்தீரும்.

காசுக்கட்டி-வசம்பு- வெள்ளுள்ளி - பெருமரத்துப்பட்டை இவைகளையரைத்து நல்லெண்ணெயிற் பொரித்து மூன்றுநாள் கொடுக்கத்தீரும்,

சாதிக்காய் அபின் நீர்ப்புலாவேர்ப்பட்டை வகைக்குவிராகனிடை(௧) பொடித்து கோழிமுட்டைக்கருவிற்கலந்து பொரித்து ஆறுபோதுகொடுக்கத்தீரும்,

ஓமம்-படி அரைக்கால் நற்சீரகம்படி மாகாணி கக்குமாகுன் அபின் சாதிக்காய் வகைக்குவிராகனிடை(௧) கஞ்சா விராகனிடை(௨) வறுத்துப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் இளவெந்நீரிற் கொடுக்கத்தீரும்.

வெட்பாலை-மருது-விடத்தல்-நீர்ப்புலா இவைகளின் வேர்ப்பட்டை அதிவிடையம் நெல்லிமுள்ளி கூவிளம்பிஞ்சு இவைகளை

வேர்நிலாபுள் புல்த்திப்பொடித்து ஆவில்தயிரில் திரிகடிப்பிர மாணங்கொள்ளத்தீரும்,

செத்தகம் விராகனிடை (வ) நாலுகடுக்காயை விளாதீக்கிப் பொடித்துக் கோழிமுட்டை வெள்ளைக்கருவிற்போட்டுப் பொரித்துக்கொடுக்கத்தீரும்.

எலுமிச்சங்காய்ப்பிரமாணம் நாவற்கொழுந்தை யரைத்து எருமைத்தயிரிற்கலக்கி மூன்றுநாள்கொடுக்கத்தீரும், வெள்ளாட்டுப்பாலில் எலுமிச்சம்பழச்சாறுபிழிந்து மூன்றுநாள் உதையத்திற் கொடுக்கத்தீரும்,

கோழிமுட்டைவெள்ளைக்கருவில்கடுக்காய்ப்பூவைப்பொடித்துப்போட்டு கொஞ்சம் நல்லெண்ணெய்விட்டுப் பொரித்துக் கொடுக்கத்தீரும்,

அரைப்படிகருங்குருவைமாவில் விடத்தலையிலையை விளாங்காய்ப்பிரமாணம் அரைத்து விரவிப் பிட்டவித்து-ஙா-நாள்தின்னத்தீரும்,

மூக்கிரட்டைக்காய்ப்பூவில் சீனிகூட்டியுண்ணத்தீரும்.

அவிச்சை யக்கி மலைதாங்கி வரட்பூலா இவைகளின்வேர் மூத்தக்காசுக்கு அதிவிடையம் நற்சீரகம் வெள்ளைக் குங்கிலியம் ஓமம் இந்துப்பு வகைக்குக்கழஞ்சு-க-இவைகளை ஆவின்பாலில் மேவவைத்துக்கொள்ளத்தீரும்

அரைக்காற்படி எருமைமோரில் ஒரு எலுமிச்சங்காய்ப்பிரமாணம் இலவங்கப்பட்டையை அரைத்துக்கலக்கிக் கொடுக்கத்தீரும்.

ஆட்டுக்குளருமைப்பாலில் கறந்தவுடனே ஒரு தனிபுளியிலைச் சாறு பிழிந்துகொடுக்கவும் இந்தப்படி-ஙா-நாள் கொடுக்கத்தீரும்,

தாவி-குகம்-செத்தகம்-சித்திரமூலம்-சாதிக்காய்-அதிவிடையம்-தான்றிக்காய்-கிராம்பு-பெருமாத்தாம்பட்டை-மூத்தக்காசு-பெருங்காயம்-வசம்பு-பற்படாகம்-இலவம்பிசின்-சுக்கு-நெல்லிவற்றல்-சாதிபத்திரி அபின் திப்பிலி கஞ்சா இவை சமன்கூட்டிக் கஞ்சாச்சாற்றுலாட்டிக் குன்றிப்பிரமாணம் உண்டைசெய்து தயிரிலிட வயிற்றுக்கடுப்பும் தேனிலிட கிராணியும் தண்ணீரிலிட அதிசாரமும் மூலக்கடுப்புந்தீரும்.

வயிற்றுக்கடுப்பு மூலமுளை குன்மம் கைகால் எரிவுக்கு

நாகபஸ்பம்.

இருபலம் நாகத்தைக் குகையில்வைத்துருக்கி அதில் கிழக்கா

ய்நெல்லி சமூலத்தை உலர்த்திப்பொடித்ததுள் பலம்(க) தூவி வ ரக்கப் பற்பமாகும் அந்தபற்பத்திடை குகம்சேர்த்து பன்னமட் டைச்சாற்றாலட்டி வில்லைதட்டிக் காயவைத்துக் குக்குடபுடம் போடச் சொடிபசுண்ணமாகும் அதை வெண்ணெயிலும் வியாதி க்குத்தக்க மற்ற அனுபானங்களிலுங்கொடுக்க மேற்படி வியாதிக ள்தீரும்.

வயிற்றுக்கடுப்பு கழிச்சலுக்கு.

ஓமம்-மிளகு-வகைக்குப்பலம் (க) ஒன்றாய் வறுத்துப் பொடித்து வெல்லம்பலம் (க) கூட்டியரைத்துத் திரிகடிப்பிரமா ணம்(ரு)நாள் கொடுக்கத்தீரும்.

வயிற்றுக்கடுப்பு வாயுவுக்கு.

சுக்கு திப்பிலி மிளகு ஓமம் உப்பு கருவேப்பிலை பெருங்கா யம் சுண்டைவற்றல் இவைகளை யொன்றாய் வறுத்துப்பொ டித்துச் சமச்சோற்றில் திரிகடிப்பிரமாணந் தூவி நெய்வார்த்துண் ணத்தீரும்.

ஆசனக்கடுப்புக்குப்புகை.

ஆமையோட்டைப்பொடித்துத் தணலிற்றூவி அபானவா யிற் புகைபிடிக்கக் கடுப்பு உடனேதீரும்.

வயிற்றிரைச்சல் கடுப்புக்கு.

இலம்பிசாசனிலைக்கை மோரில்விட்டுப்போலரைத்து அரசிலையில் வைத்துத்தைத்து மோரில்-௧-தடாம்வகைத்து வடிக ட்டினதயிரிற் குழைத்துண்ணத்தீரும்,

சாத்திலைபேரிக்காணுங் கடுப்புக்கு.

தேற்பொரிமா-ஆவின்வெண்ணெய்-கற்கண்டு - நற்சீரகத்து ள் இவைகளையொன்றாய் ஒன்றாய்ப்பிசைந்து விளாங்காய்ப் பிரமாணம்-௩-வேளைசாப்பிடத்தீரும்.

சகலகிராணி-அதிசாரம் வயிற்றிரைச்சல் கழிச்சல் சீதம்
இரத்தம்விழுதல் மூலக்கடுப்பு வயிற்றுக்கடுப்புக்கு.

சுண்டைவற்றல்-கருவேப்பிலை-மாம்பருப்பு-ஓமம்-மாதுளம் பழத்தோடு நெல்லிமுள்ளி வெந்தயம் இவைகளொச்சமமாய் வறு த்துப்பொடித்துத் திரிகடிப்பிரமாணம் தயிரிற்கொள்ளத்தீரும்.

செவியம்-முத்தக்காசு-சுக்கு-திப்பிலி - திப்பிலிமூலம் பல்லு வாய்விளங்கம் சீரகம் கருஞ்சீரகம் ஓமம் அரத்தை பேராத்தை மி ளகு வெந்தயம் ஏலரிசியும் தக்கோலம் லவங்கப்பட்டை ௪

ன்னலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி சிறுநாகப்பூ சீராப்பு ஏல
ம் சாதிக்காய் சாதிப்பத்திரி வகைக்கு விராகனிடை (க) அதனே
கண்டங்கத்திரி சிறுவழுதலை வழுதலை சித்திரமூலம் நகரமூலி மூக்
கரட்டையின் சிறுகாஞ்சொறி நன்னாரி நெற்குமுட்டி வட்டத்திருப்பி சி
அருகிஞ்சா விலாமிச்சை கண்டை வில்வம் மாதளை இலைகளின்வே
ர் வில்வப்பிஞ்சு மாதளம்பிஞ்சு கருவேப்பிலைக்கு நெற்பொரி வ
கைக்குப்பலம் (வ) இவையெல்லாமிடித்து (ச) படி தண்ணீரிற்போ
ட்டு எட்டொன்றாய்வற்றவைத்து வேளையொன்றுக்கு அரைக்கா
படிவீதங்கொள்ளத்தீரும்,

வெந்தயம் வால்மிளகு கருஞ்சீரகம் அகில் சாதிப்பத்திரி ஓம
ம் சாதிக்காய் சீராப்பு லவங்கப்பத்திரி திரிகடுகு திரிபலை மாதளை
ம்பழத்தோல் அதிமதுரம் குருசாணிஓமம் அதிவிடையம் சிறுநா
கப்பூ வாய்விளங்கம் கோஷ்டம் சடாமாஞ்சில் கடுக்காய்ப் பிஞ்சு
சீரகம் மல்லி தாளிசபத்திரி முத்தக்காசு சன்னலவங்கப் பட்டை
காட்டாத்திப்பூ சந்தடக்சிங்கி கசகசா ஏழுவிலை புடம்போட்ட
கஞ்சா பெருமரத்துப்பட்டை கவிளத்திப்பழம் அயில் புளியம
ணைத்தோல் மாங்கொட்டைப்பருப்பு வகைக்குப்பலம் (வ) பெருங்
காயம் விராகனிடை (க) இவைகளை யிளவறுப்புச்செய்து கல்வத்தி
ட்டு ஆல் அரசு ஆவல் அத்தி நீர்ப்பூலா ஓதி ஆவாரை விடத்தலை
நெல்லி இலந்தை இலைகளின்வேர்ப்பட்டை வகைக்குப்பலம் (உ)
இடித்து எட்டுப்படி தண்ணீரிற்போட்டு எட்டொன்றாய்வற்றவை
த்து வடித்துக் குழம்பாய்க்காய்ச்சி அதனுள் மைப்போலாட்டி
நாவல் இலையால் எழுதொல்லைசெய்து ஒன்றின்மேலொன்றாய்
அடுக்கி அதின்மேல் மருந்தைவைத்து எழுதொல்லையால் மூடித்
தைத்து மறைவில் வைத்துமூடித் திறந்து இலை அவிந்தபருவ
த்தில் மருந்தையெடுத்து அரைத்துச் சுண்டைக்காய்ப்பிரமாணம்
உண்டைசெய்துகொண்டு அர்த்தந்தவியாதிக்குத் தகுந்தபடி பொ
ன்னாங்காணிச்சாறு சீராப்பு ஆவாரம்பட்டைக்கியாழம் கோரைக்
கிழங்குச்சாறு எருமைத்தயிர் மோர் தேன் பச்சரிசிக்கழுநீர் இவை
களிலொன்றில் ஒருண்டைகொடுக்கத்தீரும்.

பெருமரத்துப்பட்டை கொழுஞ்சு மருதப்பட்டை உதிலம்
பட்டை வகைக்கொரு தேங்காய்ப்பிரமாணம் சிதைத்து வெண்
சோறாமங்கனந்த கழுநீரிற்போட்டுப் பிசைந்து பிழிந்து வேளை
யொன்றிற்கு அரைக்காற்படிவீதங்கொடுத்து கோழி யிளநீரும்
அன்னமுங்கொள்ளத்தீரும்.

மாதுளம்பிஞ்சு வில்வப்பிஞ்சு விளாம்பிஞ்சு மாம்பருப்பு இலவம்பிசின் நெருஞ்சிக்காய் அத்திப்பிஞ்சு பெருமரத்துப்பட்டை புளியமிலைத்தளிர் பொன்முசுட்டைவேர் நாவற்பட்டை நாய்[illegible]ரு சாதிக்காய் சாதிப்பத்திரி குராசாணியோமம் பெருங்காயம் இவைகளை வெயிலுலர்த்தித் தூள்செய்து எருமைமோரில் திரிகடிதங் கொள்ளத்தீரும்.

அகத்தி-ஆல்-அரசு-அத்தி-ஆவாரை-இவைகளின்பிஞ்சு - மாதுளம்பிஞ்சு-கோவைத்தண்டு-கரைத்தண்டு-தான்றி-நெல்லி-கடுக்காய்-சாதிக்காய்-கிராம்பு-பத்திரி-ஓமம்-வெந்தயம்-திரிகடுகு-ஏலம்-லவங்கம்-சடாமாஞ்சில்-குராசாணிஓமம்-அதிமதுரம்-வாய்விளங்கம்-சீரகம்-மல்லி-தறக்குதுலம் வகைக்குக் கழஞ்சு (௧) இவைகளைச்சிதைத்து அறுபடி தண்ணீரிற்போட்டுக் காற்படியாய் வற்றவைத்து வடிகட்டி அதில் கொட்டைப்பாக்குப்பிரமாணம் ஆவின்வெண்ணெய்ப்போட்டு உருகினபின் கொடுக்கவும் இத்தப்படி மூன்று நாள்கொள்ளத்தீரும்.

சாதிக்காய்-சாதிப்பத்திரி-மாசிக்காய்-கிராம்பு - கோஷ்டம்-அதிமதுரம்-அதிவிடையம்-லவங்கப்பட்டை-இலவம்பிசின் விளாம்பிசின் இவைகளை யோர்நிறையாயரைத்து மாதுளங்காய்க்குள் வைத்து வெள்ளைச்சீலைசுற்றி அதின்மேற் சாணம் அப்பிக்காட்டெருவிற் புடம்போட்டு சாணிவெந்தபருவத்திலெடுத்துக் கவசந்தவி சஞ்சாச்சாத்திரலாட்டிச் சிறுசுண்டைக்காய்போலுண்டைசெய்து வடுதாயிரித்கொடுத்தால் கடுப்பு சீதம் இரத்தமூலந்தீரும், தேனிலட அதிசாரந்தீரும், புளிகட்டி மிளகாய்தள்ளவும்.

சாதிக்காய் சாதிப்பத்திரி பெருங்காயம் சீரகம் அதிவிடையம் கிராம்பு அபின் கஞ்சா வெந்தயம் கழற்சிவித்து குராசாணி இவைகளை யோர்நிறையாய்க் கஞ்சாவிலைச்சாற்றால் நாலுசாமம் அரைத்து இலந்தைவிதைப்பிரமாணம் உண்டைசெய்து தயிரிலாவது அதன் தேனி[illegible]நாள் வாழைப்பூச்சாற்றில்மூன்றுநாள்கொடுக்கத்தீரும்.

[illegible]திரிகடுகு-ஓமம்-சித்தரத்தை - பொன்னாவரைவேர் கல[illegible]சுருக்கொப்பழம் சாதிக்காய் பெருங்காயம்மைக்கு ரோசனை[illegible]னுருவினி வேர்த்தி பலம்(௧௨) கொத்திப்பசா ப்பு[illegible])இவையெல்லாம் வறுத்து மைப்போலரைத்து வெ[illegible]பிசின்வைத்துக்கட்டி ஒருசட்டியில் வைத்துத் தீயெரித்து வெ[illegible]சருகுகருகுநிறசமயத்தில் எடுத்து அரைத்து மறுபடியும் வெ[illegible]க்குச்சக்குட்டி முன்போல் வறுப்பியெடுக்க